DEIVASIKAMANI.

An Interesting Tamil Novel.

தெய்வசிகாமணி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 MAY 1925
MADRAS

BY

M. V. சங்கமுத்துப் பிள்ளை

1254

224312

1924 [*Price Re. 1.*

உ

தெய்வசிகாமணி

(ஒரு நவீனகம்).

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 MAY 1925
MADRAS

பெருநாழி
முத்துச்செல்லையாபுரம்
மு. வீ. சங்கமுத்துப்பிள்ளை.

சாத்தூர்,
லேக்ஷிமி விலாசம் பிரஸ்.
1924.

பிரதிசெய்யும் உரிமை
பதிவு செய்யப்பட்டுளது.

224312
சென்னை-600 008.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224312
சென்னை-600 008

031,3N5P93, T
N24
OFFICE OF THE REGISTRAR
29 MAY 1925
MADRAS

தெய்வசிகாமணி

முதல் அதிகாரம்.

உலகிலுள்ள உயிர்களெல்லாங் களிக்கும் படியாகக் கடலின் அலைகள் ஓம் ஓமென்று இடையறாது முழங்கிக் கொண்டிருக்கின்றன. விரிந்த ஆகாயப்பரப்பில் நக்ஷத்திரங்கள் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன. மரப்பொந்துகளிலும் இடிந்த மண்டபங்களிலுமிருந்து வெளிப்போந்து ஆந்தைகள் இரைதேடுவதும் கிளைகூட்டுவதுமான சந்தடிகள் மிகுந்திருக்கின்றன. கட்குடியர்கள் மயங்கிவிழுந்து ஆடைசோர்ந்து போனதுந்தெரியாமல் நடுத்தெருக்களில் பிரேதம்போல கிடக்கிறார்கள். சிலகுடியர்கள் வம்புந் தும்பும் பேசிக்கொண்டு அங்குமிங்கும் அல்லாடுகிறார்கள். சத்திரவாசல்களிலும் சாப்பாட்டுக்கடைப்பக்கங்களிலும் நாய்களது குரைப்பும் பிணக்கும் பலிந்திருக்கின்றன. சாவடிகளிலும் வெளித்திண்ணைகளிலும் ஏழைஜனங்கள் நிர்விசாரமாய்க் குறட்டையிட்டுத் தூங்குகிறார்கள். இளஞ்சங்கீதவித்வான்கள் பாடல்வேறு பக்கவாத்தியம் வேறாக உழறிவழிகிறார்கள். திரண்டவியாபாரம் நடக்கும் பெரிய பெரியமளிகைகளும் கடைகளும் தடால்தடாலென்று கதவுகளால் மூடப்படுகின்றன. கொள்ளிக்கும் விள்ளாத கூரிருளில் அவிந்தவைபோக இரண்டொரு தெருலாந்தர்கள் மட்டும் மினுக்கு மினுக்கென்று எரிந்து கொண்டிருக்கின்றன. தாலூகாக் கச்சேரிமணியும் டக்குடக்கென்று பன்னிரண்டடித்துவிட்டது. இந்தச்சமயம் மணிமங்கலத்திற்கு மேற்கே அரைமைல் தூரத்திலுள்ள லக்ஷ்மிமால் என்ற நாலுகாற் கூரைச்சாவடியில் ஒரு சிறுவெளிச்சம் அடிக்கடி மறைந்து தோன்றிக்கொண்டிருந்தது. மேல்மாடியில் படுத்திருந்த அவ்வூர்த் தாசில்தார் நெல்லையப்பபிள்ளை அந்தவெளிச்சத்தைக்கண்டு அதனை இன்னதென்றறியப் புறப்பட்டுச் சந்தடி இல்லாமல் நடந்து சாவடிக்கற்றூண் மறைவிற்போய் நின்றுகொண்டு வெளிச்சம் வருகிற இடத்தைக் கவனித்துப் பார்த்துக்கொண்டு நின்றார். கூடச்சென்ற வேலைக்கா

ரன் மாசிலாமணி மற்றொரு தூண்மறைவில் நின்றுகொண்டு எஜமானுடைய நோக்கத்தை யெதிர்பார்த்திருந்தான்.

சாவடியின் மையத்திலிருக்கிற சதுரத்திண்ணைமீது கைலாந்தர் ஒன்று எரிந்துகொண்டிருக்கிறது. வெளிச்சத்தின் எதிர்ப்பார்வையில் இரண்டுமனிதர்கள் இடைக்கும் தலைக்கும் கறுப்புச்சாய வேஷ்டி கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் சரீரப் பருமையும், கருமையும், ஆட்டுக்கிடாய்க் கொம்பைப்போல திருக்கி முறுக்கிய மீசையும், இருளோங்கிய அக்காட்டில் நெல்லையப்பபிள்ளையைத்தவிர வேறு எவரையானாலும் நடுநடுங்கச்செய்திருக்கும். அவர்களில் வடக்கு முகமாகத் திரும்பியிருந்தவனுடைய வலக்கைப்பக்கத்தில் தலைவெட்டியரிவாள் ஒன்று பளபளவென்று மின்னிக்கொண்டுகிடக்கிறது. இருவருக்கும் இடையில் ஒரு மண்தாழி வைக்கப்பட்டிருக்கிறது. அதனோரமாக நாலு புட்டிகள் இருக்கின்றன. தாழியிலிருக்கிற எதையோ தின்றுகொண்டும், தலைக்கொருபுட்டியாகக் கையில்வைத்துக் குடித்துக்கொண்டும், அவ்விருவரும் சம்பாஷிக்கத்தலைப்பட்டார்கள். அவர்களில் ஒருவன்

ஒச்சன்:— மருளாடியன்னே! இன்னைக்கு வெகுதூரம் நடந்திருப்பம் போலே இருக்குதே ?

மற்றொருவனான மருளாடி:— தம்பி ஒச்சா! அருகாத மள்ள பதிங்காதமிண்டாலும் நடக்கத்தக்க நான் சளிக்கிறவனில்லே; எடுத்தகாரியத்தை முடிச்சண்ணைக்கள்ளோ எடுத்தது சடளம்.

ஒச்:— நீ அண்ணைக்குச் சொன்னது போலே சாபான் வந்திருச்சு அப்பரமென்ணா?

மரு:— இந்தப்பெய தலைப்பிள்ளைதானா? இவன் ஆத்தாளும் தலைச்சனா இருக்கோணும் எண்டாப்பா. அப்படித்தானா?

ஒச்:—ஆமன்னே அதெவ்ளாஞ்சரியா அமைஞ்சுபோச்சு.

மரு:— ரெண்டுவெயசிருக்கும் போளேதெரியிது எங்கிட்டுக் கிடைச்சது?

ஒச்:— அன்னே அதெள்ளாஞ் சொள்ளக்கூடிய சங்கதி; பிள்ளை ஆளுளும் ஒங்கிட்ட சொள்ளாமே எண்ணு; சுருக்கமாச் சொன்றேன்; இது ஒரு சவியகாராவீட்டுப்பய; இவன் அப்பேன் பத்துக் கிராமத்துக்கு ஒரு அதிகாரி.

மரு:— எந்தவூர்?

ஒச்:— நள்ளபேரு வாய்க்கிளே இருக்கிது நெணவில்லே.

இப்படி ஒச்சன் பேசிக்கொண்டுவரும்பொழுது திண்ணை மறைவிலே ஒரு சிறுபழந்துணியிலே கிடத்தியிருந்த குழந்தை அழ ஆரம்பித்தது. அழுகைச் சத்தங் காதிலேகேட்டவுடனே மருளாடி எதையோ குழந்தைவாயில் வைத்தான். அழுகை நின்றுவிட்டது மாசிலாமணி தாசில்தார் முகத்தைப்பார்த்தான். அவர் சுழல் துப்பாக்கியைச் சரிபண்ணிக்கொண்டு மிகுந்த படபடப்புடன் நிற்கிறார்.

மருளாடி ஒச்சனைப்பார்த்து டேதம்பி ஒச்சா! தளச்சன் பிள்ளை மண்டையோட்டிலே மறவுமை சேத்துக்குடுத்திட்டேனின்டா பணக்கோட்டைதான் ஒணக்கு. எணக்குப் பேச்சுப்போளே நடந்திரணும்.

சரியென்று ஒச்சன் ஒப்புக்கொண்டவுடனே தாழிமுதலிய வைகளெல்லாம் அப்புறப்படுத்தப்பட்டன. படுக்கையிலிருந்த குழந்தையைத் தூக்கிக்கொண்டு வா என்று ஒச்சனுக்கு மருளாடிசொன்னான்.

சுருண்டு சுருண்டு செறிந்த கரியகுஞ்சிவாய்ந்த தலையும், பாலொழுகும்ரோஜாப்பூ நிறமுள்ள வதனமண்டலமும், கருங்குவளை மலரை நிகர்த்த மைதோய்ந்த கண்களும், வளைந்தவிற்போன்ற புருவங்களும், கோவையிட்ட முத்துச்சரமனைய பல்வரிசைகளும், நுனியில் வைரச்சன்னமிழைத்த சிறிய பவளத்துண்டை யொத்த கை

விரல்களும், வாழைக்குருத்துக்கிணையான சரீரகாந்தியும், பூவரசம் பூவின் உள்வர்ணத்தைநிகர்த்த உபயபாதங்களும், அமைந்தஓர் இளங்குழவியை உயிருநக்கிக்குடிக்கும் ஒரு பெரும்பேயே கண்டாலும் கண்கலங்கிக்கழியுமன்றோ? அந்தோ! கொஞ்சமேனும் இரக்கமில்லாமல் கொல்லத்துணிந்த மருளாடியின்மனமானது கல்லோ? இரும்போ? வேறியாதோ? யாம் அறிகிலேம். சாண்வயிற்றை வளர்ப்பதற்குக் கிடைக்கப்போகும் அற்பப் பொருள் வருவாயைமுன்னிட்டு இரத்தந்திரளாத இளங்குழவியைக் கொல்லத்துணிந்த இத்தகைய கொடியபாவிகள் பின்னையெந்தக்கொடுஞ்செயல்தான் செய்யத்துணியார்கள். அம்மம்ம! இந்நீசர்களை நினைத்த நெஞ்சமும் பேசியவாயும் வேகுமே. இப்பெரிய பூமண்டலத்தில் எத்தனையோ தொழில்கள் இருக்கின்றனவே; அவற்றிலொன்றால் ஜீவிக்கக்கூடாதா? காதன் அற்றுத்திரிகிற நாய்களும் வயிறுவளர்க்கவில்லையா? சிசுஹத்திமுதலிய கொடிய கிருத்தியங்களைச்செய்து சம்பாதிப்பதைப் பார்க்கிலும் பிச்சையெடுத்துப் பிழைக்கலாமே. மாமிஸப்புசிப்பதை ஜாதித்தொழிலென்று சொல்லும் புத்திசிகாமணிகளும், ஆடு, கோழிமுதலிய ஜெந்துக்களைக் கொலைசெய்யக்கூசி, அந்நியரைக்கொண்டு கொல்வித்துப்புசிக்கின்றனரே. விலங்கினங்களை வதைத்துத்தின்கிற மிருகங்களும் அவைகளுக்குப் பசியில்லாதபோது ஒருயிரையுங் கொல்லத்துணியாவே. மனிதர்களுக்கு ஜென்மசத்துருவாயிருக்கிற நல்லபாம்பும் குதலைமொழிக்குழவிகட்குக் குடையாகப் படத்தை விரித்துப் பகல் வெயிலைமறைத்ததாகப் பகர்கின்றார்களே. கடல்போன்ற பெருந்துயரில் அகப்பட்டுக் கரைகாணாது தத்தளிக்கும் கவலையாளரும் சிசுக்களைக்கண்டால் சிந்தைமகிழாமலிரார். இமயகிரிதொடங்கிக் கன்னியாகுமரிவரை உள்ளங்கால் வெள்ளெலும்புதோன்றத் தீர்த்தயாத்திரை செய்வதும், பட்டினியாயிருந்து நோன்புநோற்பதும், அரிய பெரியவேள்விகள் இயற்றுவதும், மகவை விரும்பியன்றோ! எத்துணைப் பெருந்தவமியற்றி எம்மேம்பாட்டினை வாய்ந்த எப்பிரபுவிற் பெறப்பட்ட இளம்பாலனோ! கொல்லத்துணிந்த மருளாடி கட்கத்தை எடுக்கும்போது முன் ஆயத்தமாயிருந்த தாசில்தார் கொஞ்சமுந்தாமதியாது பிரயோகித்த குண்டுபோய் மருளாடியின் கையைக் கத்தியுடன் கீழே விழப்பண்ணி விலாவில் ஊடுருவிற்று.

ஆபத்து வந்துவிட்டதென்றறிந்த ஒச்சன் திடீரென்று கீழே குதித்து அடுத்துள்ள ஏர்ணற்புதரில் ஒளித்துக் கொண்டான். பேச்சு மூச்சற்று வயலைக் கொடிபோற்றுவண்டு கீழேகிடக்கும் குழந்தையை ஆவலாகப்போய்த் தூக்கினார் தாசில்தார். வாய்நிறையத் துணியைத் திணித்துவைக்கப்பட்டிருந்தது. அதைக்கண்ட அவருக்குக் கைகால் நடுங்கிப்போய்விட்டது; மெய்மறந்து நின்றார். மாசிலாமணி சட்டென்றுவந்து வாயிலிருந்ததுணியை மெதுவாகஎடுத்தான்; சற்று நேரங்கழித்துக் குழந்தைபுரண்டது. உடனே ஓடைத்தண்ணீரைக் கொண்டுவந்து வஸ்திரத்தில் நனைத்துக்கொஞ்சங் கொஞ்சமாக வாயிற்பிழிந்தார்கள். தெய்வகிருபையால் பிள்ளைபிழைத்துக்கொண்டது. பின்பு தாசில்தாரும் மாசிலாமணியும் அக்கூரைச்சாவடியைச்சுற்றிப் பார்த்துவிட்டு குழந்தையைத்தூக்கிக்கொண்டு மணிமங்கலம்போய்ச் சேர்ந்தார்கள். அச்சாவடித்திண்ணையில கொலைபாதிகளால்போட்டுவிட்டுப்போயிருந்த வெற்றிலைபாக்குப் பையில் இருந்த கடிதத்தை மாசிலாமணி யெடுத்துக்கொடுத்தான். அதனை லாந்தர் வெளிச்சத்தில் படித்துப்பார்த்துத் தமது சட்டப்பையில் வைத்துக்கொண்டார் தாசில்தார்.

இரண்டாமதிகாரம்.

"பாப்பையாபுரம் பண்ணைச்சோமசுந்தரம்பிள்ளையினுடைய இரண்டு வயதுள்ள ஆண்குழந்தையொன்று திருச்செந்தூரில் விசாகத்திருநாட் கூட்டத்தில் காணாமற்போய்விட்டது. அதைக் கண்டுபிடித்து உடையவர்கள் வசம் ஒப்பிப்பவர்களுக்கு ஆயிரம்ரூபாயும் அப்போது அக்குழந்தைக்குப் போட்டிருந்த ஆபரணங்களும் சன்மானிக்கப்படும். இந்த வைகாசிமாதம் முடிவிற்குள்ளானால் திருச்செந்தூர் மேலமாடவீதிச் சிவபிரகாசக்குருக்களையா வீட்டிற்கொண்டுவந்து ஒப்பித்தல்வேண்டும். அதற்குமேலானால் பாப்பையாபுரத்திற் கொண்டுவந்து சேர்க்கவேண்டும். இனாம் ரூபாயும் நகையும் உடனே கொடுக்கப்படும். நிறம் சிவப்பு, வலதுமணிக்கை உட்

புறத்தில், "தெ" என்னும், எழுத்துப்பச்சை குத்தியிருக்கும்', என்ற விவரமாக அப்பட்டினத்திலும் அதைச்சேர்ந்த நாட்டுப்புரங்களிலும் விளம்பரப்படுத்தியும் அக்காலத்தில் நடைபெற்றுவந்த தமிழகம் பரதகண்டம் முதலிய வர்த்தமானப்பத்திரிகைகளிற் பிரசுரித்தும் பதினைந்துநாள்வரை திருச்செந்தூரிலிருந்து பார்த்துவிட்டு யாதொரு விஷயமும் புலப்படாமல் பாப்பையாபுரம் போய்ச்சேர்ந்தார் மிராசுதாரான சோமசுந்தரம்பிள்ளை. திருவிழாவிற்குப்போன பண்ணைப்பிள்ளை ஊர்வந்து சேர்ந்தவுடனே உள்ளூர் ஜனங்களும் பக்கத்துமனிதர்களும் திரள்திரளாகவந்து குழந்தையைப் பற்றிக் கேட்பதும் துக்கங்கொண்டாடுவதுமாக இருந்தார்கள். வந்தவர்களிடத்திலெல்லாம் அழுவதைத்தவிர வேறொரு செயலுமற்றிருந்தார் பிள்ளை. அவர் மனைவிமீனாட்சியம்மாள் தான் குழந்தையில்லாதிருந்ததும், விரதாதிகளிருந்து ஆலயங்கட்கு நடந்ததும், மாதாந்த வெள்ளிக்குத் திருச்செந்தூருக்குப்போய் வந்ததும், குழந்தைக்கு வியாதி நேரிட்டிருந்த காலத்தில், தான் பத்தியமிருந்ததும், பையன் யோகசாலியென்று சாஸ்திரியொருவர் சொன்னபோது சந்தோஷப்பட்டதும், சண்முகநாதன் என்று பெயரிடவேண்டுமெனத் தான் சொன்னதற்குத் தன் கணவன் தெய்வசிகாமணி யென்றபெயரும் முருகக்கடவுளுக்கே உரியதென்று நிலைநாட்டிப் பெயரிட்டதும் ஆகிய ஒவ்வொருவிஷயத்தையும், ஒன்றன்பின் ஒன்றாகச் சொல்லிச் சொல்லிக்கதறினாள். மிராசுதார் தம்பி தங்கச்சாமிபிள்ளை தமக்கும் தமையனுக்கும் இதுவேபிள்ளையென்று நம்பியிருந்த இந்த ஒரு சந்ததியும் தவறிவிட்டதினாலே தான் உயிரோடிருப்பதில் யாதொருபயனுமில்லையென்றும், பிராணத்தியாகஞ்செய்து கொள்ளப்போவதாயும், வந்தவர்களிடமெல்லாஞ் சொல்லித்துக்கித்துக் கொண்டிருந்தார். அவர்மனைவி ஒப்புச்சொல்லி அழுததற்கு ஒப்புச்சொல்லமுடியாது.

சோமசுந்தரம்பிள்ளைக்கு நாட்செல்லச்செல்லப் புத்திரசோகம் அதிகரித்துப் பைத்தியம்பிடித்துவிட்டது. மஹாபுத்திசாலியாகிய அவர் மனைவி தன் மனோதுக்கத்தை யடக்கிக்கொண்டு தன் கணவனுடைய பணிவிடையில் வழுவாது நடந்துவந்தாள். மீனாட்சியம்மாளுக்குப் பெரியபிதாவின் புத்திரரும் கல்விகேள்விகளிற் சிறந்தவரும்

ஒழுக்கத்திற்கு உரையாணிபோன்றவரும், பாப்பையர்புரம்சைவசித்தாந்தசபையின் அக்கிராசனருபான சர்மிநாதபிள்ளை மட்டும் குழந்தை தவறிப்போனதைப்பற்றித் தமக்குச்சந்தேகந்தோன்றுவதாகச் சோமசுந்தரம்பிள்ளையிடம் சொல்லிக்கொண்டுவந்தார். அதைக்கவனிப்பதற்குப் போதுமான ஸ்திரபுத்தியில்லாமையினாலும் குழந்தையினது நகைக்காசைப்பட்டுத்திருடர்கள் கொண்டுபோய்க் கொன்றிருப்பார்கள் என்று தங்கச்சாமிபிள்ளை அடுத்தடுத்துச்சொல்லிவந்தமையாலும் பிள்ளையைத்தேடும் பிரயத்தனம் நின்றுபோய்விட்டது. திருவிழாவிற்குப்போன காலத்தில் தமது மிராசைத் தமபிபார்த்து வரும்படிசெய்துகொண்ட நியதியின்படியே இப்போதும் அவரே பார்த்துவருகிறார். தமையனார் வசம் ஒப்பிக்க அவர் நினைக்கவே இல்லை. சோமசுந்தரம்பிள்ளையும் மிராசைத்தம்மிடம் ஒப்பிக்கும்படி கேட்கவுமில்லை.

உயர்ந்தோர் தாழ்ந்தோர், அந்நியர் பகைஞர், நேயர் என்னும் தாரதம்மியங்களை எல்லாவிஷயங்களிலும் சிலர் பாராட்டுவதுண்டு; சிலர் சிலகாரியங்களில்மட்டும் பாராட்டுவார்கள். சோமசுந்தரம்பிள்ளையோ நியாயவிஷயத்தில் இதைக் கிஞ்சித்தும் எண்ணக்கூடியவரல்லர். பெற்றபிள்ளையாயிருந்தும் ஒருகுற்றமியற்றியிருக்குமாயின் அதற்குத் தக்கபடி தண்டிக்க வேண்டுமென்றே சொல்லுவர். நிஷ்பக்ஷபாதகமாக வழக்குத் தீர்க்கிறவரென்று, அந்தப் பிராந்தியத்திலுள்ளவர்களெல்லாம், அவரைக் கொண்டாடுவார்கள். பிறருக்குத் துன்பஞ்செய்கிறவன் துஷ்டமிருகமென்றும், உதவி செய்யாதவன் பாதிரி மரமென்றும், இதஞ்செய்பவனே மனிதனென்றும், அடிக்கடி அவர் சொல்லிக்கொள்வார். எந்தவேளையும் ஏழைகளுக்கு உதவி செய்வதிலேயே நோக்கமாயிருப்பார். சத் விஷயங்களிற் பிரவர்த்திக்காத பெரும் பணக்காரர்களைக் கண்டால், அற்பத் துரும்புக்குச் சமானமாக எண்ணிக்கொண்டு போய் விடுவார். கல்வி, அறிவு ஒழுக்கங்களால் மேம்பட்டுயர்ந்த ஆன்றோர்களுக்கு மட்டும் பணிந்துரையாடுவரே யன்றி வெளிவேஷ ஆஷாடபூதிகளது முகாலோபனமுஞ் செய்யார். ஒருவரைக் காப்பாற்றுகிறேனென்று வாக்குக் கொடுத்து விட்டால், பிறகு அது விஷயமாகத் தலை

போகிறதாயிருந்தாலும் பின்னிடையார். லக்ஷக்கணக்கான பணம் கையிருப்பிலிருந்தும் வட்டிக்குக் கொடுத்து வாங்கியறியார். இப்படிப் பற்பல சுகுணங்களும் வாய்ந்தவர்.

இரண்டு வருஷத்திற்கு முன், தங்கச்சாமிபிள்ளைக்குக் கல்யாணஞ் செய்துவைக்க முயற்சித்ததில், பெண் தீர்மானிக்கும் விஷயத்தில் தமையனுக்கும், தம்பிக்கும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டுவிட்டது. எங்ஙனமெனில் மீனாட்சியம்மாளுடைய தங்கை குழல்வாய்மொழியம்மாளை, நிச்சயிப்பதாகச் சோமசுந்தரம்பிள்ளை சொன்னார். தங்கச்சாமிபிள்ளையோ, "அவள் ஏழை வீட்டுப் பெண்ணென்றும், ரூபவதியல்லவென்றும் படித்திருப்பதினால் அந்நியருக்குக் கடிதம் எழுதத்துணிவளென்றும்" தப்பான அபிப்பிராயங் கொண்டு அவளை விவாகஞ்செய்ய மறுத்துவிட்டதோடு, புத்தூர்ப் பூமிநாதபிள்ளை மகள் காமாட்சி யென்பவளையே, தாம் காதலித்திருப்பதாகவும் வெளியிட்டார். புத்தூர்பபிள்ளையைப் பற்றி நல்லபிப்பிராயம் சோமசுந்தரப்பிள்ளைக்குக் கிடையாது. அவன் துஷ்டர்கள் சகவாஸமே கொண்டவன்; ஸாதுக்கள் சப்பாஷணை சற்றேனுங் கொண்டவனல்லன்; பத்து வருஷத்திற்கு முந்திப்பரம ஏழையாயிருந்தான். ஆடு மாடுகள் கொள்ளல், விற்றல் செய்பவரிடமிருந்து தரகுபெற்று அதனுல் ஜீவித்து வந்தான். வாசாலகமாகப் பேசிவாங்கித்தருவதும், விற்றுக்கொடுப்பதுமான கெட்டிக்காரத்தனம் அவனிடத்திலிருந்தபடியால், வடக்கே தெற்கே இருந்து வருகிற மாட்டு வியாபாரிகள் அவனையே தேடுவார்கள். பாடு மாற்றிப்பூமிநாதனென்றே சாதாரணமாக எல்லா ஊர்களிலும் சொல்வதுண்டு. புத்தூர்ப் பேட்டையில், ஒரு பெரிய மாட்டு வியாபாரி வந்து ஆறுமாஸமாக இருப்பாயிருந்து கொண்டு வியாபாரஞ் செய்து வந்தான். அவனுக்கு ஒருநாள் விஷபேதி கண்டிருந்த சமையம் தன்னிடமிருந்த பணத்தைக் கொடுத்து வைக்கத் தகுதியான மனுஷாள் பழக்கமில்லாதிருந்தபடியால், தரகன் பூமிநாதன் வசம், தன் பணத்தை ஒப்பித்துத் தான் இறந்துபோம் பக்ஷத்தில் தன் மகனிடம் கொடுக்க வேண்டுமென்றும், அவன் வரத்தாமிதப்பட்டால் தபால் மூலமாக அனுப்பிவிட வேண்டுமென்றும், கேட்டுக்கொண்டான். பூமிநாத

பிள்ளையும், அவன் சொல்லிய சங்கதிகளில் ஒன்றும் தவறாது முடிப்பதாக வெகு ஸொந்தமாகப் பதில் கூறினான். கடைசிவார்த்தை முடிவதற்குள் காலகதியால் வியாபாரி விண்ணுலகடைந்தான். பூமிநாதன் தன் சிநேகிதர்களிற் சிலரை உதவிக்கு வைத்துக்கொண்டு, அவனை நல்லடக்கம் பண்ணிவிட்டுக்களிப்புற்றிருந்தான். சிலதினங்கழித்து அவ்வியாபாரியின் மகன் பல பெரிய மனிதர்களுடன் வந்து பூமிநாதபிள்ளையைக் கண்டு, தன் தகப்பனுடைய ஸ்திதியைப்பற்றி விசாரித்தான். அதற்குப் பூமிநாதன் அவனிடத்திற் காசு பணம் யாதொன்றும் இருந்திருப்பதில்லை யென்றும், இருந்தால் தன்னிடம் ஒப்பித்திருக்கக் கூடுமென்றும் வியாபாரத்தில் பெரு நஷ்டம் அடைந்திருந்தான் என்றும் அவனை யெடுத்தடக்கம் பண்ண ரூ 20—14—7 தனக்குச் செலவாயிருக்கிறதென்றும், அதைத்தனக்குக் கட்டாயம் கொடுத்துவிட வேண்டுமென்றும், சொல்லி உண்மையை ஒரேயடியாக விழுங்கிவிட்டான். அதுமுதற் பூமிநாதன் பூமிநாதராய்ப், பணக்காரர் வகுப்பிற் சேர்ந்து விட்டார்.

அநியாய வட்டி வாங்கல், பொய்ப்பத்திரம் பிறப்பித்தல், பொய்ச்சாக்ஷியங் கூறல் முதலிய துர்க்கிருத்தியங்களில் அவருக்கு மேற்பட்டவர்கள் இல்லையென்று மற்றையோர் சொல்லும்படிக்கு வந்துவிட்டார். தம் பெயரைச் செவ்வையாக எழுதத் தெரியாவிட்டாலும், பத்திர வக்கணைகள் எழுதச்சொல்வதில் மகா சமர்த்தராய் விட்டார். அவரிடம் கடன் வாங்கினவர்கள் பணத்தைச்செலுத்தும் போதே தாங்களெழுதிக் கொடுத்திருக்கிற ஆதரவுகளைச் செல்லெழுதி வாங்கிக்கொள்ளவேண்டும். நாளைக்கு வாங்கிக்கொள்ளலாமென்று போய்விட்டால் மறுபடியும் பத்திரத்திற்கண்ட தொகையை வட்டியுடன் செலுத்தியே தீரவேண்டும். "அற்பரானவர்க்குச்செல்வம் அல்லது பகைவேறுண்டோ" மேன்மக்களது சிறந்த நடையில் ஒரு சிறிதும் தன்னிடத்திலில்லை யென்றாலும், வாகனவஸ்திர ஆபரண போக போக்கியங்களை அம் மேன்மக்கட்குக் குறையாமலே அநுபவித்து வந்தார்.

இந்த விதமாக வெளிக்குப் பகட்டும் உள்ளே தீங்கு விளை விப்பதாயுமிருக்கிற, மேல் நாட்டுச் சாருயச் சிசாவையொத்த பூமி நாதபிள்ளையினுடைய இருதயக் கோணலைக் கவனியாது வெளிவேஷ நடையுடைபைக் கண்டு மயங்கித் தங்கச்சாமிபிள்ளை சம்பந்தஞ் செய்துகொள்ள நினைத்ததைச் சோமசுந்தரம் பிள்ளை தடுத்துப் பல நீதிகளை எடுத்துப் போதித்தார்.

பெண்கொள்ள நினைக்கிறவன் முக்கியமாகக் கவனிக்கவேண்டியவைகள் பல. பெண்ணைப் பெற்றோருக்கும் தனக்கும் சாதி சமய ஒற்றுமை இருக்கிறதா? மாமன் மாமி நன்னடக்கையுடையவர்களா? பெண்ணுடன் பிறந்தவர்கள் தங்கள் தகுதிக்குத்தக்க இடங்களில் வாழ்க்கைப்பட்டு நிறை தவறுதிருக்கின்றூர்களா? பெண்சுகுணவதியா? கல்வியுடையவளா? சௌந்தரவதியா? தனவந்தன் மகளா? என்பன முதலியவைகளேயாம். இவற்றுட் கடைசியாகக் குறிக்கப்பட்ட அம்ஸங்கள் இரண்டே, பூமிநாதபிள்ளை மகளுக்கு ஒருவாறு அமைந்துள்ளன வென்று சொல்லலாம். இவ்விரண்டு லக்ஷணமாத்திரமுள்ள பெண்களையடைய அநேகமாகப் பிரயாசைப்பட வேண்டியதிராது. இவ்விதப் பொருத்தத்தை முன்னிட்டு விவாக விஷயத்தில் முனைந்து ணிவது மதியீனர் செய்கையாம். ஒரு சிறு காரியத்தையும் தீர்க்காலோசனை பண்ணுமல் முடிவுக்குக் கொண்டுவரக் கூடாது. மனைவி மனிதனுக்கு உயிர்த்துணையும், வாழ்க்கைத் துணையுமாதலால், பெண் கொள்ளல் மிகவும் நுட்பமாக ஆலோசிக்கத் தக்கதொரு பெரிய விஷயம். ஒருவன் தனக்குத் தாழ்ந்தவிடத்தில் பெண் கொண்டு விட்டானேயாகில் அவன் பந்துவர்க்கத்தாரால் எவ்வித சுபாசுபங்களுக்கும் அநர்ஹனுக நீக்கிவைக்கப்படுகிறுன். அவன் உயிரோடிருந்தும், அவன் கிளைஞரால் இறந்தவனுக எண்ணப்படுகிறுன். அவனுக்கு உற்பவித்த குழந்தைகளும், இழிவாக நினைக்கப்படுகிறூர்கள். இத்துணைப் பெரிய விபரீதங்களும், கோத்திரமறிந்து பெண் கொள்ளாமையினுலேயே நேர்கின்றன. ஒருவன் மனைவி, கடுகளவு தோஷத்திற்குட்படுவாளாயினும் அவள் பிறந்த கோத்திரத்திற்கும் கணவனது கோத்திரத்திற்கும், அவள் சந்ததிகளுக்கும் தீராத வசை

யே செய்தவளாகிறுள். ஒரு பிரமாண்டமான கோத்திரத்தில் ஒருத்தி கூடா ஒழுக்கமுடையவளாயிருப்பின் அக்குலமுழுவதும் நிந்தைக்குள்ளாகிறது. பாபாத்மாக்களுக்கு நேரிடுந் துன்பங்கள் ஆரம்பத்திற் சிறிதாய்த் தோன்றினலும் முடிவில் பேராபத்துக்கிடமாவதுபோல் பெண்கள் செய்யுங் குற்றம் சிறிதாயிருந்தாலும், அது ஒன்று பத்து நாளாய்க் கிளைத்து வளர்ந்துகொண்டிருக்கும். இதிலணுத்துணையும் ஐயமே இன்று. மானத்தை உயிரென நினைக்கிற மாசற்ற மரபில் மணம் புரிவார்க்கு அத்தகைய குற்றங்கள் உண்டாகா. "இடுக்கண் வந்துயிர்க்கும் ஊற்றமெய்தினும் வடுக்களைந் தொழுகும் தூயமரபில் வந்த வஞ்சியர்" கோடி மன்மதரூபவிட புருடரைக் காணினும், தங்கள் மனவலி இழந்து மானத்தைக் கைவிட நினைப்பரோ? ஒருக்காலும் நினையார். எத்துணைப் பெருஞ்செல்வரேயெனினும் திகாந்தம் வரை வீசும் புகழ்கொண்ட வீரரேயெனினும் துர்க்குணப்பெண்டிரைக் கொள்வாராயின் அவர் செல்வமெல்லாம் அவரைவிட்டுச் சென்றே தீரும். கீர்த்தியெல்லாம் அபகீர்த்தியாய் மாறியே நிற்கும். "புகழ் புரிந்தில்லிலோர்க்கில்லை இகழ்வார் முன் ஏறுபோற் பீடு நடை". அது நிற்க பூமிநாதபிள்ளை யிப்போது நம்மிடத்தில் வைத்திருக்கிற மதிப்பும், அச்சமும் சம்பந்தம் பண்ணின பிற்பாடு வைத்திருக்கக்கூடியவனே? இல்லவே இல்லை. நம்மிருவருக்கும் இருக்கிற சகோதர ஒருமையை விவாகமான மறுதினமே கெடுத்தே விடுவான். பால்போன்ற சுத்த இருதயத்தைக் கீழ்மக்கள் தங்கள் துர்ப்போதனை யென்னும், விஷத்துளியாற் கெடுத்துவிடுவார்கள். அன்றியும் "தெருண்ட மேலவர் சிறியவர்ச்சேரினும் அவர் தம்மருண்ட புன்மையுமாற்றுவர் எனுமிதுவழக்கே" என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்து அவனை நாம் திருத்திவிடலாமென்று நினைப்போமாகில் அது முடியக்கூடிய காரியமன்று அவன் திருந்தவே மாட்டான். "ஏவவுஞ் செய்கலான் தான்தேறுன் அவ்வுயிர் போஒமளவும் ஓர் நோய்" என்ற பெரியார் மொழியைப் பிசகற மெய்ப்பிப்பான். சில அறிவிலிகள் தங்கள் பெண்ணை ஒருவனுக்குக் கொடுத்துவிட்டவுடனே மருமகனைத் தன் வீட்டு மாடு மேய்க்கிறவனாக எண்ணிக்கொள்வார்கள். அம்மட்டுமோ, அவன் குடும்பத்திலிருந்து அவனுக்குரிய பாகத்தை யொதுக்கிக்கொண்டு

தம்மிடம் வரும்படிக்கும் போதிப்பார்கள். தலையணை மந்திரம் ஓதும்படிக்குத் தங்கச்சிக்குக் கற்பித்து விடுவார்கள். "பேதைத் தம்பியார் பெண்டாட்டியாத்தா பெரியாத்தா பிழைக்கும் புத்தியைச் சொல்லாத்தா" என்று கைதட்டிக்கொண்டு புறப்பட்டுவிடுவார்கள். அந்தோ! பெற்று வளர்த்துப் பெயரிட்டுப் பெரும்பொருள் செல விட்டுப் படிக்கவைத்துக் காப்பாற்றிய தாய் தந்தைகளையும் நகமும் சதையும் போல் ஒற்றுமையாயிருந்த சகோதரர்களையும் வெறுத்து நேற்று வந்து புகுந்த பெண்சாதியைப் பெரிதென்று நினைத்துப் பின் பற்றிப் போன பித்தருக்கு மாமன் வீட்டிலாவது மதிப்புளதா? "தையலார் மயலிற்பட்டார் தமக்கொரு மதிப்புமுண்டோ" தகப் பன் பக்கத்திலிருக்கிறானென்ற தைரியத்தை வைத்துக்கொண்டு புருஷன் வார்த்தையை உல்லங்கனம் பண்ணுவாள். மாமி தன்மரு மகனுக்கு ஏகவசனப் பிரயோகத்துடன் புத்தி சொல்ல ஆரம்பிப் பாள், மச்சினமார்களும் லக்ஷியம் வையார்.

சோமசுந்தரம் பிள்ளை உலக வியவகாரத்தில் தமக்குள்ள அனுபவத்தை யொட்டி எத்தனையோ விதங்களில் தமது தம்பி நல் ல சம்பந்தஞ் செய்து கொள்ள வேண்டு மென்று விரும்பிப்பேசியும் அது பிரயோசனப் படாமற் போய்விட்டது. தங்கச்சாமிப்பிள்ளை தம் தமையனார் கருத்திற்கு விரோதமாகத் தமக்குப் பெண் பேசி வரும்படி தமது சிநேகிதர்களிற் சிலரைப் புத்தூருக்கனுப்பியிருப்ப தாகச் சோமசுந்தரம்பிள்ளை கேள்விப்பட்டுத் தம்பியினது அவசரப் புத்திக்காக மனஸ்தாபப்பட்டு மறுபடியும் தம்பிகோரின பூமிநாத பிள்ளை மகள் காமாட்சியம்மாளையே தகுந்த சிறப்புடன் விவாஹஞ் செய்து வைத்தார். தங்கச் சாமிப்பிள்ளை பூமிநாதபிள்ளைக்கு மருமக னாகும் பக்ஷத்தில் அந்த விசேஷத்திற்கு ஒருவரும் போகக்கூடா தென்று கட்டுப்பாடு பண்ணிக் கொண்டிருந்த பந்துக்களெல்லோரும் மிராசுப்பிள்ளை தாக்ஷண்யத்திற்காகக் கல்யாணத்திற்கு முதல் நாளே வந்திருந்து சிறப்புச் செய்வித்துச் சென்றார்கள்.

தங்கச்சாமிப்பிள்ளை குறித்த பெண்விஷயத்தில் சோமசுந்த ரம்பிள்ளை பிரதமத்தில் மனமில்லாதவராயிருந்ததும், அதுசம்பந்த

மாகச் சிலபொதுவான நியாயங்களை யெடுத்துச்சொன்னதும், பூமிநாதபிள்ளைக்கு இதுவரையில் தெரியாதிருக்குமா! எத்தனையோ திண்ணைதூங்கிச் சோம்பேறி மடையர்கள் இருப்பார்களே? கோள்விதை விதைக்க இடம் பார்ப்பார்கள் அல்லவா? விதைத்துவிட்டார்கள் பூமிநாதன் செவிவயலில். அது மனத்திடை வேரூன்றி முளைத்துக் கிளைத்துப் பகையென்னும் பழம்பழுத்துவிட்டது. இவனுடைய நிலைமை இப்படியிருந்தால் இவனுடைய மகளாகிய காமாட்சியைப் பற்றிக்கேட்கவும் வேண்டுமா? கல்யாணநடந்த சிலமாஸங்களுக்கெல்லாம் தங்கச்சாமிபிள்ளை தம்மனைவியின் மனவழி நடப்பவராயினர். பூமிநாதபிள்ளையும் புத்தூரிலிருந்து அடிக்கடி மகள் வீட்டுக்கு வந்துபோய்க் கொண்டிருந்தார். இதனிடையிலேதான் சோமசுந்தரம்பிள்ளை திருச்செந்தூருக்குப்போனதும் பிள்ளையை இழந்துவிட்டுத் திரும்பினதும்.

மூன்றாம் அதிகாரம்.

சோமசுந்தரம்பிள்ளை புத்திரசோகத்தால் பைத்தியங்கொண்டிருந்தாரென்று முன் கூறினோமன்றோ. அவ்வியாதி நாட்குநாள் திகப்பட்டுக் கொண்டே வந்தது. தங்கச்சாமிபிள்ளைக்குத் தமையனார் பேரில் கொஞ்சமும் ஆசாபாசம் இல்லாமற் போய்விட்டது. சோமசுந்தரம்பிள்ளைக்கு அவர் தம்பி கொஞ்சநாளைக்குப் பின்னிட்டுப் படியளந்து கொடுத்து அவரைப் பிரத்தியேகப் படுத்திவைத்தார். கடைசியாய்ப் படிகொடுப்பதையும் நிறுத்திவிட்டார். தருமசீலரான மஹா ப்ரபு சோமசுந்தரம்பிள்ளையும் அவர் மனையாளும் வயிற்றுச் சோற்றுக்கும் திண்டாடும்படி வந்துவிட்டதே, அடடா! என்னசெல்வம்! என்னவாழ்வு! மிராசுப்பிள்ளை உணவுக்குக் கஷ்டப்படுவதைச் சாமிநாதபிள்ளை யறிந்து சில பெரிய மனுஷர்களைக் கொண்டு தங்கச்சாமிபிள்ளைக்குச் சொல்வித்துத் தமையனுக்குப் படிகொடுக்கும்படி செய்தார். மிராசுப்பிள்ளையின் வியாதியைச் சொஸ்தம்பண்ணி வைத்துவிட வேண்டுமென்று சாமிநாதபிள்ளை வேண்டிய பிரயத்தனங்களுஞ் செய்து கொண்டு வந்தார்.

ஒரு நாள் ஒரு பிரபலமான வைத்தியர் கொடுத்தமருந்தைப் பண்ணைப்பிள்ளையின் கண்களிற் பிழிவதற்காக அவருடைய படுக்கை யறைக்குப் போயிருந்தார். அப்பொழுது இரவு 11-மணி யிருக்கும். அப்படுக்கை யறையின் மேல்பக்கத்துச் சுவரையொட்டிக் கட்டப் பட்டிருக்கும் ஒட்டுத்திண்ணையிலிருந்து சில மனிதர்கள் பேசிக் கொண்டிருக்கிற அரவங்கேட்டது. அவ்வறையின் ஜன்னல் வழி யாகப் பார்த்தால் வெளியில் நடக்கிற காரியங்களெல்லாம் தெரியக் கூடியதாயிருந்தது. உள்ளேயிருந்த சாமிநாதபிள்ளை சம்பாஷணை யின் சாராம்ஸங்களைக் கவனித்துக்கொண்டிருந்தார். மிராசுப் பிள்ளை புத்திஸ்வாதீன மில்லாதிருந்ததாலும் வேறொருவரும் அங்கு வந்திருக்க மாட்டார்களென்று தெரிந்ததாலும் திண்ணையிலிருக்கிற மனிதர்கள் சற்று உரத்தகுரலோடு பேச ஆரம்பித்தார்கள்.

தாங்களும் புத்தூர் ஐயா அவர்களும் கட்டளையிட்ட பிரகா ரம் சாமி மச்சவேடிக்கைக்குப் புறப்படுகிற சமயத்திலேயே "வேலை யை முடித்துப்போட்டேன்" ஒச்சனுக்கு என் கையிலிருந்து அஞ்சு ரூபாய் குடுத்திருக்கிறேன். செலவுக்கு இல்லையென்றான். என்ன மோ நம்முடைய பிரயாசத்தையும் பார்த்துக்கொள்ளுங்கள் என்று நின்றுகொண்டிருந்தவன் சொன்னான்.

பொடிட்டப்பியைத்திறந்து பொடியை யெடுத்து நாசியில் வைத்துச் சரட்டென்று ஒரு இழுப்பு இழுத்துக்கொண்டு உருப்படி யைசலாகியிருக்குமா? என்றான் மற்றொருவன் நிச்சயமாய்ச்சொல்ல முடியாதென்றான் முற் கூறப்பட்டான்.

அப்படியானால் மணிகொடுக்க முடியாதென்றான் வெண் சட் டை தரித்துட் காந்திருந்தவன்.

"அது கழுத்திலே கிடந்தது ஒரு தலைமுறைக்குக்காணுமே! இதுக்கின்னுவேறே பணமுங்குடுக்கணுமோ! எங்கே திண்ணு வளந்தே. ஒனக்குக் கூட்டுததுக்குக் குடுத்ததுயார் கொஞ்சம், மனசுலே எண்ணிக்கேளு" என்றாள் ஒரு பெண்.

மறுபடியும் நின்று கொண்டிருந்தவன் "அம்மா அவர்கள் இந்த வீட்டுக்கு வந்தபிறகுதான் எனக்குக் கலியாணஞ்செய்யப் பணங்கொடுத்தார்கள். புத்தூரிலிருந்து கொணர்ந்தீர்களோ? என்னத்துக்கம்மா அதிகப்பேச்சு? காதிலே, கழுத்திலே கிடந்ததைக் கழற்றநேரமும் இருந்ததே" என்றான்.

இதற்குள்ளே வெள்ளைச்சட்டைக் காரனுக்குக் கோபம் வந்துவிட்டது. ஏது கறிச்சட்டி சுறண்டுகிற புத்தியைக் காண்பிக்கிறாயே. என்ன! உனக்குத் தொகை கிடையாதுபோ செய்கிறதைச் செய்? என்று கடினமாப் பேசினான்.

நின்றிருந்தவன் திண்ணையிலிருக்கிற மற்றொருவனைப் பார்த்து ஐயா! என் பேரிலே ஒரு தோஷமுமில்லை செய்கிறதைச் செய் என்று சின்னப் பண்ணையில் உத்திரவாகி விட்டது. நான் யாரிடத்திலே சொல்லி என்னசெய்யப் போகிறேன். எனக்குயாரு தவி உண்டும். சந்தையும் உங்கள் சந்தை எடுப்பும் உங்கள் எடுப்பு ஆகிலும். சாமிநாதபிள்ளையவர் சாக இல்லை" என்றான்.

சாமிநாதபிள்ளையை யென்ற வார்த்தையைக் கேட்டவுடனே கோபதாப மெல்லாம் பறந்துவிட்டது. நின்றுகொண்டிருந்தவன் கையைப் பற்றித் திண்ணையிலிருக்க வைத்து இதை வெளிப்படுத்தினால் எல்லாருக்கும் ஆபத்துக் கிடமென்றும் பணத்தைப்பற்றி யாதொரு ஆக்ஷேபனையும் சொல்ல வரவில்லையென்றும், மனஞ்சோதிப்பதற்காக விளையாட்டாகப் பேசினதென்றும் அம்மூவரும் சமாதானஞ் சொன்னார்கள். இதற்கிடையில் வெண்சட்டையன் தன் கையிலிருந்த ஒரு துணி முடிப்பைக் கொடுத்துப்பின்னும் ஏதாவது வேண்டியிருந்தால் தன்னிடம் தெரியப்படுத்தும்படிக்கும், சாமிநாத பிள்ளைக்கு இது சங்கதியை எந்தக்காரணத்தையிட்டும் அறிவிக்கக் கூடாதென்றும், சில நாளைக்கு இரகசியமாயிருக்க வேண்டும் என்றும் மிகவும் கேட்டுக்கொண்டான்.

துணி முடிப்பைப் பெற்றுக்கொண்டவன் அதிலுள்ள தொகை எவ்வளவென்று கேட்டுக்கொண்டே ஐயா, அதெல்லாம் எனக்

குச் சொல்லவேண்டாம் தெரியும். அதிலே சாப்பாட்டுக்குக் கொஞ்சம் கஷ்டமா இருக்கிறதென்று அவன் சொன்னான். அநேகம் வேண்டாம். எல்லாம் நாலுகோட்டை ஆனைக்கொம்பனுக்கு உத்தரவானால் போதும் என்றான்.

சரியென்றான் பண முடிப்புத்தந்தவன். உடனே, அந்தக் கூட்டங் கலைந்தது.

அடடா! இப்படிப்பட்ட கொடிய கொலைபாதகரும் உலகத்திலுண்டா, முடிவில் இவர்கள் என்னகதி அடைவார்களோ? சிவசிவா "நான் அன்றைக்கே சந்தேகப்பட்டேன். அப்படியே முடிந்தது பாரம்பரியமாய் வந்த மிராசுக்கிருந்த ஒரு குழந்தையையும் தொலைத்துவிட்டார்களே பாபிகள். "கனிக்காக மரத்தை வெட்டிச் சாய்த்தது போல தங்களுக்குக் கிடைக்குமென்கிற மிராசு லாபத்துக்காக பெரும் பாதகத்திலிறங்கி விட்டார்களே. ஐயோ பாபம்! குழந்தை கொல்லப்பட்டே இருக்குமோ யாதோ, பைஸலாகிவிட்டதா வென்று கேட்டானே, அந்த மாடுமாற்றிப்பயல், அதற்கு நிச்சயமாச்சொல்ல முடியாதென்றானே சட்டி சுறண்டிப்பயல். அதையோசிக்கும்போது தெய்வாநுகூலமாகக் குழந்தை உயிரோடிருந்தாலும் இருக்கலாம். பிள்ளைமட்டும் பிழைத்திருந்தால், பயல்களை யெல்லாம் ஒரு கைபார்ப்பேன். இருக்கட்டும் வெள்ளாளனென்று பிறந்தவன் இத்தீய தொழிலை மனத்தாலும் நினைக்கலாமா? இவன்தானா தொண்ணூற்றாறு சற்கீர்த்தி வாய்ந்த கங்கா குலத்திற் பிறந்தவன். ஒரு தலைக்கும் எழுபது தலைகொடுத்த பழையனூர்ப் பாக்கியவான்கள் மாபிலுதித்தவனா இவன், பூர்வத்தில் தேவேந்திரனுக்காக மதுரைப் பாண்டியராஜனிடத்தில் மேகத்திற்குப்பிணை நின்று, காராளன், கார்காத்தான், என்று பெயர் பெற்ற சுனைதையான குலத்தினனா இக்கடையன், தயாலிந்து வாகிய சோமசுந்தரப்பிள்ளைக்குத் தம்பியென்று இந்தத்தரிதலையைச் சொல்லவுங்கூடுமா? தொன்று தொட்ட பெரிய சந்ததியான இவனுக்கே இப்புத்தி வருமானால் நேற்றுவரை பாட்டுக்காலிலே இரிந்தபுத்துராளையும் அவன் மகனையும், மற்றொருயடையனையும் பற்றிப்பேசுவானேன். "என்று பலவாறு

தங்கச்சாமிபிள்ளையையும், அவன் கூட்டாளிகளையும் நிந்தித்துவிட்டு சோமசுந்தரம்பிள்ளைக்கு மருந்து போட்டானதும், தமதகம் போய்ச்சேர்ந்து ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்தார் சாமினாத பிள்ளை.

நான்காம் அதிகாரம்.

மணிமங்கலம் கல்விச்சாலையில் நமது தெய்வசிகாமணி படித்துக்கொண்டு வருகிறான். அவனுக்கு இப்போது ஏழு அல்லது எட்டு வயதிருக்கும். அவன் வகுப்பில் படிக்கிற பிள்ளைகளுக்கெல்லாம் அவனே முதற் பையனாயிருப்பான். உபாத்தியாயர் கேட்கும் கேள்வியாகிய பெட்டகத்திற்கு மறுமொழியாகிய திறவுகோல், தெய்வசிகாமணி வாயிலிருந்தே கிடைக்கும். பாடம் ஒப்பிக்கவில்லையென்றாவது, கணக்குச் செய்யவில்லையென்றாவது, ஒரு நாளும் கண்டிக்கப்பட்டிருக்கவே மாட்டான். பாடம் நடந்துகொண்டிருக்கும் பொழுது அங்கும் மிங்கும் பார்த்துக்கொண்டும், அடுத்தபிள்ளைகளோடு கலகம் விளைத்துக்கொண்டும் திரிகிறபையன்களிருக்கிற இடத்திலும் நிற்கமாட்டான். எறும்புகள் கொஞ்சநேரம் சோம்பேறித்தனமாய் நின்றாலும் நிற்கும், இவன் சோம்பலாயிருந்த நேரங்கிடையாது. ஒரு தினத்திற் சில நிமிஷமாவது வீணாகக்கழிந்து போனால் விலையேறப்பெற்ற வயிரச்சன்னங்களை மண்ணிலுதிர்த்து விட்டவனைப்போல மனக்கவலைப்படுவான். நெருப்பிலிருந்து புழுக்களைக் கண்டெடுத்தாலும் அவன்வாயிலிருந்து ஒரு கெட்டவார்த்தையுங் கண்டு கொள்ள முடியாது. அவனுடைய தேகமும் வஸ்திரமும் புஸ்தகமும் எந்தநேரமும் மெய்ஞ்ஞானிகளது இதயம் போல பரிசுத்தமாகவே இருக்கும். புஸ்தகத்தில் அபிமானமில்லாதவன் படிப்பிலும் அப்படியேயிருப்பான் என்று ஒரு நாள் உபாத்தியாயர் சொன்னதிலிருந்து அவைகளை நேத்திரம்போற் காத்து வருவான். "மகனறிவு தந்தையறிவு" என்று ஊராரும் உபாத்தியாயரும் சொல்லிக்கொள்ளும்படி ஒழுக்கமாய் நடந்து

கொள்வான். நியமித்த விளையாட்டு நேரத்தைத்தவிர விளையாடப் போயிருப்பானென்று விளையாட்டுக்குக் கூட ஒருவருஞ் சொல்ல மாட்டார்கள். சுருக்கிச் சொல்லுமிடத்தில் தாசில்தார் வீட்டுக்கும் பாடசாலைக்கும் ஒரு மாணிக்கத் தீபம் போல விளங்கினான்.

தெய்வசிகாமணிக்கு பள்ளிக் கூடத்துத் தோழன் ஒரு பையன் ஏற்பட்டிருந்தான். அவன் பெயர் கல்யாணசுந்தரம், அவனுடைய பிதா மணிமங்கலத்தில் ஒரு பெரிய வர்த்தகராயிருந்தவர். உப்பு முதற் கர்ப்பூரம் வரை எந்த நேரமும் எவ்வளவு வேண்டுமானாலும் அவர் கடையில் வாங்கலாம். நாட்டுப்புறங்களிலும் வெளியூர்களிலுமிருந்து அவரிடம் பற்று வரவு செய்கிற வியாபாரிகளுக்கு அளவுகிடையாது. சரக்கிலாவது விலையிலாவது தன்னுடைய காரியஸ்தர்கள் வித்தியாசஞ் செய்வதாகக் கண்டால் உடனே அவர்களைத் தக்கபடி கண்டிப்பார். காணி காணியாகத் தேடிக்கோடி கோடியாக நல்ல விஷயத்தில் செலவு செய்வார். கொடைவாங்கல் விஷயத்தில் மகா நாணயஸ்தரென்று அந்தப்பிரதேசமெல்லாம் பேசிக் கொள்வார்கள். அவருடைய வகை மனுஷன் போய்க்கேட்டாலும் எந்தப்பணக்காரரும் யாதொரு ஆடங்கமுஞ் சொல்லாமலே கணக்கிற் பற்றெழுதிக்கொண்டு லக்ஷக்கணக்காக்கொடுப்பார்கள். தன் தகுதிக்குத் தக்கவண்ணம் தூத்துக்குடியிலிருந்து இரங்கூன் போய்வருகிற ஒரு கப்பல் வர்த்தகத்தில் பாதி பாகஸ்தராகப் பணம் போட்டு வியாபாரம் நடத்திக்கொண்டு வந்தார். கப்பலோடி ஆறுமுகஞ் செட்டியார் என்று சொன்னால் சிறுகுழந்தைகளுக்குக் கூடத்தெரியும். அவர் இரண்டு வருஷத்திற்கு முந்தி மூர்ச்சை வாயுவினால் திடீரென்று இறந்துபோய் விட்டார். அவருடைய சொத்துக்களைப் பற்றி யாதொரு ஏற்பாடும் செய்து வைக்கக்கூடாமற் போய்விட்டார். சில வியாபாரிகள் தங்களுடைய வர்த்தகத்தில் கஷ்ட நஷ்டங்கள் வருகிற காலத்தில் தமக்கும் பின் சந்ததிகளுக்கும் உதவியாயிருக்கும் பொருட்டுத் தங்கள் சொத்தில் சில பாகத்தை மறைத்து வைக்கிற வழக்க முண்டு அதை கனவிலும் அவர் நினையாதவர். செட்டியார் இறந்து போய்விட்டதாக முழுமோசக்காரனான அவருடைய கூட்டாளிக்குத் தெரிந்து பொய்யான நஷ்டக்கணக் கேற்படுத்திக்

கப்பலையும் அதைச்சேர்ந்த சொத்துக்களையும் மணிமங்கலத்திலுள்ள பூர்வீக ஆஸ்திகளையும் கடனாளிகள் எடுத்துக் கொள்ளும்படியான ஏற்பாடு செய்துவிட்டுத் தானும் திரண்ட பணங்களை அபகரித்துக் கொண்டு கம்பி நீட்டி விட்டான். அது முதல் ஆறுமுகஞ்செட்டியார் குடும்பம் தரித்திர திசைக்கு வந்து விட்டது. அவருடைய மனைவியும் ஒரே பேறான கல்யாணசுந்தரமும் குடியிருக்க வீடு மில்லாமல் கஷ்டப்படுவதைக் கண்டு இரங்காதார் ஒருவருமில்லை.

இவர்கள் இங்ஙனம் கிர்க்கதியாயிருப்பதைப் பலராலும் தாசில்தார் கேள்விப்பட்டு வேளாள சங்கத்திலிருந்து ஒரு சிறு வீடு வாங்கிக்கொடுத்து அதிற் குடியிருந்து வரும்படி செய்து சாப்பாட்டுக்குங்கொடுத்துக் காப்பாற்றி வந்தார். கல்யாணசுந்தரத்திற்குப்படிக்கும் பருவம் வந்தவுடனே தன் மகனுடன் பள்ளிக்கூடம் போய்ப் படித்துவரும்படி திட்டஞ்செய்தார். தெய்வசிகாமணியும் கல்யாணசுந்தரமும், வயதிலும், வளர்ச்சியிலும், அழகிலும், குணத்திலும் நிறத்திலும், சமானமாகவே யிருந்தார்கள். தனித்தனி அவர்களைக் கண்டவர்கள் இருவரில் இவன் இன்னானென்று எளிதில் அடையாளங்கண்டு சொல்லிக்கொள்ள மாட்டார்கள். செல்வம், வறுமை, என்னும் பகுப்புத்தெரியாத இளம்பருவத்தினனாகிய கல்யாணசுந்தரம் தன் தாய் கற்பிக்கிற சற்புத்தியை சூக்ஷ்மமாயறிந்து அதன் வழியே நடப்பான். தனக்கு ஒரு வேலையும் தெய்வசிகாமணி கொடாதிருந்தாலும் தானே வலுவிற் புகுந்து செய்வான். தெய்வசிகாமணி ஏதாவது ஒரு பண்டத்தைக் கொடுத்து வைத்திருக்கும்படி சொன்னால் அதை உயிரைப்போல காப்பாற்றி வைத்திருந்து கொடுப்பான் கல்யாணசுந்தரம் செய்கிற ஒவ்வொரு காரியங்களையும் தெய்வசிகாமணி பார்த்து மகிழ்வான். ஏழையின் வீட்டுப்பிள்ளை யென்று எட்டுணையுந் தாழ்மையாக மதியான் காந்திமதியம்மாள் கொடுக்கிற பக்ஷணம் இருவருக்கும் சமமாயிருந்தாலும் தன் பங்கிலிருந்தும் கல்யாணசுந்தரத்திற்குக் கொடுப்பான். புஸ்தகம் வஸ்திரமுதலானவைகளைத் தனக்கும் தன் தோழனுக்கும் ஒரே மாதிரி வாங்கித் தரும்படி தந்தையிடத்திற் சொல்வான். கல்யாணசுந்தரத்திற்குச் சாப்பாடெல்லாந் தாசில்தார் வீட்டிலேயே, யென்றாலும், ஏக தேசம் தன்

தாயைப் பார்க்கத் தன் வீட்டுக்குப் போயிருந்தால் அவன் வரும் வரை தெய்வசிகாமணி சாப்பிடான். சிறுவர்களிருக்கிற நேசத்தைக்கண்டு தாசில்தார் இவ்வூரைவிட்டு மாற்றிப்போகும் போது கூடவே கல்யாணத்தையும் அழைத்துக்கொண்டு தான் போய்விடுவாரென்று பலரும் பேசிக் கொள்வார்கள்.

ஒரு நாள் இரவு விளக்கின் முன்னிருந்து கல்யாணசுந்தரம் பாடம் படித்துக் கொண்டிருந்தான். தெய்வசிகாமணி வெளித்திண்ணையிலிருந்து மாசிலாமணியுடன் சந்திரகலை வளர்வதையும், குறைவதையும் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தான். படித்துக்கொண்டிருந்தவன் கீழே கவிழ்த்திருந்த கொப்பறையில் மிதித்தேறி அலமாரியிலிருக்கிற புஸ்தகத்தை எடுக்கப்போனான். இவன் கைபட்டதிலிருந்து சுவரில் மாட்டியிருந்த விலைபெற்ற சரிகைச்சட்டை பொன்று எப்படியோ கீழே விழுந்து பக்கத்தில் எரிந்து கொண்டிருக்கிற விளக்கிற் பட்டுத் தீப்பற்றி எரிந்து போய்விட்டது. தாசிலதார் வந்தவுடனே தன்னை மிகவும் கண்டிப்பதோடு வீட்டை விட்டு வெளியேற்றியும் விடுவாரென்று நடு நடுங்கிக் கொண்டிருந்தான். அச்சமயம் வெளியிலிருந்த தெய்வசிகாமணி என்னடா! கல்யாணம்! என்னசெய்து கொண்டிருக்கிறாய் துணிப்புகை மணக்கிறதே யென்னக் கேட்டுக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்தான். அவனைக்கண்டதும் கல்யாணம் தேம்பித்தேம்பி அழ ஆரம்பித்தான். என்ன குற்றஞ்செய்திருந்த போதிலும் தன் பிதாவிடஞ் சொல்லி மன்னிப்பு வாங்கித்தருகிறேனென்று தெய்வசிகாமணி தேறுதல் சொன்னதன் பேரில் நடந்ததைச் சொன்னான். வெளியில் உலாவப்போயிருந்த தாசில்தாரும் வந்துவிட்டார். உடனே தெய்வசிகாமணி தந்தையிடம் போய்த்தானும் கல்யாணசுந்தரமும் படித்துக்கொண்டிருக்கும்போது சுவரில் தூக்கியிருந்த சரிகைச்சட்டையைப் பார்க்கவேண்டுமென்று தான் எட்டி எடுத்ததாகவும், அது கைதவறி விளக்கோரம் விழுந்துநெருப்புப்பற்றி யெரிந்து போய்விட்டதாகவும் தானே குற்றவாளி யென்றும் பயத்துடன் தெரிவப்படுத்தினான். அவன் சொல்லுகிற மாதிரியிலிருந்து நடந்த உண்மையைத் தாசில்தார் நிதானித்துக் கொண்டு "மைந்தர் தமை

நெஞ்சில்'' என்ற முதுமொழிக்கிணங்க அவர்களது சிநேக ஒருமையைக் குறித்து மனத்துள் வியந்து இதைப்பார்க்கிலும் விலை பெற்ற பொருள்கள் எவையும் உன்னாலாவது, கல்யாணசுந்தரத்தாலாவது நஷ்டப்பட்டாலும் நான் விசனிக்கமாட்டேன் என்று உற்சாகப்படுத்திச் சொன்னார்.

ஐந்தாம் அதிகாரம்.

சுகதுக்கங்கள் ஒருவனிடமும் நிலைத்திருப்பனவல்ல நதியானது, பிரவாகமற்று வறண்டிருக்கிற காலங்களிலும் சிற்சில பெரிய மடுக்களில் தண்ணீர் தங்கியிருப்பதுபோல, சிலர்களுக்கு சொற்பகாலம் இன்பதுன்பங்கள், நிலையாயிருந்தாலுமிருக்கும். புதுப்புனல்வரும்போது முன்னிருந்த ஜலத்தைத் தள்ளிவிட்டு அது தங்கிக்கொள்வதுபோல முதலிலிருந்த சந்தோஷத்தையோ, அல்லது சலிப்பையோ, நீக்கிவிட்டு அதற்கு மாறாக மற்றொன்று குடிபுகினும் புகும். பொதுவாக மனிதனென்று பிறந்தவனில் குபேரன் முதற் கோவணாண்டிவரை துக்கமில்லாதவனே உலகத்திற்கிடையாது. அவ்வாந்தையும் சப்பவத்திற்குத் தக்கவிதமாயிருக்கும். மாதா விறந்ததுக்கம், ஆறுமாஸத்திற்கும், பிதா பிரிந்த துக்கம் ஒரு வருஷத்திற்கும், மனைவி மரித்ததுக்கம் மயான மட்டுக்கும், புத்திரனைப் பிரிந்த துக்கம், ஆயுள் பரியந்தமும், ஒருவனைத் துன்புறச்செய்யுமென்பது முதுமொழி. இனி இக்கடைசித்துன்பத்துள் ஆழ்ந்த சோமசுந்தரம்பிள்ளையினது கதியை விசாரிப்பாம். தன்னுடைய ஒரே குமாரன் தெய்வசிகாமணி தவறி ஐந்துவருடம்வரை இரவு பகல் நன்மை தீமை பெரிது சிறிது சுகந்தம் துர்க்கந்தம், என்னும் பேதமே தெரியாத உன்மத்தராயிருந்தார். சாமிநாதபிள்ளை செய்து வந்த பற்பல சிகிச்சைகளால் சிறிது சிறிது பித்தாதிக்கம் குறையத்தலைப்பட்டது இத்தருணத்திற் சாமிநாதபிள்ளை புகட்டிய உபதேச மொழிகளாலும், மெய்கண்ட சாஸ்திர விசாரணையாலும், மனோதுக்கம் நீங்கிப்பூரண சுகத்திற்கு வந்துவிட்டார்.

ஞானமாங் கனல் சுடும்போது புத்திர சோகமென்னும் புன்சருகு கருகாதிருக்குமோ, தெருவிலே நடக்கிற ஜனங்கள் பேசிக்கொள்வதில், மகன், பிள்ளை, குழந்தை, சந்ததி என்னும் வார்த்தை கலந்திருந்தால், அது செவிப்படுமுன் வாய்விட்டுக் கண்ணீர் விட்டு மனம் விட்டுக் கதறியழுத சோமசுந்தரம் பிள்ளை இப்போது புதிய தன்மையுடையவராக மாறிவிட்டார். யாராவது உலக விவகார சம்பந்தமான பேச்சுக்களைப்பற்றித் தன்னிடம் வந்தால் அதைக்குறித்துப் பேசிக்கொள்ளச் சம்மதமில்லையென்று கண்டிப்பாய்ச் சொல்லிவிடுவார். மறுமைக்கான பேச்சானால் ஒரு நாளைக்கல்ல ஒரு மாசத்திற்கானாலும் இடையறாது பேசப்பிரியப்படுவார். தமது பந்துக்களில் யாராவது இறந்துபோனதாகக் கேள்விப்பட்டு மீனாட்சியம்மாள் வந்து சொன்னால் கண்ணுக்குப் புலமாகிற சர்வ ரூபங்களும் அழியுமானால் மனிதரூபமட்டும் அழியாதிருக்குமோ, மீனாக்ஷீ "மாயுமனிதரை மாயாமல் வைக்கமருந்தில்லையே" என்பர். தமது பண்டைய நேசர்களிற் சாமிநாதபிள்ளையைத் தவிர வேறு யாராவது வந்து ஐயா, தங்களுடைய செல்வத்தையும் புத்திரனையுமிழந்து இவ்வாறு கஷ்டப்படும்படியும் நேர்ந்ததே என்று அநுதாபப்பட்டால் 'குடை நிழற்கீழ்ச்சேனைத் தலைவராச் சென்றோரும், மனையாளை மாற்றார் கொள்வீழ்வர்' என்பது. அறநூல் அவ்வாறின்றி நமக்கு மனையாள் மீந்திருப்பது விசேஷமல்லவா? என்பர். பிரதிதினமும் அதிகாலையிலெழுந்து நித்யகன்மங்களை முடித்துக்கொண்டு நடுப்பகல்வரையும் ஏகாந்தமான இடத்திலிருந்தும், அதன்மேல் மனையாளாற் கொடுக்கப்படும் தினத்திற்கொருவேளை சத்துவகுண போசனத்திற் சிறிதே உண்டு மறுபடியும் ஜெபித்துக்கொண்டிருப்பதற்காக அவ்வூர் மஹாபலேசுரர் திருவாலயத்திற்குப் போய் விடுவார். கோவிலுக்கு வருகிற பெரியோர்களிடத்திற் றனக்கு சாஸ்திரங்களில் நேரிடும் சங்கைகளைக் கேட்டுத் தீர்வார்.

"தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணரா" க்குருட்டுச் சாமிகளும், பொய்ப்பொருண்மேல் இச்சையுற்று மெய்யடியார் வேடந்தாங்கி அயர்ந்தார் வாய்ப்பொருளை அபகரித்துத் திரியும் குருட்டுச்சாமிகளும், இல்லாச் சிரமத்தால், இல்லாச்சிரமத்தை விடுத்து

மூவாசையுமற்றமுனிவர் போல நடித்துத் திரியும் போலிச்சாமிகளும், எப்போதும் ஒரே பக்குவத்துடன் மிளகு ரஸமும் வைக்கத்தெரியாது விழிப்பது மனித குணமாயிருக்கவும், இரும்பைத் தங்கமாக்கி விடுவேனென்று, ஏமாற்றித் திரியா நிற்கும் மோசச்சாமிகளும், பாற்சாமி, பாகற்பழச்சாமி, வெண்ணைச்சாமி, மிளகாய்ச்சாமி, நெருப்புச்சாமி, நெல்லிக் காய்ச்சாமி எனப்பல விசித்திரப் பெயரிட்டு உலகத்தை வஞ்சித்துத் திரியும் பல பக்காசாமிகளும் சோமசுந்தரம்பிள்ளை இருக்குமிடத்திற்கு வரவும் விதிர் விதிர்த்தொழிவர். விவேகிகளால் விரும்பப் படத்தக்க இவரது மேலான நல்லொழுக்கத்தைக் கேள்விப்பட்டு பற்பல பெரியோர்களும் ஸாதுக்களும் கும்பல் கும்பலாய்வந்து பார்த்துக்கொண்டு போகும் வழக்கம் உண்டாய் விட்டது. வரப்பட்ட பெரியோர்களைச் சாமிநாதபிள்ளை உபசரித்தனுப்புவார். இப்போது பாப்பையாபுரமும் அதைச்சேர்ந்த ஊர்களும் தங்கச்சாமிபிள்ளை அதிகாரத்திற்குட் பட்டிருக்கின்றன.

ஆறும் அதிகாரம்.

பாப்பையாபுரம் கிராம தேவதை செண்பகவல்லியம்மன் கோவிலுக்குக் கர்த்தாக்கள், அரசுரிமைக் காலத்தில் எண்பத்தேழு கோட்டை விரப்பாட்டு நன்செயும், தொண்ணூற்றூறு சங்கிலி புன்செயும் சர்வமான்யமாக விடப்பட்டிருந்தன. அந்த நிலங்களைக் குடிகள்வசம் பயிர்செய்யவிட்டு அதினின்றுங்கிடைக்கிறவருமானங்களைக் கொண்டு கோவிற்பூஜை, உற்சவமுதலியன வற்றை நடத்திவரும்படி சோமசுந்தரம்பிள்ளையின் முன்னோர்களே, ஏற்படுத்தியிருந்திருக்கிறார்கள். அந்தக்கிரமப்படியே அம்மானியநிலங்களுக்குரிய பட்டாப் பாத்தியமானது சோமசுந்தரம்பிள்ளைக்கு ஏற்பட்டு வந்து அப்பால் அவருடைய சகோதரர் தங்கச்சாமிபிள்ளை பேருக்கு என்ன நியாயத்தினாலேயோ பதிவு செய்யலாகிவருகிறது. அது அப்படியிருக்க தனக்குச் செல்வாக்கு நடக்கிற தென்ற தைரியத்தைத் தங்கச்சாமிபிள்ளை எண்ணிக்கொண்டு அந்த நிலங்களின் மேலிருக்கிற குடிப்பாத்தியத்தை நீக்கிவிட்டுத்தானே அபகரித்துக்கொள்ளப் பல

பிரபத்தனங்கள் செய்து வந்தார். அந்த நிலங்களை யுழுகிற குடியானவர்கள் அறிந்து சந்ததி பாரம்பரையாகத் தாங்களே, அந்த நிலங்களை யனுபவித்து வருவதாயும் அப்பூமிக்குரிய நிலவரியை வசூலிக்கும் சுதந்தரத்தைத் தவிர வேறு எவ்விதமான சொந்தமும் தங்கச்சாமிபிள்ளைக்காவது, அவர் முன்னோர்களுக்காவது இருந்திருப்பதில்லையென்றும், கோவில் மான்யம் சத்திரமான்ய முதலிய பல மான்ய நிலங்கள் கிராமாந்தரங்களில் கிராமத்தலைவர்கள் பேருக்குப் பட்டாப் பாத்திய மட்டுந்தான் ஏற்பட்டதென்றும், அந்தப்பாத்தியத்தை வைத்துக்கொண்டு நிலங்களைக் கைப்பற்ற நினைப்பது பெரிய அக்கிரமமென்றும், வாகோபதார ரான தங்கச்சாமிபிள்ளையால் தங்களுக்கு யாதொரு சங்கடமும் உண்டாகாமற் காப்பாற்ற வேண்டுமென்றும் துரைத்தனத்தாருக்கு விண்ணப்பஞ்செய்து கொண்டார்கள். இதனால் தங்கச்சாமிபிள்ளை நிலங்களில் அக்ரமப்பிரவேசம் செய்ய நினைத்ததை நிறுத்திவிட்டுக் கோர்ட்டில் வழக்கிட்டு எதிரிகளுக்கு அறிக்கைப் பத்திரமும் பிரப்பித்து விட்டார்.

நியாயஸ்தலங்களுக்கு வழக்குக் கொண்டுபோக நினைக்கிறவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு ஒத்த வழக்குதானாவென்று முதலிற் கவனிக்கவேண்டும். ஏனெனில், பொய் பேசுவதையே சாதாரண வழக்கமாய்க் கொண்டவனுங் கூடப்பொய்ச்சாக்ஷி சொல்ல எளிதில் ஒப்பமாட்டானன்றோ. கிரமமான விவகாரமாயிருந்தாலும், நியாயத்தலைவர்கள் கேட்கிற கேள்விகளுக்குத் தகுதியான முகாந்தரஞ்சொல்லத் தனக்கும், தனக்கு உபபலமாக வரப்பட்டவர்களுக்கும் சக்தியுண்டாவென்று ஆலோசிக்க வேண்டும். சொல்வன்மையில்லாமையினால் பொய்க்கு முன்னே மெய் நின்று தத்தளிக்கும்படி நேர்ந்தாலும் நேரும். மேலே காட்டிய இருவகைப்பலமும் ஒத்திருந்தாலும், தீர்ப்பின் முடிவில் ஏதாவது தனக்கநுதாயமிருக்கிறதாவென்று முக்கியமாக ஆராய்தல் வேண்டும். "பணத்துக்கு ஒரு அம்பு வாங்கி விருந்துக்கு வேட்டை யாடினது போல்" நிஷ்பலமான காரியத்திற்குப் போகக் கூடாது. சர்வ சௌகரியங்களும் அநுகூலமாயிருந்தாலும், பணம் என்பதொன்றில்லா விட்டால் ஆனந்தப் பாழாகும். "அழிந்தசெலவுக்கில்லாதான் வழக்கிழந்

தான்'' என்பது போல பணமற்றுப் பலனற்றுப் போம். ஆகையினாலே எல்லாவற்றிற்கு முதன்மையாகப் பணவரவையும் எதிர்பார்த்துக்கொள்ள வேண்டும், மற்றொருவர் கையிலிருக்கிற பணத்தை நம்பி வியாஜ்யஞ் செய்யத்தொடங்கினால் அது ஆபத்தாய் முடியும். ஆரம்பத்தில் சொற்பத் தொகையைக்கொடுத்து நியாயஸ்தலத்திற் கனுப்பிவிடுவார்கள். அதை உறுதியாக வைத்துக்கொண்டு, வழக்கிட்டு விட்டு வந்து மேற்செலவுக்கு பணங்கேட்டால் வட்டியை வழக்கத்திற்கு மிஞ்சிக் கேட்பார்கள். அதற்குச் சம்மதித்தாலும் இரண்டு தக்க ஜாமீன்தார்கள் மேல் ஒப்பஞ்செய்ய வேண்டுமென்பார்கள். அங்ஙனமே எல்லா நிபந்தனைக்கும் கட்டுப்பட்டெழுதிக் கொடுத்தாலும், ஒரே மொத்தமாகப் பணத்தைக் கொடார்கள் ''சுடுகாடு போனபிணமும் கோர்ட்டுக்குப்போனபணமும்' திரும்பி வாராதென்று பொலிநியாயங் கூறிப்போவார்கள். எல்லாம் சாதகமாகி வருகிறபோது சிறிது பணக்குறை நேர்ந்தாலும் ஒட்டோடெடாழிந்துபோம். இத்தனைவிதமான சங்கடப்பட்டு கக்ஷியை ஜெயித்துக் கொண்டாலும், தான்செலவழித்த பணத்தினளவு எதிரிபாற் கொடுக்குப்படியேற்படாது. சிறிதே தான் கிடைக்கும். அப்படி வந்ததும் வக்கீலுக்கும், குமாஸ்தாக்களுக்கும் சாக்ஷிகளுக்கும் சில்லரை வேலைக் காரர்களுக்கும் கோயில் பிரார்த்தனைக்கும் செலவிடச்சரியாகும். தோற்றவன் கதியைத்தான் சொல்ல வேண்டாமே. கோர்ட்டுக்குப் போய் வென்றாலும், தோற்றாலும் நஷ்டமே நஷ்டம்.

இவ்வாறு வழக்கிட்டுத் திரிவதைப் பார்க்கிலும் விவகாரந் தெரிந்த சில மத்தியஸ்தர்களைக் கொண்டு தங்கள் வழக்குகளைத் தீர்த்துக்கொண்டால் எவ்வளவோ லாபமும் சுகமுமிருக்குமே! நியாயஸ்தலங்களுக்குப் போகாமல் தங்களுக்குள்ளேயே இப்படிப்பட்ட வழக்குகளைத் தீர்த்துக்கொள்ளும்படி குடிகளுக்குத் துரைத்தனத்தார் அநுமதியுங் கொடுத்திருக்கிறார்களே. பசியோடிருக்கிறவனைக் கருணையாளன் ஒருவன் கண்டு பாலோடன்னங் கொடுத்துபசித்துண்ணும்படி சொன்னால், அதை வேண்டாமென்று வீசியெறிந்துவிட்டு புண்ணைப்பள்ளி வாயிற கொட்டிக் கொள்வதுபோல கோர்ட்டுக்குப் போகலாமா? ஆனால் நாட்டுப்பஞ்சாயத்திற் சிலர்களுக்கு

லாபமே இருக்கிறதில்லை, அப்படிப்பட்டவர்கள் கோர்ட்டுக்கு அவசியம் போய்த் தீரவேண்டியதே. அவர்கள் சாக்ஷியம் அங்கே செலாவணியாகிக் கொண்டேயிருக்கும். அவர்கள் யார்? துர்வழக்காளிகள். சோமசுந்தரம்பிள்ளை உயிரோடிருக்கும் போது அவரனுமதியின்றி மான்ய நிலங்களைக் குறித்து வழக்குத் தொடரத் தங்கச்சாமிபிள்ளைக்கு அதிகாரமில்லையென்று குடிகளுக்குச் சார்பாய் நின்று வாதித்துஜெயித்துக் கொடுக்கும் வல்லபமும் மனவுறுதியும் சாமிநாதபிள்ளைக்கு உண்டு என்றாலும், சோமசுந்தரம்பிள்ளை தற்காலமிருக்கிற நிலைமைக்குக் கோர்ட்டுக்குப் போவது உசிதமல்லவென்று நின்று விட்டார்.

ஏழாம் அதிகாரம்.

தங்கச்சாமிபிள்ளை விவகாரம் எப்படியும் நடக்கட்டும் சாமிநாதபிள்ளை என்னசெய்கிறாரென்று கவனிப்போம். ஒரு நாட் பகல் இரண்டுமணிக்கு மஹாபலேசுரர் கோவிலை நாடிப் போகிறார் அவருடைய முகத்தில் ஆழ்ந்த ஆலோசனைக் குறியும் ஒரு பெருங் காரியத்தை முடிவுக்குக் கொண்டுவந்திருப்பதான கம்பீரநடையும் தோன்றுகிறது. சோமசுந்தரம்பிள்ளையைப் பார்க்கக் கோவிலுக்குள் நுழைந்தார். அங்கே ஒரு சாமியார் நிற்கிறார். சோமசுந்தரம்பிள்ளை நிஷ்டை கலைந்து எழுந்தவுடனே ஏதோ ஒரு முக்யமான காரியத்தைப் பற்றிப் பேசவந்திருப்பது போல் அவர் பார்வையும் நிலையும் பகுத்துக் காட்டிற்று கோவிலுக்குட் பிரவேசித்த சாமிநாதபிள்ளை மிராசுப்பிள்ளையை நெருங்கினார். சாமியாரைக்கண்டதும் இவரை அப்புரப்படுத்தி விட்டன்றோ நாம் தனியாக்கண்டு பேசவேண்டியிருக்கிறது எனக்கருதி.

சாமிநாதபிள்ளை அடியேன் நமஸ்காரம் சுவாமிகள் எவ்விடமிருந்து எழுந்தருளியாயிற்று.

சாமியார்:— அடிமை திருவாளூரிலிருந்து வருது.

சா பி:— அப்படியா, அவ்வூரில் சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருத் தேவி பரவை நாச்சியாருடைய வம்ஸம் இன்னமும் இருக்கிறதாகச் சொல்லுகிறார்களே தங்களுக்குத் தெரியுமா?

சாமி:— அடிமை முத்திரி வாங்கின போது கூட முத்திரிவாங்கினது ஒரு அடியாரு அதையுஞ் சுந்தரமூர்த்திபிண்ணு தான் சொல்லுகிறது. அவருக்கு முந்தி விட்டபேரு இசக்கியாபிள்ளையாம். அதொடைய தேவி சீகுண்ட மிண்ணல்லா கேள்வி.

சா பி:— சரி, சரி. நீர் என்ன திருமேனி.

சாமி:— இப்பம் ஒரு மாதம் உடலுக்குக் கொணமில்லாமே இருந்தேன். இல்லேபிண்ணு திருமேனி கண் கொண்டு பாக்க முடியுமா.

சா பி:— இதென்னடா சனியன் நாம் வந்த அவசரமும், இந்தப்பாம யோகி எதிர்பட்டுக்கொண்டு பிராணனை வதைக்கிறதும் ஒன்றும் சரியாயில்லையே நீர் என்னஜாதி?

சாமி:— அடிமை பிள்ளைமார்.

சா பி:— அப்படியல்லவா கேட்டிருக்க வேண்டும், நீர் எந்தவூர்?

சாமி:— அப்பாவுக்கு அடிமையைத்தெரிஞ் சிருக்குமிண்ணுல்லா இருக்கேன்

சா பி:— உம்மை எனக்கெப்படித் தெரியும் நீர் என்னை எப்போதாவதுங் கண்டிருக்கிறீரா?

சாமி:— அப்பாவை அடிமை சிறுபிள்ளைமுதல் கண்டிருக்கிறேன் அய்யாவுக்கும் நான் நல்லாத்தெரியும் இப்போ யாவுகப்பிசகா இருக்குதுப்போலே தோணுது.

சா பி:—இதென்ன பெருந்தொல்லை, கேட்கிற கேள்விக்குப் பதிலைக் காணோம் என்னென்னமோ விஸ்தரிக்கிறான் எந்தவூர் சாமி யாரே?

சாமி:— அடியார்களை ஊரும் பேரும் விசாரிக்கப் படாதின்னு என்னுடைய குருவுக்கு ஒரு பெரியவர் சொன்னாராம் அது ஒங்களுக்குத்தான் ஆகாதாம்.

சா பி:— அது சரிதான் காணும் சாமிகளே உம்முடைய ஊரைச் சொல்லும்.

சாமி:— அடியேன் இந்தவூர் தான். பிள்ளையவா வீட்டிலே தவசிப் பிள்ளையா இருக்கலையா, கணபதியில்லா. என்ன ஐயா இவ்வளவு யாவுகமில்லாமே அயத்திட்டியளே.

இந்த வார்த்தையைக் கேட்டதும் சாமிநாதபிள்ளை நிதானித்துப் பார்த்து ஆச்சரியமும் ஆனந்தமுமுடையவராய் "அப்பா கணபதி இவ்வளவு காலம் எங்கே போயிருந்தாய்? என்னகாரணத்திற்காக இப்படிப் பரதேசி வேடங்கொண்டிருக்கிறாய்? இக்கோலங்கொண்டு எவ்வளவு நாளாயிற்று? உன் வீட்டாருக்கு நீ வந்திருப்பது தெரியுமா?" என்றார்.

சாமியார்:—சற்றுநேரம் முகவாட்டத்துடனின்று தங்களுக்கு எல்லாவற்றையுஞ் சொல்லிவிடுகிறேன். ஆதியில் நான் புத்திக்குறைவாகச்செய்த குற்றத்தை மன்னிக்கவேணும். பிள்ளையவா வீட்டிலே சிறுபிள்ளைமுதல் உண்ணு தின்னு வளர்ந்துவிட்டு அவாளுக்கே கேடு நினைச்ச பாதகன். நான் அந்தச்சண்டாளப்பாவி பூமிநாதபிள்ளை பெரும் பணந் தருவதாக என்னை யேமாற்றி என் புத்தியைக் கெடுத்து விட்டார். இப்பவும் பிள்ளையவா, குழந்தையைப் பிரிந்த துக்கத்தினாலே சாமியாராகப் போய் விட்டதாகத் திருவாரூருக்கு வந்த ஒரு சாமியார் சொன்னார். எனக்கு ரொம்ப மனவருத்தமாயிருந்தது. இனி மேலாவது நாம் உண்மையைச் சொல்லிவிட்டால் அதற்குரிய காரியத்தைச் செய்து கொள்வார்களென்று நினைத்துத் தான் வந்தேன் என்றார்.

இதற்குச் சோமசுந்தரம்பிள்ளை நிஷ்டை கலந்து சாமியாரைப் பார்த்து வரணும் என்றார், சாமிநாதபிள்ளை மிராசுப்பிள்ளையின் சமீபத்தில் உட்கார்ந்து கொண்டு சாமியார் வரலாற்றைத் தவறுமற் சொன்னார். அவர் எல்லாஞ் சிவன் செயலே என்றார். கணபதிச்சாமியார் இருந்து கொண்டு சாமிநாதபிள்ளை முகத்தைப்பார்த்துச் சொல்லத் தொடங்கினார்.

பிள்ளையவாள் திருச்செந்தூருக்குப் போய்வந்த வருஷம் புத்தூரிலிருந்து பூமிநாதபிள்ளை தன் மகளுக்குப் பொங்கப்பொடி கொடுக்க நம்முடைய ஊருக்கு வந்திருந்தார். சங்கிராந்திக்கு மறுநாள் பூமிநாதபிள்ளை, சின்னப்பிள்ளையவாள், காமாக்ஷியம்மாள் மூன்று பேரும் மேல்வீட்டில் என்னைத் தனித்துக் கூட்டி வைத்துக் கொண்டு தெய்வசிகாமணியை எப்படியாவது கொன்று விட்டால் முந்நூறு ரூபா கொடுக்கிறதாச் சொன்னார்கள். கொலைசெய்ய நான் சம்மதிக்க மாட்டேன் என்றேன். அப்படியானால் நாங்கள் சொல்லுகிற மனிதனிடம் ஒருவருக்குந் தெரியாமல் குழந்தையைத் தூக்கிக்கொடுத்து விடவேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு நான் சரியென்று சம்மதித்தேன் வெகுநாளைக்குப் பிறகு, திருச்செந்தூருக்கு ஐயா, புறப்பட்டார்கள். அந்தச்சமயம் ஒருவனை என்னிடங் கொண்டுவந்து காட்டி அவன் வசம் ஒப்பிக்கச் சொன்னார்கள். அப்படியே அவனும் என்னைத் தொடர்ந்தே வந்தான். இனிச்சொல்லிக் காரியமென்ன. விசாகத் தன்றைக்கே அந்தப் புதுமனுஷன் கையிலே பிள்ளையைத்தூக்கிக் கொடுத்துவிட்டு நாலு நாழிகைக்குப் பிறகு யாரோ ஒருவன், கையைத் திருகிப் பிள்ளையைப் பிடுங்கிக் கொண்டு போகிறானே, என்று சத்தமிட்டேன். உடனே பெருங்கூட்டங் கூடி விட்டது போலீஸ்காரரும் வந்து புகுந்து கொண்டார்கள். யாருடைய குழந்தை? எப்படிக் காணாமற் போயிற்று. என்ன நகை போட்டிருந்தது? எத்தனை வயசு ஆணா? பெண்ணா? பெற்றோர்களுக்கு விரோதிகளுண்டா? அவர்கள் பெயரென்ன? ஊரெது? என்று, வீண் ஆடம்பரமான கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்களேயன்றி அந்நேரமே தேடமுயற்சி பண்ணவில்லை. ஓடியாடிப்பார்த்தால் கிடைத்திருக்குமே. அப்பால் பதினைந்து நாட்

கழித்துப் யாப்பையாபுரம் வந்து சேர்ந்தோம். அதுமுதல் மூன்று மாதம் வரை எனக்குப் பேசின தொகை கொடுக்கவில்லை. சொச்சத்தையும் சொல்லிப் போடுகிறேன். பிறகு ஒருநாள் இரவு முன்னேலே கூடின பாவிகளும் நானும் பிள்ளையவாள் படுக்கை வீட்டுக்கு மேல்புறமிருக்கிற திண்ணையில் சந்தித்தோம். எனக்குப்பணங் கொடுக்க வேண்டிய விஷயத்தில் ஆரம்பத்திற் கொஞ்சம் ஆடங்கம் பண்ணினார்கள். நான் தங்களிடம் வெளிப்படுத்தி விடுவதாகச் சொன்னதன் பேரில், பணத்தைக் கொடுத்தார்கள்.

நான் மடியிலே பணத்தைக் கட்டிக்கொண்டு தூக்கம் பிடியாமல் முகப்புத் திண்ணையிற் படுத்திருந்தேன். அந்தச்சமயம், தாங்கள் பிள்ளையவாள் படுக்கை வீட்டுக்குள்ளிருந்து வெளியேறிப் போனீர்கள், அது மற்றவர்களுக்குத் தெரியாது நான் மாத்திரங் கண்டேன். எனக்குப் பெருந்திகிலுண்டாய் விட்டது. என்ன ஆபத்து வருமோ என்று பயந்து கொண்டே என் வீட்டுக்குப்போய் பணத்தைப் பத்திரப்படுத்தி விட்டிருந்தேன். மறுநாட் காலையில் செல்லப்பன் வந்து தாங்கள் வரச்சொன்னதாக என்னைக் கூப்பிட்டான்.

கொஞ்ச நஞ்சம், உடம்பில் ஒட்டிக் கொண்டிருந்த உயிரும் போய்விட்டது. இதோ வருகிறேனென்று அவனிடம் தாக்கல்சொல்லியனுப்பி விட்டு போசனை பண்ணினேன். இராத்திரிப் பேசிக் கொண்ட காரியமெல்லாம் தங்களுக்குத் தெரிந்திருப்பதால், எப்படியுஞ் சந்திக்குக் கொண்டு வந்து விடுவீர்களென்றும் இனி இவ்விடத்திலிருப்பது சரியல்லவென்றும், அப்போதே புறப்பட்டுத் தேசாந்தரம் போய்விட்டேன். எளிதில் அடையாளங்கண்டு கொள்ளாதவிதமாக இந்தப் பரதேசி வேடம்பூண்டு கொண்டு திரிகிறேன். நான் போயிருந்த தேசங்களை யெண்ணமுடியாது. ஒரு ஊரிலாவது இரண்டு நாள் தங்கியிருந்ததே கிடையாது. இப்பவும் ஒவ்வொரு சமயம் பையனை நினைத்தால் அழுகை வருகிறது. என்னிடம் குழந்தையை வாங்கிக் கொண்டு போனவன், ஜாதியில் கள்ளன் மணிமங்கலம் தாலூகாப் பக்கத்தில் அவனூரிருக்கிறதென்றுசொன்

னுன் அவன் பெயர் ஓச்சன். அவனோடு நம்முடைய ஊருக்கு வந்திருந்து திருச்செந்தூருக்குப் போகும் போதும் கூடவேவந்து இடைவழியில் விலகிக் கொண்டவன் ஒருவன் அவன் பெயர் காளி. அவனும் கள்ளச் சாதிதானும். இதுவே நடந்த செய்கை. எனக்கு என் வீட்டிலிருக்க மனமில்லை. நான் எப்படியும் அலைஞ்சு கெட்டு என் பொறியைத் தொலைக்கிறேன். நீங்கள் குழந்தையைத் தேடிப்பாருங்கள். தாங்களும் ஐயாவும், நான் செய்த குற்றத்தைத் தெய்வத்திற்காகப் பொறுத்துக்கொள்ளவேண்டியது. நான் இங்கே வந்தது ஒருவருக்குந் தெரியவேண்டாம். "என்று சொல்லிச் சாஷ்டாங்கமாக நமஸ்காரம்பண்ணி எழுந்து ஒன்றும் பேசாமற் சரசரவென்று நடந்து ஊருக்கு வடபுறமிருக்கிற செடியடர்ந்த காட்டுவழியாய்ப் புகுந்து மறைந்து விட்டார் கணபதிச்சாமியார்.

இவைகளைக் கேட்டுக்கொண்டு வந்த சோமசுந்தரம்பிள்ளை இடையிடையே சிவ சிவ வென்றுச்சரித்துக் கொண்டிருந்தார். பின்பு தெய்வசிகாமணியைக் கண்டு பிடிப்பதற்குத் தான் கொண்டிருக்கும் உத்தேசமும், தங்கச்சாமிபிள்ளை நடத்திக்கொண்டிருக்கும் மான்ய கில வழக்குத்தான் சம்பந்தப்படாதிருக்க வேண்டிய விவரத்தையும் சுருக்கமாகவே சோமசுந்தரபிள்ளையிடஞ் சொல்லிவிடை பெற்றுக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிப்போய்க் குடும்பக் காரியங்களை யெல்லாம் ஒழுங்குபண்ணி வைத்து விட்டு மறுநாளே புறப்பட்டு எவ்விடத்திற்கோ போய் விட்டார் சாமிநாதபிள்ளை.

எட்டாம் அதிகாரம்.

இன்னமும், இன்றைக்குத் தபால் வரக்காணோமே, நம்முடைய விலாசத்திற்குக் கடிதம் இல்லாவிட்டாலும், தெருவிலிருக்கிற மற்றவர்களுக்கும் ஒரு கடிதமும் இல்லாதிருக்குமா? தபாலாபீஸிலேயே போய்ப் பார்த்துவிட்டு வரலாமென்றேன், நீ தடுத்துவிட்டாய். இன்னம் அரைமணி நேரம் பார்ப்போம்!

என்று மணிமங்கலம் தாசில்தார் வீட்டு மேல் மாடியில் அமைக்கப் பட்டுள்ள "தெய்வ சுந்தர" விலாசத்திலிருந்து நமது தெய்வசிகாமணி தனது தோழனைப் பார்த்துச் சொன்னான். கல்யாணம் மேலும் அவன் இவ்வருஷத்திய கேள்விப்பத்திரம் (க்வெஸ்ட்ச்சன்) வெகு கடினமென்றே நினைக்கிறேன். நீ ஒவ்வொரு கேள்விக்கும் சரியான பதிலெழுதியிருப்பாயா? என் உன் மனஸாக்ஷிக்கே தெரியுமே என்றான்.

கல்யாண சுந்தரம்:— அண்ணா, இங்கிலீஷ் கேள்விக்குச் சரியான விடை யெழுதியிருக்கிறேனென்று உறுதியாகச் சொல்லுவேன் தமிழ் வினாவுக்குத் திருப்திகரமான விடை இறுத்திருப்பேன் என் றுகருத முடியவில்லை. ஏனெனில்,

"அளக பந்திமிசை அளிகள் பந்தரிடும்
அரிவை மீர் கடை கடிறமினோ"

என்பதற்கு பதவுரையும்,

"நமரங்காள் என்னே வழுத்தாத
தெம்பிரான் மன்று"

என்பதற்கு நமரங்காள் என்பதற்கு இலக்கணச் சந்திவிதியும்,
"கலிங்கத்துப் பரணியா கலிங்கத்துப் பாணியா"?

என்பதற்குப் பாணியே சரியென்றும்,
"பாணிபாறாற் பாணி வழக்கு வழங்குவானேன்"?

என்பதற்குக் காலிகித வழூஉ எனவும், எழுதியிருக்கின்றே னே யன்றிப் பலவுகாரணங்களையும் எடுத்தாண்டு விஸ்தரித்தெழுத வில்லை. தமிழென்ன பிரமாதமோ. அதில் தவறினாலும் அதைக் கவனிக்கமாட்டார்கள் பரீக்ஷாதிகாரிகள்.

தெய்வசிகாமணி:— கல்யாணம், நீ தமிழ்க் கேள்விக்குச் சரியான பதில் எழுதவில்லை யென்றும், பிரமாதம் அன்றென்றும், பேசிய வார்த்தையைக் கேட்க எனக்கே வெட்கமாயிருக்கிறது. தாய் முலைப்

பாலோடூட்டித் தாலாட்டிச் சீராட்டி வளர்த்து வாலிபமாக்கி விட்ட தமிழ்ப் பாஷையிற் கொஞ்சமும் அபிமானமில்லாமல் இப்படிச்சொல்லத்துணிந்து விட்டாயே. சர்வாபிமானங்களையுந் துறந்த ஞானிகளும், பாஷாபிமானத்தை நீக்கக் கருதார்கள். தமிழ்த் தேசத்திலே தமிழ்ச்சாதியிலே பிறந்து தமிழ்ப் பாஷையிலே வளர்ந்த நீ அப்பாஷையில் இவ்வளவு அலக்ஷியம் வைத்திருப்பது மிகவும் அருவருக்கத்தக்கதல்லவா? வடமொழியைப் பாணினிக்கு வகுத்துரைத்த மணிகண்டன் தென்மொழியாகிய நம் தமிழை அகத்தியனுக்கு அருளின தோடமையாது, தாமும் ஒரு தமிழ்ப்புலவராகிச் சங்கப் புலவருடன் சம்பாஷித்து "இறையனார் அகப்பொருள்" என்னும் பெரிய ஒரு இலக்கண நூலும் இயற்றியிருப்பரெனின் நந் திராவிட பாஷைச் சிறப்பினைச் செப்பவும்படுமோ? நேற்று சித்தாந்த தேசிக சங்கரலிங்க முதலியாரவர்கள் செந்தமிழ்ச் சிறப்பைப் பற்றி சமயாசிரியர்களில் ஒருவர் தமிழ்க் கவிபால் எலும்பைப் பெண்ணாக்கினரெனவும், மற்றொருவர் சில வருஷங்களுக்கு முன் முதலைவாயிற் சிக்கி இறந்துபோன குழந்தையை அன்றையவளர்ச்சியுடன் வருவித்தனரெனவும், வேறொருவர் ஊமையைப்பேசுவித்தனரென்றும், மழைமாரி பொழிந்தது போல உபந்நியசித்ததை நீயுங் கேட்டுக் கொண்டிருந்தாயன்றே. அதில் உனக்குண்மை பிறக்கவில்லையோ? சிந்தாமணி, மணி மேகலை, சூளாமணி முதலிய திவ்ய ஆபரணங்கள் அணியப் பெற்ற தமிழ்ச் செல்வியின் தரத்தை வருணிக்க இளங்கல்விபாளனும் என்னாற் கூடுமோ? சில போலிப்பாஷைகளைப்போல ஆண்பாலைப் பெண்பாலாகவும், பெண்பாலைப் பலர் பாலாகவும், உயர்திணையை அஃறிணை யென்றும் மயங்கிக்கூறும் இலக்கண முடையதன்று. நம் தமிழ்ப்பாஷை என் அறிவுக்கெட்டினமட்டிலும் தமிழ்ப் பாஷையே அநேக பாஷைகளுக்குத் தாய்ப் பாஷையாயிருக்கிறது. பல பாஷைகளிலுமுள்ள ஒவ்வொரு வார்த்தையையுங் கருத்தான்றிப் பார்ப்போமாயின் தமிழிலிருந்தே உண்டானதாகக் காணப்படும். இனித் தமிழ் என்னும் பதத்திற்கு, இனிமை அல்லது ஒப்பும் உயர்வுமற்றதனி அல்லது "ழ்" என்னும் சிறப்பு "ழ்" காரத்தைத் தனக்கே சொந்தமாக உடையது எனப் பொருள் கொள்ளக் கிடக்கின்றது. இந்தக் காரணங்களினாலேயே இதனருமை நன்கு விளங்கும். பற்பல

கொடிய அந்நிய அரசாங்கங்களாலும், புறமதங்களாலும் வீழ்த்தப்படாது மூவாறாயிரத்து மேலான்னத் தசையிலிருக்கிற செழுந்தமிழ்ச் செல்வத்தைப் பெரிதும் பாராட்டாது இங்ஙனம் உல்லங்கனமாக நினைத்தது இழிவன்றோ? ஐரோப்பியனொருவன் தனக்கு அந்நியபாஷையிலிருக்கிற ஞானம் இங்கிலீஷில் இல்லையென்று வெட்கமில்லாமற் சொல்லுவானோ?

கல்யா:— அண்ணா, உன் பிரசங்கமட்டும் இனிமையாயிருக்கிறது. ஆனால் நமது தமிழ்ப் புராணக்கதைகளை அவைகளிற் சொல்லியபடி துளிகூடச் சிந்தாமல் உன்னைப்போல நம்பிக்கொள்ள எனக்குப்பிரியமில்லை. ஏன்? ஒன்றைப் பத்தாக்கி ஒன்றுக்கொன்று விரோதமாகச் சொல்வதே நமது காவியங்களின் இயற்கையாயிருப்பதினாலேயே, இதற்கு உதாரணமாக ஒன்று சொல்லுகிறேன். இராமாயாணக் கதாநாயகனாகிய ஸ்ரீ ராமன் பிறந்த காலத்தை ஸ்ரீராம ஜாதக சுலோக முதலியவைகளைக் கொண்டும் தகுந்த ஆதாரங்களின் பேரிலும், கிறிஸ்து பிறக்கு முன் 1761-ம் வருஷத்துப் பிப்ரவரி மாஸம் 10வ தென்று மிஸ்டர். வால்ட்டர் ஆர் ஓல்டு என்னும் பண்டிதர் நிர்ணயித்திருக்கிறார். அப்படியானால் இன்றைக்கு முன் 3675-வது வருஷத்திற் பிறந்திருக்கவேண்டிய ராமனைப் பல லக்ஷம் வருஷங்களுக்கு முன் பிறந்தானென்பது கண்மூடித்தனமல்லவா? சிறந்த இதிகாசமாகிய இராமாயாணத்தில் இப்படிப்பட்ட கதி ஏற்பட்டிருக்குமானால், பிற நூல்களைப்பற்றி பேசவும் வாயுண்டா.

தெய்வ:— கல்யாணம், இராமாயாணத்திற் பென்னம் பெரிய அபத்தமிருக்கிறதென்று வாய் கூசாமற் சொல்லிவிட்டாயே. அது உன் சொந்த ஆராய்ச்சியிற் றெரிந்து சொன்னதில்லை யென்கிறாய். அது உண்மையே. எதையும் தீர்க்க விசாரணை செய்யாமற் குறை கூறுவது பிழை இருக்கட்டும். இந்த உலகமுண்டாகி 6000 வருஷங்களேயாகின்றன வென்னும் பிரமாணத்தை ஆதாரமாகக்கொண்டு சரித்திர ஆராய்ச்சி செய்வாரது தீர்மானத்தை நான் ஒருநாளும் அங்கீகரிக்கமாட்டேன். ஏன் எனில் இந்துவான சாஸ்திரரீதிப்படி இந்நிலவுலகந் தோன்றி 1955885025-வருஷங்களாகின்றன. அதை யறியாது கலியுகத்தின் ஆரம்ப முதலில் ஏற்பட்ட பிரளயத்தின்

பின்னிட்ட காலமே உலகமுண்டான தென்று கூறிவிடப்படுகின்றார் சிலர்.

புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், குரு, சனி, சந்திரன் முதலிய கிரகங்கள் முறையே சூரியனைச்சுற்றிவருகிற காலங்களுக்கு அதமப் பொது மடங்கு எடுத்து நோக்கின் அது நானூற்று முப்பத்திரண்டு கோடி வருஷங்களெனக் கணக்காகின்றன. இந்தக்காலந்தான் மேஷத்தை விட்டு நீங்கின கிரகங்கள் மீண்டும் மேஷத்தில் அதே நிலையில் வந்து நிற்குங்காலம். இதையே ஒரு கற்பம் என்பர். இக்கற்பம் ஆயிரம் சதுர்யுகங்கள் அடங்கியது. ஆகவே ஒரு சதுர்யுகம் நாற்பத்து மூன்றிலக்ஷத்திருபதினாயிர வருஷங்கள் கொண்டதாகும். இதனுட் கலியுகம் பத்திலொரு பாகம்; துவாபரயுகம் கலியுகத்தின் இரு மடங்கும்; திரேதாயுகம் கலியின்மும்மடியும்; கிருதயுகம் கலியின் நான்கு மடங்குமாகும். இனி இக்கற்பமே பிரமனுக்கு ஒருநாள் என்பர். இப்போது கலியுகம் பிறந்து 5025-வருஷங்களாகின்றன. துவாபரயுகத்தின் இறுதியிலுண்டான பிரளயத்தையே (Old Testament) ல் குறிக்கப்பட்டுளது. இதையே நீ சொன்னபண்டிதர் உலகமுண்டான காலமாக நிர்ணயித்திருக்கக்கூடும். ஒவ்வொரு யுகத்தின் முடிவிலும் பிரளய முண்டாகுமென்றும் பின்னர் நீர்வற்றி உலகு வெளிவந்தோங்கு மென்றும் அநுபவசாலிகள் கூறுநிற்பர். இவ்வரிய உண்மைகளை மேல் நாட்டு வித்தியார்த்திகளான (Max muller) மோட்சமுலர் (greppith) கிரிபித் முதலான விவேகிகள் ஒப்புக்கொள்கிறார்கள்.

இனி ஸ்ரீராம ஜாதகத்தைக் கவனிப்போம்.

மேடமாமதிதி நவமி மீன்கழை
நீடுறுமாலை கற்கடகம் நீதிசேர்
ஒடைமால் களிறனுன் உதயராசிகோள்
நாடினே காதசர் நால்வருச்சேரே. (கம்பர்)

சு	கு. பு		
	ஸ்ரீராம		சந்தி வி கே ல
செ ரா	ஜாதகம்		
		சனி	

இப்படிக் கிரகங்கள் அமைந்த ஒருகாலத்துச் சித்திரை மாஸத்தில் ஸ்ரீராமன் பிறந்தாரென்று தெரிகிறது. பண்டிதரோ பிப்ரவரிமீ 10உ என்கிருர். அதற்குச் சரியான தமிழ் மாஸம் மாசியாகும். எனவே நீ சொன்னபடி ராமஜாதக சுலோகத்தை வைத்து நிர்ணயிக்கவில்லை யென்று தோன்றுகிறது. மேஷாதி பன்னிரண்டு ராசிகளைச் சித்திரையாதி மாஸங்களெனக் கூறும் கணித நூல் வழக்கும் சூரியன் ஒவ்வொரு மாஸ ராசியில் ஒவ்வொருமாஸம் சஞ்சரிப்பான் என்றும் நமது நாட்டுத் திண்ணைப் பள்ளிக்கூடத்துச் சிறுவரும் தெற்றெனச் செப்புவரே.

எந்த மதத்திலும் .சமயக்கோட் பாட்டில் ஈடுபட்டுப் புஸ்தகங்கள் எழுதுகிறவர்கள் காலங்களைக் குறிப்பிட்டுத் தெளிவாயெழுதிக்கொண்டு போகிறதேயில்லை. காரண மென்ன? பத்திமேலீட்டினுற் பாடிக்கொண்டு போவதனுலும், சரித்திர ஆராய்ச்சி செய்யப் போதிய அவகாசம் இன்மையாலுமே. இந்தக்குறை நம்முன்னேர்களுக்குட் பெரும்பாலு மிருக்கிறதென்பதை நாம் ஒப்புக்கொள்ளாமற்தீராது. இதைவைத்துக்கொண்டு தற்கால சரித்திர ஆராய்ச்சி நாகரீகர்கள் குண்டுசட்டிக்குள் குதிரையை வையாளிவிட்டது போல எல்லாச் சரித்திரங்களையும் வேதங்களையும் ஆகமங்களையும் அவர்களுடைய 6000 வருஷத்திற்குள் அடக்கப் பார்க்கிருர்கள்.

(Ante diluvian fossils) ஊழிக்கு முந்திய பூதலவியற் கைச்சேடங்களையும், பிராணிகளது கங்காளங்களையும் கண்டு யுத வாயிலாய்க்கொண்ட வருஷம் ஆறாயிரத்தை வாரிச்சுருட்டி எறிந்து விட்டு மனமுட்கி வாளாகிற்பாரை அறியார் போலும் இவர். ஸ்ரீராம ஜாதக சக்கரத்திற் கண்டபடி கிரகங்கள் அமைந்திருந்த முந்திய யுகங்களின் ஒன்றில் இராமன் பிறந்திருப்பாரென்று கொள்வார்க்கு நேரும் இழுக்கென்னையோ?

ஸ்ரீராமயாணத்தின் கதாநாயகன் பிறந்தகால வரையறை யைக் கவனித்துப் பார்த்த நீ அந்நூலில் மக்களுயிர்க் குறுதிபயப் பனவாகிய விஷயங்களுள்ளனவா? அவை யெவை? யாண்டுக்கூறி யுள்ளன? அதிற் கூறியாங்கு நடந்தோர் யாவர்? நடக்க நாம் யாது செய்தல் வேண்டும்? என்பன வாதிய சற்காரியத்திலும் நின் மூளை யைச் செலுத்தியிருக்கவேண்டாமா? சாமிதெரிசனம் பண்ணக்கோவி லுக்குப் போன ஒருவன்தான் கருதி வந்த விஷயத்தை மறந்து கோவிலின் அகலம்? நீளம்? எத்தனைபடி? விக்கிரகத்தின் சுற்றள வென்ன? வெள்ளைக்கல்லா? கருங்கல்லா? எந்தவூர்ச் சிற்பிசெய்தது, ஆலயத்திற்குத் தாசிகளுண்டா? இன்றைக்கு முறைக்காரி பெயர் என்ன? என்றுவிசாரித்துக் கொண்டு திரிவதுபோல, ஒரு நூலை எடுத்துக் கொண்டு அதைப்பாடினவன் பெயரென்ன? அவனது எத் தனைபாவது வயஸில் இதை இயற்றினன்? அவன் எச்சாதியைச்சேர்ந் தவன்? எவ்வூரில் வசித்தான்? காலம் எது? என்னும் இந்தவிசாரணை தானு சிறந்தது. ஒருவாறு வேண்டியதே எனினும், பொருளையும் நடையையும் போற்றுவார்க்கு, இது முக்கியமல்ல. ஜீ யூ. போப்பு என்னும், மேல்நாட்டுப் பண்டிதர் திருவாசகம் என்றும் தமிழ் நூலைத் தமது ஆங்கில பாஷையில் மொழிபெயர்த்துப் படித்துப்பர மானந்தங் கொண்டது பொருளருமை கருதியோ? அன்றிப்பிரகார ணத்தாலோ?

"வலதுகை செய்கிற தருமம் இடதுகைக்குத் தெரியாது" என் பது போல தங்கள் தங்களது புஸ்தகத்தால் உலகம் நன்பார்க்கத் திற்கு வர வேண்டுமென்பது தான் நமது முன்னோர்கள் கருத்தே யன்றி அழிந்து போகும், தமது பூதவுடம்புக் கிட்டபெயரும் கால

மும் பிரசித்தியாக வேண்டுமென்பதல்ல. வருஷமாஸந் தேதி மணிநேரம் குறிக்கப்படாததால், சரித்திரங்கள் நடந்தது பொய்யாகுமா? அதிற் சொல்லியிருக்கிற பொருளுண்மையும், நீதியும் பொய்க்குமா? பொய்யாகாது. இவைகளெல்லாம் எப்படிப்போனலும் போகட்டும். நினைத்தாலும் சரீரமெங்கும் செழுந்தேனொழுகத் தித்திக்கும் செந்தமிழ் பாஷைக்குக் குறையென்ன நேர்ந்தது. நீ தமிழ் பாஷையைத் தாழ்வாக மதித்தது என்னுள்ளத்தைச்சுடுகிறது. இதன் அருமையை நோக்கிய ஓர் ஐரோப்பிய பண்டிதர் இத்தமிழை நன்காராய்ந்து கற்று வல்லராகித் "தேம்பாவணி" என்னும் ஒரு பெரிய தமிழ்க் காவியமும், பல இலக்கண நூலும் செய்திருக்கின்றார். நாம் இடைவிடாது கையில் வைத்துக் கொண்டிருக்கும் சதுரகராதியும், அவர் கோவையிட்டதே. அவருக்குத்தமிழிலிட்டபெயர் வீரமாமுனிவர் என்ப. அவகாசம நேரும்போது இதைப் பற்றி இன்னும் விவரமாக உனக்குச் சொல்லுகிறேன். அதோ தபாற் காரன் வருகிறது போலிருக்கிறது.

கல்யா:— அண்ண, இன்றைக் கென்ன உனக்குத் தமிழ்த் தெய்வம் பிரசன்ன மாகியிருந்ததா? கிடு கிடு வென்று ஆரம்பித்து விட்டாயே அப்பா என்ன தாட்டி என்னநுட்பம். இதையெல்லாம் படிக்க உனக்கு நேரம் எப்படிக்கிடைத்தது, ஆனல் நான் பந்தடிக்கப் போகும் போதெல்லாம் நீ படித்துக்கொண்டிருப்பாயே! அநேக அரிய விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். இன்னொரு சமயம் தமிழ்நாட்டுப் பூர்வீகப் புலவரைப் பற்றி எனக்குச் சொல்ல வேண்டும்.

எதையோ சொல்வதற்குத் தெய்வசிகாமணி வாயைத்திறந்தான் இதற்குள் மேஜையின் பேரில் ஒருகடிதத்தை கொண்டு வந்து வைத்தான் தபாற் சேவகன் உடனே பேச உத்தேசித்ததை நிறுத்திவிட்டு வெகு ஆவலுடன் கடிதத்தைப் பிரித்துப் படித்தான் தெய்வசிகாமணி. அந்தது சென்னையிலிருந்து சிநேகிதன் ஒருவன் எழுதியதாம். அதில் அவ்வருட மெட்ரிக்குலேஷன் பரீக்ஷையில் தெய்வசிகாமணியும், கல்யாணசுந்தரமும் தேர்ச்சி யடைந்திருப்பதாயும், இராஜதானியிலிருந்து பரீக்ஷைக்குப் போயிருந்த பிராணக்கர்களுக்

குள்ளே கல்யாண சுந்தரம் முதன்மையாகத் தேரியிருப்பதாயும் குறிக்கப்பட்டிருந்தது. கடிதம் படித்து முடியவும், அவ்விருகும ரரும் மேல்மாடியிலிருந்து கீழே யிறங்கித்தாசில்தாரிடம் போனார்கள். பெரிய மனிதர்களுடன் பேசிக்கொண்டிருந்தவர் குழந்தைகளைக் கண்டவுடன் பேச்சை நிறுத்திவிட்டு, என்னசங்கதி யென்று கையை நீட்டினார் தெய்வசிகாமணி கடிதத்தைக் கொடுத்தான், தாசில்தார் படித்துக்கொண்டே அம்மனிதர்களிடம் சொல்லுகிறார்.

இலண்டன் மாநகரத்தில் ஒரு கலாசாலை ஸ்தாபித்து என்றென்றைக்கும் அது சோர்வின்றி நடந்து வரும்படிக்கான மூலதிரவியம் சேர்ப்பதற்காக அறுபதினாயிரஞ் சீட்டின் பேரில் ஆறுலக்ஷ ரூபா வசூலித்து, மூன்று லக்ஷரூபாவை மேற்கண்ட பாடசாலைக்கு உபயோகித்துக் கொண்டு, மீத முள்ளபாதியைத் திருவுளச்சீட்டு (லாட்டரி) மூலமாக அச்சந்தாதாரர்களுக்குப் பாகித்துக் கொடுப்பதாகவும், முதலில் உதயமாகும் சீட்டுக்கு ஐம்பதினாயிரம் ரூபா கொடுக்கப் படுமென்றும் பிரசுரித்துள்ள ஒரு பத்திரிகை சென்ற வருஷத்தில் நமக்குக்கிடைத்தது. அப்பெரிய தர்ம கைங்கர்யத்திற் பிரவேசித்திருப்பவர்கள் சத்திபவந்தர்களான சில ஐரோப்பியர்களென்று முன்னமே நாம் கேள்விப் பட்டிருந்த படியினாலே நம்முடைய குடும்பத்திலிருந்து, மாசிலாமணிக்குஞ் சேர்த்து 5 சீட்டுகளுக்கு 50 ரூபா சீமைக்கு மணியாடர் செய்யப்பட்டது. பணம் பெற்றுக் கொண்டதாகக் கையெழுத்து வந்து ஒன்பது மாதமாகிறது. இன்று வந்த, வர்த்தமானப் பத்திரிகையில், நமது கல்யாணசுந்தரத்தின் பேருக்கு முதற்சீட்டுக் கிடைத்திருப்பதாயும் அதற்குரிய ரூபாவை இரண்டு மாஸத்திற்குட் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கண்டிருக்கிறது.

"ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும் எனையாளும் ஈசன் செயல்". இரண்டு நிமிஷத்திற்கு முந்திவரையும் குழந்தை கல்யாணசுந்தரத்தை, இந்த உலகம் பரம ஏழைகளின் வகுப்பிற் சேர்த்து வைத்திருந்தது இப்போதோ ஒரு பிரபுவாக்கியிருக்

கிறது, பணத்தைப் போல இவ்வுலகத்திற் சிருஞ் சிறப்புந்தரத்தக்க பொருள் வேறொன்றுமே இல்லை. பணக்காரன் எத்தனை துன்மார்க்கனுயிருந்தாலும் அவனை ஜனங்கள் பெரிதும் விரும்புகிருர்கள். பணக்காரன் எந்தவேலையைத் தொடங்கினுலும் வெகுஎளிதில் முடிகிறது. பணக்காரன் உலோபியாயிருந்தாலும் அவனைச்சுற்றிநான்குபேர் எப்போதுங் காத்தே இருக்கிருர்கள். பணக்காரன் சர்வமுட்டாளாயிருந்தாலும், அவன்வாயிலிருந்து புறப்படுகிற வசனத்தை மிகவும் பாராட்டிப் பேசுகிருர்கள். பணக்காரன் கடற்புளுகன் மலைப்புளுகனுயிருந்தாலும் நியாயஸ்தலங்களில் அவன் சாக்ஷியத்தை மதித்தேற்றுக்கொள்கிருர்கள். பணக்காரன் செய்தகுற்றம் பெரிதாயிருந்தாலும், அது சாமான்யமாக நினைக்கப்படுகிறது. பூமியில அனுபவிக்கவேண்டிய சர்வஇன்பங்களுக்கும் பணமே முக்கியசாதனமாக இருக்கின்றது. தக்கவாறு சத்கருமங்களுக்கு உபயோகிக்கப்படின் அப்பணமே மேலுலக இன்பத்திற்குந் துணைக்காரணமாகிறது. பணத்தைக்கையால் தொடுவதில்லை யென்று விரதம் பூண்டிருந்த ஞானபாநுவாகியஸ்வாமி விவேகாநந்தரை அமெரிக்கா கண்டத்துச் சிகாகோ நகருஞ் சென்று இந்துமதஸ்தாபனம் பண்ணிவரும்படியாகச் செய்ததும், காலஞ்சென்ற இராமநாதபுரம் ராஜா பாஸ்கர ஸேதுபதியவர்களுகவிய இப்பணமே. பணக்காரனே யதார்த்த மனுஷியனுக விளங்குகிருன். இதையறியாமலா "ஈட்டி யெட்டமட்டும் பாயும் பணம் பாதாளந்தைக்கும்" என்கிருர்கள்.

பணம் இவ்வளவு பிரயோசனமுள்ளதாயிருந்தாலும், திருடர் மோசக்காரர், துர்வழக்காளிகள், வேசையர், அநீத உத்தியோகஸ்தர், பொய்யர், குடியர் முதலான காட்டு மிருகங்கள் எளிதில் நுழைந்து மேய்ந்து கெடுத்துவிடும்படியான பயிருக்குச் சமானமாக இருக்கிறது. அப்பயிருக்குக் கல்வியாகிய ஒரு பெரிய வேலி போட்டாலொழிய அக்கொடிய மிருகங்களின் உபத்திரவத்தைத் தடுப்பது அசாத்தியமாகும். அக்கல்வியும் படாடோபமற்றதாய் சர்வஜனங்களுக்கும் இதஞ்செய்வதாய் சன்மார்க்க மென்னும் தோழமையுடையதாய் இறைக்க இறைக்க வற்றாத மணற்கேணிக்கிணையான பொருள்

நிறைவுள்ளதாய் தியாகியென்று தம்மையடைந்தவர்களுக்கு இல்லையென்றுதவும் வள்ளன்மையுடையதாய் இருத்தல் வேண்டும். எழுத்து, சொல் என்னும் கற்களை நாட்டிப் பொருள் என்னும் வரிச்சை யாப்பு, எனும் நாராற்கட்டி அலங்காரம் என்னும் பசுங்கொடிகளை அதன்மேற்படரவிட்டு ஒழுக்கம் என்னும் நங்கூரத்தால் இறுக்கியமைத்தமேல செல்வப்பயிரைக் காக்கச் செய்யுங் கல்வி வேலியாம். அகங்காரமென்னும் மண்ணேறிக் கர்வமென்னுஞ் செல்லரிக்கப்பட்டு மறப்பென்னும் மாடுமேய்ந்து கல்விவேலி கெட்டுப்போகாமல் அடிக்கடி சீலம், சிந்தனை என்னும் சேவகராற் பாதுகாத்துவரல் வேண்டும். சிறு குழந்தையாகிய கல்யாணசுந்தரத்திற்கு இத்துணைப் பெருவாழ்வைத் தந்தருளிய எல்லாம் வல்ல இறைவன் இனிமேலும் செல்வம், கல்வி யென்னும் செருக்குட் புகுவியாது மேன்மேலுஞ்சுகுணனுய் விளங்கும்படி அனுக்கிரகிக்க மனதார வந்தனஞ் செய்து கொண்டிருக்கிறேன்.

இவன் கொடுத்த இக்கடிதம் சிறிது மனவருத்தத்தையும், பெரியதோர் ஆனந்தத்தையும், உண்டுபண்ணுவதாயிருக்கிறது. கல்விக்கிருவர் என்பது போல, பையன்களிருவரும் ஓரிடத்திலிருந்து அப்பியசித்து வந்தால் மிக்க நலமாயிருக்குமென்றே ஆரம்பத்தில் இவர்களை கூட்டி வைத்தோம். இவ்வருஷம் கல்யாணசுந்தரம் தகுதியான தேர்ச்சியடைந்திருப்பதால் ஸகாலர்ஷிப் பெறுபவனாக இருக்கிறான். இந்தவூரிலிருந்து படிப்பதானால் அவ்வுதவியைத் துரைத்தனத்தார் கொடுக்கமாட்டார்கள். இராஜதானிக் கல்லூரியிற் சேர்ந்து வாசித்தால் மாத்திரம் கிடைக்கும். அவ்வாறிவனை அனுப்பும் பக்ஷத்தில் ஒரு சரீரத்தை இரண்டாய்ப் பிரித்தது போல் நாமே வேறாக்கிவிடும்படி நேரிடுகிறது. உதவிப்பொருளை ஒரு பொருளாகஎண்ணாமல் இவடத்திலேயே நிறுத்திவிடலா மென்றாலும், அவனுடைய மனோற்சாகத்தைக் கெடுத்ததுபோலாகிறது. தவிரவும் நாட்டுப்புறத்துப் படிப்பைக்காட்டிலும், நகரவாசப்படிப்பானது அனுபவத்திலும், சேர்க்கையிலும் நாகரீகமுடையதாயிருக்கிறது. எவ்வகையிலும் குழந்தைகளைப் பிரிக்கும்படி நேர்ந்ததே யென்பது தான் என் மனஸுக்குக் கவலையென்று பேசி முடித்தார். பக்கத்

தில் நின்று கொண்டிருந்த தெய்வசிகாமணி கல்யாணசுந்தரத்தின் முகத்தைப்பார்த்தான். அவன் சற்று முகவாட்டத்துடன் நின்றிருந்தான்.

ஒன்பதாம் அதிகாரம்.

கல்யாணசுந்தரத்திற்குச் சீட்டு விழுந்திருக்கிற சமாசாரம் ஊருக்குட் பிரஸ்தாபமானவுடன் ஜனங்கள் கூட்டங் கூட்டமாகக் கூடிப் பேசத்தலைப்பட்டார்கள். அவனுடைய முகலக்ஷணத்திற்கே எல்லாச் செல்வமுங் கைகூடி வருமே என்பர் சிலர். விளையும் பயிர் முளையிலே என்பது போல சிறு பருவத்திலேயே தாசில் எசமான் பிள்ளையாகப் பாவித்தது பெருஞ் செல்வமல்லவா என்பர் பலர். கப்பலோடி ஆறுமுகஞ் செட்டியார் செய்ததவம்பலித்ததென்பர் சிற்சிலர். அந்தப் பதிவிரதா பத்தினி பெற்ற பிள்ளைக்கு யோகமும் வராமற் போகுமா? என்பார் அநேகர். தாய் பிள்ளைகளெல்லாம் இனிவந்து கூடிவிடுமப்பா என்பர் பற்பலர். ரூபா ஐம்பதினாயிரத்தையும் இவனுக்கே கொட்டிவிடப்போகிறரோ என்பார் பலப்பலர். ஆமா தெற்கித்தி வெள்ளாளன் கொடுத்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பான் என்பார் சிலபேர். போடாபோ அவனென்ன ஏழையா! இதில் ஒரு சல்லிகூட எடுக்கமாட்டார் என்பார் சிலர். கல்யாணசுந்தரத்திற்குத் தக்க வயதுவரும்வரை வட்டிக்கு விட்டிருந்தால் அந்த லாபமே போதுமே எசமானுக்கு என்பர் அநேகர். சீட்டு விழுந்ததும் பணம் வந்துவிட்டதுந்தானே என்னமோ இது ஒரு சபத்தியம் என்பர் சிலர். எவனோ ஒரு கேலிக்காரன் இப்படி யெழுதிப்போட்டிருப்பான் என்பார் சிலர். என்னடா வாய்கொண்டமட்டும் பேசுகிறீர்கள். தபாலா, கையெழுத்தா, முத்திரை முகரா ஒன்றுமில்லையோ? கையெழுத்துப் போடத்தெரியாத நமக்கிருக்கிற யோசனைகளும், யுத்திகளும் ஒரு தாசில்தாருக்குத் தெரியாதோ என்பார் சிலர். ஏதோ பெரிய இடத்துக்காரியம் ஒன்றுமே பேசக்கூடாதென்பார் சிலர். எல்லாம் பத்துநாளையில் தெரியுமல்லவா என்பார் பலர் இவ்விதமாக

அவ்வூர் முழுதும் இதே பேச்சாக இருந்தது. அன்று மாலை நாலு மணிக்குத் தாசில்தார், காந்தியம்மாள், கல்யாணசுந்தரத்தின் தாயார் மாசிலாமணி இந்நால்வரும் ஆலோசனைபண்ணிக் கல்யாணசுந்தரத்தை ராஜதானிக் காலேஜுக்கு அனுப்புகிறதென்றும், அவன் தாயும் அவனுக்குதவியாய்ப் போயிருக்கவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். இந்த விஷயங்களெல்லாம் மறுநாளே பாடசாலை மாணாக்கர்களுக்குத் தெரிந்து விட்டது. தெய்வசிகாமணியின் அக்ராசனத்தின் கீழ் ஒரு சங்கங்கூடிக் கல்யாண சுந்தரத்திற்குஒரு விருந்து நடத்திப் பிரிவாற்றுமைப் பத்திரம் படித்தார்கள். காந்திமதியம்மாள் அவ்வூரிலிருக்கிற சர்வாலயங்களுக்கும் அர்ச்சனையும், மஹாநைவேதயமும் செய்வித்தாள். ஆலயங்களில் சுவாமி புறப்பாடாகும்போது சிவிலி முதலிமேல புறப்படுவதுபோல இந்த விசேஷங்களுக்கெல்லாம் மாசிலாமணி ஆர்ப்பாடம் பண்ணிக்கொண்டுதிரிகிறான். இவன் இயல்பிலேயே சுறு சுறுப்புள்ளவன். இச்சந்தோஷ சமயமோ ஒரு இளஞ் சிங்கக்குட்டிபோல் வெகு கெம்பீரப் பார்வையோடு உலாவலானான். இது நடந்த நாலு நாளைக்கெல்லாம், கல்வியிலாகாத் தலைவரால் ஓர் பிரசுரம் வெளியாயிற்று. அஃதாவது "ஸ்காலர்ஷிப்புக்குத் தகுதியான மாணவர்கள் பதினைந்து தினத்திற்குள் கல்கத்தா ராஜதானிப் பாடசாலையிற் சேர்ந்து கொள்ளல்வேண்டும், தவணைதப்பியாவது இதர காலேஜிலாவது சேர்ந்தால் ஸ்காலர்ஷிப்பை இழந்துவிடுவார்கள்" என்பதே. இதைப் பார்த்தவுடனே தெய்வசிகாமணிக்கு மனஸிற் கலக்கமுண்டாகி விட்டது. குழந்தை முதல் ஒரு நிமிஷ நேரமும் பிரியாத சிநேகனைப்பிரிய நேரிட்டவருத்தம் சாமான்யமாயிருக்குமா? "விலங்கிற்கும் விள்ளாலரிது" என்பது முதுமொழியன்றோ. நேசமென்பது அன்பென்னும் வித்திலிருந்துண்டானதல்லவா? கூத்துப்பார்த்துக்கொண்டிருந்த குருடன் அவனுஞ் சிரித்தான் நானுஞ்சிரித்தேன் என்று சொன்னதுபோல சிரித்துப்பேசித் திரியவர் சிநேகங்கொள்வது? உயிரை இழக்கும்படியான ஆபத்து நேர்ந்தாலும் வெளிப்படுத்தக்கூடாதென்ற இரகசியத்தையும் அன்பனிடஞ் சொல்ல நேரிடுவது அன்பின் முதிர்ச்சியான தோழமையல்லவா?

தெய்வசிகாமணி தனி ஓரிடத்திலிருந்து தன் மனத்துள் நினைந்து துன் புறலானான். கல்யாணம் கல்கத்தாவுக்குப் போனால் அவனுடைய தற்கால நிலைமைக்கு இவிடம் திரும்பி வர வேண்டிய அவசியமே இல்லை. மூன்று வருஷங் கழித்தாவது வருவானோ வெனின் அதுவும் சந்தேகமே, ஏனெனில் வித்யாபட்ட மென்னும் செல்வம் ஏற ஏற இந்த நாட்டுப்புறத்து நினைப்புக் கொஞ்சமும் இராது. ஒரு வேளை ஐயா அவர்களை மறக்கமாட்டா னென்று வைத்துக்கொண்டாலும் வருகிறதற்குச் சமீபமில்லை. அவகாசங் கிடைப்பதும் அபூர்வம். நாமாவது அடிக்கடி போய்ப் பார்த்துவிட்டு வரலாமென்றால், நம்மைப் பிரிந்த தாய் தந்தையர், கணமொரு கற்பமாயெண்ணி வருந்துவர். நாமும் கல்கத்தாவிலேயே போய்ப் படிக்கலாமென்றால் அநுமதி கிடைக்கமாட்டாது. எவ்வகையினும் பிரியும்படியாகவே நேர்ந்திருக்கிறது. 'அட கல்யாணம்' உன்மடல் விரிந்த செந்தாமரை போல் விளங்கும் வதன மண்டலத்தை மறந்திருக்க மனங் கூடவில்லையே. உன் வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வாக்யமும் எனக்கு சுரோத்ராநந்த மாயிருக்குமே! கடவுள் கருணையில்லான், சூரியன் தோஷதவன், அகத்தியன் மலைப்புடையான், என்னும் வாக்கியங்களிலிருக்கிற சிலேஷைப்பொருளைச் சொல்லிப் புன்னகை புரியும், நின்வசன சல்லாபம் என்று கிட்டுமோ! அட ஐயா! நின் பேச்செல்லாம் சாந்தம்; பார்வை யெல்லாங் கருணை; படிப்பெல்லாம் நீதி; தொழிலெல்லாம் விசித்திரம்; நினைப்பெல்லாம் பரிசுத்தம். நடையெல்லாங் கம்பீரம்! என்ன அழகு! என்ன சொகுசு! என்னபெருந்தன்மை! அப்பா! எப்போது கல்கத்தாவை விட்டுத்திரும்பு வாயடா? சாப்பிடப்போகும் போதெல்லாம் உன் நினைவுவருமே. விளையாட்டிடங்களெங்கும் உன் உருவெளி வந்துலவுமே என தன்பிறசிறந்த நண்ப! நண்பா! என்று வாய்விட்டுக் கதறினான்.

லண்டன்மா நகரத்திற் கல்யாணசுந்தரத்தின் பேருக்குக் கிடைத்த சீட்டு ரூபாவை கல்கத்தா இண்டியன் பாங்க் மானேஜர். கோ. குமு. முத்துக்கருப்பசெட்டியாரிடம், கல்யாணசுந்தரத்தின் பேரால் போட்டு வைக்கும்படி லண்டன் லாட்டரிச்சீட்டுக்கம்பெனி

மானேஜருக்கு ஒரு கடிதமும், நடப்பு வட்டி சகிதம் கல்யாணசுந்தரத்திற்குயுக்த வயது வந்தவுடன் மேற்படி தொகையைக் கொடுத்துவிட வேண்டிய நிபந்தனையோடு ஒப்புக்கொள்ளும்படி தமது சிநேகராகிய செட்டியாருக்கு ஒரு கடிதமும், தாசில்தார் எழுதியனுப்பிவிட்டு மறுதினமே கல்யாணசுந்தரத்தைக் கல்கத்தாவுக்குப் பிரயாணப்படுத்தினர். மணிமங்கலம் ரயில்வேஸ்டேஷனுக்கும் தாசில்தார் வீட்டுக்கும் ஒன்றாக நிற்கிறார்கள் பாடசாலை மாணாக்கர்கள். முதலிற் புறப்பட்ட இரண்டு குதிரைவண்டியில் தாசில்தாரும் தெய்வசிகாமணி கல்யாணசுந்தரமும், மற்றொரு பெட்டி வண்டியில் காந்திமதியும், கல்யாணத்தின் தாயும் சென்றார்கள். ரயில்வேஸ்டேஷனுக்குச் சமீபமாய் வண்டி சென்றவுடன் ரயில்வே உத்தியோகஸ்தர்கள் தாசில்தாரை வர வேற்றுபசரித்துக் கல்யாணசுந்தரத்தின் வைபவத்தைக் குறித்துப்பேசிக்கொண்டிருந்தார்கள். பள்ளிச்சிறுவரும் தெய்வசிகாமணியும் கல்யாணசுந்தரத்துடன் அங்கோர் பக்கத்தில் நின்றார்கள். ரயிலும் வந்துவிட்டது, உடனே நாலு போர்ட்டர்கள் சாமான்களை வண்டியிலேற்றினார்கள். தாசில்தாரும் தெய்வசிகாமணியும் எழுந்து சென்று கல்யாணசுந்தரத்தை ஒரு முதல் வகுப்பு வண்டியிலேற்றிவிட்டுக் கண்ணீர்ததும்பி நின்றார்கள். காந்திமதியம்மாள் வண்டியிலிருந்திறங்கிவந்து, "அடே அப்பாவு சுகமே போயிட்டுவா எல்லாம் நல்லாப்படிச்சு வந்துசேரு" என்றுகூறி நெற்றி நிறைய விபூதிபூசியனுப்பினாள். கலயாணசுந்தரத்தின் தாயார் பெண்கள் வண்டியில் உட்கார்ந்தாள். கல்யாணசுந்தரம், தாசில்தார், அவர் மனைவி, யிவர்கள் பாதத்தில் விழுந்து வணங்கினான். அவர் 'சிரஞ்சீவியாய் வாழக்கடவாய் என்றார்கள். தெய்வசிகாமணியையும் நமஸ்கரித்து அண்ணா போய்விட்டு வருகிறேன் என்றான். வாய்குழறிவிட்டது. தன்றோழன் முகத்தைப் பார்த்தவுடனே கல்யாணசுந்தரம் துக்கம்பெருகி நெஞ்சடைக்க ஒன்றும் பேசாது மார்பெல்லாங் கண்ணீர் வடிய நின்றான். பக்கத்தில் நின்றவர்கள் ஊருக்குப் போகிறவரிடத்தில் துயரமுகம் காட்டுவது நன்றன்று என்றார்கள். மாசிலாமணி ஒரு ஓரமாக நின்று 'சின்னையா போயிட்டு வாருங்க சேவிக்கிறேன்' என்றான். எல்லாரையும் பார்த்து ஒரு நமஸ்காரம் பண்ணிவிட்டு திருநத் திருந விழித்துக்கொண்டி

ருக்கிறான் கல்யாணசுந்தரம், வண்டியும் ஓடத்தொடங்கியது. ரயி லின் ஜன்னல் வழியாய் முகத்தை நீட்டி அண்ணு, அண்ணுபோய் வருகிறேன். அடிக்கடி லட்டர்ப் போடு, ஐயா கைப்பெட்டியில் என் ஜாதகமிருக்கிறது, யாராவது நல்லஜோஸ்யர்கள் வந்தால் ... எனக்கு.....நான்... ....இதற்குள் வண்டி நெடுந்தூரம் போய்விட்டது.

பத்தாம் அதிகாரம்.

"அண்ணுச்சி, வாருங்கள், வாருங்கள் நமஸ்காரம். ஏது இவ்வளவு தூரம். "நடுக்காட்டில் நெல்லை குதித்தது போல்" இந்த எட்டரைமணி வண்டிக்குத்தான் வந்தீர்களோ, உட்காருங் கள். ஊரில் எல்லாரும் க்ஷேமந்தானே "என்று தாசில் நெல் லைப்பபிள்ளை ஒரு புதியவரோடு அளாவளாவிக்கொண்டிருந்தார்." பள்ளிக்கூடத்திலிருந்து வந்த தெய்வசிகாமணி தன் தகப்பனுரிடம் போய், மெல்ல இவாள் நேற்று எங்கள் பாடசாலையில் ஒழுக்கமென் னும் விஷயத்தைப் பற்றி உபந்நியாசம் பண்ணினுர்கள். மஹாவித் வானும் தமிழில். பாப்பையாபுரமாம் இவாள் பெயர் சாமிநாதகவி ராயரென்று எங்கள் எட் மாஸ்டர் சொல்லிக் கொண்டிருந்தார். என்முன். தாசில்தார், அண்ணுச்சி, நேற்றே வந்திருக்கிறீர்களாமே என்று உங்கள் மனதும் இப்படியாய் விட்டது. தங்களுக்கு ஒரு குற்றஞ் செய்யவில்லையே.

சாமிநாத:— சிவா அப்படியொன்றும் பேதமாக நினைக்க வேண்டாம். குற்ற மிருந்தாலும் பாராட்டாத நான் யாதொரு வழு வுமில்லாத பரிசுத்தராகிய தங்கள் விஷயத்தில் யாது நினைப்பேன். பத்து நாளைக்கு முந்தித் திருநெல்வேலிக்குப் போயிருந்தேன். அங் கே தங்களைப்பற்றி விசாரித்ததில், வடக்கே மாற்றியிருக்கிறதென் று மாத்திரம் சொன்னுர்களே தவிர இவ்வூரைத் தெளிவாய் ஒரு வருஞ் சொல்லவில்லை. ஆகையினுலே தான் நேற்றே நம்முடைய வீட்டுக்கு வரக்கூடாமற் போய்விட்டது.

இருக்கட்டும் எல்லாரும் சௌக்கியந்தானே தங்களுக்குப் பையன் ஒருவன் தானே?

தாசில் இவனொருவன்தான் கடவுள் தந்தபிக்ஷை.
சாமி எந்த வகுப்பில் வாசிக்கிறானே?
தாசில் யவ். ஏ. கிளாஸ் ஸீனியர்.
சாமி வயசென்ன ஆகிறது?
தாசில் பதினாறு பதினேழிருக்கும்.
சாமி உத்தேசந்தானே? எந்த வருஷம் ஜெனனம்.
தாசில் ஞாபகமில்லை.

சாமி:— என்னையா அருமைக் குழந்தை பிறந்த வருஷங் கூடத் தெரியாதென்கிறீர்கள். ஜாதகத்தைக் கொண்டு வாருங்கள் நான் பார்க்கவேணும், அவனைப் பள்ளிக்கூடத்திற் பார்த்தது முதல் எனக்கு அவன் மீது ஒரு விதமான அன்பு ஜெனிக்கிறது இவனிடத்தில் பல உத்தம லக்ஷணங்கள் காணப்படுகின்றன. இவன் முகத்தில் வசீகர சக்தி பதிந்து கிடக்கிறது. இவைகளெல்லாம் பிறந்த குறிப்பை வைத்துப் பார்த்தால் மிகத்தெளிவாய் விளங்கும்.

தாசில்:— அண்ணா, தங்களுக்கு இக்குழந்தை பேரில் இயல்பாகவே பக்ஷமுண்டானதைப்பற்றி மிகவுஞ் சந்தோஷிக்கிறேன். போஜனத்தின் மீதும் எல்லாம் பார்த்துக் கொள்ளலாம் ஸ்நானத்துக் கெழுந்தருளி யாகட்டும்.

என்றவுடனே இருவரும் எழுந்து போய்ச் சாப்பாட்டு வேலையை முடித்துக்கொண்டுவந்து மேல்வீட்டு "வராந்தா" விற்போட்டுள்ள நாற்காலிகளின் மீதமர்ந்து தாம்பூலம் போட்டுக்கொண்டே.

தாசில்:— அண்ணாச்சி, பையன் ஜாதகத்தைப் பெட்டிகளெல்லாம் தேடினேன் தென்படவில்லை. நாம நக்ஷத்திரத்திற்குப் பார்த்துத்தானே சொல்லுங்கள். நீங்கள் எப்படிச் சொன்னாலும் பலன் சரியாயிருக்குமென்று எனக்குத் தெரியும்.

சாமி:— இருந்தாலும், ஜென்ம ஜாதகத்தைப் போல பேரி ராசிக்குப்பலன் சரியாச் சொல்ல முடியுமா, கொஞ்சம் பிரயாஸப்பட்டாவது ஜாதகத்தைத்தானே தேடிக்கொண்டு வாருங்கள்.

தாசில்தார் தனக்குள்ளேயே இதேது தர்மசங்கடமாயிருக்கிறது ஜாதகத்தைக் காணவில்லை யென்று கண்டிப்பாய்ச் சொல்வதும் கொஞ்சம் இழிவாயிருக்கிறது தவிரவும், கல்விமானும், ஸ்வயபந்துவுமாகிய இவரிடத்தில், முழுப்பொய்யைச் சொல்லி யேமாற்றுவதும் உசிதமல்ல, நாளை உண்மை வெளியாகும் போது, நம்மிடத்தில் இவர்வைத்திருக்கிற அன்பும் மரியாதையும் கெட்டுப்போகும். அன்றியும், சாமான்யப் பேர்வழியுமல்ல. இவரிடத்தில் உண்மையைச் சொல்லாமலிருக்கவுங் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டு, அண்ணாச்சி, தங்களிடத்தில் ஒரு ரகஸ்யமான காரியத்தைச் சொல்லப் போகிறேன். அது தங்களுக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணத் தக்கதாயிருக்கும். பிற்பாடு ஜாதகத்தைக் காட்டுகிறேன்.

சாமி:— அப்படியா, குழந்தையின் ஜாதக விஷயத்திலும் ஒரு ரகசியமா? ஆனால் சொல்லுங்கள். அந்தரங்கமென்று தாங்கள் சொல்லிவிட்டதினாலே நானும் அப்படியே மனஸுக்குள்ளே வைத்துக் கொள்வேன், சந்தேக முண்டோ?

தாசில்:— ஆஹா ஒரு ஐயப்பாடு மில்லை பையன், நம்முடைய சொந்தப் பிள்ளையல்ல.

சாமி:— அப்படியா? பின்னையாருடையதோ?

தாசில்:— அதுவுஞ் சொல்ல முடியாது.

சாமி:— முடியாதென்றால், என்னிடம் சொல்லப்படாதென்பதா? தங்களுக்குந் தெரியாதா?

தாசில்:— தங்களிடம் சொல்லாமலொருமறைவா; தெரியாது.

...அனைக்காப்பக... சென்னை-600 008.

சாமி:— என்னிடத்தில் இன்னும் சங்கைவைத்துத்தான் பேசுகிறீர்கள். ஒரு சந்தேகமும் வேண்டாம், மனத்தாராளமாச் சொல்லுங்கள் ஒன்றும் வராது.

சில வருஷங்களுக்கு முன்னே நடந்த லக்ஷ்மிமால்க் கதையைத் தெளிவாயுஞ் சுருக்கமாயும் சொன்னார் தாசில்தார்.

சாமி:— அத் திருடர்கள்பேசிக்கொண்ட சம்பாஷணையி லிருந்து, பெற்றோர்பெயர் இருப்பிட முதலிய சில அடையாளங் கள் புலப்படவில்லையென்றாலும், இன்ன ஜாதிக் குழந்தை யென் பதும், நல்லூருக்குப் பத்து நாழிகை வழித்தூரத்தில் இப் பிள் ளையின் ஊருள்ள தென்பதும், இவனது சிற்றப்பன் பெயர் தங்கச் சாமி யென்பதும். திருச்செந்தூர் விசாகத் திருவிழாவிற் றவறி விட்ட தென்பதும், இம் மகவின் வீட்டுப் பரிசாரகன் பெயர் கண பதி என்பதும், ஒச்சன் வாய்மொழியிலிருந்து தங்களுக்குக் கிடைத்த சாக்ஷியங்கள் இவைகளை ஆதாரமாக வைத்துக்கொண் டு பெற்றோர்களைக் கண்டு பிடிப்பது கஷ்ட சாத்தியமல்ல. இந்தா இந்தப்பத்திரிகையின் மூன்றாவது பக்கத்தில் "காணாமற்போன தெய்வசிகாமணி" என்றதலைப்பின் கீழ் எழுதியுள்ளதைப் பாருங் கள், வாசித்துப் பார்த்தீர்களா? இப்போது குழந்தையின் தாய் தந்தையர் விஷயத்தில் என்ன நினைக்கிறீர்கள்.

தாசில்:— இன்னமும் சந்தேகமா, பாப்பையாபுரம் மிராசு சோமசுந்தரம்பிள்ளையின் பிள்ளையே இப்பிள்ளை. ஆனால் இதுவரையும் வளர்த்துவிட்டு எப்படித்தான் மனமொப்பி இன் னொருவர்வசம் அனுப்பமுடியும்? அதுவுமன்றி, இந்தச்சமயம் என்னை அவனுக்குத் தந்தையல்ல வென்று வெளிப்படுத்தினால் அவன் படிப்புக்கும் பின்னேற்றத்திற்கும் மிக்க இடையூறாய் முடி யும் இதைக்கவனித்துக் கொள்ளுங்கள், எனக்கும் இவனைத் தவிர வேறு சந்ததி களுமில்லை, அப்பால் தங்களிஷ்டம் என்று முடித் தார் தாசில்.

சாமி:— ஐயா, இவனையிழந்த பின்பு சோமசுந்தரம் பிள்ளை வெகுநாளாய் பைத்தியங் கொண்டிருந்தார். இப்போது ஞானப் பைத்தியத்திலிருக்கிறார். இவன் தவறின விஷயத்தில் எனக்கு ஆரம்பத்திலேயே சந்தேக மேற்பட்டுத் தேடமுயற்சித் தேன். மிராசுப்பிள்ளையின் வியாதியே தடைபடுத்தி விட்டது. தங்கச்சாமியால் இத்தனை விபரீதமும் நடந்திருக்கிறது. அவன் இன்னமும் ஊரிற் செய்கிற அக்கிரமங்களுக்குக் கணக்கு வழக்கில்லை அதை ஒருவாறு நிவர்த்திக்க வேண்டியது நம் போன்றவர்கள் கடமையாயிருக்கிறது. ஊரிலும் தங்கச்சாமி சொல்லுக்கு மீறிப்பேசுவோர் கிடையாது. ஊரிலுள்ளவரது, பொன்னோ பொருளோ. எல்லாம் அவனுக்கே சொந்தம் இச்சமயம் குழந்தையை அவ்வூருக்கு அனுப்பவே வேண்டாம். நாம் மறியாதைக்காக அடங்கி நடக்க வேண்டிய நேரமாயிருக்கிறது. நான் இவனைத் தேடிக்கண்டு பிடிக்கவேண்டிய வியாஜமாகவே தான் புறப்பட்டேன். ஊரைவிட்டு வெளியேறி வெகு நாளாகிறது. நேற்றுத்தினத்துடன் என் விரதத்தின் பாதி முடிந்திருக்கிறது. அஃதாவது பள்ளிக்கூடத்தில் உபந்நியாசம் பண்ணிக்கொண்டிருக்கும் போது தெய்வசிகாமணியின் வலது கையிலுள்ள பச்சையைக் கவனித்தேன் பாதி விரத முடிந்ததாகக் கருதினேன். இதற்காகவே ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும் தவறும்ற பிரசங்கம் பண்ணிக்கொண்டு வந்தேன்; மற்றொரு பாதி முடிவு தங்கச்சாமியையும் அவனது நண்பரையும் சிறைவாசம் பண்ணுவித்தலே, நிற்க. நாம் இப்போதொரு காரியஞ் செய்யவேண்டும். குழந்தை தங்களிடத்திலிருக்கிறதாக ஒரு கடிதம்எழுதி அதில்நானும் கையெழுத்திட்டுப்பாப்பையாபுரத்திற் கனுப்பிவிடல் வேண்டும். பிற்பாடு நடக்கவேண்டியதைப் பற்றி நான்காசிக்குப் போய்விட்டு வந்த பின் யோசித்துக் கொள்ளலாம். என்ன தங்களுடைய அபிப்பிராயம் சொல்லுங்கள்.

தாசில்:— தங்களுடைய வார்த்தைக்கு இரண்டுஞ் சொல்வேனு, அப்படியே செய்கிறது. எப்படியும் குழந்தைக்கு யாதொரு மனக்கிலேசமும் உண்டாகக் கூடாது. அதுதான் நான் கேட்டுக் கொள்கிறவரம்.

சாமி:— அப்படி யொன்றும் நேராது. தங்கள் கைவச மிருக்கும் போதென்ன கவலை.

என்றிருவரும் கலந்து ஒரு கடிதம் எழுதி சோமசுந்தரம் பிள்ளைக் கனுப்பிவிட்டு மறுநாளே காசியாத்திரையைக் கருதிப் போய் விட்டார் சாமிநாதபிள்ளை.

பதிமூன்றாம் அதிகாரம்.

மனுஷா மனுஷனெல்லாம் நம்முடைய பேரைக் கேட்டவுடனே, கப்சிப் பென்னுமல் வாயை மூடுகிறான். அப்படி யிருக்கச் சில ஏழைப்பயல்களாய் ஒன்று சேர்ந்து கொண்டு நம்மை யெதிர்க்க முன் வந்து விட்டான்களே. இந்த எளிய பயல்களுக்கு இவ்வளவு தைரியம் ஏது எல்லாம் அந்த அதிகப்படித்த குரங்கன் சாமிநாதன் செய்து வைத்தவேலை. அவனை ஆரம்பத்தில் ஏளனமாக மதித்தது நம்பேரிற் பெரியதன்று. அவன் கல்வி எவ்வளவு கற்றிருக்கிறனோ அதற்குமேல் உலக அனுபவத்திலும் பழகியிருக்கிறன். அவனைப் பணத்தைக்கொண்டு சரி பண்ணலாமென்றாலும், அவன் அதிலுங் குறைந்தவனு. ஒன்றுக்குங் கட்டுப் படமாட்டான். குடியானவன் களுக்கு இவ்வளவு உபபலமுஞ் சேர்த்துக் கொடுத்துவிட்டு இந்திரஜித், நிகும்பலை யாகஞ்செய்யப் போனதுபோல எங்கையோ போயிருக்கிறனென்றுங் கேள்வி வரட்டும் பார்த்துக்கொள்வோம். ஜெயமுள்ளவரைக்கும் பயமில்லை என்று தங்கச்சாமிபிள்ளை சில ரிக்கார்டுகளை யெடுத்துப்பார்த்துக் கொண்டிருந்தார். அந்நேரம் காபாக்ஷியம்மாள் வந்து. "இந்தாருங்க" எங்கையாவந்திருக்கா...என்றாள்

தங்கச்சாமி:— அப்மான், வாருங்கள் ஏது பாப்பையா புரமும் பங்கயா? ஒரு லெட்டரும் பஞ்சமாய் போய்விட்டதே.

பூமிநாதபிள்ளை:— என்ன பண்ணச்சொல்கிறீர்கள் எனக்கும் பலவிதமான அலைச்சல்தான். கேஸும் என்னமோ ஒருவிதமாக.

தங்க:— விதமென்ன விதம் கோர்ட்டார் நிரம்ப வாலிபம். அனுபவமில்லாத ஆள். ஒரு பக்கமாகத் திரும்பிக்கொண்டு குடியானவன்களுக்கு அநுகூலமாய்த் தீர்ப்புப் பண்ணியிருக்கிறதாகத்தெரிகிறது. ஹைக்கோர்ட்டிருக்கிறது பார்க்கிறேன். ஒருகை, இத்தோடு விட்டு விட்டேனா?

பூமி:— நீலகண்ட சாஸ்திரி அநுபவமில்லாதவரா, அடே அப்பா, அந்தமனிதனெழுத்துக்குள்ள மதிப்பு எந்தக்கோர்ட்டாருக்குத் தான் உண்டு. அந்தப் பைஸலுக்கு மேல் அப்பீலே அநேகமாக இருக்கமாட்டாதென்று பெரிய பெரிய வக்கீல்களெல்லாஞ் சொல்லுவார்களே. உங்களுக்கும் சமயத்திலே காரியா காரியம் தெரிகிறதில்லே. எந்நேரம் பார்த்தாலும் பிடிவாதப்பேச்சே குடியாயிருந்தால் எதைச்சாதிக்க முடியும்! கோர்ட்டுக்குப் போனவன் எவன் முன்னுக்கு வந்திருக்கிறான். நம்மைக் கையெடுத்துக் கும்பிடுகிற ஏழைப்பயல்களை யெல்லாம் எதிரி யாக்கிக்கொண்டு கச்சேரி வாசலிலேயே காத்துக்கிடந்தால் செம்பமரியாதையல்லவா? எட்டுநாளையில் ஆட்டிவைக்கப்படாதா? நான் சொன்னபடி ஒரு கேஸ்மாத்திரம் போட்டிருந்தால் இப்படி யெல்லாம் நேரிடுமா? ஆபத்திலே ராஜிக்கு வருவான்கள். அச்சமயம் பார்த்து ராஜிநாமா எழுதுகிற குமாஸ்தாவைச் சரிபண்ணிக் கொண்டால் எதிரிகளுக்குச் சொத்தும் ஒரு கேடோ? உன்னல், பதுங்கல், தெரிந்து நடவாதவன் என்ன மனுஷன், மாப்பிள்ளை ஐக்கோர்ட் டிருக்கிறது பார்த்துக் கொள்ளலாமென்கிறீர்களே? கேஸுக்குப் போகாதவன் ஐக்கோர்ட்டைப் பார்த்தால், தெண்டித்து விடுவார்களோ? அந்தக் கோர்ட்டில் (Gruond) கிரவுண்டு இல்லையென்று கேஸைத் தள்ளிவிட்டால் யாரைக் கட்டிக் கொண்டழுகிறது! என்னைக் கேளாமற் செய்த எந்தக்காரியந்தான் விளங்கியிருக்கிறது. அன்றைக்கொரு காரியம் முடித்தோமே அப்படி யிருக்கவேண்டாமா? எதிலும்யுக்தி வேண்டும். என்று மட மட வென்று பேசினார்.

தங்க:— அந்த யுக்தியிலுந்தான் மண்விழுந்து விட்டதே. யாராருக்கு என்னென்ன கேடு வரக் காத்திருக்கிறதோ தெரியவில்லை.

பூமி:— என்ன மாப்பிள்ளை இப்படிச் சொல்கிறீர்கள் வெகுகால மாய்விட்டதே.

தங்க:— எத்தனைகாலமானா லென்ன நம்முடைய காலவித்தியாசததுக்கு, இந்தவூர்ப் போஸ்ட்மாஸ்டர் ஒரு வாரம், ரஜாவில் அணியாபரண நல்லூருக்குப் போயிருக்கிறான். அவன் வேலையை நான் பார்த்துக்கொண்டு வருகிறேன். இன்று மெயிலில் இந்தக் கடிதம் என் தமையனார் பேருக்கு விலாசம்போட்டு வந்தது, நெடுங்காலமாக அவர் பேருக்குக் கடிதப் போக்கு வரவு இல்லாதிருக்க, இது யாரால் எழுதியிருக்கக் கூடுமென்று பிரித்துப் பார்த்தேன் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல எவன் நமக்கு விரோதியோ, எவன் நம்முடைய யுக்தி வலலபத்தைக் கண்டு பிடிக்கும் சமர்த்தனோ அவனால் எழுதப் பட்டிருக்கிறது. அது மட்டுமா! ஒரு தாசில்தாருஞ் சேர்ந்திருக்கிறதாய்த் தெரிகிறது.

பூமி:— வறுத்த காணம், முளைக்குமா மாப்பிள்ளை நேற்றிருந்தவனை யின்றைக்குக் காணோம். ஒரு வியாழ வட்டத்திற்கு முந்திப்போன ஒரு கொசுகு இத்தனை பெருவாரி நோய்களுக்குத் தப்பிப்பிழைத்துப் பெரிய மனுஷத் தனத்திற்கு வந்து விடப்போகிறதோ? காகிதம் சிருஷ்டணை.

தங்:— அம்மான் நானும் அப்படித்தான் யோசனை பண்ணினேன் ஆனால் எங்கேயாவது கிடந்து முளைத்துவிட்டால் பெரிய அனர்த்தமா முடியுமே என்றுதான் கொஞ்சந் திகில் தவிரவும், சாமிநாதனுக்கெல்லாம் ஒரு தாசில்தார் நேசம் கிடைப்பதானால் சாமானியமா? இவன் அவ்வளவு தாவானா, ஒரு கடிதத்தில் அவரோடு சேர்ந்து கையெழுத்துப் போடும்படியான அவ்வளவு யோக்கியனா, அதுதான் எனக்குச் சந்தேகமா இருக்கிறது. இப்படி ஒரு புளியைக் கட்டி விட்டால், மான்ய நிலவழக்கை அசிரத்தையாய்

விட்டு விடுவோமென்று நினைத்துக்கொண்டு இந்த எழுத்துக்கொ டுத்திருக்கிறான். 10, 12-வருஷங்களுக்குப் பிறகு குழந்தையைக் கண்டு பிடித்தவன் கூட்டிக்கொண்டு உடனே வர மாட்டானோ.

பூமி:— சாமிநாதபிள்ளைக்குத் தாசில்தார் பழக்கம் குறைக்கொம்பாக நினைக்கவேண்டாம் அவனுக்கு பெரிய பெரிய அதிகாரிகளெல்லாம் பழக்க முண்டே, இந்த விஷயத்தில் அவனுக்கு மேற்போக நம்மால் முடியாது. அவன் வாயைத்திறந்து பேச ஆரம்பித்து விட்டால் வையகமெல்லாம் மயங்குமே. அதிருக்கட்டும் இன்றைக்குக் கண்டவனை நாலு மாதங் கழித்துப் பார்த்தால் அடையாளந்தெரிந்து சொல்ல முடியாது. இவ்வளவு காலத்திற்குப்பிறகு ஒரு தடியனைக் கொண்டுவந்து இவன்தான் காணமற் போன கண்மணியென்று ருஜுப் படுத்தி விடுவானோ அவன் கிடக்கிறான் பூல ஜன்னலைச் சாற்றிவிட்டு லட்டரைப் படியுங்கள் மாப்பிள்ளை ....தங்கச்சாமிபிள்ளை கடிதத்தை யெடுத்து.

" மகாகனம் பொருந்திய ஐயா, உபய குசலோபரி 16-5-26 ல் திருச்செந்தூர் விசாகத் திருநாளிற் காணமற் போன தங்கள் தெய்வசிகாமணி என்னிடம் சுகமே இருக்கிறான். தங்கள் மைத்துனர் கனம் சாமிநாதக் கவிராஜாரவர்கள் நேற்று தினம் இவடம் வந்தார்கள் அவர்கள் சொல்லத்தான் தங்கள் குழந்தை யென்று தெரியும். பரீக்ஷாகாலம் சமீபமாயிருக்கிறது முடிந்தவுடன்கொண்டுவந்து விட்டு விடுகிறேன். ஏனைய விவரங்கள் நேரில் வேணும் சுபம்.

தங்கள்

நெல்லையப்பபிள்ளை

தாசில்தார்

மணிமங்கலம்.

காணமற் போன கான் முளையைக் காலங்கடந்துங்கருடணை யோடளித்த கடவுட்கு வந்தனஞ் செலுத்துங்கள் காசிக்குப் போய் விட்டுக் கடிதிற்றிரும்புவேன் மற்றய பின்

சாமிநாதன்.

படித்து முடிக்கவும் பூமிநாதபிள்ளை பூமியைப் பார்த்துக் கவிழ்ந்து ஆலோசனையிலாழ்ந்து குறிப்பான தேதியைப் போட்டெழுதியிருப் பதினாலே கடிதம் உண்மையானதாயிருக்கக் கூடுமென்று மருமகனிடஞ் சொன்னார்.

அதைவைத்துத்தான் கற்பனையாக எழுதப் பட்டதென்று நினைக்கிறேன். தேதிபோட்டவனெல்லாம் சாமிநாதனே, எவனாவதொருவனுக்குக் கையிலே 'தெ'பச்சையைக் குத்திக் கொண்டு நமக்கெதிரியாக நிறுத்தி நம்முடைய மிராசைப் பறித்துக் கொள்ள அஸ்திவாரம்போட்டு விட்டான். இதிற் சந்தேகமில்லை யென்றார் தங்கச்சாமிப்பிள்ளை.

பூமி:— இது எப்படியும் வரட்டும் பார்த்துக் கொள்வோம் மானிய நிலக்கேஸ்-க்கு அப்பீல் கோர்ட்டில் என்ன தீர்மானஞ் செய்யப் பட்டிருக்கிறது.

தங்க:— அப்பீல் பைஸலா, தாவா நிலத்தில் நாம் பிரவேசிக்கவே கூடாதென்றும், கோர்ட்டுச் செலவும் மத்பகால நஷ்டமும் குடியானவன்களுக்கு நாம்கொடுக்க வேண்டுமென்றும் தீர்ப்பாகியிருக்கிறது. அதில் இன்னொருபேரிழவும் வந்துவிழுந்திருக்கிறது. அது என்னவென்றால் குடியாவன்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிற தாவா நிலங்கள் நம்முடைய அநுபவத்திலிருக்கிறதாக வியாஜ்யம் போட்டால் அனுகூலமாயிருக்குமென்று நம்முடைய கீழ்க்கோர்ட்டுவக்கில் சொல்லி அந்தப்பிரகாரஞ் செய்திருந்தோமல்லவா, அப்படி அனுபவித்ததாகச் சொல்லுகிற காலங்களுக்குள்ள மேற்படி நிலங்களின் வருமானத்தையும் நாமே செலுத்தவேண்டு மென்றும் உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது. அதுமாத்திரம் 12 ஆயிரரூபாய்க்குக் குறையாது. இரண்டு கோர்ட்டுச் செலவும் பின் வட்டியும் செலுத்தவும் வேண்டும். குடியானவன்கள் விரோதம் ஏற்பட்டதிலிருந்து நமது விவசாயவேலைக்கு ஆட்கிடையாமல் சொந்த நிலங்களும் மூன்று வருஷமாகப் பயிரிடப்படாமற் பெரு நஷ்டம் நேர்ந்திருக்கிறது. இது சமயம் சாமிநாதன், ஊரிலிருந்தால் இந்தச் செலவுத் தொகை

8

வகையராவுக்காக நம்மை மிகவும் அலக்கழித்து விடுவான் எப்படியும், வண்ணான் துறை முப்லேப்போல, திடுக்கிட்ட நெஞ்சோடு காலங்கழிக்க நேர்ந்து விட்டது. அட்டியில்லை யென்று முகவாட்டத்துடன் சொன்னார்.

இந்தப்பரம சண்டாளர்கள் பிரஸ்தாபமே நமக்கு வேண்டாம் மணிமங்கலந் தாசில்தாரண்டை போவோம்.

பன்னிரண்டாம் அதிகாரம்.

"பொய் வழக்காளிகளும், மோசக்காரரும், திருடரும், பகற்காலத்துக் கூகைபோற் பதுங்கவும், சாதுக்களெல்லாம், கார்காலத்து பயிரினங்கள்போல, சுயபிரபமாயுலாவவும் இராஜாங்க விஷயத்தில் இம்மியும் வழுவில்லாமல், நெல்லையப்பபிள்ளை உத்தியோகம் பண்ணிக் கொண்டுவரும் போது, சாதாரணமாயுடம்பிலேற்பட்ட ஒரு அற்பவியாதிக்கு அவ்வூர் டாக்டரிடம் மருந்து சாப்பிட்டுவந்தார். அப்பண்டிதர் இவர் தேகத்தைப் பரீக்ஷித்து மூளை அகோராத்திர முயற்சியாற் பல க்ஷயப்பட்டிருக்கிற தென்றும் இரண்டு வருஷத்திற் கிடையில் உத்தியோகம் வகிப்பது அபாயமென்றும், அபிப்பிராயந்தந்தார். அதன் மீது தமது தேக சுகத்தைப் பாதுகாத்துக்கொள்ளத் தாம்பிரபர்ணி நதி தீரத்துள்ள தமது சொந்தவூரே தகுதியான இடமென்றுகருதி, லீவு வாங்கிக்கொண்டு குடும்பத்தோடு திருநெல்வேலி போய்ச் சேர்ந்தார். தெய்வசிகாமணி இவ்வருடம் B. A. பி. ஏ. வகுப்பிற் சேர்ந்து வாசிக்கவேண்டியவனாயிருந்தான். ஆனால் உபர்காப்பாடசாலை திருநெல்வேலியில் இல்லாமையால் படிப்பை நிறுத்திவிடும்படியாயிற்று.

தாசில்காருக்கு வர வர வியாதி அதிகப்பட்டுக் கொண்டே வந்தது. அவர் மனைவியின் பிதாவான வேணுவனலிங்கம்பிள்ளை யென்பவர் குடும்ப விசாரணைக் கர்த்தராக இருந்து வந்தார் அவர் அகம்பாவமும், லோபத்தனமுமுடைய ஒரு மனிதர்.

அவருக்குத் தெய்வசிகாமணியைப் பற்றிய வரலாறு முற்றிலுந் தெரியாது. அவனைக் குடும்பத்திற் சேர்த்துக்கொண்டிருக்கிறதே அவருக்கு மிகவும் அகௌரவமாகப் பட்டது. ஆகிலும் தம்மகளும் மருமகனும் அதிக அன்போடு வளர்த்து வருவதால் ஒன்றும் பேச இடமற்றிருந்தார் தற்காலம். அவர்யோசனை கேட்டு அதன்படி நடக்கும் தன்மையில் தாசில்தார் குடும்பம் வந்து விட்டமையாலும், தெய்வசிகாமணி வந்து சேர்ந்த பிற்பாடுதான் இப்படிப்பட்ட அதிர்ஷ்டஹீனம் நேர்ந்ததென்று அவர் மனோ சங்கற்பம் பண்ணிக்கொண்டபடியாலும், அவனை வீட்டை விட்டுத் துரத்த எண்ணிக் கடினமாய் நடத்திக்கொண்டு வந்தார். உலகத்தில் மனிதர்களெல்லாம் நல்லவர்களே என்று நினைக்கிற ஸ்வபாபமுடைய தெய்வசிகாமணி தன்பாட்டனார் தன்னைக் கோபிக்கிறதெல்லாம் தன்னுடைய நன்மையைக் குறித்ததாயிருக்குமென்றே சஹித்துக் கொண்டிருந்தான்.

ஒருநாள் தன் பள்ளிக்கூடத்துச் சிநேகிதனை அச்சுதனைக் கண்டுபேச அரைமைல் தூரத்திலுள்ள வீரராகவபுரத்திற்குப்போய்விட்டு இரவு 9-மணிக்கு வீட்டுக்கு வந்தான் கதவு பூட்டப்பட்டிருந்தது. வாசலுக்கு சமீபமான ரேழியில் தன் பாட்டனார் படுக்கை விரித்துத் தூங்கியிருப்பதைக் கதவின் சாவித் துவாரத்தின் வழியாகப் பார்த்து பாட்டையா, பாட்டையா.வென்று கூப்பிட்டுக்கொண்டு கதவை தட்டினான் ஒரு பதிலும் காணப்படவில்லை. மறுபடியும் பாட்டையா, பாட்டையா, என்றான். வேணுவனலிங்கம்பிள்ளை யெழுந்து, ஏலே உனக்குப் பாட்டையா யாரலே, உங்கம்மையைப் பெத்தவன், எந்தக்காட்டு மூதி, அம்மாளாம், ஐயாவாம், பாட்டையாவாம் எப்படியிருக்கு போக்கியம். இங்கிலீசு படிச்சு உத்தியம் பண்ணிவிட்டாப் போதும். சாதியில்லே, ஒழுக்கமில்லே, ஆசாரமில்லே எல்லாம் ஒன்றுதாம். சீமையிலில்லாத தாசில்வேலே, கண்ட கழுதைகளையெல்லாம் கெட்டியழுதுக்கிட்டு, அந்த மடப்பயல் மகளையில்லை சொல்லணும். ஆம்பிளைக்கு யென்ன தெரியும். நாளை, நாலு எனைவனுக்கு மின்னாலே போனால்லா தெரியும்........இரு, இண்ணைக்கு

ஒன்னைத் தொலேச்சிட்டு மறு அலுவல் பார்க்கேன் என்று தாறுமா றுப் பேசிக்கொண்டேவந்து, ஏலே வாமின்னே யென்னலே கதவை ஓடைக்கிபே என்று கதவைத்திறந்தார்.

வேணுவனலிங்கம்பிள்ளை பேசிய வார்த்தைகளில் இரண் டொன்று செவிப்பட்டதும் தெய்வசிகாமணி முகத்தைச் சுளித்து நம்முடைய பேரிற் புத்திக்குறைவு நிரம்ப விருக்கிறது கதவு பூட்டு முன்னமே வந்திருந்தால் இப்படிப் பெரியோர்களெல்லாம் கோபிக் கும்படி யிராதல்லவா? இராக்காலங்களில் அங்குமிங்கும் போவது கெட்ட வழக்கந்தானே. அதைப் பற்றித்தான் பாட்டையா கோபிக் கிறார்கள். சாமி சந்நிதித் தென்பக்கத்துத் தெருவழியே போக வேண்டாமென்று அச்சுதனும் சொன்னானே, கெட்டவர்கள் அத் தெருவிலிருக்கிறதினாலேதான் அப்படிச் சொல்லியிருக்கிறான். அ போக்கிரிகளுக்கேற்ற இருட் காலங்களில் வெளியே போகக்கூடா தென்று வாலிபனை நம்மைப் பாட்டையா கண்டிக்கவேண்டியது அவசியமே, அவர்கள் மனம் நோகாமல் நல் வாக்குப்பெற்றுக் கொள்ள வேண்டும். பெரியோர்கள் திருவுள்ளம் பேதித்தால் எப் பொருளும் பேதிக்குமென்று பெரியோருஞ் சொல்லியிருக்கின்றார் களே என்று வாசற்படியிற் காலை வைத்து உள்ளே வரலானான். வந்தும் வராமலும் இருக்கும்போதே வேணுவனலிங்கம்பிள்ளை கதவைத் திடீரென்று மூடித் தெய்வசிகாமணியை நிலைக்காலோடு சேர்த்துக் கதவினால் நெருக்கினான். கதவுக்கும் நிலைக்கும் இடை யில் அகப்பட்டுக்கொண்ட சிறுவன் பாட்டையா, பாட்டையா, நான் நான் பொறுங்கள், பொறுங்கள் என்று கத்தினான் நானாவது, நீயா வது ஒன்றுக்கும் மறுமொழியில்லை கதவு முன்னிலும் பலமாய் மூந்துகிறது. தெய்வசிகாமணிக்குக் கண் விழிபிதுங்குகிறது மூச்சு முட்டுகிறது என்ன செய்வான் பாவம், பொறுமையே பூஷணமாகக் கொண்ட தெய்வசிகாமணிக்குக் கோபம் பிறந்தது. "குணமென் னுங் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங்காத்தலரிது" என்றது

உத்தர வேதம். தன் முழுப்பலத்தோடுங் கதவைக்காலால் ஒரு உந்து உந்தினான் அந்தவிசையில் எதிர்ப்பக்கத்து நிலையோடு சேர்ந்தசுவரில் தடாலென்று மோதப்பட்டுப் பிரக்ஞை தவறிப் பொத்தென்று பூமியில் விழுந்தான் கிழவன்.

மணிமங்கலத்திலிருந்து வந்தநாள் முதல் தன்னை அம்முது மகன் அலக்ஷியமாக நடத்திவந்ததினாலும், இப்போது பஹிரங்கமாக வாய்க்கு வராத கடுஞ் சொற்களாற் சுட்டதனாலும் கதவிடுக்கில் வைத்துக்கொல்ல வகைதேடினதினாலும், கிழவனைத் திரும்பியும் பாராமல் திடு திடுவென்று வீட்டிற்குள்ளே போனான். அப்போது தான் தூங்கியெழுந்த காந்திமதியம்மாள் மகனைக்கண்டவுடன் அட ஐயா, கட்டிக்கரும்பே என் கனுவில்லாச் செங்கரும்பே இந்நேரமட்டும் எங்கே போயிருந்தாயடா என் கண்மணி. மணி பத்தாயிட்டுதே சாப்பிடவாடா ஐயா, என்றுபசரித்துக் கிட்ட அழைத்து முத்தமிட்டு உன்னையும் என்னையும் ஒக்கப் பரதவிக்க விட்டு விட்டுப்போய்விடுவார்கள்போலிருக்கிறதடா என் செல்வமே, நீ நாலுநாளாக ஐயாவை நன்றாகப் பார்க்கவில்லையே, ஒரு நாளைக்கொரு நாள் அசதியும் மபக்கமும் அதிகமாகுதே நான் என்னசெய்வேன், ஆற்றுவாருமில்லை, தேற்றுவாருமில்லைபடா என் தங்கமே, என்று கதறினாள். தெய்வசிகாமணிக்கு மனங் குழம்பிவிட்டது. கிழவன் செய்த கொடுமையாகிய தீ ஒரு பக்கம் பிடித்தெரிய தன் தாய் படுந்துக்கமாகிய சுடு தீ ஒரு பக்கம் வாட்டப் பசியை மறந்தவனாகித் தன் பிதா படுத்திருக்கும் அறைக்குட் புகுந்தான். படுக்கையில் பொலிவிழந்த முகத்தினராய் ஜீவதாது குறைந்து கைகாலசைக்கச் சக்தியற்றவராய்ப் படுத்திருந்த நெல்லையப்பபிள்ளை சற்று நேரத்திற்குமுன் தலைவாசற்கதவண்டை நடந்த குரூரச்செய்கையைச் கீழ்புறத்து ஜன்னல் வழியாக் கண்டு நெருப்பில் விழுந்த புழுப்போற் றுடித்து அக்கொடுஞ் செயலைத் தடுக்க வகையற்ற நிலைமையிலிருப்பதற்காக வருந்தினார். என் அருமைப் பெருஞ் செல்வத்தைக் கல்விக் களஞ்சியத்தை, வளர்த்த நாளெல்லாம் வளர்த்துவிட்டு இக் கண்ணெஞ்சு படைத்த கிழப்பிணத்தின் கையிலொப்பிக்கவா இங்கு

கூட்டிவந்தேன். கவிராயரோடு கூட்டியனுப்பியிருந்தால் இத்தனை கண்கலக்கப்படவேண்டியிராதே, அந்தோ! அந்தோ!! என் கண்ணுள்ளபோதே இக்கதியானல், நான் மண்டையைப் போட்டுவிட்டால் இரக்கமில்லாப் பாவியர் எப்பாடு படுத்துவரோ எண்ணிளஞ் சிங்கத்தை. முருங்கைமரம் போல் பெருத்த என்னுடலினுயிரிருந்தும், என் கண்மணிக்கு வந்த இடரை நீக்கப்பலனற்றவனாய் விட்டேனே. ஆ! விதியே, விதியே இப்பாதகச் செய்கையில் காந்திமதியுங் கலந்திருப்பாளோ. ஐயோ அப்படியானல் நான் இறந்தாலும், மறுமையிலுங் கதியில்லையே, "மனைவி குறைகண்டிருந்துந் துறவார்" எய்தும் நரகமன்றோ சித்திக்கும் சீ நாம் நினைத்தது தப்பு. இவ்வளவு பிசகு செய்ய என்னுயிர்க்காதலி ஒப்பியிருக்க மாட்டாள். தெய்வமே! தெய்வமே' செங்காயினுங் கடைப்பட்ட வேணுக் கிழவன் முகத்தில் விழித்துக்கொண்டு இன்னமும் இருக்கும்படி என்னை விட்டுவிடாதே ஜீவகோடிகளின் வினையளவறிந்தூட்டுவிக்கும் வித்தக உயிர்களை அநாதியே பந்தித்திருக்கும் ஆணவ மலத்தைப் பெத்தகாலத்தைப் போலவே முத்தியிலும் இருக்கவைத்தும் அதன் சேட்டையறச் செய்விக்கும் செல்வ நின்றிருவடியிற் சேர்த்துக்கொள்ளல்வேண்டும். இனித்தாமேன், சகியேன். உன் அடைக்கலம் என்று பிரலாபித்து நாவறண்டு சற்று விட்டு விட்டு நெஞ்சு படபடத்தடிக்க இரு கடைக்கண்ணிலும் ஜலம் வடிய மூச்சடங்கினர். சகிக்கமுடியாத் துக்கத்தோடு வீட்டிற்புட்புகுந்த தெய்வசிகாமணி தன் பிதாவின் கட்டிலண்டைபோய்ப் பார்த்துப் பிரமித்து ஒன்றுந் தோன்றாமல் கட்டிற்சட்டத்திலுட்கார்ந்து பிதாவின் கையை யெடுத்து மடிமீது வைத்துக்கொண்டு நெஞ்சைத் தொட்டுப்பார்த்தான். வலதுகைச் சுட்டு விரலால் நாக்கைக் தடவினான், அம்மா சுக்கு வெந்நீர் கொண்டுவா, மயிலிறகு விசிறியை யெடு, குளிர்ந்த காற்றுவருகிறது கதவையும் ஜன்னலையும் மூடு, கம்பளியைக்கொண்டு வந்து உடம்பைப் போர்த்து என்று, கைதேர்ந்த டாக்டர் மாதிரி பேசினன். சாந்திமதியம்மாள் கஷாயத்தைத் தயாரித்துக் கொண்டு சாமான்களுடன் வந்தாள். இச்சமயத்தில் செல்லப்பபிள்ளை கொஞ்சம் ஸ்மரணை வந்து நெடுமூச்சு விட்டுப் புரண்டார். நாலைந்து தினங்களாகச் சற்றேறக்குறைய இம்

மாதிரியிருந்து வருகிறபடியால் மனம் தடுமாறாமல் கஷாயத்தைத் தன் மகன் வசம் தந்தாள். அதை வாங்கி விரலிட்டு இளஞ்சூட றிந்து பிதாவைப் பக்குவமாகத் தூக்கி மார்பிற் சாய்த்துக்கொண்டு வெந்நீரைக் குடிக்கக் கொடுத்தான். கஷாயஞ் சாப்பிட்டுச் சிறிது களைதீர்ந்து கண்ணைச் சற்றே திறந்து தெய்வசிகாமணியைக் கவனித்துப் பார்த்துக் கையால் முதுகைத் தடவிக் கண்ணீருதித்தார். முன்றானையால் அவர் முகத்தைத் துடைத்துக்கொண்டே முத்துப் போல கண்ணீரைப் பல பலவென்று வடித்தாள் காந்திமதி. நெல்லையப்பபிள்ளை, நாம் எப்படியானாலும் ஆகிறோம். நமது மனைவி கதி என்னவானாலும் ஆகட்டும் உலகமே இன்னதென அறியாத ஒரு உத்தமகுலச் சிறுவனை நாம் நிர்க்கதியாகத் திரியவிட்டுப்போவோமானால் நமக்கு எழுமையும் நற்கதி கிட்டாது. இன்று இவனால் உதையுண்ட கிழவன் அடைப் பாம்புபோற் சினங்கொண்டிருப்பான் நாளைக்கே சில சண்டாளர்களை யேவிக்கொன்றாலும் கொன்றுவிடுவான். "தான் கெட்டது மில்லாமற் சந்திர புஷ்கரணியையுங் கெடுத்தான்" என்பது போல நாம் பிள்ளையற்ற பெருமலடனாய்ப் போனது மல்லாமல் சோமசுந்தரம்பிள்ளையையும் கெடுத்து விடக் கூடாது. இவன் வரலாற்றைச் சிறிது துலக்கிவிட்டால் இவனென்ன ஒன்றுந் தெரியாத பிள்ளையா, பெற்றோரிடமாவது போய்ச்சேர்வான். பேதமற ஆட்டும் பிரான் இந்தச்சரீரத்தை இன்னங் கொஞ்சக் காலத்திற்கு இந்த உலகில் சஞ்சரிக்கப் பண்ணுவாராயின் நம், தெய்வசிகாமணியை நாம் நினைத்த வண்ணம் நல்ல நிலைமையில் வைத்துப்பார்த்துப் பரகதியடைவோம். என்றெண்ணினவராய்த் தன் காதலியின் முகத்தைப் பார்த்தார். அக்குறிப்பை உடனே அவர் பார்வையினாற்றெறிந்து கொண்ட அவ்வம்மணி, சரியென்றொப்புக் கொண்டதற் கடையாளமான சைகை கண்ணாற செய்தாள். இந்த நயன பாஷைகளொன்றும் தெய்வசிகாமணிக்குத் தெரியாது. நெல்லையப்பபிள்ளை தன் தலையை மெல்லத் தூக்கித் தலையணையின் கீழிருந்து இரண்டு (கவர்) உறைக் கடிதங்களை யெடுத்து அவன் கையிற் கொடுத்து வெளியே போகும்படி சைகை செய்தார். கடிதங்களைப் பெற்ற சிறுவன் முகப்பு வாசலில் வைத்திருக்கிற தீப வெளிச்சத்திற் போய் மேல் விலாசத்தைப் பார்த்

தான் ஒன்றில் "தெய்வசிகாமணி ரகஸ்யம்" என்றும் "மற்றொன்றில் பூர்வசாஸனங்கள்" என்றும் எழுதப்பட்டிருந்தன இதைத் தெரிந்து கொண்டவுடனே தெய்வசிகாமணி இரகஸ்யம் என்றெழுதியிருப்பது தன்னுடையவும் கல்யாணசுந்தரத்தினுடையவும் ஆஸ்தி வாழ்க்கைமுதலியவைகளைக் குறித்திருக்கக் கூடுமென்றும், மற்றது கல்யாணசுந்தரத்தின் பூர்வீகசொத்துக்களைக் குறித்த சாஸனங்களாயிருக்கலாமெனவும் எண்ணினான். அவைகளை அவ்விடத்திலிருந்து பிரித்துப் படித்துப் பார்க்க அவனுக்கு உசிதமாத் தோன்றவில்லை. ஏனெனிற் கிழப்புலிவந்து பாயினும் பாயுமே, என நினைத்து நிற்கிற வேளையில் ஒரு குதிரைவண்டிக்காரன் வண்டியைச் சற்றுவேகமா யோட்டிக்கொண்டு தெருவோரம் போனான். அவனைத் தெய்வசிகாமணி கூவி லேரக்குல் பண்டு சத்திரத்திற்கு வண்டி விடுகிறாயா? வென்றான், நாலணா வென்றான் சரியென்று வண்டியிலேறிப் போய்ச் சத்திரம் சேர்ந்தான்.

பதிமூன்றும் அதிகாரம்.

சத்திரத்துத் தாழ்வாரங்களிலும், உள்முற்றவெளிகளிலும், ஜனங்கள் நிறைய்ப் படுத்துத்தூங்குகிறார்கள். சிலர் தூங்கிவிழுந்துகொண்டே தாம்பூலந் தரித்துட்கார்ந்திருக்கிறார்கள். சிலர் கும்பலாகக் கூடிக்கொண்டு சீட்டாடுகிறார்கள். சிலர் கோர்ட்டு வழக்குகளைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். குடு குடுப் பாண்டிகள், பாம்புக்காரர்கள், மரமணி வெண்கலமணிக்கார வீரசைவப்பண்டாரங்கள், தங்கள் தங்கள் ஜோல்னாவைத் தலைக்குவைத்துக் கொண்டு வெளிப்பக்கத்தில் விழுந்து கிடக்கிறார்கள். இத்தனை கூட்டங்களையுங் கடந்து காலியாயிருக்கும் ஓரறைக்குட் புகுந்து விளக்கு வெளிச்சத்தில் இரகஸ்யம் தீட்டிய, கவரையுடைத்துப் படித்துக்கொண்டு போகிறான். உதடு துடிக்கிறது, கண்ணிற்றண்ணீர் வடிகிறது, சரீரம் ஸ்தம்பிக்கிறது, பெருமூச்செறிகிறது, திருப்பிப் படிக்க அவனுக்கு மனங்கூடவில்லை. இக்கடிதம் யாரால் எழுதியிருக்கலாம்.

(கைபொப்பத்தைக் கவனிக்கிறான்) வேறொருவரெழுத்துமல்ல. ஐயா கை அக்ஷரமே, சந்தேகமில்லை நான்கு தினமாக நாம் வீட்டுக் காரியங்களைக் கவனியாது திரிந்ததனால் இப்படி நம்மைச் சேவகப்படுத்தி நற்புத்தி புகட்ட நினைக்கிறார்களோ? இல்லை இல்லை. நாம் சொந்தப்பிள்ளையாயிருந்தால் வேணுவனலிங்கம்பிள்ளை இவ்வளவு வைராஞ்சாதிக்கக் காரணமில்லை ஒச்சன், மருளாடியென்னும் திருடர்கள் வசமிருந்து மீட்டினதற்குக்காரணம், யாதாயிருக்கலாம். அக்கள்ளர் ஜாதியிற் சேர்ந்த கன்னி அல்லது ஒரு விதவை, பெற்ற பிள்ளையாயிருப்பேனோ? சிசுக் கொலையால் வரும் பாதகத்தைப் பெரிதாய் நினையாத பேதையர், விதவை அல்லது கன்னி, பிரஸவித்தபிள்ளையால் ஜாதிக்கு நேரும் அவமானத்தைப் பொருளாக எண்ணுவரோ? அப்படியுமிராது. இரண்டொரு சோசியர்கள் ஐயா விடம் என் ஜாதகத்தைக் கேட்டபோது அதற்குச் சரியானமுகாந்தரம் கூற வகையற்று, 'காணவில்லை, தவறிவிட்டது' என்று சொன்ன ஞாபகமிருக்கிறது. தம்பிள்ளையானல், ஜாதகமெழுதி வையாதிருப்பார்களா? காணுமலும் போகுமா? நல்லவிந்தை! நல்ல விந்தை! ஏ, உடலே, உடலே உன் பெருமை குறைந்ததா. தாசில் பிள்ளையவாள் குமாரர் என்னுங்கெர்வஜன்னி தொலைந்ததா? ஐயோ, ஒருஆடுமாடாகப் பிறந்தாலும்இதுஆட்டுச்சாதி அது மாட்டுச்சாதியென்று குருடனுங் கூடத்தடவிப் பார்த்துத் தட்டில்லாமற் சொல்லிவிடுவானே. அந்த யோக்யதையும் உனக்கில்லையே! ஆனல் நீ மனித ஜாதி யென்பதிற் குறையில்லை. அட கன்மமே உனக்குள்ள பலம், யாருக்குத்தான் உண்டு. உற்றார் பெற்றாரென்று சிலரைக் கூட்டம் போடவைப்பாய். கூடின் கூட்டத்தைக் கைநொடிப்பொழுதிற் கலைப்பாய், கேவலம் பிக்ஷைக்காரனைக் கிரீடாதிபதி யாக்குவாய். சக்ரவர்த்திகளைச் சந்திக்குச் சந்தி தண்ணீருங் கிடையாதலையவிடுவாய். உன் மகிமையை மகிமையென்று பிரலாபித்துக்கொண்டே சுவரோடு சாய்ந்து மயங்கினான். அக்கடிதத்தின் செய்தியை இன்னதென அறிய வாசகர்கள் ஆவலுறுவராதலால அதனையும் இங்

கு குறிக்கிறோம். அக்கடிதம் இங்கிலீஷில் எழுதியிருந்தாலும், மொழி பெயர்த்து இங்கெழுதப்பட்டிருக்கிறது.

"என் அருமைச் செல்வமே, அடியிற்கண்ட விஷயங்களை யெழுதத்துணிந்த நான் பெரும்பாவி. நீ. எங்களுக்குச் சொந்தப் பிள்ளையல்ல. 1826-ம் வருஷத்தில் மணிமங்கலத்திற்கு மேல்புற மிருக்கிற, லக்ஷ்மிமால்த்திண்ணையில் ஒச்சன், மருளாடி என்ற இரண்டு கள்ளர்கள் கைக்குழந்தையாயிருந்த உன்னைக் கொல்லப் பிரயத்தனஞ்செய்து கொண்டிருந்த சமயம் நாம், கண்டு அவர் களில் ஒருவனை வதைத்து உன்னையெடுத்துவந்து இதுவரை வளர்த் தோம். எப்போதும் உன்னையே பிள்ளையாகவைத்துக் கொள்ள வும் எண்ணியிருந்தோம். என் மனைவிக்கும் பூரண சம்மதம். என் கஷ்டகாலம், என் மாமனால், உன்னைப்பிரிக்க நேரிட்டிருக்கிறது. அவர் எப்படியும் உன்னைச் சதிசெய்ய எண்ணியிருக்கிறார் என்பது எனக்கு இரவு 9–மணிக்குத்தான் தெரிய வந்தது. நீ இன்னவகுப் பைச் சேர்ந்தவனென்று அவர் தெரிந்து கொள்ளவில்லை தெரிந் தாலும் அவர் மிகக் கொடியரே. என் மரணச்சடங்கு முதலிய வற்றை உன்னால் நடப்பிக்க அவருக்குச் சம்மதமில்லாமல் இப் போதே உன்னை வெளியேற்றி விட வழிதேடிக் கொண்டிருக்கிறார். ஆகையினாலே என் பிள்ளைக்கலி தீர்த்த பெருமானே! என்னு டைய மரண காலத்தில் கூடிய சுற்றத்தார் கண் முன்னிலையில் நீ அவமானப்படாமலிருக்கவும், உன் உண்மைப்பெற்றோர்களை அடை யும் பருவம் வந்து விட்டமையாலும், உனக்கு ஒரு ஏற்பாடும் செய் து வைக்குமுன் திடீரென்று இவ்வியாதி எனக்குச் சம்பவித்தி ருப்பதாலும் உன்னைப் பிரித்து விடுவது உத்தமமென்று எனக் குத் தோன்றிற்று. இதனினும் விசேஷமாக உன்வரலாற்றைத்தெரியவே ண்டுமாயின் நமது மாசிலாமணியைக்கேள், உன் பூர்வீக சரித்திரத் திற்காதாரமான சிலரிக்கார்டுகள் இத்தோடு கொடுத்திருக்கிறேன். இதற்கு மேல் எழுத என் கை சோர்ந்து போகிறது கண்ணீரும்

கடிதத்தை நினைக்கிறது. என் உடம்பிருக்கிற மாதிரியில் மரணம் சமீபத்திலிருக்குமென்றெண்ணுகிறேன்.

இங்ஙனம்

பசுத்தோல் போர்த்துப் புலிப் பாய்ச்சல்

பாய்ந்த உன்போஷக பிதா,

நெல்லையப்பன்.

நெடுநேரங்கழித்து மயக்கம் நீங்கி யெழுந்த தெய்வசிகாமணி இரண்டாவது கவர்க்கடிதத்தைப் பிரித்தான். அதில், வர்த்தமானப் பத்திரிகை ஒன்று, மருளாடியின் சவத்தோரங் கிடந்த வெற்றிலை பாக்குப்பையிலிருந்த சின்னக்கடிதம் ஒன்று, கவிராயருந் தாசில்தாருஞ் சேர்ந்து சோமசுந்தரம்பிள்ளைக் கனுப்பின கடிதத்தைத் தங்கச்சாமிபிள்ளை கைவசப்படுத்திக் கொண்டு அதற்குச் சோமசுந்தரம்பிள்ளை பதிலெழுதியதாக தங்கச்சாமிபிள்ளையால், தாசில்தாருக்குத் தபால் மூலமாயனுப்பிய கற்பனைக்கடிதம் ஒன்று ஆகிய இவைகள் அடக்கப்பட்டிருந்தன. அவற்றுள் ஒச்சன்கடிதம்

"கணபதியால், உன்னிடம் ஒப்பிக்கப்படும் உருப்படியைக் கொலை செய்துவிடு ரூபா 500 தருகிறேன்.

தங்கச்சாமிபிள்ளை.

எனவும், வர்த்தமானப் பத்திரிகை தமிழகம்:

" காணமற் போன தெய்வசிகாமணி பாப்பையாபுரம் மிராசுதார் சோமசுந்தரம்பிள்ளையின் 2-வயதுள்ள ஆண் குழந்தை யொன்று திருச்செந்தூர் விசாகத் திருநாளன்று தவறிவிட்டது. கண்டு பிடித்து உடையவர்கள் வசம் சேர்ப்பவருக்கு ரூ 1000-மும் அக்குழந்தையின் ஆபரணங்களும் இனம். சிறம் செவப்பு உலது முன் கையில் தெ. எழுத்துப்பச்சை குத்தியிருக்கும் "

எனவும்

மற்றொரு கடிதம்

"மஹாசனம் பொருந்திய ஐயா தாசில் ! நெல்லையப்பபிள்ளை யவர்களுக்குத் தங்கள் சோமசுந்தரம் எழுதுவது. தாங்களும் மஹா யோக்கியரான சாமிநாதக்கவிராயரும் எழுதிய கடிதம் வந்து சேர்ந்தது. தங்கள் வசமிருக்கும் குழந்தை நம்முடையதல்ல. அது காணு மற்போன வருஷத்திலேயே இறந்து போனதாக உண்மையுள்ள பெரிய மனுஷாள் மூலமாக அறிந்து கொண்டோம். எமது சகோதரன் தங்கச்சாமிபிள்ளைக்கும் கவிராயருக்கும் ஏற்பட்டிருக்கிற மனஸ்தாபத்தினால் எங்கேயாவது ஒரு பிள்ளையைத்தேடிக்கொண்டுவந்து உருட்டுப்புரட்டு ஒன்றுமறியாத பரம ஸாதுவான எமது சகோதரனிடமிருக்கிற மிராசைக் கைப்பற்ற நினைத்துத் தங்களை வஞ்சித்து நம்பும்படி செய்து ஏற்கனவே ஆதாரம் உண்டுபண்ணிக்கொண்டு திரிகிறார். எம்மிராசை எமது சகோதரனுக்கு மனப்பூர்வமாகக் கொடுத்து விட்டோம். நாம் 10, 12-வருஷங்களாகக் குடும்பத்தை விட்டு சன்னியாஸ ஆஸ்ரமத்திலிருக்கிறோம். எமக்குப்பிள்ளையுமில்லை சொத்துக்களுமில்லை. யாவும் அநித்யம். ஸாதுவாகிய தங்கள் கடிதத்திற்கு மறுமொழி யெழுதாதிருப்பது மரியாதையல்லவே யென்றெண்ணி இதற்கு மட்டும் பதிலெழுதலாயிற்று. உலகவிவகாரத்திற்கும் நமக்கும் வெகுதூரம். கவிராயருக்கு எல்லாத் தொழிலுந் தளபாடம். சாக்ரதை! குருநாதன் துணை.

சோமசுந்தரம்" எனவும்.

எழுதியிருப்பவைகளைத் தெய்வசிகாமணி ஒரு முறைக்கிருமுறை படித்துப்பார்த்து ஆலோசிக்கலானான். வர்த்தமானப் பத்திரிகையிற்கண்ட விஷயம் வெகுகாலத்திற்கு முந்தினதாயும் கலப்பற்ற உண்மையுள்ளதாயுந் தெரிகிறது. ஆனால் சொற்பகாலத்திற்குள் சோமசுந்தரஸ்வாமிகள் எழுதிய நிருபம் அதற்குமாறாக இருக்கின்றது. இக்கடிதத்திலும் ஒச்சன் கடிதத்திலும், தங்கச்சாமிபிள்ளையென்ற ஒருவரைப் பற்றிய பிரஸ்தாபம்வருகிறது. அவரும் சோமசுந்தரம்பிள்ளைக்குத் தம்பியென்றுந் தெரிகிறது. அதாவது கடைசிக்கடிதத்திலே, அதிலேயே "உருட்டுப் புரட்டு ஒன்று

மறியாத பரம ஸாது" என்று அவரைக் குறிக்கப்பட்டிருக்கிறது. அப்படியவர் பரமசாதுவாயிருந்தால் "கொலைசெய்துவிடு" என்று ஒச்சனுக்குச் சின்னக்கடிதம் எழுதியிருக்க மாட்டார் அவர் இன்னொரு தங்கச்சாமி பிள்ளையாயிருக்கக் கூடுமென்றாலோ கையெழுத்துக் களிரண்டும் சற்றேறக்குறைய ஒன்றுபோலவே யிருக்கின்றன. கடைசிக் கடிதத்தில் இன்னமொரு கவிராயரைப் புகழ்வது போல் இகழ்ந்திருக்கிறது. இவருக்குச் சோமசுந்தரம்பிள்ளை இன்னவித சம்பந்தமுடையவரென்று தெரிய இடமில்லை. கவிராயர் அன்னியராயிருந்தால் சோமசுந்தரம்பிள்ளைக்குக் குழந்தையைத்தேடிக் கொண்டு வந்துசேர்க்க ஏன் பிரயாசைப்படுகிறார். கடைசிக்கடிதத்தில் விவரித்திருக்கிறபடி, மிராசை அபகரிக்கிறதற்காக என்று வைத்துக் கொள்ளலாமென்றால் அது கொஞ்சம் பொருந்தாமற்றெரிகிறது. எப்படி? ஊருருக்கு ஆண்பிள்ளை களெல்லாம் வலது கை மணிக்கட்டில் பச்சை குத்திக் கொண்டவர்களாய் இருப்பார்களா? இருந்தாலும், தெ பச்சையாக இருக்குமா, இருந்தகப்பட்டாலும் பெற்றோர் கொடுப்பார்களா, கொடுத்தாலும் வயஸு முதலியவைகள் சரியாக ஒத்திருக்குமா? இத்தனை இலக்கணத்தோடமைந்த வேறொரு அந்நியப்பிள்ளையைத் தேடிச் சீமை சீமை யெங்கும் ஒரு கல்விமான் திரிவானா? இது நடக்கக்கூடிய காரியமா? இல்லை. நிற்க, கவிராயர் யாரெனிலோ நம்முடைய பாடசாலையில் வந்து உபந்நியாசம் பண்ணினவராகத்தான் இருக்கிறது. கடைசிக் கடிதத்திற் கூறுகிற பெயர் அவருடையதே. தவிரவும் அவர் மணிமங்கலத்திற்கு வந்தகாலத்திற்கும் கொஞ்சம் பின்னாலேதான் இந்தக் கடிதம் எழுதியதாகத் தெரிகிறது. அவருடைய கல்வித்திறனும், ஒழுக்கமும், பெருந்தகையும், தோற்றமும், சிறந்ததோர் உயர்குடிப் பிறப்பினரெனக் காட்டிற்று. அங்குள்ள பெரியோரும் பிரபுக்களும் உத்தியோகஸ்தரும் அவரை முன்னமே தெரிந்தவர்களாக் காணப்பட்டார்கள். அவருக்கு அவ்வூரார் செய்த மரியாதை ஒரு ராஜாவுக்குக்கூட நடந்திருக்க மாட்டாது ஒரு துராத்மாவுக்கு அவ்வளவு பூஜிதை நடக்குமா? அவர் உண்மையில்லாத காரியத்திற்றலையிடுவாரா? மாட்டார்.

இந்தக் கடிதங்களிலிருந்து கிடைத்த ஆதாரவுகளை வைத்துக்கொண்டு நாம் ஊகிக்கவேண்டியதென்ன. சோமசுந்தரம்பிள்ளையின் குழந்தை வர்த்தமானப் பத்திரிகையிற் சொல்லிய காலத்திற்றவறியிருக்கிறது. அது தவறிப்போனதிற்குக் காரணஸ்தன் தங்கச்சாமிபிள்ளையாகவே இருக்கவேண்டும். குழந்தையை மோசப்படுத்திவிட்டால் அவரிச்சித்த மிராசு சித்திக்கத் தடையுமிருந்திராது. அவருக்குதவியாகச் சிலவஞ்சகர்களுமிருந்திருக்கிறார்கள். அவர்களில் முக்கியஸ்தன் கணபதி யென்பவனாயுந் தோன்றுகிறது. அவனாலே தான் குழந்தை ஒச்சன் வசம் ஒப்புவிக்கப்பட்டதாயிருக்கிறது. இதை எப்படியோ சாமிநாதக்கவிராயர் அறிந்திருக்கிறார். அவர் சோமசுந்தரம்பிள்ளைக்குச் சுயபந்துவாயிருக்கக் கூடும். அப்படியுமில்லையென்றால், அக்ரமச் செய்கைகளைக் கண்டிருக்கிற ஒரு பெரிய மனுஷராகவாவதிருக்கவேண்டும். ஐயா அவர்கள் நமக்கெழுதிய கடிதத்தில் ஒச்சனிடமிருந்து மீட்டினேனென்பதற்கும், தங்கச்சாமிபிள்ளை ஒச்சனுக்கெழுதிய எழுத்திற்கும் நேரான சம்பந்தமிருக்கிறது. இவைகளிரண்டும் வர்த்தமானப் பத்திரிகையைப் பெலமாய் ஆதரிக்கின்றன. ஆகவே இந்தப் பெருங்கதைக்குக் கதாநாயகனாக விளங்குபவன் நிர்ப்பாக்கியனாகிய நானாகத் தானிருக்கவேண்டும். மாசிலாமணியிடத்தில் தெளிவாய் விசாரிக்கலாமென்றால், வைத்தியனையழைக்கக் குற்றாலத்திற்குப் போனவன் இவ்விடம் வர எத்தனை நாட் செல்லுமோ. தெரியவில்லை. இனி நான் செய்யவேண்டிய காரியமென்ன, திரும்பி வீட்டுக்குப்போக எனக்குச்சம்மதமில்லை. ஐயா அவர்கள் உத்திரவும் அப்படியில்லை. இவ்வூரிலேயே வேறிடத்திலாவது இருக்கலாமென்றால், தாசில்தார் வேலை பார்த்த ஊரில் தலையாரிவேலைக்கமைந்தது போல, தாசில் மகனாக இருந்துவிட்டுத் தகப்பனில்லாப் பிள்ளையாயிருந்து அவமானமடைவது மஹா கேவலம். நம்முடைய சுய பூமிக்குச் செல்லலாமென்றால் வழியுந் தெரியாது. கொலை பாதகர் கூடியிருக்கும் ஊருக்குள்ளே தனியாகிப் போய் நான் சோமசுந்தரம்பிள்ளை மகனென்று நம்மை நாமே ருஜுப்படுத்திக்கொண்டு திரிவது மிகு மோசமாயுமுடியும். மற்றொருவனைப் போலவாவது நடித்து அவ்வூரிலிருந்து காரியாகாரியங்களைக் கவனிக்கலாமென்றால், கையிலிருக்கும் பச்சை

கழுத்தரியுங் கத்தியாயிருக்கிறது. இத்தனை யிடையூறுகளைச் சஹித்துக்கொண்டு இவ்விடத்திலிருப்பதைக்காட்டிலும், கல்யாணசுந்தரமிருக்கிற வூருக்குப்போவது மேல் என்றால் செலவுக்குப்பணமில்லை அம்மாளிடத்திற் சொல்லிக்கொண்டு வந்திருந்தால் ஏராளம் பணங்கொடுத்தனுப்பியிருப்பாள். அவள் உள் வீட்டிற்குள்ளே போயிருக்கும்போதே தெரியாமல் வந்துவிட்டேன். எப்படியும் விடியுமுன் இவ்வூரைவிட்டுப் போய்விடவேண்டும். ஐயா அவர்கள் இன்றே அல்லது மறுதினமோ பரகதியடைந்து விடுவார்கள். அந்தவிசேஷத்திற்குக் கூட இருப்பதற்குப் பாக்கியஞ் செய்யாத நான் இங்கு ஏன் தாமதிக்கவேண்டும். ஒச்சன் கையாலிறந்து போகும் என்னை மறுஜென்மம் போல பெற்று வளர்த்துப் பிரபு வீட்டுப்பிள்ளையாக்கி ராஜபாஷையும் படிக்கவைத்துப் பராமரித்த பரமதயாளுவாகிய ஐயா அவர்களுக்கு ஒரு கை மண்ணள்ளிப் போடத் தவஞ்செய்யாத பாதகனைப் விட்டேனே. இனி எந்த ஜென்மத்தில் என் அருமைத் தந்தையைப் பார்க்கப் போகிறேன். அவர்கள் செய்த உபகாரத்திற்குப் பதில் எப்போது செய்யப் போகிறேன். என் அருமைத்தாய்க்கு என்ன கைம்மாறு எக்காலத்திற்றப் போகிறேன் "கலப்புல்லுத்தின்றுலுங் காடை காட்டிலே" என்பதுபோல தின்னுகிற நாளெல்லாம் தின்றுவிட்டு ஓடிப்போய் விட்டானென்று ஊரார் சொல்லி யேசுவார்களே! ஐயா, அம்மை, முகத்தை நன்றாகக் கூடப்பார்த்து விட்டு வரவில்லையே. இனி எந்தக்காலம் பார்ப்பேன். ஐயா! ஐயா!! "அம்மா, அம்மா! இந்தப்பாழுஞ் ஜென்மம் எடுத்ததற்கு ஒரு புற்பூடாப் பிறந்தாலும் கவலையிராதே. ஏ! பரமகருணாநிதே நெல்லை நாயகா! நான் எக்காலந் திரும்பிவந்து இங்குள்ளாரைக் களிப்பூட்டுவேன் எனக்கவலை நிறைந்த மனத்தையுடையவனாய்க் கடிதங்களை மடக்கி யுறைகளி லடக்கினான்.

பதினான்காம் அதிகாரம்.

ஒருநாள் நாகபட்டினம் கடற்கரை யோரத்தில் நமது தெய்வசிகாமணி ஒரு புதிய மனிதனோடு பேசிக்கொண்டு நிற்கிறான்.

கரையோரங்களில் செம்படவர்கள் ஓ வேலா ஓ வேல என்று வலை யிழுக்கும் சத்தமும் நாட்டுப்புறத்து ஜனங்கள் கப்பற் பிரயாணச் சீட்டைப்பறி கொடுத்து விட்டுப் பரிதபிக்கும் சத்தமும் சுமை யாள், சுமையாள், என்றுகூலி ஜனங்கள் கூவுங் கூச்சலும், சரக் கு மூட்டைகளை யேற்றி இறக்கும் ஜனங்களிடும் இரைச்சலும், ஏழைமனிதர்களைப் புறதேசத்துக் கூலிகளாகச் சேர்த்தனுப்பும் கண்காணிகளின் சிறுகுரலும் கட்புலக்கடங்காது விரிந்த கருங் கடலின் பேரலைகள் கரையில் வந்து மோதும் பேராரவாரமும் நம் கதாநாயகனுக்கு கவலையைப் போக்குவனவாயிருந்தன. "கப்பற் காட்சியைக் காணவேண்டு மென்றீர்களே வாருங்கள் போகலாம்" என அப்புதியவன் கூறினன். சரியென்றான் தெய்வசிகாமணி. உடனே ஒரு தோணியிலேறி அவ்விருவரும் கப்பலை யடைந்தார் கள். அங்கு ஜனங்கள் ஜாதி வித்தியாசமின்றி யுட்காந்திருப்பதும் சக்கிலியும், பிராமணனும், சந்தடி பண்ணுமல் ஒரு தொட்டியில் தண்ணீரெடுத்துச் செல்வதும், மெத்தை விரித்துத் திண்டுதலைய ணையிட்டுச் சிலர் சாய்ந்திருப்பதும், முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு இடங்களில் சிற் சிலர் வீற்றிருப்பதும், மேல் நாட்டினர் ஜனங்களை மிதித்துக்கொண்டு திரிவதும், வேலாவலயத்தில் மீனினங்கள் துள்ளி வீழ்வதை வேடிக்கை பார்க்க வாலிபர்கள் விரைந்து செல்வதும், நடுக்கப்பிலில் நீராவியந்திரங்கள் திட்டுத் திட்டென்றடித்துச் செல்வதும் திசைகாட்டுங் கருவியைக் கையில் வைத்துக்கொண்டு மாலுமிகள் கவனமாயிருப்பதும் தெய்வசிகா மணிக்கு வெகுபுதுமையாகக் காணப்பட்டது. மணியும் நாலரை யாகி விட்டது. "பிரயாணச் சீட்டுப் பெறுபவர்கள் விரைவில இறங் கிப்போய் விடவேண்டும் கப்பல் புறப்படப் போகிறது" என்று சொல்லி ஒருவன் மணியடித்தான். அவ்வோசை செவிப்படுத லும் தெய்வசிகாமணி, கண்ணுச்சாமீ. என்று அப்புதியவனைக் கூவி னன். காணவில்லை. நான்கு பக்கங்களிலும் பரபரப்புடன்தேடினன். கடைசியாக நெட்டாலுக்குப் போகும் கூலி ஜனங்கள் கூடியிருக்கு மிடத்தில் ஒரு பிரபுவோடு கண்ணுச்சாமியைக் கண்டான்.

தெய்வசிகாமணி:— கண்ணுச்சாமி நேரமாகிறது போட் டேறலாம் வா.

கண்ணுச்சாமி:— கம்பேனிக் காரியபாகப் பட்டணம் போய்த் திரும்பவேண்டும் தாங்கள்.

தெய்வசிகாமணி:— என்னால் முடியாது.

கண்ணுச்சாமி:— அப்படியானல் உங்களுக்காகச் செலவாகியிருக்கும் பணத்தைக் கொடுத்து விட்டுத் தங்களிஷ்டம் போல் நடக்கலாம்.

தெய்வசிகாமணி:— (தனக்குள்) மோசத்தில் அகப்பட்டுக்கொண்டோம் சந்தேகமே இல்லை. இவன் ஜனங்களை வஞ்சித்துத் தூர தேசங்களுக்குக் கூலிகளாகப் பிடித்தனுப்பும் கங்காணியே. இவனோடு நிற்கிற அந்தப் போலிப்பிரபுவும் இவனைச் சேர்ந்தவனே. திருநெல்வேலி சத்திரத்திலிருந்து இவ்வளவு தூரம் நம்மை ஏமாற்றிக் கொண்டுவந்தவனும் இவன் கூட்டாளியே. ஐயமில்லை இனிமேல் நாம் அயர்ந்து நின்றால் அந்நிய தேசம் போகாமல் தீராது. இருக்கட்டும் ஒரு போலீஸ்காரனையுங் காணோமே. இனி யென்ன செய்கிறது. இதோ இரண்டாவது மணியும் அடித்துவிட்டானே! ஆகிலும் பார்ப்போம் "ஊக்கமது கைவிடேல்" என்ற மூதாட்டி மொழியைப் பின்பற்றுவோம். என்று மனந்துணிந்து மேற்றளத்திற்குத் திரும்பினன். கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான் கண்ணுச்சாமி.

தெய்வ— கையை விடுகிறாயா இல்லையா?

கண்— துள்ளவேண்டாம்

கண்— அடே இது இங்கிலீஷ் கவர்ன்மெண்டுஞாபக மிருக்கட்டும்

கண்— நெட்டாலும் அப்படியே,

தெய்வசிகாமணி கண்ணையுருட்டி விழித்து ஓங்கின கை மாறாமல் கண்ணுச்சாமியின் கன்னத்தில் ஓர் அறை அறைந்தான். காதெங்கும் கம்மென்றடைத்துச் சோர்ந்து கையை விட்டு விட்டான். கண்ணுச்சாமி. ஓர் தாண்டில் மேற்றட்டுக்கு வந்து ஓர் பெரியவரைக்கண்டு ஐயா கப்பல் வேடிக்கை பார்க்கவந்த என்னைக் கண்

ணுசாமிச் யென்ற ஒருவன் நெட்டாலுக்குப் போகும்படிகட்டாயப் படுத்துகிறுன். நான் இவ்வூருக்குப் புதியவன். எனக்காகப் பரிந்து பேசுவார் ஒருவருமில்லாது தத்தளிக்கிறேன் என்றுன் தெய்வசிகாமணி. நாகை. தேவஸ்தான தர்மகர்த்தரும், அக்கப்பலுக்குச் சொந்தக்காரருமாகிய, தியாராஜ் செட்டியாரென்னும் அப்பெரியவர் ஒரு கனிஸ்டேபிலை விட்டுக் கண்ணுச் சாமியைப் பிடித்துவரும்படி செய்துவிட்டு, தெய்வசிகாமணியைப்பார்த்து, தம்பி, என்னேடு வா, ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் எனக்கூறித் தமது அகத்திற்கழைத்துச்சென்றுர். இரவு 8-மணிக்குத் தெய்வசிகாமணியைத் தனியாக வைத்துக் கொண்டு அவனுடைய சரித்திரத்தைச் சொல்லும்படி கேட்டார், செட்டியார். தெய்வசிகாமணி தன் சரித்திரத்தை ஒரு சிறிதும் தப்பின்றிக் கூறினுன். கேட்ட அத்தனிகர், வியப்புற்று, தம்பி! உன்சரிதம் எளிதில் உலகம் நம்பமுடியாத சம்பவமாக இருக்கிறது. இருக்கட்டும். உன்னுடைய இரகஸ்ய, ரிக்கார்டுகளை எக்காரணத்தை முன்னிட்டும் எவரிடமும் காண்பிக்கவேண்டாம். நீ முதலில் என்னிடம் தெரிவித்தது போலவே, தாசில்தார் நெல்லையப்பபிள்ளை மகனென்றே சொல்லிக் கொண்டிரு. கூடிய விரைவில் நமக்கு வேண்டிய பெரிய மனிதர்கள் மூலமாக உனது பூர்வீக சாஸனக்கேஸ்களிற் பிரவேசிப்போம். அவைகளில் ஒன்றும் பயன் படவில்லையெனினும் எதற்கும் நீ கவலைப்படாதே, இவ்வீட்டை உன் சொந்த வீடாக நினை: வித்தியாசமாக எண்ணுதே. உனது, தென்னுட்டிலிருக்கிற வல் நாட்டுச் செட்டிகள் எங்களுக்கு நெருங்கினகிளைஞர்களே. எங்களுக்குச் சோழபுரம் செட்டிகளென்று பெயர். உனக்கு எப்பொருள் இச்சையோ அதனைக் கேட்பதற்குக் கூசாதே. உன் படிப்பு விஷயத்தையும் கவனிக்கிறேன். இது வரை படித்துவிட்டு, B. A. பரீக்ஷைக்கும் போகாமலிருப்பது உசிதமல்ல, நிற்க. உன்னைத் திருநெல்வேலியிலிருந்து இவ்வூர்; வரை பின்பற்றிச் சதிசெய்யவந்தவர்கள் இருவர் என்று நீ சொன்னதிலிருந்து அவரோடும் இன்னும் சிலர் இருக்கிறுர்கள் என்றும் எண்ணுகிறேன். அவர்களும் உனக்கு வெகு தூரத்திலிருக்கிறதாக எண்ணுதல் கூடாது. ஒருவரும் அறியாது தாசில்தார் வீட்டிலிருந்த உன்னைக்கண்டு பிடித்தவர்களை எளனமாக மதித்தல்

பிசகு. எக்காரியங்களிலும் கண்ணூன்றிச் செல்லுதல் வேண்டும். எது எப்படி ஆயினும் நீ இந்த இடத்தைவிட்டுப் போகவே கூடாது. திருநெல்வேலியிலிருக்கும் நம்மவர்களுக்கு எழுதி தாசில்தாரவர்கள் நிலைமையை அறிந்து கொள்வோம் என்றார் தியாகராஜ செட்டியார். அவர் மனைவி நீலலோசனியம்மாள் இதுதான் நலம் என்றாள். தெய்வசிகாமணிக்குக் கவலை சிறிது சாந்தமாயிற்று.

சில தினங்களுக்குப் பின்னர், கண்ணுச்சாமியைச் சார்ஜ் பண்ணிய கேஸ் விசாரணை ஆயிற்று. அதில், தியாகராஜ செட்டியாரும், தெய்வசிகாமணியும் சாக்ஷியங்களாக விசாரிக்கப்பட்டு முடிந்ததன் மேல் கண்ணுச்சாமி இரண்டுவருஷக் காவல் தண்டனை விதிக்கப்பெற்றான்.

தெய்வசிகாமணிக்கு அயலார் வீட்டிலிருக்கிறோமே? என்றகவலை இறையும் நேரிடாது நடந்து கொண்டார்கள் அவ்வீட்டார்கள். தெய்வசிகாமணியும், செட்டியார் பார்க்கவேண்டிய எழுத்து சம்பந்தமான வரவு செலவு கணக்குகள், தேவஸ்தான சம்பந்தமான வேலைகள் இவைகளை நாள்தோறும் பார்த்து முடிப்பான். செட்டியாரது சொந்தக் கிராமமாகிய வில்லி மங்கலத்திற்கு வாரத்திற்கு ஒருதரம் போய் வியவசாய சம்பந்தமானவைகளையும் கவனித்து வருவான். செட்டியார் புதல்வி மங்களாம்பாளுக்கு ஒவ்வொருதினமும் பாடம் சொல்லிக்கொண்டு வருவான். மங்களம், அவ்வூர்க் கல்லூரியில் ஏழாவது வகுப்பில் கலை பயின்று வந்தாள். அழகிலும் குணத்திலும் அவளுக்கு மிஞ்சின பெண்கள், உலகத்தில் இல்லை யென்றே சொல்லலாம். வித்வான்கள் பெண்களது கூந்தல், முகம், கண், வாய், தந்தம் இவைகளுக்கிணையாக இருள் செந்தாமரைப்பூ, கணை, ஆம்பற்பூ, முல்லை யரும்பு முதலிய பொருள்களை முறையே உவமைகூறி ஆநந்திப்பார்கள். மங்களாம்பாளது அவயவங்களுக்கு மேற்கூறிய அற்பப் பொருள்களை இணைகூறி இடர்ப்பட எனக்குப் பிரியமில்லை. கூறினும் ஒப்பாகாது. அக்கன்னி இங்கிலீஷிலும் நன்கு எழுதப்படிக்கபேசப்பழகியிருந்தாள். தெய்வசிகாமணி வந்து சேர்ந்தது அவளது படிப்பிற்கு மிக்க உதவியாக இருந்தது. செட்டியார் அவ்வருஷத்திலேயே B. A. வகுப்

பிற் சேர்ந்து வாசித்து வரும்படி தெய்வசிகாமணிக்குச் சொல்லிப் பரீக்ஷைப் பணமுங் கட்டியிருந்தார். ஊக்கமுடையவன் இருக்கு மிடத்திற்குச் செல்வம் வழி கேட்டுக்கொண்டு வந்தடையும் என்று பெரியார் சொல்வது போல, கல்விச் செல்வம் தெய்வசிகாமணியை வந்தடைந்தது. மறுவருஷத்தில் B. A. வகுப்பில் தேறினன்

பதிவைந்தாம் அதிகாரம்.

உருத்திராக்கத் தாழ்வடமும், விதிப்படி தரித்த தெய்வத் திருநீறும், விளக்கமாயழகுசெய்யும் திருமேனியினராய்ப் பஞ்சகச்சம் வைத்துக் கட்டிய வெண் பட்டுடையினராய், சிங்கப்பார்வையாயினும் சாந்த நடையினராய், வில்வதளஞ் செருகிய சிரசினராய்க் கந்தமுங் குங்குமமுங் கலந்த திலதந்திகழும் நெற்றியினராய் ரக திற்குவித்த கையினராய், நடுவயதுள்ள ஒருவர், கடனுகைக் காரோண நாதர் திருச்சந்நிதியினின்று இருபுயங்களினும் ஆநந்த பாஷ்பம் சொரிய நாத்தழு தழுப்ப உடல் புளகிப்ப, “ எவ்வுடலெடுத்தேன் மேனுள் எண்ணிலாப் பிறவிதோறும், அவ்வுடலெல்லாம் பாவம், அறம் பொருட்டாகவன்றே, தெவ்வுடல் பொடித்தாயுன்றன் சேவடிகடமை பூண்ட, இவ்வுடலொன்றேயன்றே, எனக்குடலானதையா” என்றுபாடி உள்ளமுருகத்துதித்துத் தெரிசித்து நின்றார்.

பலரும் அவரை நெருங்கினர் அப்பக்தசிகாமணி திருவாலயத்தினேர் புறத்துள்ள மண்டபத்திற் போயுட்கார்ந்தார். தெரிசனர்த்தமாய்ச் செட்டியாரோடு வந்த தெய்வசிகாமணி பெரியவரைக்கண்டதும் அச்சத்தோடு வணங்கி நின்றான். செட்டியாரும் அப்புநிபவரை வணங்கி “ஐயா, அவர்கள் திவ்யக்ஷேத்திரம் எது?” என்றார். அவர் பாப்பையா புரம் என்றார். செட்டியார் சோமசுந்தரம்பிள்ளையோவென ஐயுற்று “தங்கள் திருநாமம், என்றார். என்பெயர் சாமிநாதன் என்று பதிலளித்தார் தெய்வசிகாமணி கண்ணில் நீர்ததும்பிற்று, செட்டியார் “ஆக்கால மெய்வருந்த வேண்டாம்” என்பதைச் சிந்தித்துக்கொண்டு பெரியவரை நோக்கிக் கவிராயரவர்களா, என்றார். ஆமென்றார்.

செட்டியார். அடியேனுடைய கிருஹத்திற்கு விஜயமாக வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவரும் அவ்வாறே யாகுகவென்று போய்ச் சேர்ந்தார். செட்டியாரும், தெய்வசிகாமணியும், தனித்துச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு ஒருபழையவர்த்தமானப் பத்திரிகையைச் செட்டியார் விருந்தினரிடத்திற்றந்தார். சாமிநாதக் கவிராயர் படித்துக்கொண்டே தெய்வசிகாமணியை நன்றாய்க்கவனித்து அவன் வலது கையிலுள்ள அடையாளத்தையுங் கண்டு "குழந்தாய்! என்னை யுனக்குத் தெரிகிறதா" என்றார். தெய்வசிகாமணி மணிமங்கலத்திற்கு வந்திருந்த போது கண்ட ஞாபகத்தை நான் இன்னும் மறக்கவில்லை யென்றான். அப்படியா? இருக்கட்டும் மணிமங்கலத்திலிருந்து காசியாத்திரையை விரும்பி நான் சென்ற பிற்பாடு நடந்த உன் விஷயத்தைத் தெளிவாகச் சொல் என்றார்.

தெய்வசிகாமணி தன்வரலாற்றினைக் கூறிக் கடைசியாக நாகைத்தாலுகாவில் சிரேஸ்தாராகத்தான் இருக்கிறதையும் சொன்னான்.

கவி— நல்லது இப்போது தாசில்தார் ஸ்திதி யெவ்விதமிருக்கிறதென்று உனக்குத் தெரியாதே?

தேய்— தெரியாது.

கவி— இருக்கட்டும் கண்ணுச்சாமியைத் தண்டித்தகேஸ் நடைபடிகளுக்கு நகலெடுத்திருக்கிறீர்களா?

செட்டியார்— ஆம்

தேய்— அது மட்டுமா இன்னுஞ் சில ஆதாரவுகளுமிருக்கின்றன, என்று இராமநாதபுரஞ் சத்திரத்திற் கண்ணுச்சாமி கொண்டுவந்து கொடுத்த கடிதத்தையும் தனது பூர்வ சாஸனக்கவரையுந் தந்தான். காகிதங்களைக் கவிராயர் நெடுநேரம் ஒவ்வொன்றுப் உய்த்து நோக்கித் தலையைப் பலமாயாட்டினார். அதற்குள்ளே செட்டியார் தாங்கள் மாத்திரம் வழிகாட்டிக் கொண்டிருங்கள் செலவுக்கு பணமோ, உதவிக்கு ஆளோ, எது வேண்டுமானாலும் சமாரியாக் கொடுக்கிறேன் என்றார்.

கலி:— ஐயா, இப்பிள்ளை அந்நியனல்ல, இவனுடைய தாயைப் பெற்ற பாட்டனார் எனது சிறிய பிதா. எனக்கிவன் தங்கை பிள்ளை. இவன் சிறு குழந்தையாயிருக்கும்போது இவனது சிற்றப்பன் தங்கச்சாமிபிள்ளை இவனைக் கொலைஞர்வசம் ஒப்பித்துக்கொல்லச் செய்து விட்டான். தெய்வாதீனமாய்த் தாசில்தார் கண்டு காப்பாற்றி வைத்திருந்தார். சிலவருஷங்களுக்கு முன் தங்கச்சாமிபிள்ளை கூட்டாளிகளாற் குழந்தை கொல்லப்படவில்லையென்பதை ஒருவாறு தெரிந்து தேடுகிறதற்காரம்பித்துப் பலவூருமலைந்து திரிந்து மணிமங்கலந் தாசில்தார் வீட்டில் இவனைக்கண்டேன் உடனே யழைத்துக் கொண்டுபோக எண்ணியும் இவன் படிப்புக் கிடையூறு நேரும் என்னுங்கருத்தை யுள்ளிட்டு விட்டுவிட்டு, வெளிப்பேறின தோடு காசிபாத்திரையையும் முடித்துவிடுவோமென்று அங்கிருந்து புறப்பட்டுக், காசி, அயோத்யா, அரித்துவாரம், பதரிகாச்ரமம் முதலிய புண்ணியஸ்தலங்களுக்கு சென்று வர இவ்வளவு நாளாயிற்று. நான் காசிக்குப் போனதின் பின் தெய்வசிகாமணிக்கு நேர்ந்த இடைச்சம்பவங்கள் என்னால் நடந்தவைகள் என்று எண்ண வேண்டியிருக்கிறது. யாதினாலென்றால் நானும்தாசில்தாரும் பாப்பையாபுரத்திற்கு ஒரு கடிதம் எழுதியிருந்தோம். அது இவனுடைய பிதாவுக்குக் கிடைக்கவில்லை யென்று தெரிகிறது அக்கடிதம் இவன் சிற்றப்பனுக்குக்கிடைத்து இவன் இருக்குமிடத்தைத்தெரிந்து தான் இவ்வளவு வேலையுஞ் செய்திருக்கிறான். அக்கொடியவன் கையினின்று மீண்டதே நமது புண்ணியத்தின் மிகுதிப்பாட்டை யுணர்த்துகின்றது. இந்தக்கடிதங்களில், ஒச்சனுக்கு விலாசந்தீட்டியதைத் தாசில்தாரிடமிருந்து நான் பார்த்திருக்கிறேன். பழையவர்த்தமானப் பத்திரிகை என்னால் தாசில்தாருக்குக் கொடுக்கப்பட்டதே மற்றையவைகளெல்லாம் புதியன. இங்கிலீஷ் கடிதம் ஒன்றுதவிர மற்ற மூன்றும் தங்கச்சாமி பிள்ளையாலேயே சிருஷ்டி செய்யப்பட்டனவே. சிறிதும் ஐயமில்லை, இவனை மணிமங்கலத்திலகண்ட மட்டிலேயே அழைத்துக்கொண்டு பாப்பையாபுரம் போகாமற் காலஹரணம் பண்ணினதும் ஒருவகைக்கு நன்மையேயாயிற்று. எப்படியெனில் இவனைச் சோமசுந்தர பிள்ளை மகனென்று மெய்ப்பிக்க அந்தச்சமயம் சிறிது கஷ்டப்படவேண்டியதாயிருந்தது. இப்போதோ அப்படிப்

பட்ட சங்கடங்கள் ஒன்றுமேயில்லை. அவன் கைப்பட்ட எழுத்துக் களைக்கொண்டே ரூபித்து விடலாம். அன்றியும் மூன்று மாஸத்துக் குமுன் நான் பம்பாய்ப் பட்டணத்திலிருக்கும் போது பாப்பையா புரத்திலிருந்து எனக்கு வந்த கடிதத்தால் ஊரிலுள்ளவர்களெல்லாம் தங்கச்சாமியை யெதிர்த்துக் கொண்டார்கள் என்றுந்தெரிகிறது. இதனால் நமக்கு ஊருதவியும் இப்போதேற் பட்டிருக்கிறது. இனியொருக்ஷண நேரமும் தாமஸியாமல் இவனை ஊர்கொண்டு போய்ச்சேர்க்க முயற்சிக்கிறேன் என்றார்.

தாசில்தாரும், கவிராயரும் சாஸனங்களையுந் தன்னையும் பற்றிக்கலந்து. கொண்ட செய்தி தெய்வசிகாமணிக்கு இப்போதுதான் தெரியவந்தது நாதனற்ற ஏழைக்கு நல்லம்மான் கிட்டியதே என்ற கம்பூரித்தான். தியாகராஜ செட்டியார் கவிராயரைப்பார்த்து" ஐயா! இந்த பூர்வீக வரலாற்றை வெளிப்படுத்துங்காலத்தில் அநேகருக்குப் பெருந்திங்கு நேரிடும் போலிருக்கிறதே. இவனொரு பிள்ளையாற் பலருக்கு ஏன் துன்பம் நேரவேண்டும்? இந்தமட்டிலேயே இவிடத் சௌக்கியமாயிருக்கட்டுமே. என்னுடைய ஆஸ்திமுழுவதையும் இன்றைக்கே இவனுக்குச் சாஸனம் பண்ணிவைக்கிறேன் மற்றும் எல்லாக்காரியங்களையும் கவனிக்கிறேன் என்றார்.

கவி:— நீங்கள் நினைக்கிற படியெல்லாம் சந்தர்ப்பம் நோக்கிச்செய்து கொள்வோம். இத்தனை தீங்குஞ் செய்த பாவிகளைக் கண்டிக்காமல் விட்டு விட்டால் நமது மனசாக்ஷி நம்மைச்சிரிக்காதா? தெய்வந்தான் ஒப்புக்கொள்ளுமா? கடவுள் பாபிகளை எப்படித்தண்டிக்கிறார் நம்மைப் போன்ற மனிதர்களைக் கொண்டுதானே? அறிவாளிகளாகிய நாம் சிசுக்கொலை, மனித விற்பனை, ஆள் மாறாட்டம், பொய்ப்பத்திரம் பிறப்பித்தல், முதலிய பிரமாண்டமான குற்றத்தை மறைத்துவிட நெஞ்சாலும் நினைக்கலாமா? அப்படி மறைத்தால் அந்தக்குற்றம் யாவையும் நாமே செய்ததாக வல்லவா எண்ணப்படும்? அதற்கு ராஜதண்டனையும் தெய்வ தண்டனையும் உறுதியாயடையவேண்டுமென்பதன்றோ நூற்றுணிபு. நாமெல்லாம் இத்தகைய விஷயங்களில் உபேக்ஷயாயிருந்து விட்டால் ஏழைகள் கதி

யென்னவாகும். யோசித்துப் பாருங்கள். நான் இப்படியே ராமேஸ்வரம் போய் இந்த கங்காஜலத்தை இராமநாதனுக்கபிஷேகம் பண்ணிவிட்டு, என் யாத்திரையை முடித்துக்கொண்டு பாப்பையாபுரம் போய் அங்குள்ளவர்களுக்கு இந்த விஷயங்களை யெல்லாந் தெளிவாகச்சொல்லி அவர்களைக்கொண்டு இவனை யழைத்துப் போய்ப் பாப்பையாபுரத்து மிராசை வாங்கிக்கொடுத்து விடுகிறேன். அது என்னைச்சேர்ந்த கடமையாயிருக்கிறது. கண்ணுச்சாமியின் கைவசப்பட்டுத் தேசாந்தரம் போக விருந்த இவனை ரக்ஷித்து வைத்திருந்த பிதாவாகிய தாங்கள் மறுதினமுதலிவனைப் பிள்ளையாகவோ வேறெவ்வகையாகவோ பாவித்துக்கொள்ளுங்கள். நானும் உங்கள் அபிப்பிராயத்திற்குடம்படுகிறேன். ஆனால் தாசில்தாரையும் யோசித்துக் கொள்ளவேண்டும் என்றார். செட்டியார் அதைமாத்திரந் தான் சொல்லக்கூடாது வேணுவனலிங்கம்பிள்ளை செத்தாலொழிய அந்தத் தேசத்திற்கே இவன் போகக்கூடாதென்றார். கவிராயர் சிரித்துக்கொண்டு தன் சாதியே உலகத்திலிருக்கிற எல்லாச்சாதிக்கும் உயர்ந்ததென்று நினைக்கிற பேர்வழிகளிலொருவன் வேணுவனலிங்கம்பிள்ளை, அவன் எனக்குத் தெரியாதவனா, சோமசுந்தரம் பிள்ளை மகனென்று இவனைத் தெரிந்தால் சொன்னவிடமெல்லாம் தோப்பிக்கரணம் போடமாட்டானா? என்றார்.

பதினாறாம் அதிகாரம்.

நாகபட்டினம் தாலூகா மேஜிஸ்திரேட்டார் இரண்டு மாஸம் லீவிலே போயிருந்தார். அவருக்குப் பதிலாகத் தெய்வசிகாமணி வேலைபார்த்து வந்தான். செட்டியாருடைய விலவிமங்கலம் கிராமம் விளைவுக்கு வந்து கதிரறுப்புக் காலமாக இருந்தது. முந்தின வருஷத்தைப் போல தெய்வசிகாமணி கிராமத்திற்குப் போவதற்குச் சந்தர்ப்பமில்லாமலிருக்கிறான். செட்டியாரே போகும்படியாயிற்று. மங்களம் தன்னையறியும் வயதுடையவளாயிருந்த படியால் அவளைத் தனியே வைத்துவிட்டுப் போவது தகுதியல்லவென்று நீலலோசனியுடன் அழைத்துப் போகிறதென்றும், தெய்வசிகாமணியின் சௌ

காரியத்திற்கு அமுர்தலிங்கத்தை நிறுத்திவிட்டுப் போகிறதென்று தீர்மானித்து அன்றிரவு 4-மணிக்குப் புறப்பட்டுச் சாமான்கள் சித்தப்படுத்திக் கொண்டிருந்தார். செட்டியார் கச்சேரியிலிருந்து வந்த தெய்வசிகாமணி அவர் பிராயாணத்திற்குவேண்டும் ஒத்தாசை செய்து கொடுத்துவிட்டுப் போசன முடிந்து படுக்கைக்குப் போய் விட்டான். எல்லாருந்தூங்கி மூன்றுமணிக்கு எழுந்து கொண்டு வண்டிகளை ஆயத்தப்படுத்தவும் சாமான்களை வண்டியிலேற்றவுமா யிருக்கிறார்கள். மங்களம் எழுந்து தந்த சுத்திசெய்து விபூதி பூசிக் குங்குமத்திலதமிட்டுக் கொண்டு, நீலதாச்சி, காரோண நாதா, இன்னும் இரண்டு மாஸத்திற்கு உன் தெரிசனம் கிட்டாது போலிருக்கிறதே யென்று கவலைப்பட்டுத் தெய்வசிகாமணியிடம் சொல்லிக்கொண்டுவர நினைந்து அவன் படுக்கையறையை நோக்கி ஓரடி யெடுத்து வைத்தாள். நீலதாச்சியம்மன் கோவில் காலசந்தி மேளம் தாம் தாம் என்று முழங்கத் தொடங்கியது.

தெய்வசிகாமணியின்படுக்கையறைக்குட்புகுந்தாள். அவ்வீட்டின் மத்தியில் கடப்பைக்கற்களாற் சுவரெழுப்பப்பட்டு, நான்கு பக்கத்திலும் பெரிய பெரிய இரும்புச்சன்னல்கள் அமைத்து ஜன்னல்கள் தோறும் வெட்டிவேர்த்தட்டி தொங்கவிட்டுச் சுவரெங்கும் முத்துவெள்ளைச் சுண்ணங்கொடுத்துத்தீற்றி-யானையடிச்செங்கலாற்றளவரிசை செப்பனிட்டு வெள்ளைச் சலவைக்கற்களால் மேற்கட்டிடம் அமைத்துள்ளது. அதில் இரண்டு சிங்கங்கள் ஒன்றோடொன்று யுத்தம்பண்ண எழுந்து நிற்கிற பாவனையாக, யானைத்தந்தத்தாற் செய்திருக்கிற இருபக்கம் கிராதிகளும் வயிரக்கோங்கு பாரத்தைப் பன்னீர்ச் செம்பு வடிவாகக் கடையப்பட்டுச் சாதிலிங்க மழுத்தி இருகடையிலும் வெள்ளிப்பூண் கட்டியகால்களும் வெட்பாலைமரச் சக்கைகளாற் கோக்கப்பட்டுச் சுற்றிலும் பச்சை வெல்வெட்டுப் பட்டிணுற் ஜாலரணைத்துச் சூரத்துப் பஞ்சவர்னப் பட்டினால் விதானிக்கப்பட்ட மேற்கட்டியும் அமைந்த தோதகத்தி மரத்தாற் செய்த ஒரு மதகரிக்கட்டில் போடப்பட்டு அம்மஞ்சத்தில் நாய் நாக்குப்போல் மிருதுவாயிருக்கும் வெண்பட்டு மெத்தை

விரித்து நான்கு பக்கத்திலும் இலவம் பஞ்சூட்டிய மகமல் தலையணைகள் அணைக்கப்பெற்ற படுக்கையில் பொன்னிறத்தோடுங் கூடிய கோபாலகிருஷ்ணன் பள்ளிகொண்டிருப்பதுபோல இடக்கையைத் தலையோரம் சேர்த்துச் சயனித்திருக்கும் தெய்வசிகாமணியைக் கண்டாள் மங்களம். பகைவரையும் பார்த்தவுடன், மயங்கச்செய்யும் திருமுகமண்டலமும் காக்கை மூக்குப்போன்ற இரு புருவங்களும், சிறிது சிறிது கரிய ரோமங்கள் அரும்பப்பட்டு விசாலித்திருக்கும் மார்பும், யானைத்துதிக்கையை நிகர்த்த இருகரங்களும், விரிந்த செந்தாமரைப் பூவை யொத்த உபய பாதங்களும், மங்களத்தின் மனத்தையும் கண்ணையும் கவர்ந்தன. தனக்குள் இதென்ன என் மனது ஒன்றிலுஞ் செல்லாமற் பிரமைகொண்டது போலிருக்கிறதே! இத்தனை நாளும் ஒன்றாயிருந்து பழகின இவர் விஷயத்தில் இன்றைக்கு ஏதோ ஒருவிதமான அபிப்பிராயம் உண்டாவானேன். இதைத் தானுலகத்தார் ஆசையென்று சொல்லுகிறதோ. இந்த ஆசை இதுவரையும் எங்கு மறைந்து கிடந்தது. இன்றிராத்திரி கூட அண்ணா வென்று கூப்பிட்டு விட்டு இரண்டு மணி நேரத்திற்குள் என் சித்தம் இப்படி மாறுவானேன். ஊழா? ஊழென்றால் இதுவரை எங்குபோயிருந்தது. இல்லை, இல்லை பக்குவகாலத்திற்றான் ஊழ்கூட்டுவிக்கு மென்று இவரே ஒருநாள் எனக்குச் சொல்லியிருக்கிறார். அப்படியிருந்தாலு மிருக்கும். ஊழென்பது வடக்குச் சமுத்திரத்திற் போட்ட ஒரு நுகத்துளையில் தெற்குச் சமுத்திரத்திலெறிந்த ஒரு சிறுகழி நுழையும்படிசெய்வதல்லவா? சாமானிய வல்லமை யுடையதா? இந்த ஊழை நம்பி நாம் மனோராஜ்யம் பண்ணிக் கொண்டிருந்தும் அவர் நம்மை அலக்ஷியம் பண்ணிவிட்டால் யாது செய்யலாம். ஆனால் ஊழ் அவரையும் அகலவொட்டாது நம்மையும் நகரவிடாது. இவரை யெழுப்பி நான் ஊருக்குப் போய்விட்டு வருகிறேனென்று சொல்லிக்கொள்ளவேண்டுமே. கூப்பிடவும் கூச்சமுண்டாகிறதே. வழக்கம் போலே அண்ணா வென்று, கூப்பிடுவோமா; சீ அது எங்கிருந்து வந்தது ஒரு வயிற்றிற் பிறந்த அண்ணனோ, தொட்டெழுப்புவோம். என்று தனது மெல்லிய கையைத் தெய்வசிகாமணியின் மார்பு மீது வைத்தாள். நித்திரையிலிருந்த

வன் தன் மார்பிற்பட்ட கரபரிசக் குளிர்ச்சியினாற் படுத்தவண்ண மாகவே கண்விழித்துப் பார்த்தான். தன் கட்டிலோரம் ஓரழகிய பெண் தன்னெஞ்சிற்கையை வைத்துக்கொண்டு அதுவும் இரவு நேரத்தில் அதிலும் பட்டப்பகலைப் போன்ற தீப வெளிச்சத்தில் நிற்பாளாயின் ஓர் வாலிபன் மனம் எவ்வண்ணம் கட்டுப்பட்டு நிற்கும். பார்த்தான் ஒரு பார்வை: மயங்கினாள் மங்களம். "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" அப்பார்வையின் கருத்தை யெழுதிக்காட்ட முடியாது. நிமிஷ நேரத்திற்குள்ளே தெய்வ சிகாமணி மனஸைத் தன்வயப்படுத்திக் கொண்டு அடமூட மனமே உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைக்கிற பாதகமனமே என்ன நினைத்தாய் உன்னைத் தெருவில் விட்டுச் செருப்பாலடித்தாலுஞ் செல்லுமே. ஆருமற்ற அநாதையாய் அயோக்கியப்பயல்கள் வசம் சிக்கி அடியோடு போக இருந்த உன்னைக்காப்பாற்றிக் கஞ்சி வார்த்தகருணைப் பிரபுவுக்குக் காதகஞ்செய்ய நினைத்து விட்டாயே! அட மிருகமே! உன் தரமென்ன, உன்னிலைமையென்ன, நீ நினைக்கக் கூடிய காரியமா. அடடா நல்லயோக்யதை! அவர்களே வலியச் சொன்னாலும் நீ பொப்புக்கொள்ளலாமா? உனக்குவெட்கமில்லையா? நீ சென்ற அடுத்த நிமிஷம் வரை தங்கையென்று அழைத்துவிட்டு உனக்கு இப்புத்தி யெங்கிருந்து வந்தது? பெற்றபிள்ளை போற் கருதித் தன் ஆஸ்தியெல்லாம் எழுதி ஒப்பிவிக்கிறேனென்று மனப் பூர்வமாய் வாக்களித்தவள்ளலுக்குச்செய்யுங் கைம்மாறிதுதானோ? சீ, நீ கெட்டாய் என்று தன்னை நிந்தித்துக் கொண்டு தன்னெஞ்சில் வைத்திருக்கும் மங்களத்தின் கையைத் தன் வலக்காத்தால் மிருதுவா யெடுத்துக்கொண்டே பெழுந்து.

தெய்— மங்களம் எங்குவந்தாய்

மங்— இங்குதான் வந்தேன்

தெய்— என்ன விசேஷம்

மங்— தங்களுக்குத் தெரியாதா

தெய்— உன்வாயினாலேயே சொல்

மங்— இவுடத்தைக் கண்டுகொள்ளவே

தெய்—எத்தனையோ, அரும்பண்டங்கள் நிறைந்துள்ள பலநல்லவீடுகளிருக்க இந்தவெறும் வீட்டைவிரும்பி வருவானேன்

மங்—அது அவரவருடைய மனதின்காரியம்

தெய்—நீ இச்சித்தபடி இந்த வீட்டில் வசிக்க உன் பிதா உனக்கிடங்கொடாவிட்டால் யாதுசொல்வாய்

மங்—இப்படியுங்கேட்பாருண்டா அருமைப்புத்திரி கேட்கிற பொருளைக்கொடாத பிதாவுமுண்டோ. கொடாவிட்டால் யாது செய்வாய் என்பதும் ஒரு கேள்வியா! உங்களைத்தான் ஒரு கேள்வி கேட்கிறேன் பதிற் சொல்லுங்கள் கண்ணுச்சாமி கையினின்று அப்பாமீட்காவிட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

தெய்—மீட்காவிட்டாலா, நெட்டால் போவேன் அந்தக் கவர்னமெண்டில் நியாயத்தை யெடுத்துச்சொல்லி யென்மீது பக்ஷமுண்டாகும்படி செய்துகொண்டு அவர்கள் அனுமதி பெற்று சுகமே என் ஜெனனதேசம் வந்து சேர்வேன்.

மங்—சேர்வீர்களா. சரி-நானும் அப்படித்தான் என்பிதாவிடத்தில் இந்த வீட்டின் அழகையும் வசதிகளையும் இதில் வசிக்க எனக்கிருக்கும் விருப்பத்தையும் நன்று யெடுத்துச் சொல்லி அவர்கள் அனுமதி பெற்றே இவ்வீட்டை யடைவேன்.

தெய்—விரும்பினவற்றை யெல்லாம் அடையமுயற்சிக்காலாமா? விருப்பமென்பது நீ சொன்னதுபோல மனதின் காரியம் அல்லவா? மனமோ எதிலும் நிலையுள்ளதன்று ஒன்றை விட்டொன்று பற்றும் இயல்பினையுடையதே இன்றைக் கொன்றை விரும்பும் நாளைமற்றொன்றை விரும்பும். இதை யொருசாஸ்வதமாக எண்ணிப் பேசலாமோ "மனம்போனபோக்கெல்லாம் போகவேண்டாம்" என்பது முதுமொழி.

மங்—மனம் ஒன்றை விட்டொன்று பற்றுந்தன்மையுடையதென்றது சரி. நீங்கள் 2-வருஷமாய் B. A. பி. ஏ. பரீக்ஷைக்குப்

படித்தீர்களே ஒருநாட் பாலர்வகுப்புப் பாடமும் மறுநாள் இரண்டாம் வகுப்புப் பாடமும் இன்னொருநாள் வேதாந்தசாஸ்திரமும் மற்றொருநாள் அரிச்சந்திரநாடகமும் ஆத்திசூடிகொன்றைவேந்தன் ஒருநாளும் பி. ஏ. வகுப்புப் பாடம் இன்னொருநாளுமாகத் தான்படித்தீர்களோ?

தெய்—இல்லை இரண்டுவருஷமும் இடைவிடாது B. A. வகுப்புக்குரிய பாடங்களைத்தான் படித்தேன்

மங்—நிமிஷத்திற்கு நிமிஷம் மாறுதலடைந்து கொண்டிருக்கும் இந்தமனம் எப்படி இரண்டு வருஷம் ஒன்றிலேயே பற்றிக்கொண்டிருந்தது கவனித்துச் சொல்லுங்கள்.

தெய்—என்னடா வெட்கக்கேடு இந்தச்சின்னக் குட்டி கேள்விக்குமறுமொழி சொல்லமுடியாது போலிருக்கிறதே. மனம்பூர்வகன்மவயப்பட்டு அதன்வழி நடப்பதானதால் ஒன்றிலேயே நெடுங்காலம் பற்றியிருந்திருக்கிறது.

மங்—ஆகவே கன்மப்படிதான் மனஞ்செல்லும். மனதுக்குச் சுதந்தரத்துவங் கிடையாதென்கிறீர்கள் என் அப்படித்தானே.

தெய்—ஆஹா சந்தேகமில்லாமல்

மங்—நல்லது சக்ரவர்த்தி சிரசில் மாணிக்கக் கிரீடத்தையும் தரித்திரன் தலையில் மண் கூடையையுஞ் ஏற்றி வைத்தகன்மநியதியைத் தடுக்க ஒருவராலு முடியாதே?

தெய்—முடியாது முடியாது.

மங்—அடைவிக்குங் கன்மமே இவ்வாறு மனதையிழுத்ததென்பது உங்கள் வார்த்தையிலிருந்தே தெரிகிறது. இந்த மட்டோடு என்கருத்துப்படியே விரும்பின வீட்டையடைவேனென்பது சித்தாந்தமாயிற்று.

தெய்—நான் சாதாரண வீட்டைப்பற்றியே பேசுகிறேன்.

உன்வார்த்தையில் ஏதோ, கூடார்த்தம் இருக்கும்போலே தோன்றுகிறது.

மங்—என்வார்த்தையில் இரண்டு பொருளுமா அடங்கியிருக்கிறது தாங்கள் தான் படிப்பின் வல்லமையைக் காட்டிப் பற்பல சிலேஷைப் பொருள் படப்பேசுகிறீர்கள்.

தெய்—நான் படிப்பில் வல்லவனுயிருந்தால் அரிச்சந்திர நாடகம் படிக்கிற கூத்தாடி யென்று கேட்பாபா?

மங்—நான்தான் ஒன்றைவிட்டொன்று நினைக்கிற சுவபாவமுடையவளே, என்வார்த்தைக்குக் குற்றப்படலாமா? இருந்தாலும் மன்னிக்கவேண்டும்.

தெய்—பொதுவாக மனத்தின் தன்மையைப்பற்றிச் சொன்னதற்கு இவ்வளவு கோபம் வந்தால் நான் வீட்டுப்பேச்சை விட்டு வேறுவார்த்தை பேசியிருந்தால் உன்கோபத்தை தாங்க முடியாது போலிருக்கிறதே.

மங்—என் கோபம் உங்களையென்ன செய்யும் உங்களுக்குக் கோபம் வந்தாலும் வேணுப்பாட்டனவையும் கண்ணுச்சாமியையும் ஒரு கைபார்க்கும்.

தெய்—(சிறித்துக்கொண்டு) இருக்கட்டும் இன்னும் வில்லிமங்கலத்திற்குப் பிரயாணப்படவில்லையோ.

மங்—புறப்படுகிற சமயந்தான்.

தெய்—நீயுங் கூடத்தானே.

மங்—ஆம்.

அந்நேரம் "வேயுறு தோளிபங்கன்" என்று செட்டியார் பாடுகிற சத்தம் காதில் விழுந்தது. மங்களம் நமஸ்கரித்துக் கொண்டு தாயாருடன் வண்டியேறினாள் தெய்வசிகாமணி யெழுந்து போய் அவர்களை யெல்லாம் வழியனுப்பி விட்டு வந்தான்.

பதினேழாம் அதிகாரம்.

இந்த வருஷம் வில்லிமங்கலம் நல்ல விளைவு, செட்டியாருக்குச் சாப்பிடக்கூட நேரங் கிடைக்கவில்லை. வாரம் பிரிக்கவும் நெல் விற்று முதற் செய்யவும் பணங்களை நாகப்பட்டணத்திற் கனுப்பவுமாகத் திரிகிறார். இந்தச்சமயம் மங்களம் புஷ்பவதியானாள். அந்தச்சாந்தி முகூர்த்தத்திற்குச் செட்டியாருடைய பந்துக்களெல்லாம் வில்லிமங்கலத்திற்கு வந்திருந்தார்கள். ஆக்டிங் மாஜிஸ்திரேட் தெய்வசிகாமணிபிள்ளையும் மூன்றுதின ரஜாவின் பேரில் வந்திருந்தார். விருந்துகளெல்லாம் மஹாவிமரிசையாய் நடந்தது. பிராமணர்களுக்கும் நலலவேட்டைதான். முகூர்த்ததினத்தன்றிரவு, திருவாரூர் இரத்தின பண்டாரமவர்களால் சாவித்திரி கதாகாலக்ஷேபம் நடந்தது. ஜனங்களெல்லாம் பன்னிரண்டு மணிவரை கதைகேட்டுக்கொண்டிருந்து விட்டு நித்திரைக்குப் போனார்கள். வாத்தியக்காரர்கள், பாகவதர்கள், தவசிப்பிள்ளைகள் முதலான அன்னியர்கள் அவரவர் விடுதிபோய்ச் சேர்ந்தார்கள் ஊரெல்லாம் அயர்ந்த நித்திரை மயக்கம். இருட்டானாற் கிள்ளிவிட்டுக்கிட்ட' நிற்கலாம். நேரமோ இலை குலுங்கா நடுச்சாமம். அந்த நேரத்தில் வில்லிமங்கலத்திற்கு நிருதி மூலையில் 4-5-தீவர்த்தி வெளிச்சந் தெரிந்தது, வரவர-10-20-30-40 ஆகப் பெருகிற்று. அரை நாழிகைக்கெல்லாம் 40-45 தடியர்கள் இடுப்பிற் கருங்கச்சை கட்டி முகமெல்லாங் கரி மைப்பூசி வலதுகையிற் றடிக்கம்பும் இடதுகையிற் றீவர்த்திகளையும் பிடித்துக்கொண்டு நெறு நெறு வென்று வந்து செட்டியார் வீட்டுக் கதவையுடைக்கத் தொடங்கினார்கள். தூக்கமயக்கத்தில் ஒன்றுந் தெரியாமல், கா. கூ. வென்று எல்லோரும் கத்தினார்கள். செட்டியாரும் தெய்வசிகாமணியும் அவர்களைச் சத்தம்போடாதிருக்கச் சொல்லிவிட்டு மேல்வீட்டிலேறித் துப்பாக்கி யெடுத்துச் சுட்டார்கள். தாழ்வாரத்திற்குள்ளே நின்று கதவையுடைக்கிற கொள்ளைக்காரர்களை மேல்வீட்டிலிருந்து வருகிற துப்பாக்கிக் குண்டுகள் யாது செய்யக்கூடும்? குண்டெல்லாங் காலியாய்ப்போகின்றன. துப்பாக்கிச் சத்தம் கேட்டவுடனே பதறின கொள்ளைக்காரர்கள், குண்டு

வந்து விழுகிற வசத்தைத் தெரிந்துகொண்டு தைரியமாய் நின்று கதவைப் பிளக்கலானார்கள். முடியவில்லை. களைத்துப் பின்வாங்கிப் போக யோசனை பண்ணிக்கொண்டு நின்றார்கள். அவர்களிலொரு பரமதடியன் துணிந்து என்னடா முட்டாள் வேலை இடிடா ஜன்னலை என்று பெருஞ் சத்தம் போட்டுச் சொன்னான். அவ்வொலி காதிலே விழுந்தவுடன் பெண்டு பிள்ளைகளெல்லாம் அடிவயிற்றைப் பிசைந்து கொண்டு, ஐயோ! ஐயோ!! நீலதாச்சி இந்த ஒரு ஆபத்துக்குக் கைகொடு என்று பெருங் கூச்சலிட்டார்கள். மேல்மாடியிலிருந்த செட்டியார், அமடு வந்துவிட்டது இனிதப்பிபோட வழிபார்க்கவேண்டியதுதான் என்று வேகமாகக் கீழேயிறங்கி வந்து புறவாசற் கதவைச்சத்தப்படாமற் றிறந்து வெளிப்பக்கத்து மண் சுவரில் சமையற்காரர் தண்ணீரெடுத்து வந்து சுலபமாச் சேருகிறதற்காக அன்றுதினம் இடித்து விட்டிருந்த திட்டிவாசல் வழியாய் உள்ளேயிருந்த ஜனங்களையெல்லாம் அரவமில்லாமற் கடத்தி வீட்டுக்குவடபுறமிருக்கிற நந்தவனத்திற் சந்தடி செய்யாமற் பதுங்கியிருக்கும்படி செய்துவிட்டுத் தானும் தெய்வசிகாமணியும் துப்பாக்கியை ரெடிபண்ணிக்கொண்டு சொத்துப்போனாலும் போகட்டுமென்று ஜனங்களைக் காத்து நின்றார்கள். ஜன்னற் கதவு சாய்ந்துவிட்டது. வீட்டிற்குள் நுழைந்தார்கள் திருடர்கள். ஒரு அஞ்சுவபதுப் பிள்ளையைக் கூடக்காணோம். கொள்ளைக் கூட்டத்தின் தலைவன் அடே ஆள் வெளியேறுது வீட்டை வளையுங்கள் என்றான் உடனேகள்ளரெல்லாம் ஓடிச்சுற்றிலும் நின்றார்கள். ஐயோ, இந்தச்சமயந்தான் மங்களாம்பாள் திட்டிவாசல் வழியே வெளியேறி வருகிறாள். முதவிலே வந்துவிட்டாளே! அந்த மட்டோடு நின்றாளா! விதியைவிலக்கவல்லவரு முளரோ. செட்டியாருந் தெய்வசிகாமணியும், துப்பாக்கிக்குக் குண்டுகாணுமானல் கொள்ளைக்காரரை யெதிர்க்கலாம். என்று பேசிக்கொள்கிற சத்தங் காதில் விழுந்தவுடனே இரண்டு நாளைக்கு முந்தித் தன் தகப்பனார் தன்வசம் ஒப்பித்திருந்த குண்டு பெட்டி தன் பெட்டியிலிருக்கிற ஞாபகம் வந்து அதையெடுக்க வீட்டுக்குள் நுழையப்போய் ஆபத்திற் சிக்கிக்கொண்டாள். கள்வர் தலைவன் வீட்டைவளையென்று சொல்லுகிறபோது மங்களம் குண்டுப்பெட்டியெடுத்துக்கொண்டு திரும்புகிறாள். அச்சத்தங்காதில்

விழுந்தவுடன் பயந்து கொடியிற் கிடந்த ஒரு கம்பளிச்சட்டையை யெடுத்துத் தரித்துத் தலையில் ஒரு வெள்ளை வஸ்திரத்தைத் தலைப் பாகைபோற் சுற்றிக்கொண்டு திட்டிவாசல் வழியே வேகமாய் வந் தாள். கண்டு விட்டார்கள் கொள்ளைக்காரப் பாவிகள். இதோ போ றான் தெய்வசிகாமணி பிடி பிடி யென்றார்கள். புலிபாய்ந்தது போ லே நாலுதடியர்கள் சேர்ந்து பிடித்துத் தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள். கண்மூடிக் கண் திறப்பதற்குட் கூட்டமெல்லாம் பறந் துவிட்டது. போகும்போதே "கள்ளர்களை எக்கசக்கமாப்பேசுறது. இரண்டு சாக்ஷிகள் சொல்லிவிட்டால் 10-வருஷம், 12-வருஷம், தெண்டிக்க ஏற்பாடு செய்கிறது. மகா நீதிமானும் கேடு கெட்ட மூ தேவிவா, இண்ணைக்கி உனக்கு ஜென்மத்தீர்ப்புக் குடுக்கிறோம்." என்று இன்னும் பல தூர்ப்பாஷைகளாற்றிட்டிக் கொண்டு போனார்கள்.

பதினெட்டாம் அதிகாரம்.

"திருப்பதி மிதியாப்பர்தம்" இருந்தென்னபிரயோசனம்: பாருங்கள் அவருடையவியவகாரங்களென்ன, குடும்பக்காரியங்க ளென்ன ஒன்றையுங்கவனியாமல் இமயமலைவரைக்கும் போய்வந்து விட்டாரே அதுவல்லவாபுருஷத்துவம். மனுஷனென்று பிறந்தவன் நாலுதேசத்து நாகரீகமும் போய்ப்பார்த்திருக்கவேண்டும். என்று பாப்பையாபுரம் சாமிநாதக்கவிராயர்வீட்டில் அநேகபிரபுக்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அநேக ஏழைஜனங்கள் வயிறாரப்போ ஜனம் பண்ணிவிட்டு வாழ்த்திக்கொண்டுபோகிறார்கள். சோமசுந் தரம்பிள்ளை ஸாதுக்கள் பந்தியிலேநின்றுபசரிக்கிறார். இவ்வாறு ஒரு வாரம்வரை, விருந்துகளும் யாவோசுரபூஜைகளும் நடந்துகொண் டிருந்தது. அதற்கு மேற்பட்டு ஒருநாள் பாப்பையாபுரத்திலுள் ள பெரிய குடித்தனக்காரர்களும் முதியோர்களும் பாலியர்களும் சேர்ந்து ஒருசபைகூடினார்கள். கவிராயர் சபையோர்களைப்பார்த்துக்

"கனவான்களே, மிராசுப்பிள்ளை மகன்காணாமற்போனதெய்வசிகாமணி இப்போதுஉயிருடனிருக்கிறான். அவனைக்கொண்டுவந்து சேர்க்க என்ன ஆலோசனைசொல்லுகிறீர்கள்" என்றார். அதற்கு "முன்பின் ஆலோசனையும் வேண்டுமோ, உடனேபத்துப்பேர் புறப்பட்டுப்போய் அழைத்துக்கொண்டு வந்துகவர்ன்மெண்டுக்குத் தெரியப்படுத்தி மிராசைவாங்கிக்கொடுத்து இந்தப்பாதாளகண்டி தங்கச்சாமிபிள்ளையைக் கையைத்தூக்கி விடவேண்டியதுதான். இதற்கென்னதிகைப்பு" என்றார்குடிகள். பிறகுகவிராயர்தான் தெய்வசிகாமணியை மணிமங்கலத்திற் கண்டதும் காசியாத்திரைக்குச் சென்றபின் நாகபட்டினம் தாலுகாவில் உத்தியோகம் பண்ணிக்கொண்டிருப்பதுமாகிய விபரங்களைச்சொன்னார். எல்லாரும் பரமசந்துஷ்டர்களாய்ச் சுபதினம் பார்த்துக்கொண்டு நாகையை நோக்கிப்புறப்பட்டார்கள். விலைபெற்ற பெங்களூர் எருதுகள் பூட்டிய ஐந்துவில்வண்டிகள் வரிசையாய்ப் புறப்பட்டன. முதல் வண்டியிற் கவிராயரும் சில பிரபுக்களுமிருந்தார்கள். மற்றவண்டிகள் நிறையப் பெரிய குடித்தனக்காரர்கள் சென்றார்கள். ஜெகவீர பொம்மு நாயக்கன் முன்வண்டி செலுத்திக்கொண்டு போகிறான். வண்டிகள் விராலிமலைக் காட்டுமேடேபோய்க் கொண்டிருக்கின்றன. எதிரே ஒரு குதிரைவண்டி அதிவேகமாக் வருகிறது. கொஞ்சதூரத்தில் வரும்போதே குதிரைவண்டிக் காரன் "ஓய், வண்டிகளை விலக்குங்காணும்" என்றான்.

ஜெகவீர பொம்முநாயக்கன்— (என்னடாகாணும்) குதிரைவண்டிக்காரன்-குப்பைக்காட்டானோ?

ஜெக— என்னடா. நாலுவிராகனில் ஒரு கழுதை வண்டிவைத்திருக்கிறதினாலே நீ யொரு பட்டணக் கரையானோ.

குதி— லக்ஷிமியை (குதிரையை) ப் பார்த்துக் கழுதையென்று மனுஷன் சொல்லமாட்டான்.

ஜெக— மனுஷனில்லாமல் உன் கண்ணுக்கு எப்படித்தெரியுதுவேய்.

கவி— என்னத்திற்கு வீண் வம்பு வண்டியை விலக்கியடி ஜெகவீர பொம்மு,

ஜெக— ஐயா, இருபக்கக்திலும் செடிகள் அடர்ந்திருப்பதால் விலக மார்க்கமில்லே.

கவி— பொறு நாங்கள் இறங்கிக் கொள்கிரும் மாட்டையவிழ்த் தாவது வண்டியை விலக்கு.

ஜெக— உன்குதிரையை அவிழ்த்து ஒரு தடம் விலக்கு.

குதி— சிமைக்கதிபதி வந்தாலும் நம்பள் வண்டி விலகாது.

ஜெக— என்னடா குரங்குச் சேட்டை பண்ரே உன்வண்டி விலக மாட்டாதோ! நான் விலகச் செய்யுறேன் பாரு. என்று தன் கையிலிருந்த சாட்டையினுற் குதிரையை ஓரடிய டித்தான் அதற்குள்.

கவி— ஆ! ஆ! ஜெகவீர பொம்மு நில்லு நில்லு யாராவது பெரி யமனுஷாள் வண்டியாக இருந்தாலுமிருக்கும் அவஸரப் படாதே என்று குதிரைவண்டிக்குப் பின்னுற் போய் நின்று யாரையா வண்டியில் என்ருர் அந்த வண்டிக்குச் சற்றுசமீபத்தில் நின்று கொண்டிருந்த வேறு இரண்டு மனிதர்கள் கவிராயரைப்பார்த்து "வண்டியோரம் போ கக்கூடாதென்று கையால் சைகைசெய்தார்கள்." அதை யொருபொருளா யெண்ணுமற் கவிராயர் மறுபடியும் வண்டியை நெருங்கினர். அந்தவண்டிக்குள்ளிருந்து ஒரு மின்னற்கொடிதுவண்டு விழுவதுபோல திடீரென்று கவிராயர் காலோரம். ஒரு பெண். சாமி, சாமி, "காசிச் சாமியென்றலறி வீழ்ந்தாள்." அவர் திடுக்கிட்டு. யா ரம்மா பதறுதே! பதறுதே! எழுந்திரு, அழா தே. என்ன சங்கதியென்ருர். வண்டியிலிருந்தவர்க ளெல்லாம் இறங்கிவந்து குதிரை வண்டியை வளைந்து கொண்டார்கள்.

கவி— நீ, எந்தவூர் அம்மா. என்ன ஆபத்து சும்மா சொல்.

பெண்— காசிச்சாமி இன்னும் அடையாளந்தெரியவில்லைபா, நான் மங்களம்.

கவி— தர்மகர்த்தாச் செட்டியார் மகளா. அடடா. இதென்ன பரிதாபம். ஒருவரும் இல்லாமல் ஒண்டியா யெப்படி வந்தாய்.

பெண்— முதலிலே வண்டிக்காரனையும் பின்னாலே ஓடிவந்த இருவரையும் பிடித்துக்கட்டுங்கள் ஓடிப்போகாமல், அப்புறம் எல்லாஞ் சொல்லுகிறேன் என்றாள். இந்தவார்த்தைக்கு முந்தியே, குதிரை வண்டிக்காரனைச் சேர்ந்த இருவரும் மெதுவாகக் கம்பிநீட்டப்பார்த்தார்கள். அதிற்கண்ணாயிருந்த ஜெகவீர பொம்முநாயக்கனும் சிறைமீட்டானும் சட்டென்று பிடித்து அவனவன் வேஷ்டிகளைப்பறித்து முருக்கி வண்டிக் காலோடு சேர்த்துக் கட்டினார்கள். வண்டிக்காரனை ஜெகவீரபொம்மு பிடித்து அவன் நீண்டதலை மயிரை இரண்டாய் வகிர்ந்துவண்டி நுகத்துளையிற் கோத்துக்கட்டி மனுஷாள் முகரக்கட்டையைப் பாருங்க மூணும்பேஸ்து பேஷ் என்று வெற்றிலை யெச்சிலைக்காரியுமிழ்ந்தான். கவிராயர் மங்களாம்பாளை ஒரு வண்டியிலிருந்து கொள்ளும்படி செய்து நடந்த சங்கதியைத் தவறாமற் சொல்லென்றார். மங்களம் நடந்த வர்த்தமானங்களைச் சொன்னாள்.

கவி— உன்னை நாலுபேர்தூக்கிக்கொண்டு போனதாகச் சொன்னையே இந்தவண்டி எவ்வகையிற் கிடைத்து இதற்கு வந்தாய்?

மங்— என்னைச் சிரெஸ்த்தார்ப்பிள்ளை யென்றெண்ணித் தூக்கிக்கொண்டு ஒருமைல் தூரத்திலுள்ள ஒரு காட்டுக்குட் போய் அங்கு ஏற்கெனவே நிறுத்தப்பட்டிருந்த இந்த வண்டியிற் போட்டு இவ்வளவு தூரங்கொண்டு வந்துவிட்டார்கள்.

கவி— சிரெஸ்த்தார்ப்பிள்ளையென்று நினைத்து உன்னைத் தூக்கிக் கொண்டு வந்ததுனக்கெப்படித் தெரியும்.

மங்— அவர்கள் என்னைத்தூக்கிக் கொண்டு போகும்போது "கள்ளர்களை யெல்லாம் எக்க சக்கமாகப் பேசுகிறது இரண்டு சாக்ஷிகள் சொன்னாலும் அதை வைத்துக்கொண்டு 10, 12-வருஷம் தெண்டிக்க ஏற்பாடு செய்கிறது மஹா நீதியானாம். வா இன்றைக்கு உனக்கு ஜென்மத்தீர்ப்புத்தான்" என்று பேசிக்கொண்டதினாலே தெரிந்தேன்.

கவி— சிரெஸ்த்தார் வேலைபார்க்கிறவன் யாரைத்தண்டித்தான் நீ சொல்லுகிறது பொருத்தமாயில்லையே.

மங்— அவர்களுக்கு மாஜிஸ்திரேட் வேலைவந்து 2-மாத மாகிறதே.

கவி— அப்படியா பயலுக்கு ராஜயோகந்தான் விறுவிறென்றேறுகிறதே.

ஜெகவீர பொம்மு நாயக்கன்— ,ராஜயோகம் இல்லாட்டா பாப்பையாபுரத்தான் இத்தனைபேரும் ஒண்ணுதிரளுவாளு ஐயா, கொஞ்சத்திலே.

கவி— அது நிஜந்தானப்பா, மங்களம், மற்றக்கூட்டத்தாரெல்லாம் எங்கே தெரியுமா.

மங்— கொஞ்சத்தூரங் கூடவே வந்தார்கள். கடைசியாய் விராவிமலைப் பறம்பில் வைத்து என்னைக் கொல்லும்படி இவர்களுக்கு உத்திரவுபண்ணிவிட்டு அவர்கள் நின்று போனார்கள்.

கவி— அவர்கள் நின்றுவிட்ட ஊர்ப்பேர் தெரியுமா.

மங்— ஊரேது இரவெல்லாம் காட்டுவழியாகத்தான் வந்ததாகத் தெரிகிறது.

கவி— விடிந்த பிற்பாடும் உன்னைப் பெண்ணென்று கண்டுகொள் ளாமல் எப்படி விட்டு விட்டார்கள்.

மங்— என்னையொருவருங் கவனிக்கவுமில்லை நானும் தலைப் பாகையையும் சட்டையையும் கழற்றாமல் தைரியமாகவே இருந்து வந்தேன்.

கவி— "யாருமில்லார்க்குத் தெய்வந்துணை யென்பதறிந்தேனம்மா" தியாகராஜசெட்டியார் தர்மந்தலைகாத்தது. இருக்கட்டும் தெய்வசிகாமணியைப் பற்றி எதுவுந்தெரியுமா.

மங்— ஒருவருக்கும் ஒரு தீங்குமில்லை நான் கடைசியாகப் பார்க்கும்போது நந்தவனத்தில் எல்லாரும் நின்றார்கள்.

கவி— தெய்வசிகாமணியை நன்றாய்ப் பார்த்தையா?

மங்— திட்டமாய்ப் பார்த்தேன், என்னை அவர்களென்று நினைத்துத்தூக்கிக்கொண்டு வராதிருந்தால் அவர்களுக்கே பெரிய ஆபத்து வந்திருக்கக் கூடுமென்றுறுதியாய் நினைக்கவேண்டும்.

நல்லவேளையென்று வில்லிமங்கலத்திற்கு ஒரு தந்தியெழுதிக்கூடவந்தவர்களில் இரண்டுபேரைச் சமீபத்திலுள்ள மருங்காபுரித் தந்தியாபீஸுக்கனுப்பிவிட்டுப் பரிசாரகனைச்சமையல் பண்ணும்படிசொன்னார். அங்குள்ள ஓர் குளக்கரைக்குச்சமீபத்தில் வண்டிகளை வட்டமாய் நிறுத்தி அவைகளைப்பொதிந்து காவித்திரைகளைக்கட்டிக் கூடாரம்போற் செய்துகொண்டு ஆகாரம் அட்டு முடிக்கப்பட்டது அதற்குள் மருங்காபுரிக்குப்போனஆட்களும் தந்திகொடுத்து விட்டுவந்து சேர்ந்தார்கள். எல்லாரும் சாப்பிடஉட்காருமுன் மங்களம் அன்னமில்லாமற் களைத்துப்போயிருந்தபடியால் குளத்தில் முழுகிவரும்படிசெய்து வண்டிக்குள் வைத்து அன்னம் பரிமாறப்பட்டது. பிறகு எல்லாரும் சாப்பிட்டு முடிந்தவுடன் வண்டியைப்பூட்டி விட்டார்கள். திருடர்களுக்குஞ் சாப்பாடுசெய்வித்து வண்டிக்குப்பின்னாலே நாயைக்கட்டினதுபோலே கட்டி

விட்டுவிட்டார்கள். மறுநாட்காலை 8-மணிக்கு வில்லிமங்கலத்திற் குச்சமீபமாக வண்டிகள் போய்க்கொண்டிருக்கின்றன. செட்டியார் வீட்டைச் சுற்றிப்போலீஸ் அதிகாரிகளும் பக்கக்கிராமத்து ஜனங்களும் நிறைந்து நிற்கிறார்கள். நீலலோசனியம்மாளுக்குத் தேறுதல் சொல்லிக்கொண்டு அநேகபெண்கள் துக்கமுகத் துடனுட்கார்ந்திருக்கிறார்கள். தெய்வசிகாமணிபிள்ளை சொல்லமுடியாத் துயர முகத்தினராய் ஒருபக்கம் நிற்கிறார். செட்டியார் போலீஸ் சூப்ரெண்டெண்டு துரையிடம் கொள்ளைநடந்த விவரத்தை எழுதி வைத்துக்கொண்டுட்கார்ந்திருக்கிறார். இத்தருணம் இரண்டு வாலிபர்கள் வில்லிலிருந்து விடுபட்டகல்லைப்போலே வேகமாய்ச் செட்டியார் வீட்டைநோக்கி வருகிறார்கள். அவர்கள் நிலந்தூர்க்கும் வேஷ்டியுடையும் மிளகுக்கொடிச்சாய லேஞ்சிக்கட்டும் உள்ளங்கையகலச் சந்தனப்பொட்டும் கையிற் சக்கரப்பூண்கட்டுக் கம்பு பிடித்திருக்கும் வசமும் நெடுந்தூரமிருந்து நடந்து வருபவரைப் போற்காணப் பட்டாரில்லை. வந்தவர்கள் செட்டியார் இருக்குமிடம்போய்ச்சேரு முன்னமே கூடியிருந்தவர்கள் எந்தவூர் என்றார்கள். பாப்பையாபுரம் என்று பதிற்சொல்லிக் கொண்டேபோய்ச் செட்டியாரைக் கண்டார்கள். அதற்குள் ஜனங்கள் போய் மொய்த்துக்கொண்டார்கள். வந்தவர்களிலொருவன் தங்கள் மகள் மங்களாம்பாள் சுகமே வண்டியில் வருகிறது. பாப்பையாபுரத்திலிருந்து கவிராயரவர்களுடன் 20 பேர் 5-வண்டி சகிதம் வருகிறார்கள் எங்களை முன்னாலே அனுப்பினார்கள் என்றான். இந்தவார்த்தையைக் கேட்டதும் ஜனங்கள் சந்தோஷத்தினால் இரைந்து பேசத்தொடங்கினார்கள் க்ஷணநேரத்திற்கு முந்தி நிர்ஜீவனாய்க்கிடந்த கூட்டம், இப்போது பருவகாலத்துக் கடல் முழங்கினது போலே மங்களம் வந்துவிட்டாள் மங்களம். வந்துவிட்டாள். என்று ஆரவாரித்துக்கொண்டிருக்கிறது. வண்டிகள் வில்லிமங்கலத்துத்தெருவூடே ஒழுங்காய் வருகிறது. மங்களம் எந்தவண்டியில் வருகிறாள், இந்தவண்டியிலேயா அந்தவண்டியிலேயா? என்று நெருங்கி வண்டியை போகவிடாமற் றடுத்து நின்றார்கள். ஜெகவீர பொம்முநாயக்கன் கிருதா மீசையைக்கண்டு ஜனங்கள் வியப்படைந்தார்கள் அஞ்சுவண்டிமாடும் அச்சிலே வார்த்ததுபோலே யென்றார் சிலர். மங்களத்தைத் திருடிக்கொண்டுபோன கள்ளர்

களா. இதோ போகிறவர்கள், மூஞ்சியைப் பாருங்களென்றார் சிலர். இந்தவண்டியிலே போகிறவர்தான் மங்களத்தைக்கண்டுபிடித்துத் தந்திகொடுத்தவராமென்றார் சிலர் வண்டிகளும் செட்டியார் வீட்டுமுன் வந்து நின்றன. முதலிற் கவிராயரிறங்கினார். செட்டியாரும தெய்வசிகாமணியும் வணங்கினார்கள். பாப்பையாபுரத்திலிருந்து வந்தவர்களை யெல்லாம் செட்டியார் வாருங்கள் வாருங்கள் என்றுபசரித்தார், மங்களத்தை வண்டியைவிட்டிறக்கி வீட்டுக்கழைத்துப்போனார்கள். குழந்தையைக் கண்டவுடன் நீலலோசனியம்மாள் கழுத்தைக் கட்டிக்கொண்டு கோவென்று கதறினாள். கூடின ஜனங்கள் அமர்த்தினார்கள் "எழுபது வெள்ளயாக்கைக் கோருயிரெய்திற்றன்றே" என்பதுபோலக் கூடிய ஜனங்களின் எல்லாவுடலுக்கும் ஒருயிர்வந்தது போல ஆநந்தமயமாயிருந்தார்கள். இந்த அமிலேயில வண்டியிற கட்டப்பட்டிருந்த கள்ளர்களை ஒருவரும் கவனிக்கவில்லை. ஜெகவீர பொம்மு மாத்திரம் கண் போட்டுக் கொண்டிருந்தான். ஒரு கள்ளன் மட்டும் கட்டுகளை மெல்ல மெல்ல நெகிழ்த்துக் கொண்டிருந்தான். பாதிவேலை நடக்குமட்டும் பார்த்துக்கொண்டிருந்த ஜெகவீர பொம்மு ஓடிவந்து இடுப்பில் இரண்டு மிதி மிதித்து மறுபடியும் இறுக்கிக் கட்டிவைத்தான். தெய்வசிகாமணியும் செட்டியாரும் கவிராயரோடு கலந்து திருடர்களையும் குதிரைவண்டியையும் போலீஸார்வசம ஒப்பித்துக் கேஸ் நடத்தும்படி யேற்பாடு செய்தார்கள். குதிரையையும் வண்டியும் யாருடையதென்று நீங்கள் முதலிற்கண்டு பிடித்து விட்டால் அப்புறம் கேஸில் நீங்கள் அதிகப்பிரயாஸமெடுக்க வேண்டியிராது கவனித்துக் கொள்ளுங்கள் என்று போலீஸாரிடம் கவிராயர் சொன்னார்.

தெய்வசிகாமணி இன்னாரென்றுமுதலிலே பாப்பையாபுரத்தார்களுக்குத் தெரியாதிருந்தாலும் பிற்பாடுதெரிந்துகொண்டு நடந்துபோன காரியங்களுக்காகக் கவலைப்படவும் நெருங்கிப்பேசவும் அவனது தேககாந்தி முகவசீகரம் வசன சாதுரியமுதலியவைகளைக்கண்டு கண்டு விபப்படையவுமாயிருந்தார்கள். தெய்வசிகாமணி அவர்களோடு ஐயன்மீர், தங்கள் காலடியிற்றவழ்ந்து கிடந்து நடந்து விளையாடித்தங்கள் திருக்கரந் தொட்டெடுக்கவும் உங்கள் நல்

வசனங்களையும் நீதிபோதங்களையும் கேட்டு நடக்கவும் பாக்கியம் செய்யாத பாமூடலைச் சுமந்தபாவி நான், என்னைப்போலே பெற்றாரும் உற்றாரும் பேரும் ஊருமற்றுச் சாதியுஞ்சமயமும் தெரியாது தலைமயங்கித் திரிந்த சண்டாளனைக் கதையிலாவது கேட்டிருப்பீர்களா? குலமுறைகுன்றாத தங்கள் கூட்டத்திலிருக்க நான் எவ்வளவும் அருகனல்ல, அன்னப்பறவைகளின்மத்தியில் ஒரு கொக்கிருந்ததுபோல தலைகவிழ்ந்திருக்கும் தகுதியுள்ளவனாயிருக்கிறேன். என்று கண்ணீர்சொரிபத்துக்கித்தான். கவிராயர், குழந்தாய் "இன்ன வினை இன்ன தலத்தெய்தும்" என்ற ஈசுரநியதியைக்கடக்க எவராலுமுடியாது. காக்கைக்கூண்டில் வளர்ந்தகுயிலின் குஞ்சு பின்பு தன் சாதியைச் சேரவில்லையா? வளர்ந்த இடத்தினாற் பிறந்த ஜாதிப்பெருமை குறையுமா, அப்படியும் நீ தாழ்ந்தஸ்தானத்தில் வளரவில்லையே, நீகாணமற்போன மறுதினமே உனது நெருங்கின பந்துக்களில் ஒருவரான தாசில்தாரிடம் உன்னைச்சேர்த்து இவ்வளவுமேலான பதவியில் வைத்த உன்னுடைய நல்வினைக்கு நீ நன்றியுள்ளவனாயிருக்க வேண்டும். உயர்ந்தமாணிக்கக்கல்லைத் தங்கத்தகட்டிலும், செங்கல்லை மண்சுவரிலும் பொருத்திவைக்கும் தன்மையுள்ள விதிப்படி நடக்கவேண்டியவர்களாயிருக்கிறோம் நாம் என்றார். எது எப்படியிருந்தாலும் இவ்வளவுகாலங்கழித்துத் தங்களைக்கண்டதே எங்கள்பெரும்புண்ணியவசமென்றார்கள் பாப்பையாபுரம் குடிகள். அந்நேரம் அமுர்தலிங்கம் வந்து சாப்பாட்டுக்குச் செட்டியாரழைத்ததாக வந்து தெரியப்படுத்தினான். உடனே யெல்லாரும் எழுந்துபோய் நீராடிப்போசனஞ்செய்து விட்டு வந்துட்கார்ந்தார்கள் இவ்வாறு 15-நாள்வரை வில்லிமங்கலத்திற் சந்தோஷமாயிருந்தார்கள்.

பத்தொன்பதாம் அதிகாரம்.

வில்லிமங்கலம் கொள்ளைக்கேஸ் விசாரணை வாயிதாச் சமீபித்து விட்டது தீவர்த்திக்கொள்ளையில் தடப்பாரொருவருமில்லாம

லும் வீடெங்குந்தங்கமயமாய்க் குவிந்துங்கிடக்க ஒரு சல்லிக்காசும் போகாமலிருப்பதைக்குறித்து சூப்பிரண்டெண்டுத்துரை சந்தேகித்து இது ஒரு ஆச்சரிமான கொள்ளைக்கேஸ் இதை நுட்பமாய்க்கண்டு பிடிக்கவேண்டுமென்று மிக்க அநுபவசாலியான போலீஸ் இனிஸ்பெக்டர் பிரகாசம் பிள்ளையை அக்கேஸில் வேலைசெய்யும்படி திட்டஞ்செய்திருந்தார். பிரகாசம் பிள்ளை நிதானமான ஒருபெரிய குடியிற்பிறந்தவர் கேஸ்களின் உண்மையைக் கண்டுபிடிப்பதில் மஹாசமர்த்தர் இவரது அஹோராத்திரமுயற்சியின்பேரில் 13 பேர்வழிகள் பிடிபட்டுத் திருவாரூர் சப்மேஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைதொடங்கப்பட்டது. வாதிபக்கம் 1-தியாகராஜசெட்டியார் 2-தெய்வசிகாமணி பிள்ளை 3-வில்லிபங்கலம் கிராமமுன்சிப் 4-மேற்படியூர்த்தலையாரி 5-அபூர்தலிங்கம் 6-மங்களாம்பாள் 7 சாமிநாதக்கவிராயர் 8-ஜெகவீரபொம்முநாயக்கன், 9-சிறைமீட்டான் இவர்கள் சாக்ஷியாக விசாரிக்கப்பட்டார்கள். 1-முதல் 5-வரை சாக்ஷிகள் கொள்ளைநடந்தகாலம் நடந்தமாதிரி நடத்தியபேர்வழிகள் இவைகளைக்குறித்துத் தங்களுக்குத் தெரிந்தவரை தெளிவாய்ச் சொன்னார்கள். 7. 8. 9. சாக்ஷிகள் விராலிமலைப்பக்கத்தில் 6-வது சாக்ஷியைத் (மங்களாம்பாளை) திருடிக்கொண்டு போகும் போது கண்டுபிடித்ததையும் அப்போது அவளிருந்த நிலைமையையும் விவரமாயெழுதி வைத்தார்கள் 6-வது சாக்ஷி மங்களாம்பாள் மடேசக்குணங்கள் நான்கும் காவல்புரியா நிற்ப, நின்று பின் வருமாறு வாக்குமூலம் எழுதிவைத்தாள். கோர்ட்டு முன்பாக நிற்கிற குற்றவாளிகளில் மூன்றுபேரை எனக்கு நன்றாகத்தெரியும், இவர்களில் ஒருவன் விராலிமலைப்பறம்புக்கு வண்டி செலுத்திக்கொண்டு போனவன் மற்றிருவரும் வண்டிக்குப் பின்னால் ஓடிவந்தவர்கள் 4-முதல் ஒன்பது வரை, 5 குற்றவாளிகளைத்தீவர்த்தி வெளிச்சத்தில் பார்த்த ஞாபகமிருக்கிறது. மற்றவர்களைப்பற்றித்திட்டமாகச் சொல்லமுடியவில்லை கொள்ளைக்கூட்டத்தார்கள் சுமார் 35 அல்லது 40 பேர்களிருக்கும் திட்டிவாசலில் நுழைந்துவரும் போதே ஆணுடைதரித்துத்

தான் வந்தேன். பெண் உடையோடு வெளிப்பட்டால் அவமானம் நேர்ந்துவிடுமோ என்னவோ வென்னும் அச்சத்தினாலேயே அவ்வாறுவந்தேன். என்னைத்தூக்கிக்கொண்டு போகும்போது இவர்களிற் சிலர் 2-வது சாக்ஷியைக் குறித்து நிந்தித்துப்பேசிக்கொண்டசாரத்தினால் என்னை 2-வது சாக்ஷியாக நினைத்துத்தூக்கிக்கொண்டு போனார்கள். என்றுறுதியாய்ச் சொல்லுகிறேன். விராலிமலைப் பக்கத்தில் 7, 8, 9-சாக்ஷிகளாலும், அவர்களைச் சேர்ந்தவர்களாலும் மீட்கப் பட்டேன். குற்றவாளிகளது ஊரும் பேரும் தெரியாது கொள்ளை நடந்த தேதிக்கு முன் ஒருநாளுங் குற்றவாளிகளிலொருவனையும் பார்த்ததில்லை.

வாதிபக்கத்து சாக்ஷியங்களெல்லாம் விசாரித்து முடிந்தவுடன் கோர்ட்டார் குற்றவாளிகளை உங்கள் பேரில் ஏற்பட்டிருக்கும் இக்குற்றத்திற்கு என்ன சமாதானஞ் சொல்லுகிறீர்கள் என்றார்.

கன்னுச்சாமி. இருளன் என்ற இரண்டுபேர்கள் ஒரு மாஸத்துக்கு முன் எங்களிடம் வந்து நாகபட்டணம் தாலுகா, ஆக்டிங் மாஜிஸ்திரேட்டு தெய்வசிகாமணிபிள்ளையை எப்படியாவது கொன்றுவிட்டால் 3000ரூபா தருவதாகவும், உத்தியோகமுறையில் கள்ளர்களைக் கொடூரேசித்ததுடன் சிக்ஷித்ததினால் அத்திருடரைச் சேர்ந்தவர்களால் கொலைநடந்ததாகப் பஹிரங்கமாய்த் தெரியும்படி செய்யவேண்டும் என்றும் சொன்னார்கள். நாங்கள் ஒப்புக்கொண்டு சமையம் பார்த்திருந்தோம். வில்லிமங்கலத்தில் நடக்கிற ருதுசாந்தி முகூர்த்தத்திற்குத் தெய்வசிகாமணி பிள்ளை போகிறது தெரிந்து அன்றிரவே கூட்டங்கூடி விசேஷ வீட்டைத் தீவட்டிக் கொள்ளையிடுவதாகப் போக்குக்காட்டித் திட்டிவாசலால் வந்த ஆணுடைதரித்திருந்த மங்களத்தம்பாளைத் தெய்வசிகாமணி பிள்ளை யென்றெண்ணித் தூக்கிக்கொண்டுபோனோம். கொள்ளையிடுகிற வீட்டில் ஒருதுரும்புங்கூடத் தொடப்படாதென்பது எங்கள் முதலாளி (பணங்கொடுத்தவன்) உத்திரவு எதினாலென்றால் பொருளபேக்ஷையை முன்னிட்டுக் குறிப்பிட்ட காரியத்தைத் தவிரவிட்டு விடுவார்கள் என்பது அவர் நோக்கம். மற்ற விவரங்களெல்லாம் வாதிபக்கம்

சொன்னது போலவே உள்ளதைச் சொல்லி விட்டால் குற்றத்தை மன்னித்து விடுவதாக உத்திரவான பிரகாரம் என்னை மன்னிக்க வேண்டும். இந்த விஷயங்களுக்கெல்லாம் பண உதவி செய்தவர் பாப்பையாபுரம் மிராசுதாரும் புத்தூர் பூமிநாதபிள்ளையுமே என்று எங்கள் துப்பன் கண்ணுச்சாமி சொன்னான் என்று குற்றவாளிகளி லொருவன் கூறினான்.

குற்றவாளிகளைத் தஞ்சாவூர் செஷனல் கோர்ட்டுக்குக் கமிட்பண்ணியும் பிடிபடாத குற்றவாளிகளுக்கு வாரண்டும் பிறப்பித்தார். கோர்ட்டு கலைந்தவுடன் நாகபட்டினம் போய்ச் சேர்ந்து தங்கச்சாமி செய்திருக்கும் சதிபாலோசனையைக் குறித்து வெகு நேரம்வரை ஆத்திரத்தோடும் பேசிக்கொண்டிருந்தார்கள். செட்டியார் முதலியோர்கள்-இனிஸ்பெக்டர் கவிராயரையும் செட்டியாரையும் தனித்துக் கூப்பிட்டு 2, 3-நாளைக்கு முன் தங்கச்சாமிபிள்ளை இவ்வூருக்கு வந்துவிட்டுப் போனதாகக் கேள்விப்பட்டேன் இனிமேல் இந்தக்கோர்ட்டார் அவனைக் சமிட் பண்ணவே மாட்டார் என்னுடைய இந்தக்கண்ணிக்குத் தப்பித்து விட்டான் ஆகிலும் பார்க்கிறேனென்று சொல்லிக்கொண்டு போய்விட்டார்.

இருபதாம் அதிகாரம்.

தெய்வசிகாமணிபிள்ளை மூன்றுதின ரஜாவில் வில்லிமங்கலம் ருதுசாந்தி முகூர்த்தத்திற்குப் போயிருந்தாரன்றோ. அச்சமயம் கொள்ளை நடந்து விட்டபடியால் அது காரணமாக மறுபடியும் ஒரு மாஸம் லீவு வேண்டுமென்று மேலதிகாரியை எழுதிக் கேட்டிருந்தார் அதற்கு, "பதிலியாக வேலைபார்க்கும் நீர் அடிக்கடி ரஜாக் கேட்பதைப் பார்க்கும்போது உத்தியோகம் பார்க்க மிகவும் பிரியமில்லாதவரென்று தோன்றுகிறது. உம்முடைய சர்வீஸ் கவர்ன்மெண்டுக்குத் தேவையில்லை என்ற உத்திரவு வந்தது. அதைப் பார்த்தவுடனே யெல்லாருக்கும் கவலையுண்டாகிவிட்டது

224312

சர்வீஸ் தேவையில்லையென்றால் இனிமேல் ஒருகவர்ன்மெண்டு வே லைக்கும் லாயக்கில்லை யென்றேற்படுமோ வென்றார். செட்டியார் சர்க்கார் வேலைபார்த்துத்தான் எங்கள் மிராசுப்பிள்ளை பிழைக்கணு மோ என்றான் ஜெகவீர பொம்மு இந்த உத்திரவுக்கு மேல் அப்பீல் செய்யவும் இடமில்லை போலிருக்கிறதே யென்றார் கவிரா யர், கல்கத்தாவிலிருந்து நாளையத்தினம் கப்பலுக்குக் கல்யாணசுந் தரம் வருகிறதாக தந்திவந்திருக்கிறது அவன் வந்த பிற்பாடு யோ சித்துக் கொள்ளலா மென்றான் தெய்வசிகாமணி.

மறுநாட் பகல் 2-மணிக்கு நாகபட்டினம் டிவிஷனல் கலெக்டரும் ஒரு பாரிஸ்டரும் ஒரு இரண்டு குதிரைச்சார்ட்டிலி ருந்து செட்டியார் வீட்டுமுன் வந்திறங்கித் தெய்வசிகாமணிபிள்ளை யிருக்கிறாரா வென்று விசாரித்தார்கள். செட்டியார் அவர்களை வரவேற்றழைத்து வந்து ஆசனங்கொடுத்துபசரித்தார். இதற்குள் தெய்வசிகாமணியும் வந்து கலெக்டர் துரையை உபசரித்துவிட்டுப் பாரிஸ்டர் பக்கமாகத் திரும்பினான். அண்ணா என்னைத்தெரிய வில்லையா வென்று, நமஸ்கரித்துக் கொண்டே தெய்வசிகாமணி கை யைப்பிடித்தார் பாரிஸ்டர், கொஞ்சந்திகைத்துக் கல்யாணசுந்தரம் என்று இரண்டு கையாலும் இறுகத்தழுவினான். தெய்வசிகாமணி இரண்டுபேர் கண்களிலும் தண்ணீர்ததும்பிற்று. கவிராயருள்படப் பாப்பையாபுரத்துப் பெரியமனிதர்கள் கூடத்தில் வந்து கூடியிருந் தார்கள்.

கலெக்டர்துரை செட்டியாரைப் பார்த்து பாரிஸ்டர் கல்யா ணசுந்தரமவர்கள் சீமை தேசத்திற்கு வந்திருந்த போது மூன்று வருஷம் நாங்கள் ஒன்றாகவே வசித்தோம். கடைசியாக நான் இந் தியாவுக்கு வரும்போது இவர் ஐரோப்பாக் கண்டமுழுவதும் சுற்றிப்பார்க்கப் பிரியப்பட்டுப் போய் விட்டார். நான் இவ்வூருக் குக் கலெக்டராக வந்த இரண்டு வருஷகாலமாக இவருடைய லட் டர் வந்துகொண்டு மிருந்தது. இரண்டுமாஸத்திற்குமுன் ஸ்வீடனி லிருந்து வந்த கடிதத்தில் தெய்வசிகாமணி பிள்ளையைப்பற்றிக் கேட்டிருந்தது. எனக்குத் தெரிந்தவர்களை விசாரித்து இவரைப்

DBI, 3NSP93, N24

பற்றியெழுதியிருந்தேன். என்னையும் இவரையும் பார்ப்பதற்காகவே கல்கத்தாவிலிருந்து இன்று கட்பலுக்கு வந்தார் என்றார். சீமைக்குப் போகும்போது ஒரு லெட்டருங் கொடாமற் போய்விட்டாயே யென்றான் தெய்வசிகாமணி.

அண்ணா, நான் மணிமங்கலத்திலிருந்து கல்கத்தாபோய்ச் சேர்ந்த 4,5-மாஸங்கள் லட்டர் வந்துகொண்டிருந்தது. பிற்பாடு நான் எழுதிய கடிதங்களில் ஒன்றுக்கும் மறுமொழியைக்காணேன் எழுதிய லட்டர்களெல்லாம் திரும்பிவந்து கொண்டிருந்தன. எனக்கு விஷயம் ஒன்றும் புலப்படவில்லை வெகு நாட்கழித்து நமது அச்சுதன் பேருக்கு வீராகவபுரத்திற்கு எழுதினேன் அவன் ஐயா, அவர்கள் வியாதிபினிமித்தம் உத்தியோகத்தை விட்டுத் திருநெல்வேலிக்குப் போய்விட்டதாயும் மனஸ்தாபத்தினால் வீட்டைவிட்டு வெளியேறித்தாங்கள் போனவிடந்தெரியவில்லை யென்றும் எழுதியிருந்தான். நம்முடையகுடும்பம் இவ்வாறு சிதறுண்டுபோகக்காலம் வந்துவிட்டதேயென்ற பெருங்கவலையோடிருந்தேன். அவ்வருஷம் பி. ஏ, பரீக்ஷைமுடிந்தவுடன் இங்கிலண்டுக்குப் புறப்பட்டுப்போய் 5-வருஷம் அங்கு சஞ்சரித்தேன். சென்றவருஷத்து வக்கத்தில பாரிஸ்டர்ச்சன்னது கிடைத்தது. அதன்மீது இந்தியாவுக்குத் திரும்பஎண்ணங்கொண்டு ஐயா அவர்களுக்கு அச்சுதன் கொடுத்த விலாசப்படி ஒருலெட்டர் எழுதினேன். கடவுள் செயலால் வியாதி குணமாய்விட்டதென்றும், தாங்கள் நாகபட்டினத்திலிருப்பதாயும் பதில் வந்தது. அக்கடைசிக்கடிதமே என்னை இந்தியாவுக்குத் திருப்பியது என்றான். கல்யாணசுந்தரம் கூடியிருந்தவர்கள் எல்லாம் இவர் தெய்வசிகாமணியைக் காப்பாற்றிவந்த தாசில்தாருடைய மகனாயிருக்கக்கூடுமென்று எண்ணினார்கள். சந்தர்ப்பம் வாய்க்கும் போதுபார்க்கிறேனென்று சொல்லிக்கொண்டு கலெக்டர் போய்விட்டார். அன்றிரவெல்லாம் கல்யாணசுந்தரத்தின் கதையைத் தெய்வசிகாமணி, செட்டியார், கவிராயர்முதலானவர்களுக்குச் சொல்லிப் பேசிக்கொண்டிருந்தான். முடிவில் சர்வீஸ் தேவையில்லை யென்ற உத்திரவைப் பாரிஸ்டரிடம் காட்டினார்கள். சரி இதைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. எட்டு மாஸ்டரலில் உத்தி

யோகத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கூடியசீக்கிரம் சென்னை போய்த் திரும்பவேண்டியதுண்டு என்றார். அவர் மறுதினமே செட்டியார், கவிராயர், தெய்வசிகாமணி, பாரிஸ்டர் நால்வரும் பட்டணம் போய்ச்சேர்ந்து சிலநாள்வரையிருந்து உரிய உத்தியோகஸ்தர்கள் மூலமாய் சர்வீஸ் தேவையில்லை யென்றஉத்திரவை மாற்றிக் கொண்டுவந்து சேர்ந்தார்கள்.

இருபத்தொன்றாம் அதிகாரம்.

ஒருநாட் காலை 7-மணிக்கு ஜெகவீரபொம்முநாயக்கனும் சிறைமீட்டானும் பாப்பையாபுரத்துப் பிரஜைகளைப் பாடாப்படுத்துகிறார்கள். இன்று மாலை மூன்று மணிக்கெல்லாம் தெய்வசிகாமணி பிள்ளைவந்துவிடுவார். நதிக்குடிச்சத்திரத்தில் இறங்கியிருக்கிறார்கள். ஊரெல்லாம் அலங்காரம்பண்ணுங்கள், சர்வதேவாலயங்களுக்கும் அபிஷேக ஆராதனைநடத்துங்கள், எல்லாவகுப்பு மேளகாரரும் தயாராயிருங்கள், கிராம ஊழியக்காரர்களெல்லாரும் பெரிய மிராசுப்பிள்ளை வீட்டுவாசலில் கூடியிருங்கள், ஊரில்ஒருவரும் ஒரு வேலைக்கும் போகக்கூடாது, என்று தெருத்தெருவாகத் தமுக்கடித்துப்பிரசுரம் பண்ணினார்கள். பதினான்கு வருஷமாக வனவாசம் போய்த்திரும்பிய ராமச்சந்திரன் விஷபத்தில் அயோத்யாநகரம் எவ்வாறு இருந்ததோ அவ்வண்ணம் ஆராபகிழ்வடைந்திருந்தது. பாப்பையாபுரம் சரியாய் 3-மணிக்குச்செண்பகாடவி (ஒருதோப்பு)க்கு நேராகவண்டிகள் வந்தன. எதிர்கொண்டுபோய் ஜனங்கள் சூழ்ந்துகொண்டனர். ஈசுரன்கோவில் மேளம் ஒருபக்கம், பள்ளர் மேளம் ஒருபக்கம், மற்றவாத்தியங்கள் ஒருபக்கம் கடலொலிபோல் முளங்கின. வண்டிக்கு முன் இருபக்கத்திலும் பள்ளிகளிடுங்குரவைச்சத்தம் காதுகள்செவிடுபடும்படி முழங்கின. வஸ்தாதுகள் சிலம்பத்தடி வீச்சுகளைப் பார்க்கக்கண் கூசுகிறது. ஊரைநெருங்கி வரவர ஜனக்கும்புகளதிகரித்து நெருங்கினபடியால் வண்டி செல்ல

மார்க்கமில்லாமல் நின்றுவிட்டது. எல்லாரும் வண்டியை விட்டிறங்கி மெதுவாய் நடந்து வீரகஞ்சவிநாயகர், மஹாபலேசுரர், செண்பகவல்லியம்மன், சேஷாசலப்பெருமாள் திருவாலயங்களுக்குச்சென்று சுவாமிதரிசனம்பண்ணிப் பிரஸாதம்பெற்றுக்கொண்டு வடக்குமாடவீதிவழியாய் வீட்டை நோக்கிச் சென்றார்கள். சோமசுந்தரம் பிள்ளை, மீனாக்ஷியம்மாள் முதலானவர்கள், பரீக்ஷைஎழுதிவிட்டு ரிஷல்ட்டுக்காகத் தபால்காரனை எதிர்பார்த்து நிற்கும் மெட்ரிக்குலேஷன் மாணாக்கர்களைப்போல ஆனந்தமுகத்துடன் நின்றுகொண்டிருந்தார்கள். கவிராயர் கையைப் பிடித்துக்கொண்டு தெய்வசிகாமணி தலைவாசற்படியை மிதித்தான். கெட்டி மேளம் முழங்கிற்று ஹாலில் நின்றுகொண்டிருந்த சோமசுந்தரம்பிள்ளையைக் கவிராயர் வணங்கி இதோ நமது தெய்வசிகாமணி யென்று கைசுட்டிக் காட்டினார். புத்திரன் முகத்தைப் பார்த்தவுடனே நெடுங்காலம் அடங்கிக் கிடந்த புத்ரவாத்ஸல்யமும், துக்கமும், குழந்தையைக் கண்டுவிட்டோமென்னும் ஆநந்தமும் ஏககாலத்தில் ஒன்றிறொன்றுமுந்துதற்குப் போர்செய்து கிளம்பி நெஞ்சடைக்கச் செல்வனைச் சேர்த்திருகக் கட்டிஸ்தம்பித்து நின்றார். சோமசுந்தரம்பிள்ளை மீனாக்ஷியம்மாள் ஓடிவந்து என்னுயிரே, என்னுயிரே-என்பிள்ளைக் கலி தீர்த்த பேரரசே உன்னைப் பிரிந்து நான் உயிர்வாழ்ந் திருந்தேனே. என் கண் மணீ, என்று கதறினாள். உறவின் முறையாரெல்லாம், குய்யோ முறையோ வென்று அலறினார்கள். இவ்வாறு கொஞ்ச நேரத்திற்குள் வீடெங்கும் அழுகைமயமாய் விட்டது. கவிராயர் அவர்களை யெல்லாம் அதட்டி இதென்ன மூடத்தனம் சந்தோஷிப்பதற்குப்பதில் துக்கமாகொண்டாடுகிறது. எல்லாரும் பிரமானந்தமாயிருங்கள். வந்தவர்களுக்குத் தாம்பூலங் கொடுங்கள், சமையல் சீக்கிரமாகட்டும், என்று கெம்பீரமான உத்திரவு பண்ணினார். சந்தடியெல்லாம் சட்டென்றடங்கிற்று, சோமசுந்தரம்பிள்ளை இன்னும் மூர்ச்சை தெளியாது பித்துப்பிடித்தவர் போலிருக்கிறார், அந்நேரம் வெளியிலிருந்து ஜெகவீர பொம்மு அவசரமாகவந்து கவிராயரைப்பார்த்து ஐயா, யாரோ ஒரு பெரிய வேலைக்கார மனுஷாளைப் போலே.தெரியுது வெளியில் நின்று தங்களை விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள். வண்டிவாசலில்

நிற்கிற தென்றான். கவிராயர் சரேலென்று வெளியே எழுந்து போய் வண்டியிலிருந்திறங்கி நின்ற தாசில் நெல்லையப்ப பிள்ளையைக் கண்டதும் ஐயா வாருங்கள்! வாருங்கள்! பரமசந்தோஷம்! பரமசந்தோஷம்! என்றழைத்துக் கொண்டு வீட்டுக்குட்போனார். தாசில்தாரைக் கண்டவுடன், தெய்வசிகாமணியும், கல்யாணசுந்தரமும் தாய்ப்பசுவைக்கண்ட கன்றுகள் போலே விரைவிலோடி அவர் பாதத்தண்டை விழுந்து நமஸ்கரித்தார்கள். ஜோடிக்கடுக்கனிலழுத்திய உபயமாணிக்கம்போன்ற இரண்டுகுழந்தைகளையும் வாரியெடுத்து சிரஞ்சீவியாய் வாழக்கடவீர்கள் என்றிருவரையும் இருபுயத்தோடும் சேர்த்து அணைத்துக் கண்ணீர்மல்கினார். தெளிவெய்திய சோமசுந்தரம்பிள்ளை தியாகராஜசெட்டியாரையும், தாசில்தாரையும், கவிராயராற் றெரிந்துகொண்டு அவர்களை உபசரித்து "ஐயா, தாங்களிருவரும் செய்த பேருதவிக்கு நானும் என்பிள்ளையும் மூவேழுதலைமுறையும் ஊழியம்பண்ணினாலும் கைம்மாறாகமாட்டாது. ஐயா, என்பிள்ளையென்று தவறிச்சொல்லிவிட்டேன் மன்னிக்க வேண்டும். என்குழந்தை திருச்செந்தூரில் பலவருஷங்களுக்கு முன்னமேயே இறந்துபோய்விட்டது. இவன் உங்கள் குழந்தை" என்றார். "அவன் யாருக்குக் குழந்தையாயிருந்தாலுமிருக்கட்டும் இத்தனை யிடையூறுகளுக்குந்தப்பி உயிரோடிருந்ததே நமதுபாக்கியமென்றார்" தாசில்தார். இருந்தவர்களெல்லாம் ஆஹாவென்று சந்தோஷமுற்றார்கள். தாசில்தார் கவிராயரைநோக்கி "அண்ணாச்சி கல்யாணசுந்தரமும் வந்திருக்கிறானென்று தந்தியில் நீங்கள் சொல்லவில்லையே" என்றார். கவிராயர் அந்தச்சந்தோஷத்தை நீங்கள் மட்டுந்தனியாக அனுபவித்துக் கொள்ளும்படிவிட்டுவிட எனக்குப் பிரியமில்லை என்றார். கவிராயரதுசாதுரியவார்த்தையைக்கேட்டு எல்லாருமெச்சினார்கள். கல்யாணசுந்தரத்தின் பிரஸ்தாபம் வந்தவுடனே அவர் யாரென்று விசாரிக்கவும், அவன் தேகசௌந்தரியத்தைக்கண்டு பலர் வியப்படையவும் தொடங்கினார்கள். சோமசுந்தரம் பிள்ளை கல்யாணசுந்தரத்தைத்தன் சமீபத்திலுட்கார்த்திவைத்து முதுகு தைவந்துகொண்டிருந்தார். இதற்குள் வெளியில் நின்றிருந்த ஜனங்களெல்லாம் வீட்டுள் வந்து

நிறைந்தார்கள் அத்தனைபேருக்குந் தாம்பூலம் பரிமாறலாயிற்று. வண்டியைக்காடிகானவில் நிறுத்திவிட்டு அப்போதுதான்வந்து நுழைந்த மாசிலாமணி, தெய்வசிகாமணியையும், கல்யாணசுந்தரத்தையும் கண்டு வணங்கிக் கண்ணீர் வடித்தான். அன்பே வடிவமான அவ்விருவரும் அவனைத்தழுவி "மாசிலாமணீ கவலைப்படாதே. எல்லா ஆபத்திற்கும் தப்பிப்பிழைத்துக்கொண்டோம். இனியெக்கும் போய்விடமாட்டோம் பயப்படாதே. அழாதேயென்றமர்த்தினார்கள். பெண்கள் கூட்டத்தோடு அப்போதுதான் வந்து சேர்ந்த காந்திமதியம்மாள் குழந்தைகளைக்கண்டதும் என்கண்மணிகளே உங்களுக்கு இந்தவயதுக்குள்ளே இத்தனை துன்பங்களும் வரலாமா என்று பிரலாபித்தாள். மிராசுப்பிள்ளை வீட்டுப் பெண்கள் காந்திமதியம்மாளைத் தேற்றி மரியாதை செய்து மனைக்குள் அழைத்துச் சென்றார்கள். சாப்பாடு தயாரானவுடன் ஊர்ஜனங்களுள்படச்சர்வ ஜனங்களும் போஜனஞ் செய்விக்கப்பட்டார்கள். தாம்பூலந் தரித்துக்கொண்டு சந்தோஷமாய் வீற்றிருக்கும் சமயங்கண்டு கவிராயர் தாசில்தார் முகத்தைப்பார்த்தார். அவர் ஓச்சன் மருளாடியென்றகள்வர்களிடததிலிருந்து தெய்வசிகாமணியை மாசிலாமணியாலெடுப்பித்துக்கொண்டு வந்து வளர்த்ததையும், அவன் படிக்கும் பருவத்தில், சகபாடியாகக் கல்யாணசுந்தரத்தைச் சேர்த்து வைத்ததையும், அவன் கல்க்கத்தாவுக்குப் படிக்கப்போன வரலாற்றையும், கவிராயர் வந்து கண்டு பேசிவிட்டுக் காரியாத்திரை போனதையும், தாம் உத்தியோகத்தை வர்ஜிதம் பண்ணியதையும், வேணுவனலிங்கம்பிள்ளையால் தெய்வசிகாமணி கதவிடுக்கிற் பட்டகஷ்டத்தையும், பின்பு அவன் வரலாற்றின் சாஸனங்களைக் கொடுத்தனுப்பியதையும், சொல்லிப் பின்னடந்தவைகளைத் தெய்வசிகாமணியைச் சொல்லும்படி தாசில்தார் தூண்டினார். எல்லாரும் நிஸப்தமாயிருந்து கேட்டுக்கொண்டிருந்தார்கள். பெண்கள் கூட்டம் சமையலறைத் தட்டிமறைவில் அமர்ந்திருந்தது. தெய்வசிகாமணி மெல்ல வாயைத்திறந்து பேச ஆரம்பித்தான் ஜனங்களெல்லாம் எட்டி யெட்டிப் பார்க்கலானார்கள். திருநெல்வேலிச்சத்திரத்தில் தங்கியிருந்து தன் பூர்வசாஸனங்களைக்குறித்துக் கலவரப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது ஒருவர் தோழமைகிடைத்ததையும், அவர்மூலமாக இராம

நாதபுரம் சத்திரத்தில் கண்ணுச்சாமியைக்கண்டு நாகபட்டினம் போய்ச்சேர்ந்து நெட்டால் தேசத்திற்குச் செல்லுங் கப்பலிற் பட்ட அவஸ்தைதையையும், தியாகராஜசெட்டியாரால் மீட்டப்பட்டு வந்து படித்துப் பரீக்ஷயிற்றேறி உத்தியோகத்திலமர்ந்ததையும், காசிக்குப் போன கவிசாபர் வந்து சந்தித்ததையும், வில்லிமங்கலம் கொள்ளைக்கேஸின் விவரத்தையும், உத்தியோகபங்கம் நேர்ந்து கல்யாணசுந்தரத்தினுதவியால் மீண்டடைந்ததையும் தெளிவாய்க்கல்லுமுருகக்கூறினன். கதவிடுக்கிலும், கப்பலிலும் தெய்வசிகாமணி கஷ்டப்பட்டதைச் சொல்லிவரும்போது அவ்விஷயம் அப்போது தான் நடக்கிறதாக எண்ணி மீனாக்ஷியம்மாள் தன்னையறியாமல் துடிதுடித்தாள். இந்தப்பரிதாபத்தை ஒரு கதையிலுங்கேட்டதில்லை யென்றார்கள். ஜனங்கள், அன்றிரவு ஒருவரும் நித்திரைக்குப்போகவேயில்லை. கல்யாணசுந்தரம் இங்கிலாந்துக்குப் போய் வந்த விவரத்தைத் தாசில்தார் கேட்டுக் கொண்டிருந்தார்.

இருபத்திரண்டாம் அதிகாரம்.

பைத்தியரோகமுடையவனுக்குப் பிதுரார்ஜிதச்சொத்தில் பாகமில்லையென்ற இந்தலசவை ஆதாரமாகவைத்துக்கொண்டு அவன் பங்கை அபக்போட்டுவிட்டிருப்போமானால் இத்தனை காலிகள் கூடிக்கொண்டு ஆதாளிபோடமுடியுமா? சாமிநாதன் எடுத்தகாரியத்தை முடித்துப்போட்டானே இந்த வீணுதிவீணன் (பூமிநாதபிள்ளை) பேச்செல்லாம் ஒருகாசும் பெறுமற்போயிற்றே. விராலிமலைப் பறம்புக்குக் கொண்டுவரவேண்டுமென்று நல்லயுத்திக்காரன் சொல்லுவானு? இவர் ஆளைச்சரிபார்த்துக் கொள்ளணுமாம் அசடு-இவனைப்போல திருநெல்வேலியிலிருந்து இராமநாதபுரம் வரை ஒருதுட்டிப்பயலுக்குச் செருப்புத்தூக்கிக்கொண்டு திரிந்த மடையனை நான் எங்குங்கண்டதில்லை. கண்ணுச்சாமி மூக்குச்சாமி எல்லாச்சாமியுங்கூடிக் காசைப்பறித்தான்களே தவிரக் காரியத்திலொன்றும் பண்டமில்லை. இந்தக்கண்ணுச்சாமியென்கிற சின்னச்சாதிப்பயல், நாகபட்டணம் சப்மாஜிஸ்திரேட்டாபீஸில்

கொடுத்த வாக்குமூலத்திற்கு அவனைச் சித்திரவதைபண்ணவே ணும். இருக்கட்டும் போக்கழிந்து போனதெல்லாம்போக நேற்றுத் திருவாரூரில் இரண்டாயிரத்தைக் கொட்டிக்கவிழ்க்க இழுத்து விட் டிட்டானே நாம்செய்தவேலையெல்லாம் வியர்த்தமாய்விட்டதே என் றுதங்கச்சாமி பிள்ளை தனக்குள்ளே பேசிக்கொண்டு, பூமிநாதபிள் ளையைப்பார்த்து அம்மான், அந்தச் செட்டிபெரும் பணக்காரனாமே அவன் ஒரு மகளையும் இவனுக்குத்தரப்போகிறானாம் ஏன் அந்தப் பிரஸ்தாபம் உங்களுக்கும் வந்திருக்குமே, கூடவந்திருக்கிறபொடி யன் வாஸ்தவத்தில் பாரிஸ்டர்தானா, என்ன ஆகாச வலைவீசிவிட் டான் சாமிநாதன்பார்த்தீர்களா? இனி எந்தவகையிலே நாம்தப்பிக்கி றது என்று தன்மாமனாரோடு கவலைப்பட்டுப்பேசினார். புத்தூர்ப் பிள்ளை என் புத்தி ஒன்றிலும் ஓடவில்லை யென்று பதிற்சொல்லி விட்டு இடதுகாற்பெருவிரல் நகத்தை வலக்கையாற் கிள்ளிக்கொண் டிட்கார்ந்திருந்தார்.

அந்தச் சமயம் ஒரு சிறுதுணி மூட்டையைக் கையிற்கோத் பிடித்துக் கொண்டு வேற்றூர் மனிதன் ஒருவன் வீட்டுக்குட் புகுந் தான்.

தங்கச்சாமிபிள்ளை— எந்தவூர்?

வேற்றூரான்— ஐயா நான் கும்பகோணம்.

தங்— இங்கே என்ன அலுவல்?

வே— தங்களைப் பாக்கத்தான்.

தங்— நீர் பார்க்க வராவிட்டால் நமக்கு நித்திரை கூடவராதே?

வே— அப்படியுத்திரவாகலாமா?

தங்— பின்னை எப்படிக்காணும் உத்திரவாகவேணும்?

வே— தாங்கள் தானே மிராசுப்பிள்ளையவாள்?

தங்— மேலவீட்டுப்பயல் களில் எவனும் எதுவும் சொன்னானோ?

வே— நான் நேரே தங்கள் வீட்டுக்குத்தான் வருகிறேன்.

தங்— சரி, வெளியேபோய். எனக்கு அவசரமானவேலை.

வே— நான் வந்த விஷயத்தைக் கொஞ்சம் தெரியப் படுத்திக் கொள்கிறேன்.

தங்— இப்போது சமையமில்லை போகலாம். வெளியே.

வே— எந்நேரந்தான் வரும்படி கட்டளையிடுகிறீர்கள்?

தங்— மணிக் கணக்குப்படி சொல்ல முடியாது.

வே— தயைசெய்து சொல்லத்தான் வேண்டும்.

தங்— நீ யென்ன சுத்த அவுரி மனுஷனா இருக்கிறாய் சமையமில்லை யென்றால் வாலை மடக்கிக் கொண்டு போகிறதா சள் புள் என்று சத்தம் போடுகிறாயே.

பூமிநாதபிள்ளை— இவனொரு தோகைமலைக் காரனோ?

தங்— அவனுக்குங் கூட மனுஷக்குறிப்பு நல்லாத் தெரியும் இவனொரு லாட்ரிச் சாப்பாட்டுக் காரன்.

வே— வாலை மடக்கவா, நல்லதையா? நானா சள் புள்ளென்று சத்தமிடுகிறேன். கொஞ்சம் நாவை அடக்கிப் பேசுங்கள் நீங்கள் பணக்காரர்களாயிருந்தால் உங்கள் மட்டுக்குத்தான் எங்களுக்கு எட்டி வீசாது.

தங்— உனக்கு எட்டி வீசாதே என்ன காரியத்துக்குக் காத்துக் கொண்டிருக்கிறாய்? நீபுத்தி சொல்லி நான் பேசிப்பழக வா? அதிகப்ரசங்கி.

வே— நீங்கள் தான் வாய் வீணாகப் பேசுகிறீர்கள் ஒரு வார்த்

தையில் நான் வந்த காரியத்தை முடித்துவிட்டுப் போக லாம்.

தங்— நீ யார் சர்வமுட்டாள்? என்ன ராஜகாரியம் பேசவந்திருக் கிறாய்?

வே— வாபைப்பதனம் பண்ணும் ராஜகாரியமாகத்தான் வந்தி ருக்கிறேன்.

தங்— (கொஞ்சந் திகைத்து) என்ன விசேஷம்.

வே— விசேஷமா உமக்குப் பிடிவாரண்டு கொண்டு வந்திருக் கிறேன் வாரண்டில் கையெழுத்துப் போட முடியுமா முடியாதா?

பேச்சில்லை.

வே— என்ன ஓய் அங்கும் மிங்கும் பார்க்கிறீர் ஓட்டம் பிடிக்க வோ, அந்த நினைப்பை மறந்துவிடும் நான் யார் தெரியு மா, அமீன் மல்லாரி ராவ்.

பூ— ஏனையா அதிகப்பேச்சு வந்த வேலையைக் கிரமமாகப் பார்த் துக்கொண்டு போக வேண்டியதுதானே.

மல்லாரி ராவ்— ஓய் பூமிநாதபிள்ளை உம்மையும் எனக்குத்தெ ரியும். தோகைமலை ஆசாமிகளுக்கு முதலாளி யென்று யார்காணும், முதலில் ஒழுங்கு தவறிப் பேசினது. வந் தகாரியம் என்னவென்று ஒரு வார்த்தை கேட்டால் இவ் வளவு பிரமாதம் ஏன் காணும் வருகிறது.

பூ— நீங்கள் கும்பகோண மென்று கபடமாச் சொல்லலாமா?

அ. ம— உண்மையாகக் கும்ப கோணந்தான் என் சொந்தவூர் பி ழைக்க வந்திருக்கிற திருநெல்வேலியைச் சொல்லச் சொல்லுகிறீரா எங்களப்பன் காணிபோ, வாடகை வீடு.

பூ— அமீனுவென்று உள்ளதைச் சொன்னால் மோசமென்ன.

அ. ம— ஓய் பிள்ளே, அந்த-உடான் இங்கே செல்லாது இந்த மனுஷனைத் தேடி எத்தனை தடவை காணும் அலேகிறது எங்கள் மேலதிகாரி எங்களுக்கு ஒத்தடங்குடுக்கிறுனே நாங்கள் என்ன செய்வோம். பிடியும் வாரண்டை கொஞ்சம் பொறுங்கள் கோபத்தை ஆற்றிப் பேசுங்கள்.

அ. ம— உம்மிடத்தில் எனக்கென்ன கோபம் வேண்டியிருக்கிறது கையெழுத்தைப்போடும்.

தங்— அம்மான் கையெழுத்துப் போட்டு வாரண்டைப்பெற்றுக் கொள்ள வேண்டியதுதானே.

பூ— யோசித்துக்கொள்வோம்.

அ. ம— யோசித்துச் செய்யவா. நல்லது பூமிநாதக் கோர்ட்டார் உத்திரவு பண்ணி விட்டார்கள் யோசித்துக்கொண்டுட்கார்ந்திரும் நான் வருகிறேன்.

தங்— உட்காருங்களேயா இப்ப என்ன அவசரம் வேறே யாருக்கும் வாரண்டு நிறைவேற்ற வேண்டியிருக்கிறதோ.

அ. ம— இல்லே, இல்லே இந்தப்பெரிய இழவுக்குத்தான் என்னைப் போட்டார்கள் நான் கோர்ட்டை விட்டே வெளியேற மாட்டேன். கையெழுத்துப் போடுகிறதானுற் போடவேணும், இல்லாவிட்டால் மேல வீட்டிற்குப் போய் அத்தாட்சி முடித்துக் கொண்டு போகிறேன்.

பூமி— பிள்ளேயவாள் சொல்லுகிறபடி எழுதுங்கள், எதோ-தாம் பூல—

அ. ம— ஓய் பூமிநாதபிள்ளே உம்முடைய தோகைமலேக் கெட்டிக்காரத்தனத்தை வேறிடத்திலே காட்டும் இங்கே நடவாது. அழுக்கு வேஷ்டிக்காரன் யாசகத்திற்குத் தான் வந்திருப்பானென்று நினைத்தீர்களே காணும்.

தங்— ஆகட்டும் வாரண்டுத் தொகைதான் எவ்வளவு பார்த்துச் சொல்லுங்கள்.

அ. ம— அப்படிக்கேளும் அது தான் சரியான மாதிரி 13005-14-9 ஏப்ரல் முடிய. தங்கச்சாமிபிள்ளை சுவரோடு சுவராய்ச்சாய்ந்து விட்டார். பூமிநாதபிள்ளை ஆகாயததைப் பார்க்கிறார். வாரண்டுக்காரன் மன்னியைப் பிடித்து நெறிக்கிறன். காமாக்ஷியம்மாள் கையை நெரிக்கிறள். "முன்னமே துர்ப்பலம் அதிலுங் கெர்ப்பினி" என்பதுபோல, தெய்வசிகாமணி ஊர்வந்து சேர்ந்த பெருந்துக்கத்தில் ஆழ்ந்து கிடந்த இவர்களுக்கு இதுவுஞ் சேர்ந்து விட்டது என்ன செய்வார்கள் பாவம். தங்கச்சாமிபிள்ளை வீடு நரகமும், சோமசுந்தரம்பிள்ளை வீடு ஒரு சொர்க்கமு மாயிருக்கிறது.

தங்கச்சாமிபிள்ளை— இந்த மத்தியகால நஷ்டம் வக்கீலால் வந்தது.

பூமிநாதபிள்ளை— வைத்தியனிடத்திலும் வக்கீலிடத்திலும் உள்ளதைச் சொல்லவேண்டுமென்பதை நீங்கள் முழுதும் மறந்து விட்டுக் காரியம் பார்த்தீர்கள். எல்லாங் கெட்டுக் குட்டிச்சுவராய்ப் போய்விட்டது. எதிரியின் பலத்தை வக்கீலிடஞ் சொல்லியிருக்க வேண்டாமோ.

தங்— அது போகட்டும் இந்த முதுகடிக்கு வகை யென்ன?

பூமி— என்னாலே ஒரு தம்படி கூடச் சேகரிக்க முடியாது பெரிய இடமென்று சம்பந்தபண்ணிவிட்டு நான் பட்டபாடு போதும். "இட்டகுடியுங் கெட்டு ஏற்றகுடியும் கெட்டதென்றும்" பழமொழியைப் பரீக்ஷிக்க வேறிடத்திற்குப் போகவேண்டாம் என் குடும்பக் காரியத்தைச் சொல்லப் போனல் வெட்கக்கேடு, வாங்கின ஆசாமிகள் எவனாவது இந்த ஒருவருஷமாய் வட்டியாவது கொடுத்திருக்கிறனா? இதையெல்லாம் உங்களிடஞ் சொல்லி ஆவதென்ன, வில்லிமங்கலத்து வகைக்கு நீங்கள் வாங்

ன தொகை, அகத்தியம் இச்சமையம் வேண்டியிருக்கிறது அதற்காகவே வேலைகளை யெல்லாம் போட்டுவிட்டு அவசரமாய்வந்தேன் நீங்கள், கோர்ட்டுச் செலவுக்கு வாங்கினதொகையிருக்கிறது அதுவுங் கைக்கணக்கின்பேரில, அதுஎப்படியும் ஒரு கணக்காகிறது. இந்தப்பணத்துக்கு வெகுமுடை அவளவுதான் என்னாலே சொல்ல முடியும்.

தங்கச்— நான் கோர்ட்டாரிடம் நேரிலேபோய் 15-நாள் தவணை கேட்டு வாரண்டை நிறுத்திவைக்கிறேன் அதற்குள் என்னுடைய எந்தப்பூஸ்திதியையாவது எந்தவிதமான பந்தகமும் பண்ணித் தொகைகொண்டு வந்து சேர்ப்பீர்களா? வீட்டைச்சுற்றிக் சக்ஷிக்காரர்கள் வலைக்கட்டாக நின்றுகொண்டிருப்பதினாலே இந்தவாரண்டைச்சரிபண்ணியனுப்பமுடியாது அம்மான், பதினைநாட்பகல் முப்பதுக்குள் கோர்ட்டு வாசலுக்குப் பணம் வந்துசேராவிட்டால் என்னை நம்பவேண்டாம். சிறைச்சாலையிலிருந்துவிட்டு இந்தச் சரீரத்தைச் சுமந்துகொண்டும் திரியலாமா? ஒரு திடஞ் சொல்லுங்கள் நான் கையெழுத்துப் போட.

அ. ம— அவர் திடஞ்சொல்லா விட்டால் கையெழுத்துப் போடமாட்டீரோ?

தங்— ராகுவேளையாயிருக்கிறது இன்னும் ஒரு நாழிகை பொறுங்கள் கையெழுத்துப் போட்டு விடுகிறேன்.

அ. ம— எது தெக்ஷணத்துக் கைவரிசையோ ராகுகாலமா, குளிககாலமா? இன்றைக்குப் பூராவும், உம்முடைய பேருக்குப் படுபக்ஷியாயிருந்தால் என் முகத்தைப் பார்த்துக்கூடப் பேசமாட்டீரோ? எனக்கு நாழிகையாகிறது கையெழுத்தைப் போடும்.

தங்— அம்மான்! சொல்லுங்கள்.

பூ— என்னத்தைச் சொல்லட்டும், நூறு அம்பதா இருபத்தாறு பை ஒரேதேதியிற் கிளப்பவேணுமே, எவ்வளவு பணக்காரனாயிருந்தாலும் முடியுமா? அதுவும் நகையா நாணயமா ஈடு செய்கிறோம்? ஒன்றுமில்லை. வெறும், மண்ணை நம்பி எவன் சல சலவென்று கொட்டப் போகிறான் ஏதோ என்னாற் கூடியவரையும் பார்க்கிறேன்.

அ. ம— இந்தக்கதை யெல்லாம் பேசிக்கொண்டிருந்தால் எனக்கு நேரம் போகிறது, சீக்கிரம்.

தங்— சரி, கடவுளிருக்கிறார் வாரண்டெங்கே.

அ. ம.— இதோ இந்த இடத்தில் கைநாட்டுச்செய்யுங்கள்.

இருபத்து மூன்றும் அதிகாரம்.

பாப்பையாபுரத்திற்கு வடமேற்குமூலையில் ஒரு பர்லாங்கு தூரத்தில் செண்பகவல்லியம்மன் கோவிலிருக்கிறது. அதையொட்டினாற்போல வடகிழக்குத்திசையில் செண்பகாடவி, என்னும், ஒரு இளந்தோப்பு உளது, கோடைகாலத்து வெயிலிலடிபட்டு நடுப்பகலில் வந்து அத்தோப்புக்குள் நுழைந்தாலும் கொஞ்சநேரத்திற்குள் குளிர்ச்சிபிறந்து நடுக்கத்தைபுண்டாக்கிவிடும் படியான தட்பமுடையது. மாமரங்கள் செந்நிறத்த தளிரையின்று பூவும் பிஞ்சும், காயும், பழமும்செறிந்து புதியமணவரைப் பெண்போற்குலுங்கிநிற்பதும் ஆஸ்திக்கு மிஞ்சின கடன் பட்டுத்தத்தளிக்கும் அறிவிலிகளைப்போல வாழைமரங்கள் தாங்கமுடியாதகுலையைச் சுமந்து நிற்பதும், இலக்கணவித்வான்களது மேலானவசனம் இளங்கல்விமானுக்கர்களுக்குச் சேர்த்து வாசிக்கத்தெரியாமல் தேடுவாரற்றுக்கிடப்பது போல மகிழ விருக்ஷங்கள் நாரிற்றொடுக்க இசையா

தமிகுவாசனையுள்ள மலர்களை மண்ணிற் சொரிந்து நிற்பதும், பேய் பிடித்த பெண்கள் தலை விரித்தாடுவதுபோல கொன்றைச் செடிகள் கரியகாய்களைத் தொங்கவிட்டு அசைந்தாடி நிற்பதும், தன்னைத்தே டிவந்த நேயர்களுக்கு வயிற்றுச்சோறும் போடாமல் வாய் விஸ்தாரஞ் பேசிக் கடத்தி விடும் பகல் வேஷக்காரனைப்போல, மணமற்ற பூவை மட்டும் புஷ்பித்துக் கொண்டு பாதிரித் தருக்கள் நிற்பதும். எந்த மதஸ்தர் எவ்வெப்பெயரிட்டு எவ்வாறு கருதி வழிபடினும் அவ்வம் மதஸ்தருக்கு அப்பெயரினராய் அவ்வவர்கருதியாங்கு வெளிப் பட்ட ருள் செய்யும் ஒருவராய எம் பரசிவப்பெருந் தகையார் போல பனைப்பாதபங்கள் தன்னைபடைந்தோர் இச்சித்த பொருளை வேண்டியவாறுதவி நிற்பதும், அழகும் குணமும் இல்லாத ஒருவனிடத்தில் கல்வி யமைந்திருப்பது போல இலையற்ற முட்செறிந்த மாதுளஞ் செடிகள் கனிபழுத்து நிற்பதும், வீட்டுப்பொருளை யெல்லாம் விற்றுச்செலவு செய்து படிக்கவைத்த தாய் தந்தையரைக் காடிக்கஞ்சிக்குத்திண்டாடும்படி விட்டுவிட்டுவேறு மதத்திற் புகுந்து தமது வருமானப்பொருளை யெல்லாம் தம் புதிய மனையாட்டிகட்குச் சமர்ப்பித்து நிற்கும் புதிய நாகரீக வாலிபர்களைப் போல உச்சியிற்றூங்கிய இள நீர்க்காய்களை ஒன்றிரண்டாக வேலிக்கு வெளியிலுதிர்த்துக்கொண்டு முடக்குத்தென்னமரங்கள் நிற்பதும். உலகத்தாரைப் போல உண்டுடுத்துத்திரியும் இல்லற ஞானிகளது நல்லொழுக்கத்தை அறிவாளிகள் அறிந்தடைவது போல வாசனையால், ஈயினங்கள் சென்று சேரும் கனிந்தபழவர்க்கங்களை வேரெல்லாம் அடக்கி அங்கொன்றிங்கொன்றாகப்பலாமரங்கள் நிற்பதும், கர்மவசத்தால் வறுமை வந்தகாலத்துத் தப்பொருளை யெல்லாமிழந்தும் தமது பெருமைக்குக் குறைவின்றி நிற்கும் தீர்க்க புத்திமான்களைப் போல அரசமரங்கள் இலைகளையுதிர்த்து விட்டுத் தம் பசுமை குன்றாது நிற்பதும், கையில் நாலுகாசை வைத்துக்கொண்டு சிக்கெனச்சீவனஞ்செய்யும் சிறு பணக்காரனைப் போல கமுக மரங்கள் மட்டான வளர்ச்சியோடு செழித்து நிற்பதும், நெடிய பூமண்டலத்தைத் தனக்குளடக்கி ராஜ்பரிபாலனத் திற்கு ஆங்காங்கு ராஜதந்திரிகளை நியமித்துக் குறுநிலமன்னர்களுக்குப் பயந்து வந்து அபயம் புகுவாரை ஆதரித்து உலகத்திற்

றனக்கு மேற்பட்ட பெருமையுடையவர்கள் இல்லை யென்னும் படி வீற்றிருக்கும் சக்ரவர்த்திகளைப் போல பரந்த இடத்தை மறைத்து விரிந்த கிளைகள் தோறும், வீழுன்றிப் பலத்து, அணிதேர்புரவி ஆட்பெரும்படையொடு, வெயிலால் வருந்திவரும் மன்னர்க்கிருக்க நிழல் கொடுத்துக் காப்பாற்றி விருக்ஷவர்க்கங்களிற்றனக்குப் பெரியதொன்றில்லை யெனும்படி ஆல விருக்ஷங்கள் தழைத்தோங்கி நிற்பதும், இடை யிடையே பலபூக்கொடிகள் நறுமணம் வீசும் புஷ்ப சாலங்களைச் சொரிந்து வண்டின மொய்க்கத் துவண்டு நிற்பதும், காலைப் போஜனத்திற்குப் போகும் வேளையில் திண்ணைப் பள்ளிக்கூடத்துச் சிறுவர்கள் தம் பல்வேறுபாடங்களைக் கருத்தான் றியிரைந்து படிக்கும் தன்மைபோல பலஜாதிப்பறவைக்கூட்டங்கள் அவ்விருக்ஷங்களின் மீது கூச்சலிட்டுக்கொண்டு திரிவதும் பார்க்கப் பார்க்க மனோகரமாயிருக்கும், அத்தண்டலையில், தெய்வசிகாமணியும் கல்யாணசுந்தரமும் ஒருநாள் மாலைநேரத்தில் உலாவிக்கொண்டு நின்றார்கள்.

தென் பக்கத்திலுள்ள செண்பகத்தடாகத்தில் ஊர்ஜனங்கள் தண்ணீர் எடுக்க வந்து போய்க் கொண்டிருந்தார்கள். கல்யாணசுந்தரம் அங்கொருகழுகமரத்திற் சாய்ந்து நின்று இங்கிலீஷ்வித்வான் ஷேக்ஸ்பியர் செய்த (Merchant of Venice) வெனிஸ் வாணிகன் என்னும் நாடகத்தைப் படித்துக் கொண்டிருந்தான். சோலையின் அழகைக் கவனித்துக்கொண்டே சற்றுதூரஞ் சென்றான் தெய்வசிகாமணி, பேடையுஞ் சேவலுமான இரண்டு மாடப்புறாக்கள் குங் குங் கென்று சத்தமிட்டு உல்லாஸிப்பதைக்கண்டு திகைத்து நின்றான். அக்கொஞ்ச நேரத்திற்குள் அவன் மனம் பற்பல உத்தியோகங்களிற் புகுந்து வேலைசெய்து விட்டுக் கடைசியாய் மங்களாம்பாளிடம் போய் நிலைபாக அமர்ந்து கொண்டது. தெய்வசிகாமணிக்கு ஏதோ ஒரு ஞாபகம் வந்து சட்டைப்பையிற் கையைப்போட்டு ஒரு கவர்க்கடிதத்தை யெடுத்தான் அது நாகபட்டினத்திலிருந்து அன்று தபாலுக்கு வந்ததாக மேல்முத்திரையால் வெளியாயிற்று கடிதத்தைப் பிரித்து வெகு நேரம் கவனித்துப் பார்த்தான் ஒன்றும் வெளியாகவில்லை. யாரோ

மூதினகடிதம் இது அமுர்தலிங்கமா, அவனுக்கு நம்மிடத்தில் ஒரு காரியமுமில்லையே? நம்முடைய சிநேகிதர்களில் யாராவது அனுப்பியிருக்கக்கூடுமோ? அப்படியானால் இவ்வளவு சமர்த்தாய் எழுதியிருக்க மாட்டார்களே. நாம் எழுதியிருந்த கடிதத்திற்குப்பதில் மங்களாம்பாள் எழுதியிருக்கக்கூடுமோ, எழுத்தும் அவள் கைப்பட்டது போலவேயிருக்கிறது. மறுபடியும் கவனித்துப்பார்க்கிறான். சரி சரி-மங்களம் போட்ட படுமுடிச்சுத்தான். ஏ மங்களம் என்னிடத்திற்றானா இந்த வேலைமானம், கண்டு பிடித்துவிட்டேன் உன் சாதுரியத்தை, என் அன்பே! "கவலையுறத்தக்க காரியமாயிருக்கிறது" என்றெழுதியிருக்கிறாயே, ஒருகவலையும வேண்டாம். "உடலாதிமூன்றையும் மனப்பூர்வமாக அர்ப்பணஞ் செய்திருக்கும் என்னை மீட்டுஞ்சம்மதங்கேட்டெழுதியது" என்ற வுன்வாக்கியம் என்னெஞ்சையீர்கிறது. "ஆருயிர்க்காதல" என்னும், உன் கடிதத்தின் முதல்வரிஎன்னை கொத்தடிமைபாக்கொண்டிருக்கிறது. "தங்கணிருபம் வந்தது" என்று இலக்கணச் சந்தியும் இருபொருளும் பயப்பவரைந்த என் காதலீ! உன் கண் நிருபத்தை நேரிற் பார்க்க என்று கிட்டுமோ, "உத்திரவுப்படி நடந்தும் நடந்துகொண்டுங் நடக்கவுமிருக்கும் விதேயை, மங்களாம்பாள்" என்றெழுதியொப்பமிட்ட உன் செந்தாமரைக் கரத்திற்கு ஒரு புத்தகப். எழுதிக் கேட்டகுற்றத்தை க்ஷமித்துக்கொள், என்னபுத்திசாலித்தனம் என்னகூர்மை இப்படி யெல்லாம் எழுத எங்கே கற்றாய் உன் அறிவின் பலந்தான் என்னே, எழுத்துக்களைப் பொறுக்கிப் பொறுக்கி அர்ச்சனை பண்ணலாமே. நாளைக்கு இக்கடிதத்திற்குப் பதிலெழுதிவிடுத்தான் கல்பாணசுந்தரத்திற்கு இதைக் காட்டவேண்டும். அவனும் இதோ வந்து விட்டான் கல்பாணம், நேரமாகிறதே வீட்டுக்குப் போவோம் வா என்றான் தெய்வசிகாமணி.

இருபத்துநான்காம் அதிகாரம்.

என்னவிதமாய் எதிர்வாதஞ் செய்கிறான்.

தங்கச்சாமிபிள்ளைக்குச் சம்மன் சேர்ப்பிக்கப் பட்டிருக்குமோ எப்படியோ என்றார் கவிராயர் ஜெகவீரபொம்முவிடம்.

ஜெகவீரபொம்மு— ஐயா சந்தேகமில்லாமற் சேர்ந்திருக்கும் ஜயிலிலிருக்கிறவருக்குச் சம்மன் சேர்வது கஷ்டமா.

கவிராயர்— அதென்ன அப்படிச் சொல்லுகிறீர் பூமிநாதபிள்ளை பணத்தைக் கட்டி மருமகனை மீட்டி விட்டாரென்று கேள்வியே?

ஜெ— அவரா-அப்பப்பா புளியம் பூவுக்கு ராசிவட்டி போடுவாரே

கவி— இருந்தாலும் மகள் புருஷன் அவமானப்படப் பணக்கார மாமன் பார்த்துக் கொண்டிருப்பாரா?

ஜெ— நான் ஒரு விதமாகக் கேள்விப்பட்டேன் மிராசுப்பிள்ளை சொத்துக்கள் முழுவதையும் கிரயமாயெழுதி வாங்கிக்கொண்டு பூமிநாதபிள்ளை பணஞ்செலுத்தப் போகிறாராம்.

கவி— அவன் எக்கேடுங்கெட்டு எருக்கு முளைச்சுப் போகிறான். நம்முடையகாரியத்தைப் பார்ப்போம். வில்லிமங்கலம் கொள்ளைக்கேஸ் முடிவாகிவிட்டதாக வக்கில் கடிதம் எழுதியிருக்கிறார்.

தியாகராஜ செட்டியார்— ஐயா கேஸின் முடிவென்ன?

கவி— மூன்றெதிரிகளை எவ்வேழு வருஷமும் ஒன்பது பேரை நந்நான்கு வருஷமும் சிக்ஷித்தும் ஒருவனை விடுதலை செய்தும் இருக்கிறதாம்.

பாரிஸ்டர் கல்யாணசுந்தரம்— பேஷ் நல்ல நியாயாதிபதி

ஜெகவீர பொம்மு— விராலிமலை வேட்டை பலிதமாயிட்டுதோ?

தெய்வசிகாமணி— மதிப்பான சாக்ஷியும் தெளிவான வாக்குமூலம் இந்தக்கேஸ் என் தண்டனையடையாது.

சோமசுந்தர—நம்முடைய கேஸுக்குத் தவணை யென்றைக்கு?

கவி— இன்னும் 13 நாள் இருக்கிறது.

சோ— என்னவிதமாக விண்ணப்பம் தாக்கல் பண்ணியிருக்கிறீர்கள்?

கவி— பாப்பையாபுரம் வகையறு 12-கிராமங்களின் மிராசுஎன் பிதாவுக்குப் பூர்வீக சொந்தம் அவர் தனக்குதவியாகத் தன் சகோதரர் தங்கச்சாமிபிள்ளையைக் குமாஸ்தாவாக நியமித்திருந்தார் என் பிதா வியாதியாயிருந்த காலத்தில் அவரை வஞ்சித்து மிராசைத் தன்பேருக்குப்பதிவு செய்துகொண்டு அனுபவித்து வருகிறார் அவருடைய அக்ரம வியாபகம் சட்டப்படி செல்லத்தக்க தில்லை. ஆகையினாலே என் பிதாவின் மிராசை யென்வசம் ஒப்புவிக்கும்படி தீர்ப்புச் செய்யவேண்டு மென்று தெய்வசிகாமணியைக் கொண்டுமனுப் பண்ணியிருக்கிறது.

சோ— நல்லமாதிரிதான் அவனுக்கும் (தங்கச்சாமி) ஒருகெடுதி வாராமலும் நமக்கும் காரியசித்தியாகும்படியாயும் பார்த்துக்கொள்ளுங்கள் என் தம்பி மஹாபேதை இருக்கிற போக்கிரிகளாகக் கூடிக்கெடுத்து விட்டார்கள்.

கவி— அவர் விவரப்பத்திரிகை (ஸ்டேட்டுமெண்டு) கொடுத்திருக்கிற மாதிரியிலேயே ஒரு தீங்கும் அவருக்கு வர மாட்டதே.

சோ— என்ன விதமாக எதிர்வாதஞ் செய்கிறான்?

கவி— வாதி தெய்வசிகாமணிபிள்ளை என் தமையனுடைய மகனல்ல? என் விரோதிகளான சாமிநாதக் கவிராயர் நெல்லையப்பபிள்ளை யென்ற இருவரும் சித்தஸ்வாதீனமில்லாதிருக்கிற என் தமையனைக் கைவசப்படுத்திக் கொண்டு, 16-17-வருஷங்களுக்கு முன், திருச்செந்

னூர்த் திருவிழாக் கூட்டத்திற் றிருடர்களாற் சொல்லப் பட்டுப் போன தெய்வசிகாமணியை இன்னமும் உயி ரோடிருக்கிறனென்று நம்பும்படி செய்து, இன்னவூர் இன்னஜாதி இன்னவன் மகனென்றுந் தெரியாத இந்த வாதியை முன்னிட்டுக் கொண்டு என் பரம்பரைப்பாத் தியதையை மோசஞ் செய்யக்கருதி, இந்தப்பொய்யான வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கிறது. மிராசை மோசடி யாக நான் அபகரித்துக் கொள்ளவில்லை. யாவத்ஜீவப ரியந்தம் கவர்னமெண்டு வேலைக்கு லாயக்கில்லாதவ ரென்று நீக்கிவிடப்பட்ட என் தமையனுருக்குப் பதி லாக துரைத்தனத்தாரால் நியமிக்கப்பட்டு 16-வருஷம் நிராடங்கமாய் வேலைபார்த்து வருகிறேன். வாதியாற் சொல்லுகிற அக்ரமப் பிரவேசம் மறுக்கப்படுகிறது. என்பதே அவர்கக்ஷி.

சோ— அட சண்டாளா எனக்கா சித்தஸ்வாதீனமில்லை, என்னை வேலைக்குபயோகமில்லாதவனென்று நீக்கிபா விட்டார் கள். இந்தக் கெடுமதி உனக்கெப்படி வந்தது. ஐயோ, பெண்வழிப் பட்ட பேதாய்!

கவி— ஒன்றொன்றாச் சொல்லவா ஒருமிக்கச் சொல்லவா இந்தக் கடிதம் தாசில்தாருக்கு நீங்களெழுதினது தானு பாருங் கள் (தெய்வசிகாமணி) ஒரு கடிததைக் கொடுக்கிறான்.

சோ— (வாசித்துப் பார்த்துவிட்டு) இதென்ன ஆகாசக்கோட் டை அட தெய்வமே, என் கையெழுத்தும் கீழேபோட் டிருக்கிறானே! தாசில்தார் எனக்குக் கடிதமெழுதியி ருப்பதாக இந்த லட்டரால் வெளியாகிறதே அப்படிப் பட்ட ஒரு காகிதமும் என் கைக்குக் கிட்டவில்லையே, பெருமோசம்! பெருமோசம்!

கவி— அது அப்படியிருக்கட்டும் இந்தக்கடிதத்தைப் பாருங் கள் (தெய்வசிகாமணி ஓச்சன் கடிதத்தைக் கொடுக் கிறான்.)

சோ— (படித்துக் கொண்டே) அடே பரமசாதகா, கொலைகாரட்பாவி, புலையா, நீசா, டாவபுண்ணியந் தெரியாதபதரே, பெற்றபிள்ளையைக் கொலை செய்யச் சொல்லிக் கடிதம் எழுத உனக்குக் கையும் வந்ததா, சீ, சடைகெட்ட கழுதை, என்முகத்தில் என்றைக்கும் விழிக்கமாட்டாய் உன்பிறவித்தொந்தம் இன்றோடொழிந்தது போய் அருநரகஞ்சேரு 'சவிராயரைப் பார்த்து' ஐயா, இந்தச்சண்டாளன் பிரஸ்தாபம் ஒன்றையும் என்காதிற் போடவேண்டாம். சிவ, சிவ, மேல் மேல்நடக்கவேண்டிய வேலைகளை ஒழுங்காகப் பாருங்கள்.

கவி— எல்லாஞ் சரியாய்த்தான் நடந்து வருகிறது தாங்களும் கோர்ட்டுக்கு வரவேண்டியதாய் நேரும் போலிருக்கிறதே,

சோம— இன்றியமையாதென்றேற் பட்டால் வருகிறேன்,

பாப்பையாபுரத்திலுள்ள சோமசுந்தரம்பிள்ளையின் பந்துக்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் தெய்வசிகாமணி முதலியவர்களுக்கு விருந்து நடந்து கொண்டு வருகிறது. மாசிலாமணிக்கு, ராஜோபசாரம் நடக்கிறது, அவன் பேரில் ஊரிலுள்ள சகலருக்கும் அத்யந்த பிரியம் அவனிருக்கிற விடத்தில் எப்போதும் பத்துப்பேர் கூடிக்கொண்டு தெய்வசிகாமணியின் இலக்ஷ்மிமால் கதையைச் சொலச் சொல்லிக் கேட்டுக்கொண்டேயிருப்பார்கள். வழக்குத் தவணையும் நெருங்கிவிட்டது உபயசக்ஷியிலும் சாக்ஷி ஜாப்தாக் கொடுத்து விட்டார்கள்.

வாதிபக்கத்திற்குப் பாப்பையாபுரம் புரோஹிதம் சங்கரநாராயணஐயர், தாண்டவராயமுதலியார், கவிராஜ சாமிநாதபிள்ளை சிரங்கஞ் செட்டியார், முத்துரெகுநாதபிள்ளை, ஜெகவீரபொம்முநாயக்கர், அழகுமுத்து ராமலிங்கதுரைச்சிங்கத்தேவர், சடாக்ஷரக்கோனர், சூர கோவிந்தரெட்டியார், புகழ்கொண்ட ராமக்கவண்

டர், சீனியப்பநாடார், சேதுராமலிங்க பண்டாரம், விருத்தாசல ஆசாரி, குடும்பன் வீரன், வெட்டியான் சித்திரன், திருநெல்வேலி தாசில் நெல்லையப்ப பிள்ளை, மாசிலாமணி, நாகபட்டினம் தியாகராஜசெட்டியார், என்ற 18-சாக்ஷிகளும் பிரதிவாதி பக்கத்தில் புத்தூர்ப்பூமிநாதபிள்ளை, திருச்செந்தூர் அம்மணிஐயர், மணிமங்கலம் கருப்பனம்பலம், உசிலம்பட்டிச் சோணையனம்பலம், என 4-சாக்ஷிகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தார்கள், விசாரணைத்தேதியன்று பகல் 10-மணிக்குமுன்னமேயே இருசாக்ஷிக்காரர்களும் கோர்ட்டு வாசலில்வந்து கூடியிருந்தார்கள். வாதிக்கு பாரிஸ்டர் கல்யாண சுந்தரமும், பிரதிவாதிக்கு பாரிஸ்டர் மாட்டின்துரையும் ஆஜரானார்கள். சரியாய் 11-மணிக்குத் திருநெல்வேலி ஜில்லாப் பிரதமஜட்ஜ் வந்து சிம்மாசனத்தின் மீதமர்ந்து கேஸைவிசாரணைக்குத்துவக்கினார். பிரசித்தமான ஒரு பெரியமனுஷன் சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு அற்பக்கேஸாயிருந்தாலும் பெருங்கூட்டங்கூடி வேடிக்கை பார்ப்பது நாட்டின் ஸ்வபாவம் சோமசுந்தரம் பிள்ளையோ தெக்ஷணத்திற் கீர்த்திபெற்ற குடும்பஸ்தர்களில் ஒருவர், அவருக்குத் திருநெல்வேலியிலும் அதைச்சேர்ந்த நாட்டுப் புறங்களிலும் நெருங்கியபந்துக்களும் நேசரும் பலருண்டு, இந்தவழக்கின் பிரஸ்தாபம் எட்டினவுடன் அவ்வுறவினர்பலர் சோமசுந்தரம் பிள்ளைக்குச் சார்பாகவந்து கூடினார்கள். மற்றசாக்ஷிக்காரர்களுஞ் சேர்ந்து பெருங்கூட்டமாயிருந்தது, முதலில் தெய்வசிகாமணிபிள்ளைவிசாரிக்கப்பட்டார், அவர்தன்னுடையபிரியாதைச் சொல்லிமுடிக்கவும் பாரிஸ்டர் மாட்டின்துரை கிராஸ் (குறுக்குக்கேள்வி) கேட்டார்.

உம்முடைய சொந்தவூர் எது?

தெய்— பாப்பையாபுரம்,

பா. மா. இப்போது எதில் வசிக்கிறீர்?

தெ— பாப்பையாபுரத்திலேதான்,

பா. மா. கொஞ்சக் காலத்திற்கு முந்தி?

தெய்— மணிமங்கலம் நாகபட்டினம் இவைகளில்.

பா. மா. நல்லது, தற்சமயம் எதிலிருக்கிறீர்?

தெய்— திருநெல்வேலியில்.

பா. மா. தாசில் நெல்லைப்பபிள்ளைதானே உம்முடைய பிதா?

தெய்— ஆம் போஷகபிதா.

பா. மா. உம்முடைய சொந்தப்பிதாவின் பெயரென்ன?

தெய்— சோமசுந்தரம் பிள்ளை.

பா. மா. அவர்தான் உமது பிதாவென்று எவ்வளவு காலமாகத் தெரியும்?

தெய்— சிலகாலமாகத்தான் தெரியும்.

பா. மா. நீர் சொல்லுகிற சிலகாலத்திற்கு முந்தியெல்லாம் நெல்லையப்பபிள்ளையைத்தானே பிதாவாக நினைத்திருந்தீர்?

தெய்— ஆம் இப்போதும்பிதாவாகவேதான் நினைத்திருக்கிறேன் 2-2½-வயதிலிருந்து கடந்த 4-5-வஷங்களுக்குமுன்வரையும் தாசில்தாரைப் பிதாவாகநினைத்து அவருடையவீட்டில் வசித்துவந்ததாக வாதியே ஒப்புக்கொள்கிற விஷயத்தைப் பாரிஸ்டர் திருப்பித்திருப்பிக் கேட்பதினால் இந்தக்கேஸுக்கு யாதொரு பயனுமுண்டாகிவிடாதென்றும் சோமசுந்தரம்பிள்ளைக்கு வாதி சொந்த மகனல்லவென்று ரூபிக்கும் விதமான கேள்விகளே கேட்கப்படவேண்டுமென்றும், கோர்ட்டின் காலத்தை வீணாகசெலவிடக்கூடாதென்றும் பாரிஸடர் மாட்டின்துரை கோர்ட்டாரால் எச்சரிக்கப்பட்டார். மறுபடியும்,

பா. மா. பிறந்தது முதல் 15-16-வயது வரை எவ்வகையிலுந் தெரியாதிருந்த சோமசுந்தரம்பிள்ளையை இப்போது தகப்பனென்று எந்த ஆதாரவுபற்றிச் சொல்லுகிறீர்?

தெய்— கோர்ட்டில் தாக்கல்செய்திருக்கும் 1°-முதல் 5-வரை ரிக்கார்டுகளாலும், என்பெற்றோர்களாலும், தெரிந்து சொல்லுகிறேன்.

பின்பு சோமசுந்தரம்பிள்ளை விசாரிக்கப்பட்டார்,

பா. மா. திருச்செந்தூர் சிவப்பிரகாசக்குருக்களுக்கும் உங்களுக்கும் சிநேகந்தானே?

சோ— ஆம்,

பா. மா. இதோநான் காட்டுகிற இந்தக்கடிதம் உங்களுக்குக் குருக்கள் எழுதியதுதானே?

சோ— இதைநான் பார்த்ததேகிடையாது.

பா. மா. மேல்விலாசத்தில் உங்கள்பேர் எழுதியிருக்கிறதா?

சோ— ஆம்.

பா. மா. ஒருவேளை தங்கள்தம்பி கடிதத்தைபுடைத்துப் பார்த்துத் தங்களுக்கு அதிலெழுதியிருக்கிற விவரத்தைச் சொல்லியிருக்கவுங் கூடுமல்லவா?

சோ— எப்படியோ ஞாபகமில்லை,

பா. மா. இந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது படித்துப் பார்த்துச்சொல்லுங்கள்?

சோ— எழுத்துக்கள் மிகச்சிறியவைகளாயிருக்கிற படியால் மூக்குக்கண்ணாடியில்லாமற் படிக்கமுடியாது (கோர்ட்

டார் அனுமதியின்பேரில் ஒருகிளார்க்கு கடிதத்தைப்பின் வருமாறுபடித்தார் ஐயா! இவடம் திருவிழாவுக்கு வந்திருக்கும்பொழுது காணாமற்போன தங்கள்குழந்தை தெய்வசிகாமணியைப்பற்றி கடந்த இரண்டுமாஸங்களாகப் பிரயாசைப்பட்டு விசாரித்தேன் இன்றுதான் நம்பிக்கையுள்ள என்சிநேகிதன் ஒருவனால் உண்மைவெளிப்பட்டது, அதாவது விசாகத்திற்கு மறுநாளே குழந்தைகொலைசெய்யப்பட்டுப்போய்விட்டது. கண்கலக்கப்படவேண்டாம். செந்தூர்க்கந்தன் திருவருள் செய்வார் கடிதம் ரகஸ்யம்.

இங்ஙனம்.

சிவப்பிரகாசக்குருக்களையா,

திருச்செந்தூர்.

ஆடிமீ 5 உ

அக்ஷயவருடம்.

பா. மா. படிக்கக்கேட்டீர்களா?

சோ— கேட்டேன் அவ்வளவும் சுத்தப்பொய் கடிதம் குருக்களையா எழுதியதல்ல,

பா. மா, அவரெழுத்து உங்களுக்குத் தெரியுமா?

சோ— எழுத்தும் எனக்குத்தெரியும் இந்தக்கடிதத்திற் சொல்லுகிறதேதிக்குப் பின்னிட்டுக்குறைந்தது 10-தடவையாவது அவர் என்னைக்கண்டிருப்பார், கண்டபோதெல்லாம் குழந்தையைக்குறித்து ஒன்றும் புலப்படவில்லையோவென்று கேட்டார் குழந்தை கொலைசெய்யப்பட்டுப் போனது அவருக்கு உண்மையாகத் தெரிந்தெழுதியிருந்தால் என்னிடம் இவ்வாறு விசாரித்திருக்கவே மாட்டார், ஆகையினாலே கடிதம் உண்மையுள்ளதல்லவென்று உறுதியாகச்சொல்லுகிறேன்.

பாரிஸ்டர் கல்யாணசுந்தரம்.—இந்தக்கடிதம் இற்றைக்கு 15-வருஷங்களுக்குமுன் எழுதியதாகப் பிரதிவாதியாலும் இதனடியிற்குறித்துள்ள தேதியாலும் தெளிவாகத்தெரிகிறது இந்தக்காகிதத்திலுள்ள நீரெழுத்தைக்கவனித்தால் இந்தப்பேப்பர் உண்டாகி 5-வருஷந்தான் ஆகிறது தயை செய்து கோர்ட்டாரவர்கள் பார்வையிடவேண்டும் (கோர்ட்டார் பார்க்கிறார்).

பா. க.— இந்தக்கடிதத்தின் மேற்கவரிலுள்ள தபால்முத்திரைகளும் வேறெதிலுமேலேயோவட்டமிட்டிருக்கிறதாக விளங்குகிறதேயொழிய, அதில் தேதியாவது தபாலாபீஸின் பெயராவது துலங்கவே இல்லை மறுபடியும் கோர்ட்டார் கவனிக்கிறார் கோர்ட்டில் அக்கடிதம் தாக்கல்செய்து கொள்ளப்பட்டது.

பா. மா. வாதியை உங்கள் மகனென்று யார்மூலமாக அடையாளங்கண்டு பிடித்தீர்கள்?

சோ— என்மகனை நானேகண்டு கொண்டேன்.

பா. மா. மிராசுப்பாத்தியம் உங்களைவிட்டு 15-16-வருஷமாக நீங்கிப்போய் விட்டதோ?

சோ— என்பாத்தியம் என்னைவிட்டு இன்றைக்கும் நீங்கவில்லை,

பா. மா. வேலைபார்த்து வருகிறதுயார்?

சோ— என்தம்பி.

பா. மா. எந்தப்பாத்தியதையின்பேரில் பார்க்கிறார்?

சோ— சகோதரனென்ற பாத்தியதையைக் கொண்டு குமாஸ்தா நிலைமையில்.

பா. மா. குழந்தை காணாமற்போன விஷயத்தைக்குறித்து யார்த்

தமானப்பத்திரிக்கையிற் பிரசுரப்படுத்தியிருந்தீர்களே, அதற்குத் தன்வசம் பிள்ளை யிருப்பதாகத் தாசில்தார் உங்களுக்குப் பதிலெழுதினரா?

சோ— ஆம் எழுதியிருக்கிறார்கள்.

பின்பு கவிராஜ சாமிநாதபிள்ளை காணமற்போன தெய்வசிகாமணியைப் பற்றி சோமசுந்தரம்பிள்ளையின் படுக்கையறைத் திண்ணையில் பிரதிவாதி, புத்தூர்ப்பூமிநாதபிள்ளை, காயாக்ஷியம்மாள் கணபதி இவர்கள் பேசிக்கொண்ட குறிப்பைவைத்துக கொண்டு வாதியைப் பலவூர்களிலுந்தேடி மணிமங்கலத்திற கண்டது முதல் பாப்பையாபுரம் வந்துசேர்ந்தது வரையுள்ள சரித்திரத்தைத் தெளிவாகச்சொல்லி யெழுதிவைத்ததுடன், தானும் தாசில்தாரும் ஒன்றாகக் கையெழுத்துப் போட்டு ஒரு லெட்டர் சோமசுந்தரம் பிள்ளைக்கு எழுதியதுண்டென்று C. அடையாளமிட்ட லட்டரை ஆதரித்துச்சொன்னார், மாசிலாமணி, தாசில்தார், தியாகராஜ செட்டியார்தங்களுக்குத் தெரிந்தவைகளைச் சொன்னார்கள். புரோஹிதம் சங்கரநாராயண ஐயர் 2-தடவை ஆயுஷ் ஓமம்பண்ணி வைத்த சோமசுந்தரம்பிள்ளையின் புத்திரனே இந்தவாதியென்று சொன்னார். மற்றச்சாக்ஷிகள் யாவரும் வாதிகையிலுள்ள எழுத்தினாலும் தேக அமைப்பு முகத்தோற்றம் நடைநொடி முதலியவைகளாலும் சோமசுந்தரம்பிள்ளை மகனென்று நம்புவதாகத் திட்டமாகச் சொன்னதுடன் ஒச்சன், காளியென்ற இரண்டு கள்ளர்கள் தங்களூருக்கு வந்திருந்ததையும் சொன்னார்கள், மறுதினம் தவணை தள்ளி வைக்கலாயிற்று.

தங்கச்சாமியை இரண்டுதகுதியான மனுஷியாள் ஜாமீன் பேரில் விடவேண்டுமென்று பாரிஸ்டர் கல்யாணசுந்தரம் கேட்டார் அவ்வாறேசெய்யப்பட்டார்.

மறுநாள் கோர்ட்டுக்குத் தங்கச்சாமி பிள்ளை ஜாமீன்தார் களுடன் ஆஜரானர். சோமசுந்தரம்பிள்ளை முதலியோர் கோர்ட்

டுக்கு முன்னிருக்கிற ஆலமரத்தின் நிழலில் சமக்காளம் விரித்துட்கார்ந்து கோர்ட்டார்வரவை யெதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பாரிஸ்டர் கல்யாணசுந்தரம் இளஞ்சிங்கக்குட்டிபோல கம்பீரப்பார்வையோடுட்கார்ந்திருந்தார் கோர்ட்டார் வந்து 5-நிமிஷத்திற்குள் பிரதிவாதி தங்கச்சாமி பிள்ளையை விசாரிக்கத் தொடங்கினர். பாரிஸ்டர் மாட்டின் துரைசார்பில் தன்னுடைய விவரப்பத்திரிகைப்படி வாக்குமூலம் ஒப்பிவித்தார் வாதிவக்கில் கிராஸ்செய்யலானர்.

பா. க— வாதியைத் தெரியுமா?

தங்— தெரியாது.

பா. க— எப்போதுங் கண்டதில்லையோ?

தங்— இன்று கோர்ட்டு வாசலிற் பார்த்ததைத்தவிர வேறெங்கும் கண்டதே இல்லை.

பா. க— உங்கள் தமையனர் மகன், திருடர்கள் களவாடிக்கொண்டு போகும்போது எத்தனை வயதுடைய வனயிருந்தான்?

தங்— சுமார் 2, $2\frac{1}{2}$-வயஸ.

பா. க— அப்போது கையில் "தெ" பச்சையிருந்ததா?

தங்— இருந்தது.

பா. க— வாதியின் கையிலுள்ள எழுத்து அதற்கொத்திருக்கிறதா, பார்த்துச்சொல்லுங்கள்?

தங்— (கையைப்பிடித்துப்பார்த்து) அந்தஎழுத்தாயிருந்தாலும் இது சற்றுமங்கலாயும் சிறிதாயுமிருக்கிறது.

பா. க— ஒச்சனை உங்களுக்கு எவ்வளவுகாலமாகத் தெரியும்?

தங்— அந்தபெயரை எனக்குப் புதிதாகத்தெரிகிறது அவனைக் கண்டதேஇல்லை.

பா. க— இந்த ஜில்லாவுக்கு அந்தப்பெயர் புதியதுதான் இருக்கட்டும் (பலதஸ்தாவேஜுகளைக் காட்டி) இதிலுள்ள கையெழுத்துக்கள் தங்களுடையதுதானே?

தங்— என்னுடைய கையொப்பங்களே.

பா.க— (ஒச்சன் கடிதத்தைக் காட்டி) இதிலுள்ள கையொப்பம் தங்களுடையதுதானு?

தங்— ஆம் என்னுடையதே.

பா. க— நன்றாய்ப்பார்த்துச் சொல்லுங்கள்?

தங்— என் கையெழுத்தேதான் சந்தேகமில்லை.

பா. க— நல்லது அந்தக்கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது வாசியுங்கள்?

தங்கச்சாமி பிள்ளை கடிதத்தைப் பார்க்கிறார் தன்னையறியாமல் கைகால் உதறலெடுக்கிறது, சரீரமெங்கும் வேர்வைகொட்டுகிறது வாயில் நீர்வறண்டுபோகிறது ஸ்தம்பித்து நிற்கிறார்.

பா. க— என்ன! எழுத்துத் தெரியவில்லையா மூக்குக்கண்ணாடி வேண்டுமோ?

தங்— இது எழுதி......நான்......உட.........

பா.க— என்ன உழறுகிறீர்?

தங்— (கொஞ்சம் தைரியப்பட்டு) எனக்குப்படிக்கத் தெரியவில்லை.

பா. க— கோர்ட்டாரவர்கள் தயைசெய்து இதைப்படித்துக்காட்ட உத்திரவு செய்யவேண்டும் (கோர்ட்டாரனுமதியின் பே

ரில் கிளார்க்கு படித்துக் காட்டினன்) "கணபதியால் உன்னிடம் ஒப்பிக்கும் உருப்படியைக் கொலைசெய்து விடு ரூ 500-தருகிறேன் தங்கச்சாமி பிள்ளை"

பா. க— நீங்கள் எழுதியதுதானே?

தங்— இல்லை.

கோர்ட்டில் தாக்கல் செய்யப்படுகிறது.

பா. க- கணபதியென்பவன் உங்கள்வீட்டுச் சமையற்காரன்தானே?

தங்— ஆம்.

பா. க— அவனை எதற்காகத் தூணிற் கட்டிவைத்துக் கொண்டு உம் தமையனடித்தார்?

தங் — குழந்தையின் கையில் பச்சை குத்தினதற்காக

பா. க — கண்ணுச்சாமிக்கும் உமக்கும் சிநேகிதமுண்டா?

தங்— இல்லை சாதாரணப்பழக்கந்தான்.

பா. க— வில்லிமங்கலம் கொள்ளைக்கேஸில் நீரும் ஒரு எதிரி தானே?

தங்— போலீஸ் இனிஸ்பெக்டர் பிரகாசம்பிள்ளைக்கும் எனக்கு முள்ள விரோத ..

பா. க—கேட்கிறதற்குமட்டும்பதிற்சொல்லும் நீர் எதிரியா இல்லையா?

தங்—ஆமாம் போலீஸ்காரர் விரோதத்தினால் சேர்த்துவிட்டார்கள்.

பா. க— அந்தக்கோர்ட்டுக்கு சாக்ஷி சொல்லவந்த இந்த வாதியைப் பார்த்திருக்கிறீரா?

தங்— பார்த்திருக்கிறேன்.

பா. க— எப்போதும் பார்த்திருப்பதில்லை யென்று கொஞ்ச நேரத்துக்கு முன்னமே சொல்லி இருக்கிறீரா?

தங்— ஞாபகம் இல்லை.

பா. க— சரி, இப்போது எதை உறுதியாகச் சொல்கிறீர்?

தங்— பார்த்திருக்கிறேனென்பது நிஜம்.

பா. க— பார்க்கவில்லை யென்றது பொய்தானே?

தங்— தவறிச்சொல்லிவிட்டேன் மன்னிக்கவேணும்,

பா. க— கோர்ட்டாரவர்களைப் பார்த்துச்சொல்லும். உங்களூர்ப் போஸ்டு மாஸ்டர் லீவிலே போனால் அவருக்குப் பதிலாக நீர்தானே வேலைபார்ப்பீர்?

தங்— ஆம்,

பா. க— இந்தப் போஸ்டாபீஸ் ரிக்கார்டில் முத்திரை போட்டிருக்கிற தேதியில் நீர்தானே வேலைபார்த்திருக்கிறீர்?

தங்— என்னுடைய கையெழுத்தும் அதிலிருக்கிற படியால் நான்தான் பார்த்திருக்கிறேன்.

பா. க— இந்தக் கடிதத்தின் மேலே போட்டிருக்கு முத்திரை எந்தத்தேதியைக் காட்டுகிறது?

தங்— நான் வேலைபார்த்த தேதியைத்தான்.

பா. க— கோர்ட்டாரை நோக்கி சாமிநாதபிள்ளையும், தாசில்தாரும், சேர்ந்து வாதி மணிமங்கலத்திலிருக்கிற விவரத்தைச் சோமசுந்தரம்பிள்ளைக்கு ஒரு லட்டர்மூலம் அறிவித்தார்கள், அதற்குப்பதில் சோமசுந்தரம்பிள்ளை எழுதியதாகப் பிரதிவாதியே போர்ஜரிசெய்து தாசில்தாருக்

கு அனுப்பப்பட்டது இக்கடிதம்; இதையும் தாக்கல் செய்து கொள்ளவேண்டும்.

அவ்வாறே தாக்கல் செய்து கொள்ளப்பட்டது.

கோர்ட்டு முன்பாகக் கொண்டுவந்து நிறுத்தப்பட்ட பிரதிவாதியின் முதலாவது சாக்ஷி புத்தூர்ப் பூமிநாதபிள்ளை வாதியின் முகத்தைப் பார்த்தவுடனே நடு நடுங்கித் தன் வஞ்சனைகள் ஒவ்வொன்றையும் எண்ணியெண்ணி முகங்கருகி நின்றார். இவரும் கருப்பனம்பலம் சோணையமூப்பன் இருவரும் விசாரிக்கப் பட்டார்கள். முதலாவது சாக்ஷி வாதி சோமசுந்தரம்பிள்ளை மகன் அல்லவென்றும் 2, 3 சாக்ஷிகள் வாதியை நெல்லையப்பபிள்ளையின் சொந்தப்பிள்ளையென்றும்சொன்னார்கள். பாரிஸ்டர்கல்யாணசுந்தரமவர்களின்கிராஸக் கேள்வியில் முதலாவது சாக்ஷி வாதியைத்திருநெல்வேலியில் ஏமாற்றியதை ஒப்புக் கொள்ளும்படியான சந்தர்ப்பம் நேர்ந்து ஒற்றுக் கொண்டார். 2, 3-பேர்கள் நெல்லையப்பபிள்ளை தாசில்தாராக இருக்கிறகாலத்தில் அவர் கோர்ட்டில் திருட்டுக் குற்றத்திற்காக 2 தடவை தண்டனை அடைந்தவர்களாக மெய்ப்பிக்கப்பட்டார்கள், 4வதுசாக்ஷி அம்மணி ஐயரை பிரதிவாதி பக்கத்திலேயே விசாரிக்க இஷ்டப்படாமல் நிறுத்திக் கொள்ளப்பட்டது. பின்பு வாதிபிரதிவாதி வக்கீல்கள் ஆர்க்யூமெண்டு பேசி முடித்தார்கள்.

கோர்ட்டார்.

வாதியால் A. B. C. D. E அடையாளமிடப்பட்ட 5-ரெக்கார்டுகளும் 18சாக்ஷிகளும் பிரதிவாதியால் ஒரு ரிக்கார்டும் 3சாக்ஷிகளும் ஆஜர் செய்யப்பட்டன. ரிக்கார்டுகளைப் பார்வையிட்டும் சாக்ஷிகளை விசாரிக்கவும் பட்டன. வாதிவக்கீல் மிஸ்டர் பாரிஸ்டர் கல்யாணசுந்தரமவர்களுடையவும் பிரதிவாதி வக்கீல் மிஸ்டர் பாரிஸ்டர் மாட்டின்துரை யவர்களுடையவும் ஆர்க்கியூ மெண்டுகளையும் கேட்கப்பட்டன.

தங்கச்சாமிபிள்ளை அக்ரமமாய் அபகரித்துக் கொண்டிருக்கும் சோமசுந்தரம்பிள்ளையின் பரம்பரை மிராசை அவர் மகனை தன்னிடம் ஒப்பிக்கவேண்டு மென்பது வாதி க்க்ஷி.

தெய்வசிகாமணிபிள்ளை சோமசுந்தரம்பிள்ளையின் புத்திரனேயல்லவென்பது பிரதிவாதியின் ஆக்ஷேபனை.

இந்தவழக்கிற் றெரிந்து கொள்ளவேண்டிய முக்யாம்சம்— வாதி சோமசுந்தரம்பிள்ளைக்குச் சொந்தமகன்தானா? என்பதே அதை மெய்ப்பிக்க வாதியால் 5 ரிக்கார்டுகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன அவைகளில் A. வாதி காணாமற் போன காலத்தில் வாதியின் பிதாவால் பிரசித்தப்படுத்திய வர்த்தமானப் பத்திரிகை, B. வாதியைக் கொன்றுவிடும்படி பிரதிவாதியால் ஒச்சனுக் கெழுதிய லட்டர். C. வாதியின் பிதாவால் தாசில்தாருக்கு எழுதியதாகப் பிரதிவாதியாற் சொல்லப்படுகிற கடிதம், D. நெல்லையப்பபிள்ளை அசாத்திப்வியாதி யேற்பட்டிருந்த காலத்தில் வாதிக்கு எழுதி நேரிற் கொடுத்தகடிதம். இவைகளில் முதலிரண்டு ஆதாரவுகளும் பிரதிவாதியால் நிராடங்கமாக ஒப்புக்கொள்ளப்படுகின்றன. மூன்றாவது ரிக்கார்டை ஒப்புக் கொள்ளும் விஷயத்தில் பிரதிவாதி ஆக்ஷேபனை சிறிது சொன்னாலும் அவரால் கற்பிக்கப்பட்டதென்பதற்குப் போதுமான சாக்ஷியம் வாதிபக்கத்திலிருந்து கிடைத்திருக்கிறது. நாலாவது ரிக்கார்டு ஒரு கௌரவமான கவர்ன்மெண்டுத் தாசில்தாரால்எழுதப்பட்டு அவராலேயே ஒப்புக்கொள்ளவும் படுகிறது.

இவைகள் வாதியை சோமசுந்தரம் பிள்ளை மகன்என்று காட்டுவதுமன்றிப் பிரதிவாதியைக் கொலைபாதகம், வஞ்சனை, மோசம், பேராசைமுதலிய துர்க்குணங்கள் நிறைந்தவனென்றும் வியக்தமாக அறிவிக்கின்றன. தவிரவும் வாதிபக்கத்திலுள்ள 18, சாக்ஷிகளும் மிகுந்த கண்ணியமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். அவர்கள் சாக்ஷியத்தில் அவநம்பிக்கைப் படத்தக்க ஒரு வார்த்தையும் இருக்கிறதாக என் புத்திக்குப்படவில்லை சாக்ஷிகள் வாய்மொழியில் வாதி சோமசுந்தரம்பிள்ளை மகனென்றுதெரிகிறது மேலும் இந்தப் பிரதிவாதி கண்ணுச்சாமி யென்பவனோடு ஒரு விதமான சிநேகமுடையவனென்று விளங்குகிறது. இவன் இரண்டுதரம் தண்டனையடைந்ததும் இந்தப் பிரதிவாதியின் தூண்டுதலினாலேயே என்பது வெளிப்படை. எப்படியெனில் E. அடையாளமிடப்பட்ட லட்டரை R. S.

கம்பெனி ஏஜண்டு அனுப்பப்பட்டதென்று நம்பும்படி இந்தப்பிரதிவாதியே எழுதி இராமநாதபுரம் சத்திரத்தில் வாதிக்குக் கொடுக்கப்பட்டதென்பதை நான் நம்பமுடியாமலிருக்க ஏதுவில்லை திருநெல்வேலியிலிருந்து இராமநாதபுரம் வரை வாதியை வஞ்சித்துக் கூட்டி வந்தவன் பிரதிவாதியின் முதலாவது சாக்ஷியே என்பதுநிஸ்ஸந்தேகமாகத் துலங்குகிறது. இந்தப்பூமிநாதபிள்ளை பேரில் இது சம்பந்தமாக வேறே குற்றங்களும் ஆபத்தமாயிருக்கின்றன.

ஒரு காரியத்தை ஆரம்பிக்கும் போது இருக்கிற உற்சாகமும் முயற்சியும் அக்காரியம் முடிவுபெறும் வரையில் இருக்கிறதில்லை. இது மனிதஸ்வபாவம், எடுத்தகாரியம் சிறிது சாதகமாகிக் கொண்டு வந்தாலொழிய மறுபடியும் அவ்விஷயத்தில் தலையிடுவது வெகு அபூர்வர். பால் குடிக்கும் பருவத்திலேயே வாதியை நசுக்கி விடவேண்டுமென்று எண்ணிய தீய நினைப்பை நாளைக்கும் மறந்து விடக்கூடியவனாக இல்லை இந்தப்பிரதிவாதி. இப்படிப்பட்டவனை மனுஷப்புலியென்று சொல்லவேண்டும். இந்தியன் பீனல்கோட் "இந்தியா தேசத்தின் தண்டனைச்சட்டப் புஸ்தகத்திலுள்ள" எல்லாப்பிரிவுகளையும் இந்தப் பிரதிவாதி தொட்டுத் தொட்டுப் பார்த்திருக்கிறான்.

ஆகையினாலே வாதி கோரிக்கைப்படி மிராசை வாதிக்கு ஸ்வாதீனப் படுத்தி இருக்கிறேன் என்று தீர்ப்பெழுதிப்படித்தார் கோர்ட்டார். சில நாட்கழித்து தங்கச்சாமிபிள்ளையையும் பூமிநாதபிள்ளையையும் கிரிமினல் தரப்பில் விசாரிக்கப்பட்டது. நாகபட்டணம் மாஜிஸ்திரேட்டாபீஸில கண்ணுச்சாமி கொடுத்த வாக்குமூலம், வில்லிமங்கலம் கொள்ளைக் கேஸில அப்ரூவ் சாக்ஷி சொன்ன வாக்குமூலம் இவைகளின் நகல்கள் தெய்வசிகாமணி பிள்ளை தாக்கல் செய்திருக்கிற B, அடையாளமிட்ட கடிதம் முதலிய ஆதாரவுகளையும் அனுசரித்துப் பூமிநாதபிள்ளை 10-வருஷமும் தங்கச்சாமிபிள்ளை தீவாந்தர சிக்ஷையும் விதிக்கப்பட்டார்கள், அவர்கள்பட்ட பிரபாசைக்கு இம்மட்டாவது வேண்டும். நெஞ்சாலும் நினைப்பரிய நிஷ்டூரக்காரப்பாவிகள் எக்கதியானாலென்ன, ஐயோ வென்று அனுதபிப்பார் ஒருவருமில்லை,

இருபத்தைந்தாம் அதிகாரம்.

தெய்வசிகாமணி முதலானோர் சகலரும் நான்கு நாள்வரை திருநெல்வேலியில் சாமிதரிசனம் பண்ணிக்கொண்டிருந்து அப்பால் குற்றாலம், பாபவிநாசம், திருப்புடைமருதூர் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போய்த் தெரிசித்துத் திரும்பினார்கள். மறுபடியும், பத்துநாள் வரை நெல்லையப்பபிள்ளை விருப்பத்தின்படி இணங்கி இருந்துவிட்டுப் பாப்பையாபுரம் வந்து சேர்ந்தார்கள். க்ஷேம அனுகூலத்தைப்பற்றி ஊராருக்கு முன்னமே தெரிந்திருந்தாலும் இவர்கள் வந்து சேர்ந்தவுடன் எல்லோருங் கும்பு கூடிக் கொண்டு வந்து சந்தோஷங் கொண்டாடினார்கள், சோமசுந்தரம் பிள்ளை மட்டும் ஒரு தம்பியையும் உயிரோடு இழந்துவிட்டேனே யென்று வருந்தினார்.

நெல்லையப்பபிள்ளை பிரயத்தனஞ் செய்து கொண்டிருந்தபடி மதுரைத்தாலூகாவில் வந்து தமது தாசில்வேலையை ஒப்புக் கொள்ளும்படி உத்திரவு வந்து விட்டது, தியாகராஜசெட்டியாருக்கு நாகைத் தேவஸ்தானம் ஆபீஸிலிருந்து கடிதங்களும் உத்திரவுகளும வந்து கொண்டிருக்கின்றன. அவர்களும் வந்து இரண்டு மாஸங்களுக்கு மேலாகிறது, கர்டாரம்பமான நாடுகளில் ஒரு கிணற்றை நம்பி ஊரெல்லாங் குடிதண்ணீருக்குக்காத்துக்கொண்டிருப்பது போல தெய்வசிகாமணியை விரும்பி அவரவர்களும் ஒவ்வொரு எண்ணத்தை மனசில் வைத்துக்கொண்டு வெளிப்படுத்த முடியாமல் தயங்குகிறார்கள், இவைகளை யெல்லாம் தெரிந்து கொண்டிருக்கிற சாமிநாதக் கவிராயர் ஒரு தினம் மாலை 3-மணிக்குச் சோமசுரம்பிள்ளை வீட்டில் உறவினரையும் ஊராரையுங் கூடும்படி செய்வித்துப் பின்வருமாறு சில சொன்னார்.

புண்ணிய சீலர்களே! தெய்வசிகாமணிபிள்ளை இவ்வளவு நாட்கழித்தும் சுகமே வந்து சேர்ந்ததைப்பற்றி அவர்தம் தந்தை

யர்களுக்கு எவ்வளவு சந்தோஷம் ஏற்பட்டிருக்கிறதோ அத்தனை ஆநந்தம் நமக்கு முண்டாயிருக்கிறது. சிற்றறிவனாகிய மனிதனை ஸர்வக்ஞனாகிய கடவுள் அவ்வியக்தனாயிருந்து இரக்ஷிக்கிறான், என்பது உண்மைநூற்றுணிபு, என்றாலும் அது பரோக்ஷம். அக்கடவுளே வியக்தனாய் நெல்லையப்பபிள்ளை வடிவாயிருந்து நமது மாசுப்பிள்ளை மகனைக்காத்தது அபரோக்ஷம், அல்லவா? பிராணனைக் காப்பாற்றி அவையத்து முந்தியிருக்குந் தன்மைத்தாய கல்வியுங் கற்பித்து அருமைப்புதல்வனாகப் பாராட்டிய தாசில்தாரவர்களுக்கும் "அற்பப்படிப்புஆபத்து" என்பதுபோலில்லாமல் உயர்தரக்கலையும் பயில்வித்துப் புருஷ லக்ஷணமாகிய உத்தியோகமும் சம்பாதித்துக் கொடுத்துத் தமது தியாகராஜன் என்னும் இயற்பெயரைச் சிறப்புப் பெயராகக் கொண்ட செட்டியாரவர்களுக்கும், இவர்களின் தர்ம பத்தினிகளான காந்திமதியம்மாள் நீலலோசனியம்மாள் இவர்களுக்கும் தெய்வசிகாமணிபிள்ளை எழுமையும் கடமைப்பட்டிருக்க வேண்டும், தனது சரீரத்தை இவர்களுக்குப் பாதரக்ஷையாகத் தைத்துப் போட்டாலும் செல்லும், இவர்களையெல்லாம் சாதாரணமாக மக்களென்று மாத்திரஞ் சொல்லிவிடக்கூடாது, ஜீவகாருண்யமே ஒரு உருவெடுத்ததென்று சொல்லத்தக்கவர்கள், தெய்வசிகாமணிபிள்ளை காணாமற் போயிராவிட்டால், இப்படிப்பட்ட மேலான உத்தமர்களின் சம்பந்தம் நமக்குத்தான் கிடைக்குமா, இது கேடுபோலே கிடைத்த ஆக்கம், சிறுவயதிலேயே கல்யாணசுந்தரமவர்களைத் தெய்வசிகாமணிபிள்ளையோடு சேர்த்துவைத்தது தாசில்தாரவர்கள் அல்லர் நமது நல்வினையே, மாசிலாமணியைப்போல உண்மையுள்ள மனுஷனைப் பார்ப்பதரிது, இவனை மணிமங்கலத்திற் கண்டபோது தெய்வசிகாமணிபிள்ளையைக் குறித்துச் சிலகேள்விகள் ஜாடையாக் கேட்டேன் அவன் கொடுத்த மறுமொழியில் தெய்வசிகாமணிபிள்ளையைத் தன்குலதெய்வமாகப் பாராட்டி வந்திருக்கிறானென்று எனக்குத் தோன்றியது இவர் எப்போதும் பிரபு வீட்டுப்பிள்ளையாயிருந்தாலும் மாசிலாமணி காட்டிற் கண்டெடுத்த பிள்ளைதானே அப்படிப்பட்ட குழந்தையின் விஷயத்தில் இவன் வைத்திருந்த அன்பும் கௌரவமும் அவனுடைய அளவு கடந்த யோக்கியதையைக் காட்டுகிறது,

கடவுளாற் கூட்டிவைக்கப்பட்ட இந்த அருமையான உறவினர்களது சம்பந்தம் என்றென்றைக்கும் விலகாமற் செய்துவைக்கவேண்டுமென்பது என்னுடைய மனோபீஷ்டம். சபையிலிருக்கப்பட்ட கனவான்களுக்கெல்லாம் இவ்வபிப்பிராயம் ஒப்பத் தகுந்ததாக இருக்குமென்றெண்ணுகிறேன். (மிகுந்த கரகோஷம்) உங்கள் உடன்பாட்டைத் தெரிந்துகொண்டேன் நான் செய்ய நினைக்கும் உத்தேசமாவது, சோமசுந்தரம்பிள்ளையவர்களின் ஆஸ்தியின் மூன்றிலொரு பாகத்தை மாசிலாமணிக்கு நாளைக்கே கொடுத்து அவனைப் பர்ப்பையாபுரத்திலேயே குடியா இருத்தி வைக்கவேண்டும். தாசில்தாரவர்கள் தம தருமைப்புத்திரர்களில் ஒருவரான கல்யாணசுந்தரமவர்களுக்குத் தமது தங்கை மகளை விவாஹஞ்செய்வித்துத் தமது பாதிச்சொத்தைக் கொடுத்து இவ்வூரிலேயே வசிக்கும்படி செய்யவேண்டும். உத்தியோக விஷயமாகப் பலவிடங்களுக்குப் போகும்படியாக இருந்தாலும், இவ்வூரே அவருக்குச்சொந்த ஊராகவேண்டும். மீதமுள்ள செல்வத்திற் காற்பாகம் மாசிலாமணிக்குக் கொடுக்கவேண்டும். மற்றப் பாகம், நெல்லைமத்திரம் என்னும் ஒரு வாசகசாலை நடைபெறுவதற்கு மூலதனமாக வைக்கப்படவேண்டும் தியாகராஜ செட்டியாரவர்கள் ஏகபுத்திரி மங்களாம்பாளைத் தெய்வசிகாமணிபிள்ளைக்குப் பாணிக்கிரஹணம் பண்ணிவைக்கவேண்டும், (கரகோஷம்) இவைகளெல்லாம் யுக்தமான காலங்களிற் செய்யப்படவேண்டும் என்பதே. நமது தொடர்புகள் விட்டுப்போகாதிருக்க இந்த ஏற்பாடுகள் சர்வோத்தம முள்ளவைகளா யிருக்குமென்றெண்ணுகிறேன் இதனினுஞ்சிறந்த உத்தேசம் வேறுளதெனினுஞ்சொல்லுங்கள் என்று தமதுபேச்சை முடித்தார்கவிராயர். இதுதான் சரியான தீர்மானமென்றார்கள் அங்கிருந்தோரனைவரும். தெய்வசிகாமணி வக்கீல் வேலையை வஹித்துக்கொண்டு கல்யாணசுந்தரத்துடன் அவிபக்த குடும்பஸ்தனாயிருக்கவேண்டுமென்பது என்னுடைய நோக்கம் என்றார் தாசில்தார். அதற்கேற்ற ஸ்தானம்

மதுரைதான் என்றார் தியாகராஜசெட்டியார். புரப்பையாபுரத்தை விட்டு வேறெங்கும் போகக்கூடாது, இவர்கள் கிராமங்களை மேற் பார்க்கவே, இன்னம் 4, 5. வேலைக்காரர் நேமிக்கவேண்டியிருக் குமே, வக்கீல் வேலைக்கும் போகணுமோ என்றார்கள்; சபை யோர்கள். மதுரையும் சமீபந்தானே அங்கிருந்தாலும் இவடத்தி லிருந்தது போலதான் என்றார் சோமசுந்தரம்பிள்ளை. கல்யாணத் திற்குப் புஷ்பமும் சந்தனமும் மதுரையிலிருந்து தருவிக்கணும் என்றான் சிறைமீட்டான். வாணக்கட்டுக்கும் மத்தாப்புக்கும் திரு நெல்வேலியை விட்டால வேறே கிடையாது என்றான் ஜெகவீர பொம்மு. கல்யாணத்தை நாகப்பட்டினத்தில் வைத்துச் சிறப்பாக நடத்தவேண்டுமென்று எண்ணுகிறேன், எத்தனை மக்களுக்குச் செய்து பார்க்கப்போகிறேன், ரூபா ஐம்பதினாயிரத்திற்குக் குறை யாமல் தாராளமாகச் செலவு செய்ய எனக்கு மனமுண்டு என் றார் செட்டியார். சாமிநாதக்கவிராயர் கொஞ்சநேரம் அமைதியாக இருந்து கேட்டு விட்டு செட்டியாரைப் பார்த்து ஐயா! ஸ்வாமி, தங்களுக்குக்கொடுத்திருக்கிற ஐச்வரியத்திற்கு எவ்வளவானாலும் நீங்கள் செலவு செய்யலாம். ஆனால் அந்தச்செலவு அவஸ்யம் செய்து தீரவேண்டியதுதானா? அல்லது வீண் செலவா? என்பதைக் கவனித்துச் செய்யவேண்டும் என்றார்.

கல்யாணத்துக்குச் செலவழிக்காமல் வேறெதுக்குச்செய் கிறது, இவாளைப் போலே பள்ளிக்கூடங் கட்டவும், ஆசுபத்திரி வைக்கவும், காயிதமுட்டை (லைபிரேரி) சேகரிக்கவும் செலவு செய்யணுமாக்கும் என்று சிலர் காதோடு வாயாகப் பேசிக்கொள் கிறார்கள்.

கல்யாணச் செலவைச் சுருக்கினால் பந்துக்களெல்லாம் லோபி என்று பட்டங்கட்டி விடுவார்களே அந்த நிந்தைக்கு என் ன பரிகாரந்தேடுகிறது. தவிரவும் ஒரு நல்ல விசேஷத்திற்குச் செலவு செய்யாத இந்தச் சம்பத்திருந்து என்ன பிரயோசனம் என்றார் செட்டியார்.

கவிராயர்:— ஐயா! கொஞ்சம் நிதானியுங்கள் வாஸ்கோ டிக்காமா முதல் முதலிலே இந்தியாவைப் பார்த்துவிட்டு இங்கி லாந்து தேசத்திற் போய் என்ன சொன்னான்; இந்தியாவின் தரை

யெல்லாம் தங்கமும் பொன்னுந் திரள் திரளாகக் கொட்டிக்கிடக்கிறது, அத்தேசத்தவரில் ஒருவருக்கும் தரித்திரம் என்னும் சொல்லுக்கு அருத்தமே தெரியாது என்றானும். இந்தச் செல்வங்களெல்லாம் இப்போது எங்கே சென்று விட்டனதையா! 1911-வருஷத்தில் எடுத்த ஜனசங்கியைக் கணக்கில் 4½ கோடி இந்து [illegible]கள் தலைசாய்க்க இடமற்ற ஏழைகள் என்று தெரிகிறது. [illegible]யாவிற்குள் இவ்வறுமை எவ்வாறு வந்து நுழைந்தது [illegible]னிப்போமானால் நமது நாட்டவர், விவாஹம், ருதுசாந்தி, பு[illegible] ஆயுஷ் ஓமம், அன்னவேதனம், உபநயனம், [illegible]ணம், ச[illegible], ஏகோதிஷ்டம், அந்தியேஷ்டி, ஊனமாஸிகம், மாஸமாஸிகம், வருஷாப்திகம், சஷ்டியப்தபூர்த்தி, சதாபிஷேகம், நாகப்பிரதிஷ்டை, சர்ப்பஸாந்தி முதலிய கர்மங்களில் அறிவீனத்தாற் செய்யும் மிதமற்ற செலவினாலும், கூத்துப்பார்த்தல், எருதுகட்டு, ஜல்லிக்கட்டு வைத்தல், கோழிச்சண்டை, ஆட்டுக்கடாச்சண்டைக் கூட்டமேற்படுத்தல், முந்தின தாம்பூல மரியாதைக்காக கோர்ட்டில் வழக்கிடுதல் முதலிய பயனற்றகாரியங்களிற் செய்யும் பாழ்ஞ்செலவினாலும், வியவஸாயம், வியாபாரம், கைத்தொழில் இவைகளில் நம்பிக்கையும் ஒற்றுமையுங் கொண்டு ஜனங்கள் பிரயாசையெடாமையினாலும் க்ஷாமம் வந்ததென்று தெளிவாகச் சொல்லலாம் அல்லவா? நிற்க. ஒரு ஆஸ்திவந்தன் வீட்டுப்பிள்ளைக்குக் கல்யாணம் செய்ய ஏற்பட்டால், முகூர்த்தத்திற்கு 2 மாஸத்திற்கு முந்தியே, கல்யாண வேலை ஆரம்பிக்கப்படுகிறது. கல்யாண முடிந்த மறுதினமே பிரித்தெறியுங் கொட்டகைக்கு ரூ 1500, பெண்ணும் மாப்பிள்ளையும் திருமாங்கல்யம் கட்டுகிறபோதுமட்டும் குந்தியிருக்கும் மணவறை விதானிப்புக்கு ரூ. 500, தம்பதிகள் பல்லக்கேறிக்கொண்டு ஊரிலுள்ள இரண்டு தெருக்களைச் சுற்றிவருகிற மட்டும் நாகசுரம் ஊதுகிறவனுக்கு ரூ. 500, பட்டுப்பாவாடையும் புட்டாவிக்கையும் கட்டி மேளகாரனுக்கு முன்னாலே நின்று சிறிது குறுநடை நடந்துவிட்டுப்போகுங் கொலுத்தாசிக்கு ரூ. 300 பெண்ணுக்கு அலங்காரஞ் செய்துவைக்கும் தோழித்தாசிக்கு ரூ. 100, அரைமணி நேரம் பாட்டுக்கச்சேரி நடாத்தும் தெய்

பாங்குத் தாசிக்கு ரூ. 500, "காசைக்கரியாக்கா தேசினிவெடிவாங் கிச்சுடுவோ" மென்றதுபோல கரியும் புகையுமாய்த் தொலைந்து போகும் வாணக்காட்சிக்கு ரூ. 1000, நாசியுரோமத்தினையும் கருக்கிவிடும் நாற்றத்தினையுடைய மத்தாப்பு வெளிச்சத்திற்கு ரூ 250 பழந்துணியும் பாசிக்கோவையுமாகத் தொங்கும் பல்லக்குக்கு ரூ. 150, பாண்டிக்கு ரூ. 500, பல்லக்குக்குமுன்னே பாணைத்தடிகளை வீசிக்கொண்டு திரியும் தடிகளுக்கு வேஷ்டிவகையில் ரூ. 100, ஆக ரூ. 5400 இவ்வாறு ஒழிகிறது. இந்தப் பெருந்தொகையில் ஒரு இம்மியளவாவது சத்விஷயத்திற் செலவாகியிருக்கிறதா? இல்லை. இன்னுங்கேளுங்கள் மாப்பிள்ளை வீட்டார் வந்து பெண் தீர்மானிக்கும் பிரதமதினத்திலேயே முகூர்த்தப்பட்டுச்சேலை ரூ. 300, நிச்சய தாம்பூலச் சேலை ரூ. 150, மாமிக்கூறை ரூ. 100, மாப்பிள்ளை வீட்டார் வாங்குவதாக ஒப்புக்கொண்டால் மட்டிலும் பெண்கொடுக்கப்படுமென்று கண்டிப்பாகச் சொல்லி மேற்கண்ட துணிச்செலவையும் நடத்தியே தீர்வார்கள். இதைத்தவிரக் (பரியப்பணம்) கன்னியாசுல்கம் ரூ. 2000, 3000 கொடுக்கவேண்டும்; அதுவும் பணமாக இருந்து ஏதாவது ஒரு சமயத்திற்கு உதவிசெய்யக்கூடியவிலைமையில் பெண்வசமாவது இருக்கப்போகிறதா? இல்லை. அப்பணத்தினளவோ அல்லது சற்று ஏறக்குறையவோ பெண்வீட்டாரும் பணம்போட்டு இருபெருந்தொகைக்கும் பெண்ணுக்கு ஆபரணங்கள் செய்விக்கப்படுகின்றன. தங்க நகைசெய்தால் தட்டார் தட்டினது போக சமையத்திற்கு அரைவாசியாவது தேரும் கல்நகை கால்வாசியே; இது கல்யாணத்தின் புறச்செலவு. புறப்புறச்செலவுகளும் பலவிருக்கும். இனி அகச்செலவும், அகப்புறச் செலவுமாகச் சேர்ந்து 10000, 12000 ரூபாய்க்குக் குறையாது. இத்தனை அமளிகளும் பணக்காரர் வீட்டில் ஒருவாறு நடந்தாவது தொலைகிறது. நடுத்தர நிலையிலிருக்கிறவர்களின் கதிதான் பரிதபிக்கத்தக்கதாயிருக்கிறது. தனிகரைப்போல தாமும் கல்யாணத்திற் செலவிடக்கூசுவரேல் இனத்தால் இகழப்படுவாரல்லவா? அதற்குப் பயந்து தங்களுக்குள்ள ஆஸ்திகளை ஈடுகாட்டி மிதமிஞ்சிய வட்டிக்குக் கடன் கொண்டும், சிலர் அற்ப ஆஸ்தியை விற்றும் செலவழிக்கிறார்கள். மாப்பிள்ளை பல்லக்கிற் பவனி வரும்போது

நடக்கும், பாணவேடிக்கையைப் பார்த்து ஐயோ! புன்செய் விற்ற பணம் புகையாய்ப் போகிறதே! வயல் விற்றபணம் மத்தாப்பாய்த் தொலைகிறதே!! எனச்சிறிது கவனிப்பாளுகில் இந்தப் பைத்தியகாரச் செலவு நடக்குமா?

கல்யாணப்பந்தலில் மாப்பிள்ளைக்குப் பெண் வீட்டார் ஒலிசை என்னும் வரிசை கொடுக்கும் வழக்கமொன்றுண்டு, அதற்கு கட்டில், மெத்தை, திண்டு, தலையணை, சமக்காளம் வெற்றிலைபாக்குப் பெட்டி, எழுத்தாணி, சம்புடம், கண்ணாடி, மேஜை நாற்காலி, மைக்கூடு, பேனு, பென்ஸில் இன்னும் பலபண்டங்களும் சோமன் ஜோடி பீதாம்பரங்களும் மாப்பிள்ளையின் தகுதிக் கேற்ற விலைபேறப் பெற்றதாகக் கொண்டுவந்து வைத்து நூறோ ஐம்பதோ ரூபாயும் சுருள் வைத்துக் கொடுப்பார்கள், சாமான்களிலாவது பணத்திலாவது குறைவிருக்கிறதாக மாப்பிள்ளைக்குத் தோன்றினுல் ஒலிசையை ஒப்புக்கொள்ளுகிற தில்லை யென்று கடிந்து சொல்லி மணையை விட்டெழுந்து போய் விடுவார்; ஊரிலுள்ள பெரியமனுஷரைக் கொண்டு சமாதானம் சொல்லித்து மேற்கொண்டு பத்தோ இருபதோ சுருளில் அதிகப்படுத்தி மாமனர் கொடுத்தபின்பு ஏற்றுக்கொள்வார்கள். இந்தக்கல்யாணக் கடன் நாளுக்கு நாள் வட்டியேறிப் பூர்வீக சொத்தையும் பிடுங்கி அதிலுந்திராமல் அவர்கள் சந்ததிகளையும் பிடித்தலைக்கிறது.

நமது சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கிற எட்டுவிதக் கல்யாணங்களில் பெண் வீட்டாரே மாப்பிள்ளையை அழைத்துவந்து பசரித்துப் பெண்ணைத் தானமாகக்கொடுத்தல், பெண்ணை அலங்கரித்து வரனுக்குக் கொடுத்தல், வரனிடத்திலிருந்து ஒன்று அல்லது இரண்டு ஜதை பசுக்களைவாங்கிக்கொண்டு வதூவைக்கொடுத்தல், வரன் கரத்திற் கன்னிகையைப் பிடித்துக்கொடுத்து, வைதிக லௌகிக காரியங்களை விதிப்படி நடத்தி வாழக்கடவீர் என்று வாழ்த்தி விடுத்தல். என்னும் பிராம்ம, தைவ, ஆர்ஷ, பிராஜாபத்ய மணங்களில் இவ்வாறு மத்தாப்பு வெளிச்சம் போடும் படியாகச் சொல்லக்காணேம்; எல்லாவகுப்பினராலும் நிந்திக்கப்பட்ட பைசாச

மணத்தைத் தவிர ஏனைய காந்தர்வ, ராக்ஷஸ, ஆசுரமணங்களும் செலவு சிறிதும் செய்யப்படாததாய், கன்னியா சுல்ஹம் வரசுல்ஹம் என்னும் மாமிஸ விற்கிரயத்தைப் பிரஸ்தாபிக்கிறதேயன்றி மனிதரைப் பாம்பின்வாய்த் தேரையாகப் பட்டழுந்த வைக்கும் இந்தப்பாழுஞ் செலவைச் செய்யச் சொல்லவில்லையே. விவாஹத்தில் சத்தபதி, என்னும் ஒரு முக்கியமான சடங்கிருக்கிறது: வதூவின் கரத்தை வரன் பிடித்துக்கொண்டு ஏழடி நடப்பது: இதில் ஓரடியாவது குறைந்திருந்தாலும் அது கிரமமான விவாஹமாக மாட்டாது, என இந்துலா முதலிய தர்ம சாஸ்திரங்கள் சொல்லுகிறது, இதற்காகவே பலஜனங்களும் அறியச்செய்யப்படவேண்டுமென்று விவாஹத்திற்குப் பலரும் அழைக்கப் படுகிறார்கள், அதிலுைலே செலவும் அதிகரிக்கிறது என்று வைத்துக்கொள்வோம். பெண்களது பிரதமருதுவும் சாஸ்திர சம்மதமான ஒரு சடங்கா? அதற்கும் ஒரு கூட்டமா? ஊருருக்குப் பத்திரிகைகளும் துணிவெளுக்கும் வண்ணார்களும் தமுக்கடித்துக் கொண்டு திரியவேண்டுமா? அட அறியாமையே! எந்த விசேஷங்களிலும் வைதீக கர்மங்களுக்குச் செலவு செய்யவேண்டாமென்று நான் சொல்வதாக விவேகிகள் அர்த்தம் பண்ணிவிடக்கூடாது. அவைகளை மந்திரா லோபம் கிரியாலோபமின்றிச் செவ்வனே செய்யப்படும்; நாவினுற் சொல்வதற்குங் கேவலமாகத் தெரிகிற மற்பல அநுசிதமான விஷயங்களிற் செய்கிற அமிதமான செலவைப்பற்றியே கண்டித்துப் பேசுகிறேன். ஒவ்வொரு சிறிபகாரியங்களிலும் நம்மவர்கள் செய்யும் ஆராதூரித்தனத்தைச் சொன்னுல் வளரும்.

இப்படி நாம் நடந்து கொண்டால் ஏன் இந்தியா விற்குள் வறுமை வந்து நுழையாது? நமது தேசம் முன்னுக்குவரவேண்டுமானுல் நமது ஜாதி மேலே காளைப்போல மேண்மை அடையவேண்டுமென்றெண்ண மிருந்தால், வீண் செலவைக் கட்டோடு நிறுத்தவேண்டும். விவாஹாதிகர்மங்களையும் சர்வஜனங்களும் ஒரே ரீதியாய் நடத்தல் வேண்டும்; அவைகளில் அடியிற்கண்ட சிலவிதிகளை அநுசரிப்பது நல்லமுறையென்று நினைக்கிறேன். நமது உறவின்முறை என்ன முறையிடுமோ தெரியாது.

1. வதூவரர்கள் லக்ஷாதிபதியோ அல்லது ஏழையோ எந் தக்குடும்பத்தைச் சேர்ந்தவரானாலும் சரி ஒரேமாதிரியான சிறு விலையுள்ள முகூர்த்த வஸ்திரங்களை உபயோகிக்கவேண்டும்.

2. கன்னியா சுல்கம் ஒரு சிறிய அளவுள்ள தொகையாக நிச்சயப்படுத்திக் கொள்ளல்வேண்டும்.

3. ஆசாரியப்பிராமணன் அல்லது குருக்கள் முதல் எல்லாத் தொழிலாளிகளுக்கும் ஒரே அளவுள்ள அவரவர் தொழிலின் தகு திக்கேற்ற தக்ஷிணை சன்மானம் கொடுக்கப்பட வேண்டும்.

4. முகூர்த்தம் முற்பகலிலேயே நடை பெற்று மாலை 6. மணிக்குள்ளாகப் பட்டணப்ரவேசம் வரையுள்ள சகல சடங்குக ளும் அன்றே நடத்தித் தீரவேண்டும்.

5. கொண்டார், கொடுத்தார், அந்நியவூர் விருந்தினர் முத லிய சுற்றத்தாரையன்றி ஏனைய கிளைஞர்கள் சந்தன தாம்பூல மரி யாதையோடு தமதில்லம் ஏகல்வேண்டும்.

6. சுருள் வைப்பதும் பதிலுக்குத் துணி கொடுப்பது மாகிய துர்வழக்கத்தைத் தொலைத்தல் வேண்டும். என்பனவே.

இருபத்தாறும் அதிகாரம்.

இத்தனை காலமும் பட்ட துன்பங்காணாதா, இன்னமும் அவதிவரவேணுமா, அடேபாவி! ஒரு நாளாவது ஐயோ சுக மென்றிருந்ததுண்டா இந்தப்பிள்ளை பிறந்தது அந்தக்குடும்பத் துக்குப் பற்றாதகாலமும் வந்து சேர்ந்தது. நேற்றுத்தானே எல் லாரும் திருமானுகந்தான் கோட்டைக்குப் போயிருக்கிறார்கள். அந் தவூரிலுள்ள செஞ்சடைநாதசுவாமி கோவில் மிகவும் புராதன மாம், அந்தக்கோவிற் கற்சுவர் முதலான இடங்களில், என்ன எழுத்தோ எழுதியிருக்கிறதாம், அதிலே நம்முடைய முன்னோர் கள் கதையெல்லாம் தெரியுமாம்; அதைப்பார்க்கவேணுமென்று

போயிருக்கிறார்கள். அதற்குள்ளே இந்த அமடு வந்திட்டதே. வீட்டிலே ஒரு ஆண்பூடுங் கிடையாதே என்ன ஆபத்தென்றுந் தெரியவில்லையே. என்று புலம்பிக்கொண்டு ஒரு நாள் மாலை 4-மணிக்குப், பசப்பையாபுரத்து ஜனங்கள் சோமசுந்தரம்பிள்ளை வீட்டை நோக்கி யோடுகிறார்கள். வாசலில் ஒரு குதிரைவண்டி நிறுத்தியிருக்கிறது. வீட்டுக்குள்ளே எங்கே பார்த்தாலும் ஒரே அழுகைச்சத்தமாயிருக்கிறது யாரைக்கேட்டாலும் ஒன்றுஞ் சொல்லுகிறார்களில்லை. போன போன ஜனங்களும் ஒருவரைப் பார்த்தொருவர் அழுதுகொண்டே நிற்கிறார்கள். வீட்டுக்குள்ளே விரலடிக்காகப் பெண்கள் கூடிக் கூச்சலிடுகிறார்கள். இந்தச்சமயம் நல்லவேளையாகத் திருமாலுகந்தான்கோட்டைக்குப் போயிருந்த தெய்வசிகாமணி முதலிய சகலரும் வந்து சேர்ந்தார்கள். அவர்களும், வீட்டிற்குள் நடக்கும் ரோதனத்துக்குக் காரணந்தெரியாதவர்களாய்க் கை கால் நடுங்கி நின்றார்கள், ஒருவர் விசாரிப்பிலும் இன்னமும் விஷயம் வெளிபாகவில்லை. கவிராயர் சந்தடியை விலக்கிக்கொண்டு வீட்டிற்குட் புகுந்தார் முகப்பு வாசலைத்தாண்டி இரண்டாங்கட்டுக்குப் போவதற்குள் அவருக்குக் கண்விழிபிதுங்கி விட்டது கடைசிபாக அழுகைக் கூட்டத்தின் அஸ்திவாரம் நிறைந்திருக்கும் வீட்டு வாசலுக்குச் சமீபத்திற்போய் நின்றுகொண்டு அம்மா! அம்மா! அழாதீர்கள் அழவேண்டாம். சங்கதியைச் சொல்லுங்கள், யாருக்கென்ன நேரிட்டது உடனே சொல்லுங்கள் அம்மா மீனாக்ஷீ நீயுஞ் சிறுபிள்ளையா? காரியத்தைச் சொல்லாமல் அழுதுகொண்டிருக்கிறாய் என்று அதட்டினார். அவரைக்கண்டவுடன் சில பெண்கள் எழுந்து நின்றார்கள் வேறு சிலர் மறைந்துகொண்டார்கள். அழுகையும் ஒருவாறு அடங்குந்தருணமாயிருந்தது. அந்நேரம் ஒரு ஸ்திரி. கவிராயர் காலோரமாக வந்து விழுந்து தலையைத்தரையில மோதிக்கொண்டு அண்ணா! அண்ணா! நான் "பெற்றோரிருந்தும் பிறஞ்சாஞ்சு போனேனே, உற்றாரிருந்தும் உதவியற்றுப் போனேனே, பெருமையிருந்தும் பிறப்பிழந்து போனேனே" எனப் பலவாறு சொல்லிப் புலம்பினாள் கொஞ்சநேரம் அவள் அழுவதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த கவிராயர் ஐயோ, தங்காய் குழல்வாய்மொழி! உன்னை யிந்தக்கோலத்தோடு பார்க்கவா

நானிருந்தேன் என்று முகத்தில் வேஷ்டியைப் போட்டுக்கொண்டழுதார் சிறிது நேரத்தில் அந்தக்கூட்டம் சீனக்காரத்தாளைப் போட்ட பால் போற்குழம்பி நின்றது இதனிடையில் மீனாக்ஷியம்மாளின் தங்கை குழல்வாய் மொழியம்மாள் [சுமார், 15—20 வருஷக் காலமாக அவள் கணவனுக்கும் கவிராயருக்கும் ஏற்பட்டிருந்த மனஸ்தாபத்தினால், சாவு வாழ்வு முதலியவைகளுக்கும் வராதிருந்து இப்போது) வைதவ்ய நிலையில் வந்திருப்பதே இந்த அழுகைக்குக் காரண மென்று வெளியாயிற்று.

அழுகைகள் எல்லாம் முழு முற்றும் ஒழிந்தது. கல்யாண சுந்தரமும் தெய்வசிகாமணியும் வெளியில் நின்று கொண்டு, இந்தக் கெட்டவழக்கம், நம்மவர்களுக்குள் அதிகமாயிருக்கிறது என்று பரிகசித்துக் கொண்டே வீட்டினுட் பிரவேசித்தார்கள். கூட்டமும் பாதிக்கு மேற்கலைந்து விட்டது. அப்பொழுதுதான் கவிராயர் முகத்தைத் துடைத்துக்கொண்டு தன் தங்கை குழல்வாய்மொழியம்மாளிடத்தில் யோக க்ஷேமங்களைக் கேட்டுக்கொண்டிருந்தார். உள்ளே வந்த அவ்விருவரும் குழல்வாய்மொழியைக் கண்டதும் அம்மா! இந்தச் சந்ததிக்குப் பிறகு தான் வந்து சேர்ந்தாயோ வென்று கேட்டுக் கொண்டே நமஸ்கரித்தார்கள். தங்கச்சியை உங்களுக்கெப்படித் தெரியு மென்றார் கவிராயர். அதற்குக் குழல்வாய்மொழி, அண்ணாச்சி, இவன்தான் உங்கள் மருமகன் எனக்கு இந்த ஒரு பிச்சை தான் சண்முகநாதன் தந்தது பெரியதம்பி, தாசில்தார் அவர்கள் பிள்ளை என்றாள். ஆச்சரியத்தினாலோ அல்லது ஆனந்தத்தினாலேயோ ஒன்றும் பேசாமல் பச பச வென்று விழிக்கிறார் கவிராயர். இதுவென்ன கனவா அல்லது (பையாஸ்கோப்) கண்காட்சியா! நம்முடைய மூளைதான் குழம்பி விட்டதா! ஒன்றுந் தெரியவில்லையே. பாரிஸ்டர் கல்யாணசுந்தரம் நமது தங்கை மகனா? இது நம்பமுடியாத சம்பவமாயிருக்கிறதே, உள்ளபடியே நம்முடையபுத்தி ஸ்வாதீனக் குறைவாகவே இருக்கலாம் ஏனென்றால் நாம் கண்ட கண்ட இடங்களெங்கும் அலைந்தும் விவகாரங்களில் அளவுகடந்து முயற்சித்தும் திரிந்ததினாலே எப்படியோ மூளைக்குப்பலவீன முண்டாகி

யிருக்கிறது எனத் தன்னை மறந்து இவர் பிதற்றிக்கொண்டிருக்கும்போது தாசில்தார் செட்டியார் முதலானவர்களும் வந்து கூடினார்கள் அவர்களைக் கண்டதும் குழல்வாய்மொழி மறைவிற் சென்றாள்.

கல்கத்தாவைவிட்டு என்றைக்குப் புறப்பட்டாயம்மா என்று தன் தாயைக் கல்யாணசுந்தரம் கேட்டான் குழல்வாய்மொழி— புதன்கிழமைப் பகல் 10-மணிக்கு உன்னுடைய தந்தி எனக்குக் கிடைத்தது உடனே வேலைக்காரர்களுக்கெல்லாம் சம்பளங்களைக் கொடுத்து விலக்கிப் பங்களாக் காவலுக்கு மட்டும் ஒருசிப்பந்தியை யிருக்கும்படி செய்தேன் பின்பு என் வேலைக்காரியைக் கையோடு அழைத்துக்கொண்டு பிரயாணமானேன், முத்துக்கருப்பசெட்டியார் மகள் அலர்மேலும் அவள் வீட்டு வேலைக்காரியும் என்னை ரயிலேற்றியனுப்பும் பொருட்டு ஸ்டேஷனுக்கு வந்தார்கள். உன் தந்திப் பிரகாரம் மதுரைக்கு டிக்கெட்டு வாங்கிக்கொண்டு வண்டியேறினோம், சென்னபட்டணத்தில் மட்டும் வண்டிமாற்றும் பரியந்தரம் இறங்கியிருந்தோம். வண்டியுந் தயாராயிற்று, மூன்று நாள் மாலை சரியாய் ஆறுமணிக்குச் சென்னையிலிருந்து புறப்பட்டு நேற்றுக்காலை 7-மணிக்குத் திருச்சிறைப்பள்ளி வந்து சேர்ந்தது. அங்கிருந்து வண்டிபுறப்பட ஒரு மணிநேரம் செல்லுமென்று நாங்கள் கேள்விப்பட்டு, தந்தசுத்தி செய்துகொள்ள இறங்கலாமென்று பேசிக்கொண்டிருக்கும் பொழுது நம்முடைய அச்சுதனும் அவன் சம்சாரமும் எங்களைவந்து சந்தித்து, இறங்கியிருந்து மறுதினந்தான் போக வேண்டுமென்று கட்டாயப்படுத்தினார்கள். அச்சுதன் சம்சாரம் நம்முடையவூர், [மணிமங்கலப்) பஞ்சாங்கையர் மகளாகையால் அவளும் வேண்டினாள். நீயும் அச்சுதனுக்கு எங்களை ரயிலில் சந்திக்கும்படி யெழுதியிருந்தாயாம், அவன் அவ்வூரில் போலீஸ் இன்ஸ்பேக்டராக இருக்கிறான், அவர்கள் கோரிக்கைப்படி நேற்றுப்பகல் அங்கு தங்கி யிருந்து விட்டு இராவண்டியேறி இன்று காலை 8-மணிக்கு மதுரையில் வந்திறங்கினோம் இந்தப்பாட்டியம்மாள் வண்டி சகிதம் வந்து எங்களுக்காகக் காத்திருப்பதாகச் சொன்னார்கள் தாமதமில்லாமல் உடனே புறப்பட்டோம்.

அங்குள்ள சில் ரயில்வேப் பெரிய அதிகாரிகள் தங்கள் பெண்டு பிள்ளைகளுடன் வந்து எங்களைக்கண்டு உபசரித்து ரயிலிலே நெடுந்தூரம் பிரயாணஞ்செய்த சிரமம் நீங்கும் பொருட்டு இன்று தங்கி இருந்துவிட்டுப் போக வேண்டுமென்று சொன்னார்கள். அவசர காரியம் எங்களை மன்னிக்கவேண்டும், இன்னொருமுறை தங்களைப் பார்க்க ஆவலுடையவர்களாயிருக்கிறோம், என்று அவர்களிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு வெளியேறினோம். நீ கல்கத்தாவிலிருந்து புறப்படும்போது பெரியதம்பியைப் [தெய்வசிகாமணியை] பார்க்க நாகபட்டணம் போய் வருகிறேனென்று சொல்லிவந்தவன் திருநெல்வேலியில் வைத்து எனக்குத் தந்தி கொடுத்து இருந்தபடியால் அதைச்சேர்ந்த ஒரு ஊரில் தாமதித்திருக்கிறாயென்று எண்ணிக்கொண்டு எந்தவூருக்கு வண்டிபோகிறதென்று பாட்டியம்மாளிடம் கேளாமலே வண்டியேறினோம், காலை 9மணி முதல் 3-மணி வரை அருப்புக்கோட்டைச் சாலைவழியாக வண்டி வந்துகொண்டேயிருந்தது கடைசியாகச் சித்திராநதியில் வந்து இறங்கிற்று, இது பாப்பையாபுரமாவென்று பாட்டியம்மாளிடம் கேட்டேன் ஆம் என்றார்கள். எந்தபாப்பையாபுரம்? என்றேன் அதற்கு மேல் சொல்ல அவர்களுக்குத் தெரியவில்லை வர வர செண்பகாடவியும் செண்பகத்தடாகமும், ராஜராஜேஸ்வரி செண்பகவல்லியம்மன் சந்நிதியும், வீராம்புஜவிநாயகர், மஹாபலேசுரர் திருக்கோயிற் கொடிக்கம்பமும் ஒவ்வொன்றாகத் தெரியக்கண்டேன் நான் குழந்தையாக இருக்கும்போது நீராடியகுளமும், தினந்தவறாது சேவித்துவந்த திருக்கோவிலும், ஐயா அவர்கள் பூஜைக்குப்பூ வெடுத்த சண்பகாடவியும் தெரியாதா? பார்த்தவுடனே எனக்குத் துக்கம்பெருகிவிட்டது, ஆ! நான் பிறந்த மண்ணே, உன்னைப்பார்த்து ஆனந்திக்கும் காலமும் வந்ததேயென்று சிந்தித்துக் கொண்டு வந்தேன் வீட்டோரம் வண்டிவந்து நின்றது வாசலில் அக்காள் [சோமசுந்தரம்பிள்ளை மனைவி மீனாக்ஷி] நிற்பதைக் கண்டேன்' கோவென்று கதறினேன், அவளும் அடையாளந்தெரிந்து என்னைக் கட்டிக்கொண்டு பிரலாபித்தாள் அதற்குள்ளே அண்ணாச்சியும் நீயும் வந்து சேர்ந்தீர்கள் என்றாள்.

கவிராயர் தாசில்தாரைப் பார்த்து ஐயா எங்கள் குடும்பம் சிதறுண்டு அலைந்திருக்கிறதைப் பார்த்தீர்களா! பாப்பையாபுரம் எதிர்த்தாரை வெற்றி இராமநாதபிள்ளைக்கு சண்முகம்பிள்ளை வீரவாகுபிள்ளை அமிர்தம் அம்மாள் என மூவர் மக்கள், அவர்களில் சண்முகப்பிள்ளைக்கு நானும் என் தம்பி மாணிக்கவாசகமும், வீரவாகுபிள்ளைக்கு மீனாக்ஷியும், குழல்வாய்மொழியும், அமிர்தம் அம்மாளுக்கு மிராசுப்பிள்ளையும் தங்கச்சாமிபிள்ளையும் கோமதியம்மாளும் சந்ததிகள், என் சிறிய (மீனாக்ஷியின்) பிதா மரணப்படுக்கையிலிருக்கும் பொழுது குழல்வாய்மொழியைத் தங்கச்சாமிபிள்ளைக்கு மனைவியாக்கி வைத்து விடும்படி எனக்குக் கட்டளையிட்டார்கள். அவ்வண்ணமே நானும் மிராசுப்பிள்ளையும் பிரயத்தனம் செய்தோம் எங்கள் முயற்சி பலிக்கவில்லை தங்கச்சாமிபிள்ளை புத்தூர்ப் பூமிநாதபிள்ளை மகளை விவாகம் பண்ணிக் கொண்டார். அதன்பின் தூத்துக்குடியில் பெரியவர்த்தகரான மணிமங்கலம் கப்பலோடி ஆறுமுகஞ்செட்டியாருக்குப் பாணிக்கிரஹணம் பண்ணிக்கொடுத்தோம். கல்யாண முடிந்த சிலதினங்களுக்குப்பிறகு தம்பதிகளை மறுவீட்டுக்கழைத்துக் கொண்டுவரும்படியாகத் தம்பியாபிள்ளையை அனுப்பியிருந்தோம் அவன் போய் அழைத்ததில் அவர் பட்டிக்காட்டுக்கு மறுவீடுவர மாட்டோமென்று சரசமாகப் பரிகசித்தாராம், அதற்கிவன் பட்டிக்காடென்பதென்ன இழிவா? "செட்டிபெருத்தாற் பட்டணம்" என்பதுபோல தங்களைப் போன்ற கப்பல் வர்த்தகாள் வந்திறங்கி விட்டால் எதுவும் நகரந்தான் என்றானாம். இதில் அவருடைய செட்டியார் என்னும் பட்டப்பெயரைக் குறித்து எளனம் பண்ணினதாக மதித்துக்கொண்டு மறுவீட்டுக்கு வர முடியாதென்று நிர்த்தாக்ஷண்யமாகச் சொல்லிவிட்டார். தம்பி போனது போல திரும்பினான் பிறகு பல பெரிய மனிதர்களைக் கொண்டு சொல்வித்துப் பார்த்தோம்: ஒன்றுமுடியவில்லை அவர் ஒரு பிடிவாதமுள்ள வாலிபனானபடியால் எங்கள் இதவசனம் அவரிடம் செல்லவில்லை, அந்தப்படியிருக்க இரண்டு வருஷத்திற்குப் பின் என் சிறிய தாயார் மரணத்திற்குத் தந்திகொடுத்தோம். அதற்காவது வந்திருந்தால், எங்கள் மனம் ஆறிப்போம் வந்தாரில்லை, "பேட்டன நடை

யார்க்கெல்லாம் பிறந்தகத்தாசை போமோ" தன் கணவன் மனத்தைத்திருத்தக் குழல்வாய்மொழி பிரயாசைப்பட்டும் அது வீணாயிற்று எனத்தெரிந்தோம், நாங்கள் ஒரு பெண் உயிரோடிறந்ததாகவே எண்ணிக்கொண்டிருந்து விட்டோம். சிறிது நாளைக்குள் அவரிறந்து கப்பல் வியாபாரமும் முழுகிப்போய் விட்டதாகக் கேள்விப்பட்டோம். பின்னடந்தவைகள் ஒன்றும் எங்கள் செவிக்கெட்டவில்லை. 20-வருஷத்திற்கு முன் கல்யாணப்பெண்ணாக அனுப்பிய குழல்வாய்மொழியை இன்று இந்தநிலையிற் கண்டேனென்று கண்ணீருகுத்தார்.

சூரிய குலத்தை ரகுகுலமென்றும் சந்திரகுலத்தைக் குருகுலமென்றும் இதிகாசங்கள் செல்லுகிறதுபோல நம்முடைய குலத்திற்கு நெல்லையப்பகுல மென்று பெயர் வைப்பதே தகுதியென்றார் சோமசுந்தரம்பிள்ளை.

நீங்களெல்லாம் "விருப்பறாச் சுற்றம் ஆக்கம்பலவுந்தரும்" என்னும் அறத்தைக் கடைப்பிடித்தொழுகிய சாந்த சீலர்கள், நானோ குலப்பழிதேடிய கொடியவன் என்றார் தியாகராஜச்செட்டியார்

ஏன் அப்படிச்சொல்லுகிறீர்கள், என்றார் தாசில்தார்.

மாணிக்கவாசகப்பிள்ளை கப்பலோடி ஆறுமுகஞ்செட்டியாரை மறுவீடழைக்க வந்திருந்த போது நானுங்கூடவே இருந்து குளறுபடை செய்தவன் என்றார் செட்டியார்.

மாணிக்கவாசகப்பிள்ளை செட்டியாரைக் கண்ணூன்றிப் பார்த்து ஐயா, தாங்கள் கூட இருந்த ஞாபகம் இப்போதுதான் எனக்கு உண்டாகிறது, நான் அவருடன் தர்க்கமிட்டுக் கொண்டிருக்கும் பொழுது நீங்கள் என்னைப் பார்த்து "எந்தப்பேச்சுக்கும் அளவுண்டு" எனக் கடிந்து சொன்னீர்களே ஞாபகமிருக்கிறதா? கப்பலோடி ஆறுமுகஞ்செட்டியாரை உங்களுக்கு அத்தைபிள்ளையென்றும் சொன்னீர்களே யென்றார்.

ஆம் என்றார் செட்டியார் கல்யாணசுந்தரமும், தெய்வசிகாமணியும் தங்கை தமக்கைபிள்ளைகளென்றும் தியாகராஜசெட்

டியார் கல்யாணசுந்தரத்தின் பிதாவுக்குச் சொந்தமைத்துனனென்றும் தெரிந்தபோது அவர்கள் அடைந்த ஆனந்தத்தை அளவிடயாரால் முடியும் ஊருக்குள்ளும் இந்தக்கதை வெளியாயிற்று எல்லாரும் எல்லையற்ற இறும்பூதுடையாராயினர்.

குழல்வாய்மொழியை உற்றாரும் மற்றாரும் வந்து வந்து சந்தித்துக் குசலம் விசாரிக்கத் தொடங்கினார்கள்.

இரண்டு மூன்று தினத்திற்குப் பிறகு தெய்வசிகாமணி கல்யாணசுந்தரம் இவர்களுக்கு விவாக நடத்துவிக்கும் விஷயத்தில் தாங்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை மீனாக்ஷியம்மாள் மூலமாகக் குழல்வாய்மொழியம்மாளுக்கு சோமசுந்தரம்பிள்ளை முதலியோர் சங்க்ஷேபமாகக் கூறினார்கள், அவளும் அகத்துவகையோடு சம்மதித்தாள். அக்கணமே திருநெல்வேலி நாகபட்டின முதலிய இடங்களுக்குக் கடிதங்களும் ஆட்களும் அனுப்பப்பட்டன. முகூர்த்த நாளைக்கு முந்தின தினமே எல்லோரும் வந்துசேர்ந்தார்கள்.

கவிராயர் பிரேரேபணை பண்ணிய பிரகாரம், தெய்வசிகாமணிக்குத் தியாகராஜ செட்டியாரவர்கள் புண்ணிய புத்திரி சௌபாக்கியவதி மங்களாம்பாளையும் கல்யாணசுந்தரத்திற்குத் தாசில் நெல்லையப்பபிள்ளையவர்கள் தங்கை குமாரத்தி சௌபாக்கியவதி மரகதவல்லியம்மாளையும் விதிப்படி திருமாங்கல்யதாரணஞ் செய்வித்தார்கள். பாணிக்கிரஹண முதலிய சகல சடங்குகளும் தத்துவார்த்தவிளக்கத்தோடு செய்விக்கப்பட்டன. ஊர்கோலமுதலியவைகள் படாடோபமின்றி வைதீக நடையோடு நடைபெற்றன. கல்யாணத்தின் அபராகத்தில் கவிராஜ சாமிநாதபிள்ளை "விவாஹமும் வீண்செலவும்" என்னும் விஷயத்தை யெடுத்துப் பிரசங்கித்தார், பெரும்பணக்காரர்களான, இவர்களே இந்தமாதிரி விவாகத்தை நடத்திக்காட்டி விட்டபடியால், நாங்களும் இந்தஅஸ்திவாரத்தைத்துணையாகப் பற்றி நடந்து நல்வாழ்க்கைக்கு வரப்பிரியப்படுகிறோமென்று சபையோரனைவரும் ஆமோதித்தார்கள்.

224312

தாசில்தார் கவிராயர் மிராசுப்பிள்ளை செட்டியார் முதலிய பல கனவான்களும் தம்பதி சமேதர்களாயிருந்து கொண்டு வந்தவர்களை ஆசிர்வதித்தார்கள் இவ்வாறு சாஸ்திரோக்தமாக விவாகம் சம்பூரணமாக நிறைவேறியது.

கல்யாணமுடிந்து இரண்டுமாஸங்களுக்குள், மறுவீடு எதிர் வீடு முதலிய புறச்சடங்குகளும் செவ்வனே நடந்தேறின் தெய்வசிகாமணியும் கல்யாணசுந்தரமும் தத்தம், அருமைக் காதலியரோடு மணியும் ஒளியும் போலப் பிரிப்பற்ற இன்பத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

தாசில்தார் மதுரைத்தாலூகாவில் தமது உத்தியோகத்தை வஹித்துக் கொண்டிருக்கிறார்.

தெய்வசிகாமணிபிள்ளையும் பாரிஸ்டர் கல்யாணசுந்தரும் மதுரையிலேயே உயர்தர வழக்கறிஞர் (வக்கீல்) களாக இருந்து வருகின்றார்கள்,

மாசிலாமணி தாசில்தாருடனே வசித்து வந்தாலும் பர்ப்பையாபுரத்திலுள்ள திரவியவந்தர்களுக்குள் இவனும் ஒருவனாகக் குடும்ப சகிதம் வாழ்ந்து வருகின்றான்.

நெல்லை மந்திரமென்னும் வாசகசாலை மகோன்னதமான நிலையில் விளங்குகிறது.

தாசில்தார் செட்டியார், மிர்ராசுப்பிள்ளை, கவிர்ராயர், நால்வரும் பாப்பை, நாகை, மதுரை நகரங்களில் அடிக்கடி சந்திப்பதும் சாஸ்திர சமய விசாரணை புரிவது மாகத் தங்கள் ஜீவியத்தைப்புனிதப்படுத்திக் கொண்டு வருகிறார்கள்.

இச்சரித்திற் குறிக்கப்பட்ட சாதுக்கள் சகலரும் எல்லா இன்பங்களையும் இடையூறின்றித் துய்த்து நெறிதவறாது வாழ்ந்து வருகின்றனர்.

சுபம்

224312

ஐயா,

இப்புத்தகம் மதுரை புதுமண்டபம் புத்தகஷாப் S. முத்தைய பிள்ளையவர்கள் இடத்தும், இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனர் அவர்களிடத்தும், எம்மிடத்தும் பெற்றுக்கொள்ளலாம்.

M. V. சங்கமுத்துப்பிள்ளை,
முத்துச்செல்லையாபுரம்,
பெருநாழி P. O.
இராம்நாட்.